308

CRITICAL ESSAYS

SOCIAL REFORM

Y744:1
N:4
S874.3

Y744:1
N14

27. [illegible]
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மார்ச் மாதம் 1985 வருடம்
செப்பனிட்டு முடித்த
மார்ச் மாதம் 1985 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

58743

# ஆசாரத் திருத்த வியாசங்கள்.

388

இப்புத்தகம் நம் பழக்க வழக்கங்களில் தோன்றும்
மாறுதல்களைக் குறித்தும் அப்போதப்போதைய
சம்பவங்களும் அவைகளை அனுசரித்த
நம் கருத்துகளும் அடங்கி உள்ளது.

சுதேசமித்திரன் பத்திராதிபர்
G. சுப்பிரமணிய ஐயரவர்.
இயற்றப்பட்டது.

சென்னை
சுதேசமித்திரன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1914.

Copyright Registered. விலை அணா 12.

813/301

Printed at
The Swadesamitran Power Press,
23, Errabalu Chetty Street,
George Town,
MADRAS.

# ஆசாரத்திருத்த வியாசங்கள்.

## முகவுரை.

இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ள வியாசங்கள், இந்துக்களின் ஆசாரங்களிற் சில மாற்றப்பட்டு, அவைகள் தற்கால நிலைமைகளுக்கு ஒத்தனவாயிருக்க வேண்டுமென்றும், இந்தியாவில் நமக்குள் உத்தம குணங்கள் தோன்றி உயர்ந்த யோக்கியதை உண்டாக வேண்டுமென்றும், நம் ஜனங்களுக்குப் போதிக்க முயலுகின்றன. இவைகள் பெரும்பாலும் சுதேசமித்திரன் பத்திரிகையில் அப்போதைப்போது தலை அங்கத்தில் தோன்றினவைகள். இவைகளில் சிலவற்றை எடுத்தும் சிலவற்றைச் சேர்த்தும் படிப்பவர்க்கு விளங்குமாறு வரையப்பட்டிருக்கின்றன.

இராஜாங்க விஷயங்களைப்பற்றியாவது தொழில்கள் விஷயங்களைப்பற்றியாவது இவைகளில் சொல்லப்படவில்லை. ஆசாரத் திருத்தங்களைப் போல இவ்விஷயங்களும் தேச நன்மைக்கு அவசியமானவைகளாதலால் இவைகளைப்பற்றி வேறு எந்த கனவானாவது தனியான வியாசங்கள் எழுதி ஜனங்களுக்கு அறிவூட்ட வேண்டுமென்பது நம் எண்ணம். ஆயினும் உலகில் ஜீவித்திருக்கும் ஜனங்களுடைய அநுஷ்டானங்களும் குணங்களும் அப்போதைப்போது காலத்துக்குத் தக்கபடி மாற வேண்டியது அவசியம். மேல் நாடுகளின் சரித்திரத்தைப் பரிசோதித்துப்பார்த்தால், அந்நாட்டு ஜனங்கள் தங்கள் தங்கள் தேசத்து நிலைமைகள் மாறி வருவதற்குத் தக்கபடியும், மற்றத் தேசங்களுடைய ஜனங்கள் என்ன நிலைமைகளிலிருக்கிறார்களோ அவைகளுக்குத் தக்கபடியும் மாறிவருவது விளங்கும். ஜப்பான் தேசத்து ஜனங்களும் இப்படியே மாறியிருக்

கிறார்கள். இந்தியரைவிட நாகரிகமும் வல்லமையும் அதிகமாய்ப்பெற்று முன் செல்லும் ஜனங்கள் எவ்வித அனுஷ்டானங்களையும் குணங்களையும் பெற்று வாழ்கிறார்களோ, அவர்களைப்போல நாமும் முன்னேற்றத்தைத் தடுக்கும் ஆசாரங்களையும் குணங்களையும் மாற்றி, அவர்களைப்போல் ஆசாரங்களும் குணங்களும் கொண்டவர்களாக வேண்டும். இப்படிச் சொல்லுவதால் இந்தியர் ஐரோப்பியரைப் போல உடுப்பதும் உண்பதும் வீட்டிக்குள் அவர்களைப் போல் ஆசாரங்கள் அனுஷ்டிப்பதும் அவசியமென்பது நம் கருத்தல்ல. பழமையானது மட்டுமென்று, நம்மவர்களை, புதுமைகளை வெறுத்தால் இந்துக்கள் இருந்தும் அவர்கள் மனதிற்கு வருத்தமுண்டாகும்படியான சில ஆசாரங்களை அனுஷ்டித்து வருகிறார்கள். இதனால் சாமான்ய ஜனங்களுக்கு திருத்தக்காரர்களிடம் மனவருத்தம் உண்டாகின்றது. அன்னிய தேசஞ் சென்று வந்த இந்தியர்களும் புதுமைகளை விரும்பும் இந்துக்களும் சாமான்ய ஜனங்களுக்கு வீண்வருத்தம் உண்டு பண்ணாமல் அவர்களை நேசமாயும் சமாதானமாயும் நடத்திக் கொண்டு செல்லவேண்டும். இப்படிச் செய்தால்தான் பழமை அனுஷ்டிக்கும் ஜனங்களுக்கும் புதுமை அனுஷ்டிக்கும் திருத்தக்காரர்களுக்கும் எப்போதும் போன்று அன்னியோன்னியம் ஏற்பட்டு, ஐக்கியமாக எல்லோரும் புத்தியுற்ற பாதை இருவரும் பலமாய்த் துடன் செல்லுதல் சாத்தியமாகும். நமது இந்திய தேசம் ஆதிகாலத்தில் இருந்தது போல இப்போதும் தனிப்பட்ட தேசமென்று நினைப்பது பேதமை. பிரிட்டிஷ் தேசம் நம்மை ஆளும் தேசமாயிருப்பதால், அத்துடன் நாம் பலவித சம்பந்தங்களால் பிணைக்



கப்பட்டுப்போனோம். அப்படியே ஜெர்மெனி, பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்களும் இந்தியாவுடன் வியாபார சம்பந்தம் பெற்று, அந்த சம்பந்தம் வரவர நெருங்கி வருகின்றது. ஆகையால், இந்த தேசங்களைப்போல் நாமும் பலவழிகளில் முன்சென்று நாகரிகமும் வன்மையும் செல்வமும் பெறவேண்டும். இப்படிப் பெறவேண்டுமானால் அவர்களைப்போல நாமும் அவசியமானபோது பழய ஆசாரங்களைமாற்றிப் புதிய ஆசாரங்களை அனுஷ்டித்து சில உத்தம குணங்களையும் பெற்றவர்களாகவேண்டும். அப்போதுதான் அவர்களோடு நாமும் சரிசமானமான போட்டி செய்து நமக்கு அவசியமான நன்மைகளில் வெற்றி பெறுதல் சாத்தியமாகும். அப்படியில்லாமல் அயல்தேசத்தார் சில வழிகளில் செல்ல, நாம் மட்டும் பழைய வழிகளையே பற்றிப் பின் நிற்போமானால் சிலகாலத்துக்குள் நம் கதி நாசமாய் முடியுமேயன்றி வேறு விதமாய் முடியாது. தற்காலம், இந்திய தேசத்தில், மகமதியர், கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர் மூன்று வகுப்பினரும், முக்கியமாய் மகமதிய வகுப்பினர், தேசத்தில் செல்வாக்கையும் கவர்ன்மெண்டின் அபிமானத்தையும் பெற விசேஷ முயற்சிகள் செய்து வருகிறார்கள். இப்படிச்செய்வது முற்றிலும் சரியேயன்றி தப்பல்ல. ஆனால், அவர்களைப் போல நாமும் நம்முடைய சுபாவமான மந்தகுணத்தை விட்டு தீவிர குணத்தைப் பின்பற்றவேண்டும். அப்போது தான் இந்துக்களாகிய நாம் பின்பட்டு ஒதுங்கி நிற்காமல் மற்ற வகுப்பினருடன் சரிசமானமாய்த் தோளோடு தோள் நின்று, இந்திய சமூகம் முழுவதும் மற்ற தேசங்களுடைய சமூகங்களோடு போட்டி போட்டு ஜயம் பெறும்படி செய்ய வல்லவராவோம்.

இத்தகைய கருத்துக்களால் தூண்டப்பட்டு நமது அநுபோகத்தாலும் நம் சிற்றறிவினாலும் தோன்றும் புத்தி வசனங்களை நம் தேசத்தினர்க்குச் சொல்ல வேண்டுமென்று விரும்பி இப்புத்தகத்தைப் பிரசுரஞ் செய்யலானேனும், நம்முடைய ஆசாரத் திருத்தங்களில், நம் ஸ்திரீகளின் நிலைமையைத் திருத்தி, அவர்களுக்குக் கல்வியும் சுதந்திரமும் கொடுத்து, கிரகிருத்தியங்களைத் திறமையாயும் சம்சாரத்துக்கு நன்மை உண்டாகும்படியாயும் செய்வதுமன்றி, தேச விஷயங்களில் அவர்கள் அக்கறை பாராட்டும் புருஷருடன் ஒத்துழைக்க வேண்டுமென்பது முக்கியம். புருஷர், ஸ்திரீ, குழந்தைகள், அனைவரும் அவர்களுடைய புத்தியையும் அறிவையும் விரியச் செய்துகொண்டு போவதுமன்றி, அவர்கள் சரீரத்திடம் பெற்று, நோவு நொடியில்லாமல் தீர்க்காயுளுள்ளவர்களாய் வாழவேண்டும். தேச நன்மைக்குத் தொழில் முதலிய பொது முயற்சிகளில் ஊக்கம், ஒற்றுமை, பரஸ்பர நம்பிக்கை, ஆகிய பெருங்குணங்களை [illegible] பெறவேண்டும். அன்னிய தேசங்களுக்கு [illegible] கான இந்தியர்கள் போய்வரவேண்டும். பிறந்த [illegible] உலகமென்று அறியாமையால் மோசித்து [illegible] க்கூடாது. இத்தகைய விஷயங்கள் [illegible] நம் அநுபோகத்துக்கும் புத்திக்கும் [illegible] நம்முடைய தேசத்தாருக்கு [illegible] பாக்கவேண்டி அவர்களுக்குப் [illegible] எல்லாப் புண்ணிய [illegible] கைக்கரியமென்று காட்டியிருக்கிறேன்.

ஜி. சுப்பிரமணிய அய்யர்.

# அட்டவணை.

பக்கம்.

## CHAPTER I.

1. இரண்டு பெரியோர்களின் அபிப்பிராயங்கள். ... 1
2. மிஸ்டர் K. நடராஜன் கர்நாலில் பேசினது. ... 6
3. பண்டிதர்கள் என்ன சொல்லுகிறார்கள். ... 10

## CHAPTER II.

1. தேச சஞ்சாரம். ... ... ... ... 14
2. ஹரித்துவார் குருகுலவாசமும் அங்கு கல்வி கற்பிக்கும் விதமும். ... ... ... 16
3. அன்னிய தேசங்களில் கல்வி கற்றல்—சீனரின் ஊக்கம். ... ... ... ... 20

## CHAPTER III.

1. மதப்பயிற்சியும் ஒழுக்கப்பயிற்சியும்—கல்விச்சாலைகளில் மதப்பயிற்சி. ... ... 23
2. ஒழுக்கப்பயிற்சி. ... ... ... ... 31
3. [illegible] பானர்ஜி சொல்லுவது. ... ... 33
4. கல்கத்தாவில் அர்த்தோதய யோக புண்ணியகாலம் 38
5. [illegible]ர்களைப் புசித்தல். ... ... ... 43
6. [illegible] மதமும். ... 48
7. [illegible] ... ... ... ... 52

## CHAPTER IV.

1. [illegible] ... 54
2. [illegible]
3. [illegible] ... ... 58

## CHAPTER V.

1. [illegible] ... ... ... ... 63
2. [illegible] ... ... 67

3. பஞ்சமர்களும் ஆகசாரத்தியும். ... ... ... 72
4. மிஸ்டர் அண்ணாமலை செட்டியார்—
பஞ்சமர்களுக்காக நன்கொடை— ... ... 80

## CHAPTER VI.

1. ஸ்திரீகளும் ஜாதீய நிகழ்ச்சியும் ... ... 84
2. ஹிந்துப் பெண்களின் கல்வி ... ... ... 90
3. ஹிந்து ஸ்திரீகளுக்குள் நவீன சக்தி ... ... 93
4. ஸ்திரீகளும் தேச விருத்தியும். ... ... 96
5. ஹிந்து ஸ்திரீகளின் முன்னேற்றம். ... ... 101
6. நமது விவாக வழக்கங்கள் ... ... ... 103
7. ஹிந்து விதவைகளின் நிலைமை. ... ... 112

## CHAPTER VII.

1. கைம் பெண்களுக்குக் கல்வி ... ... ... 121
2. நமது ஸ்திரீகளும் அலங்கார வித்தையும். ... 125
3. ஹிந்துக்களில் ஜனானா (படிதாண்டாப் பத்தினி)
வழக்கம். ... ... ... ... ... 127
4 இந்திய ஸ்திரீகளும் மேல்நாட்டு ஸ்திரீகளும். ... 132
5. ஜப்பானிய ஸ்திரீகள். ... ... ... 137
6. குழந்தைகளின் மரணம். ... ... ... 140
7. சிசுவதை. ... ... ... ... ... 144
8. அனாதைக் குழந்தைகள் ... ... ... 147
9. இங்கிலாண்டில் குழந்தைகளின் சம்ரக்ஷணை. ... 155
10. மிஸ்டர் ரூஸ்வெல்டும் பிரான்ஸ் தேசமும். ... 158
11 நமது விவாக வழக்கம், இங்கிலாந்தில் ஒரு
வைதிக விவாகம். ... ... ... ... 162
12 பம்பாயில் ஒரு ஹிந்து மாதர் சங்கம். ... ... 169
13. பூனாவில் சேவாசதன் என்ற ஸ்திரீ சங்கம். ... 171
14. ராஜபுதனத்தில் ஆசாரத் திருத்தம். ... ... 174
15. சென்னையில் ஒரு லேடீஸ் கிளப், அதாவது
ஸ்திரீகளின் சங்கம். ... ... ... 177
16. லாகூரில் ஸ்திரீகளின் சங்கம். ... ... 181



## CHAPTER VIII.

1. சுத்தமான ஆகாரம். ... ... ... ... 185

## CHAPTER IX.

1. ஜாதிய ஒருமை. ... ... ... ... 189
2. புது நாகரிகமும் ஆசாரத்திருத்தமும் ... ... 194
3. ஜனத் தொகுதியும் ஜாதி முன்னேற்றமும். ... 198
4. ஆசாரத்திருத்தமும் ராஜாங்க சுதந்திரங்களும். 202

## CHAPTER X.

1. காஞ்சிபுரம் பெண்பாடசாலை. ... ... ... 206
2. மைசூரில் விதவைகளின் படிப்பு ... ... 211
3. தாழ்ந்த ஜாதியாரின் நிலைமை மிஷனரிகளின் ...
நன்முயற்சி. ... ... ... 214
4. வீட்டு சாஸ்திரங்கள் ... ... ... ... 221
5. ஆசாரத் திருத்தத்தில் பக்கம் செய்வதும். ... 222

## CHAPTER XI.

1. மடாதிபதிகளும் புரோகிதர்களும். ... ... 227
2. பெரியோரின் பொறுப்பு ... ... ... 229
3. தேசாபிமானம். ... ... ... ... 233
4. ஜாதீய வைதீகம். ... ... ... ... 237
5. இந்தியர்க்குத் தற்காலம் வேண்டியது ...
சன்னியாசம். ... ... ... ... 240

# ஆசாரத்திருத்த வியாசங்கள்.

## CHAPTER I.

## இரண்டு பெரியோரின் அபிப்பிராயங்கள்.

### மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் செய்த பிரசங்கம்.

1910-ம் வருஷம் ஏப்பிரல் மாசம் சென்னை சர்வ கலா சங்கத்தார் வித்தியா பட்டங்கள் கொடுக்கக்கூடின போது, மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் செய்த சிறந்த பிரசங்கம் நீண்டபிரசங்கமாயிருந்தாலும் அதில் அவர் ஒரே விஷயத்தைப் பற்றித்தான் விசேஷமாய்ப் பேசினார். நமது காலேஜ்களில் பிள்ளைகள் பெறும் கல்வியில், ஆஸ்திகிய புத்தியுண்டாகும்படி அவர்கள் கற்பிக்கப்படுகிறதில்லையென்று தெரிந்தவர் பலர் குறை சொல்லி வருகிறார்கள். சமீபத்தில் சென்னையில் கிறிஸ்துவ மதாசாரியரான லார்டு பிஷப் அப்படியே குறை சொன்னார். அப்படி அவரும் மற்றவர்களும் சொல்லுவதைத் தாம் ஒப்புக் கொள்ளவில்லை என்றும், அங்கிலப் படிப்பினால் ஆஸ்திக்ய புத்தியும் மதாபிமானமும் [illegible] பெற்று வருகின்றனவேயன்றிக் குறைந்து போகவில்லை என்றும், மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் வாதித்துப் பேசினார்.

இதற்குத் திருஷ்டாந்தமாக, [illegible] "ஆஸிகர்நிதர்சி" என்று புஸ்தகத் [illegible]

பதையும், ஹிந்துக்களில் "பிரம்ம சமாஜம்" போன்ற நவீன மதக்கொள்கைகள் தோன்றியிருப்பதையும் சொன்னார். பொதுவாய், மகமதியர் ஹிந்துக்கள் இவ்விருவகுப்பாரும் பிரிட்டிஷ் ராஜாங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னால், தங்கள் தங்கள் மதாசாரங்களில் எவ்வளவு பற்றும் உற்சாகமும் கொண்டிருந்தார்களோ, அவைகளைவிட இப்போது அதிகமாகவே கொண்டிருக்கிறார்கள். மதப்பயிற்சியும் ஒழுக்கப் பயிற்சியும் வித்தியாசாலைகளில் மாத்திரம் பிள்ளைகள் பெறவேண்டியதில்லை. அவரவர் குடும்பங்களிலும் பெறுகிறார்கள். மகமதியக் குடும்பங்களில் பிள்ளைகள் "கடவுள் ஒருவரே: அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை." என்ற வேதவாக்கியத்தை எப்போதும் காதிற் கேட்டுக்கொண்டே யிருக்கிறார்கள். எந்தக் காரியம் செய்தாலும் கடவுளை நம்பியே செய்கிறார்கள். சரீர கிலேசத்தின் பொருட்டு வருஷத்துக்கு ஒரு மாசம் விரதம் கொண்டாடப்படுகின்றது. தானதர்மங்களும் செய்யப்படுகின்றன. இவ்வாறே, ஹிந்துச் சிறுவர்களும் அவர்கள் குடும்பங்களிற் பயிற்சி பெறுகிறார்கள்.

இவ்வாறு பயிற்சி பெறும் சிறுவர்கள் காலேஜுகளில் மேல் நாட்டு லௌகிக சாஸ்திரங்களைக் கற்கும்போது, தாங்கள் வீட்டிற் கற்பதையும் காலேஜுகளிற் கற்பதையும் சமரஸப் படுத்திக் கொள்கிறார்கள். எப்போது கல்வியால் புத்தி பயிற்சி பெறுகின்றதோ, அப்போது மதாபிமானமும் நவீன வேகத்தை யடைகின்றது. அவ்வாறே இந்தியாவில் ஆதிமுதல் மனக்கிளர்ச்சியும் மதக்கிளர்ச்சியும் ஒன்றாகவே தோன்றி வந்திருக்கின்றன. ஒன்று மறைந்த காலங்களில் மற்றொன்றும்



மறைந்து போயிருக்கின்றது. ஒன்று தோன்றின காலங்களில் மற்றொன்றும் தோன்றி வந்திருக்கின்றது. ஆகையால், தற்காலம் மேற்றிசை நாகரிகத்தை நாம் அங்கீகரித்து, நாம் எல்லாவழிகளிலும் புதுக்கிளர்ச்சியைக் காட்டிவரும்போது, பூர்வீக சனாதன தர்மங்களில் நம்பிக்கையும் அன்பும் குறையாமல் அதிகப்பட்டு வருகின்றன. ஆகையால், லார்டு பிஷப்பும் மற்றவர்களும் சொல்லுவது நமக்குச் சம்மதமல்ல. சென்னை சர்வகலா சங்கத்தார் நம் பிள்ளைகளுக்குத் தரும் கல்வியானது நாஸ்திக்கியத்தை யுண்டுபண்ணுகிறதென்று தாம் நம்பினவராயிருந்தால், அந்தச் சமயத்தில் பிள்ளைகளைப் பார்த்துப்பிரசங்கம் செய்ய ஒப்புக்கொண்டிருக்க மாட்டாரென்று, ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் சொன்னார்.

இப்படிச் சொன்னதெல்லாம் பெரும் பான்மையும் சரி. தற்காலம் ஹிந்து ஜனங்களுக்குள் மதாபிமானம் புதிதாயுண்டாகி வருகிறதென்பது உண்மை. உயர்ந்த ஆங்கிலக் கல்விகற்ற சிலர், நமது பூர்வீக மதாசாரங்களைச் சோதித்து, அவைகளின் உட்கருத்துக்களை யறிந்து, அவைகளில் நம்பிக்கை பாராட்டிவருகிறார்கள். சுமார் 25 வருஷங்களுக்கு முன்னால், ஆங்கிலங் கற்ற ஹிந்துக்கள் சிறிதும் பாரமார்த்திக புத்தி இல்லாமல் அர்த்த பாராயப் பொருள் தேடுவதிலேயே நோக்கங் கொண்டவர்களாயிருந்தார்கள். இப்போது இந்த இயல்பு சிறிது மாறி வருகிறதென்பதிற் சந்தேகமில்லை. நம முன்னோர்களின் பெருமைகளை அறியாமல் அவர்கள் இயற்றி வைத்துப் போன நூல்களையும் அவர்கள் அனுஷ்டித்திருந்த தருமங்களையும் அசட்டை செய்து, மேல்

காட்டு நாகரிகமே சரியென்று நம்பியிருந்தது போய், சிலர் அந்த நூல்களையும் தர்மங்களையும் அறிந்து, முன்னோருடைய பெருமைகளை மதித்து வருகிறார்கள். ஆனால் இதற்குக் காரணம், ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் சொன்னதுபோல், காலேஜ்களிற் கற்பிக்கும் கல்வி யல்லவென்பது நமது அபிப்பிராயம். இந்தக் கல்வியினால் சிறுவர் மனதிலுண்டாகும் உணர்ச்சியானது நாஸ்திக்கிய புத்தி கொண்டதாயும், பெரியோரிடத்தில் மதிப்பில்லாததாயும், பிரத்தியட்சமே பிரமாணம், பரீட்சை, கற்பனை என்பதாயும், இருக்கின்றது. இந்த உணர்ச்சியினாலேயே நம் சிறுவர்கள் முன்னோர்களினுடைய வழிகளை நீக்கித் தாறுமாறான புது வழிகளிற் பிரவேசிக்கிறார்கள். பெரும்பான்மையோரும், முதுமைப் பருவம் வந்தபோதுங்கூட, இவ்வழிகளிலேயே நிற்கிறார்கள். சிறு பான்மையோர் நம் தேசத்தில் இப்போது புதிதாய்த் தோன்றி வரும் தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு, முன்னோரது சரித்திரத்தை யறிய விரும்பி, நமது மதத்திலும் ஆசாரங்களிலும் மதிப்புக்குரிய பாகங்கள் இருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளுகிறார்கள். இந்தப் புதுத் தேசாபிமானத்துக்கு, ஆங்கிலக் கல்வி ஒருவாறு காரணமென்று சொல்லவேண்டுமாயினும், அது முக்கிய காரணமல்ல. இந்தப் படிப்பினால் நமக்கு உண்டாகிவரும் அன்னிய தேசத்தாருடைய சரித்திர ஞானமும் அனுபோகமுமே முக்கிய காரணம். உலகத்தாரைப்போல நாமும் உயர்ந்த தன்மையை யடையவேண்டுமென்ற விருப்பமே இந்தப் புதிய தேசாபிமானத்துக்கு முக்கிய காரணம். ஆங்கிலப் படிப்பினால் இந்தத் தேசாபி



மானம் உண்டாயிருக்கிறதென்று சொல்லக்கூடுமாயினும், அந்தப்படிப்பு மதப்பயிற்சியும் ஒழுக்கப்பயிற்சியும் கொண்டு ஆஸ்திக்கிய புத்தியுண்டாக்கக் கூடியதாயிருக்குமாயின், இந்தத் தேசாபிமானம் குறையுமென்று யார் சொல்லுவார்கள்! அப்போது, சிறுவர்கள் அடக்கமும், பெரியோரிடத்தில் மதிப்பும், பெரியோர் காட்டின வழிகளில் நோக்கமும், கொண்டவர்களாவார்கள்.

மகமதியச் சிறுவர்கள் அவர்கள் வீடுகளிற் பெறும் மதப் பயிற்சியைப் பற்றி மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் சொன்னார். ஹிந்துக் குடும்பங்களிலும் அவ்விதப் பயிற்சிக்கு இடம் அமைக்கப்பட்டிருந்தாலும் அது இப்போது இல்லாமலே போய் விட்டது. ஹிந்துச் சிறுவர்கள் தங்கள் வீடுகளில் இப் பயிற்சியை எவ்விதமாயும் பெறுவதில்லை. பெரியோரும் செய்து காட்டுவதில்லை. செய்து காட்டும் பெரியோரைச் சிறுவர் மதிப்பதுமில்லை. இந்த விஷயத்தில் மகமதியக் குடும்பங்களுக்கும் ஹிந்துக் குடும்பங்களுக்கும் பெரும் வித்தியாசமிருப்பதுபோற் காணுகின்றது. சிறுவர்கள் பிற்காலத்தில் மத ஆராய்ச்சி முதலியவைகள் செய்வதற்குக் காலேஜ் படிப்பினால் வசதிகளும் உண்டாவதில்லை. தமிழிலாவது சமஸ்கிருதத்திலாவது ஞானமில்லாமல் வளரும் சிறுவர்கள் இந்த ஆராய்ச்சிகளை எப்படிச் செய்வார்கள்? இப்போது நடந்து வரும் வித்தியாப்பியாச முறையால் ஹிந்து நாகரிகத்தின் பெருமைகள் சில காலத்திற்குள் மறைந்து போகுமென்று சிலர் பயப்படுவது முற்றிலும் காரணமற்றதல்ல.

## மிஸ்டர் K. நடராஜன் கர்நூலில் பேசினது.

கர்நூலில் 1910-ம் வருஷம் ஜூன் மாசம் நடந்த ஆசாரத்திருத்தக் கூட்டத்தில் பிரெஸிடெண்டு ஸ்தானம் வகித்த மிஸ்டர் K. நடராஜன் செய்த பிரசங்கம் சிரத்தை கொண்டதாயும் கல்விவாய்ந்ததாயும் இருந்தது. அனேக வருஷங்களாய் அடுத்தடுத்து இம்மாதிரிக் கூட்டங்கள் நடந்து வந்து, ஒவ்வொரு தடவையும் பிரெஸிடெண்டு ஸ்தானம் வகிப்பவர் நீண்ட பிரசங்கம் செய்து வருவதால், மிஸ்டர் K. நடராஜன் புதிதாய்ச் சொன்னது அதிக மில்லை. சொன்னதைச் சொல்லுவதாயிருந்தாலும் இந்தக்கூட்டங்களால் பிரயோசனமில்லாமற் போகவில்லை. சுமார் 10 வருஷத்துக்கு முன்னால் நவீன அனுஷ்டானங்களை ஜனங்கள் எதிர்த்து வந்ததுபோல் இப்போது எதிர்ப்பதில்லை. கடல் யாத்திரை செய்து அன்னிய தேசம் போவதும், ஜாதி பேதங்கள கூர்மை குறைந்திருப்பதும், கீழ் ஜாதியாரை உயர்த்த விரும்புவதும், ஸ்திரீகளைப் படிப்பிப்பதும், குழந்தைப் பருவம் தாண்டி விவாகம் நடத்துவதும், இவைகளெல்லாம் முன் போல சாமானிய ஜனங்கள் மனதில் விரோதத்தை யுண்டாக்குவனவாயில்லை. பால விதவைகளுக்குப் புனர் விவாகம் செய்வதையுங்கூட சாமானிய ஜனங்கள் கண்சாடையாய் நோக்க ஆரம்பித்திருக்கிறார்கள்? இவ்வாறு ஜனங்களின் உணர்ச்சி மாறிவருவதற்கு இந்தக் கூட்டங்களில் பேசப்படும் பேச்சுக்களும் அவைகளை யனுசரித்துப் பத்திரிகைகள் எழுதுவதுமே காரணம். ஆகையால் ஆசாரத்திருத்தக் கூட்டங்களினால் பயனில்லையென்று சொல்லுவது சரியல்ல.



நமது ஆசார அனுஷ்டானங்களில் அவசியமான திருத்தங்களை இருவகையாய் வகுக்கலாம். ஸ்திரீகளின் உயர்வைப் பற்றினவை சில; ஜாதிபேதங்களைக் குறைப்பதைப் பற்றினவை சில. இவ்விரண்டு வகைத் திருத்தங்களைப் பற்றியும் மிஸ்டர் K. நடராஜன் விஸ்தாரமாய்ப் பேசினார். கேவலம் இளம் பிராயத்தில் விவாகம் செய்யும் வழக்கத்தை நாம் மாற்றிக் கொள்வோமானால், ஸ்திரீகளின் உயர்வைப் பற்றிய திருத்தங்கள் எளிதாகி விடும். இளம் பிராயத்திலே அவர்களுடைய படிப்பை நிறுத்தும் படி நேரிடாது; குழந்தைப் பிராயத்தில் வைதவ்வியம் அடையும் பெண்களின் எண்ணிக்கையும் குறையும். படிப்பும் கூடிய வரையில் உயரப் பெற்று, முதிர்ந்த பருவத்தில் குடும்பப் பொறுப்பை ஏற்கும்படி நேரிட்டால், ஸ்திரீகளின் தற்கால நிலைமையிலுள்ள குறைகள் பெரும்பாலும் நீங்கி, அவர்கள் மேன்மைப்படுவதற்கும் ஏதுக்கள் உண்டாகும். நம் ஸ்திரீகளுக்கு எவ்விதமான படிப்பு பொருந்துமென்று மிஸ்டர் K. நடராஜன் சொல்லவில்லை. புருஷரைப் போல் ஆங்கில நூல்களிற் பயிற்சி அவசியமா? அல்லது சாமானிய உலகவிவகாரங்களை அறியும் படியாயும், அவர்களுடைய வீட்டுக்கடமைகளைக் குறைவறச் செய்யும் படியாயும், தெய்வபக்தி, நல்லொழுக்கம், இவைகள் உண்டாகும் படியாயும், படிப்புக் கிடைத்தால் போதுமா? இந்தச் சந்தேகம் அனேகர் மனதில் உறுத்திக் கொண்டிருக்கிற படியால், மிஸ்டர் K. நடராஜனைப் போன்ற கல்விமான்களின் அபிப்பிராயம் காலோசிதமாகும்.

பம்பாய் பட்டணத்தில் பேர்போன பார்ஸி ஜாதியாரான காலஞ்சென்ற மிஸ்டர் மலபாரி ஸ்தாபித்திருக்கும் "சேவசாதன்" என்ற ஸ்தாபனத்தைப்பற்றி இவர் புகழ்ந்து பேசினார். இந்தச் சேவசாதனத்தில், ஸ்திரீகளுக்குப் பொருத்தமான ஜீவனோபாயங்கள் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தற்கால நிலைமையில் நம் ஸ்திரீகளுக்குத் தனியான ஜீவனோபாயங்கள் கிடைப்பது அவசியமாய் விட்டது. முன்போல, நாதனற்ற ஸ்திரீகள் எந்தக் குடும்பத்தையாவது அண்டிக் கௌரவமாய் ஜீவித்தல் சாத்தியமாகாமல், பலர் தனியாய் எந்த உபாயத்தைப்பற்றியாவது ஜீவித்தல் அவசியமாகிவிட்டது. இதனால் பல ஸ்திரீகள் நெறிதவறிப்போகக் காரணமாகின்றது. ஸ்திரீகளுக்குப் பொருத்தமான ஜீவனோபாயங்கள் இல்லையென்று சொல்லமுடியாது. படித்த ஸ்திரீகள் உபாத்தியாயர்களாகலாம், ஆஸ்பத்திரிகளில் தாதிகளாகலாம், வீட்டுக்குள்ளேயே இருந்து சிறு தொழில்கள் செய்து ஜீவிக்கலாம்; மேல் நாடுகளில் ஸ்திரீகள், சிறு பெண்களுங்கூட, கவர்ன்மெண்டு ஆபீஸ்களிலும், ஷாப்புகளிலும், ஹோட்டல்களிலும் அலுவல் பெற்று ஜீவிக்கிறார்கள். நம் தேசத்திலும் அப்படிச் செய்யும்படியான காலம் சமீபத்தில் வந்துவிடுமென்றே நினைக்கிறோம்.

ஜாதிபேதங்களைப் பற்றி மிஸ்டர் நடராஜன் பேசப்புகுந்து, இந்தப் பேதங்கள் நீங்கிவிடவேண்டுமென்றே அபிப்பிராயப்பட்டவர்போலப் பேசினார். ஆயினும், இவர் தைரியசாலியான திருத்தக்காரரானாலும், ஜாதிபேதங்கள் சாஸ்திரப்படி ஏற்பட்ட நான்கு வருணங்களையும் தாண்டி, அடியோடு அற்றுப்போக வேண்டு



மென்று தம் பிரசங்கத்தில் தெளிவாய்ச் சொல்லவில்லை. தென்னிந்தியாவில் இந்தப் பேதங்கள் கூர்மையான அனுஷ்டானத்திலிருக்கின்றனவென்றும், மற்ற இடங்களில் அப்படியில்லையென்றும், தென்னிந்தியாவில் போஜன காலத்தில் திருஷ்டி தோஷம் கண்டிப்பாய்க் கொள்ளப்பட, மற்றிடங்களில் பந்திதோஷம் கவனிக்கப்படுகிறதேயன்றித் திருஷ்டி தோஷம் கவனிக்கப்படுகிறதில்லையென்றும், சொன்னார். அதாவது, ஹிந்துக்களில் எந்த ஜாதியாரானாலும் பலஜாதியார் சேர்ந்து ஒரே இடத்தில் மறைவில்லாமல் போஜனம் செய்யலாம்; அந்தந்த ஜாதியார் தனித்தனியான பந்தியில் உட்கார வேண்டுமென்று மட்டும் நியமமாயிருந்து வருகிறது. தென்னிந்தியாவிலும் இப்படியே ஆய்விடுமென்பதில் சந்தேகமில்லை. ரயில்வேக்களே இப்படியாவதற்கு முக்கியகாரணமாகும். ஜாதிபேதங்களைக் குறைப்பதைப்பற்றிப் பேசும்போது, பஞ்சமர்களின் நிலைமையைப் பற்றிப் பேசாதொழிதல் சாத்தியமல்ல. பெரும் வகுப்பாரான இந்தப் பஞ்சமர் வரவர லக்ஷக்கணக்காய், ஹிந்துக்களின் சம்பந்தத்தை விட்டு, அன்னிய மதத்தைத் தழுவி வருவது ஹிந்து சமூகத்துக்குப் பெரும் பலக்குறை யென்பதை ஹிந்துக்கள் அறியவேண்டும். பஞ்சமர்களின் வறுமையை ஒழிப்பதும் சொற்பப்படிப்பேனும் அவர்களுக்குண்டாகும்படி செய்வதும், அவர்கள் நிலைமைக்குத் தகுந்த ஒரு விதமான தெய்வபக்தி புகட்டுவதும், ஹிந்துக்களின் கடமையாகும். பொதுவாய் ஹிந்து சமூகத்தின் உயர்வுக்கு மேற்கண்டவாறு பலவழிகளில் நமது ஆசாரங்களைத் திருத்திக்கொள்வது அவ

சிய மென்று மிஸ்டர் K. நடராஜன் எடுத்துக் காட்டினார்.

## பண்டிதர்கள் என்ன சொல்லுகிறார்கள்.

திருவையாற்றில் 1913-வருஷம் ஜனவரி மாதம் கூடின பரிஷத் என்று வடமொழியில் சொல்லப்படும் பிராமணப் பண்டிதர்களின் சபையைப் பல அம்சங்களில் காலவேற்றுமையைக் குறிக்கும் அடையாளமாகக் கொள்ளவேண்டும். போன வருஷம் காஞ்சிபுரத்தில் இதேமாதிரியாய் ஒரு பண்டித பரிஷத் கூட்டப்பட்டது. ஆனால் அந்த பரிஷத்துக்குப் பல பண்டிதர்கள் பல இடங்களிலிருந்து வந்திருந்த போதிலும், அது ஒழுங்காய் நடை பெறாமல், வந்திருந்த பண்டிதர்களிற் சிலர் மனவருத்தத்துடன் கலைந்து போனார்கள். இந்த வருஷமும் பரிஷத்தில், சுமார் 120 பண்டிதர்கள் திருவையாற்றுக்கு அருகிலுள்ள இடங்களிலிருந்தும், சென்னையிலிருந்தும், பங்களூரிலிருந்தும், ஜாம் நகர், பௌநகர், தார்வார், கோலாப்பூர் முதலான தூரஸ்தலங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். இவர்களில் மூன்று மதஸ்தர்களும், அதாவது, ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்வர்களும் வந்திருந்தார்கள். ஹிந்து சமூகத்தின் ஆசாரங்களில் திருத்தங்கள் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் பண்டிதர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தது இது வரையில் நேரிடாத காரியம். இவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து மனவருத்த மில்லாமல் சமாதானமாய்த் திருத்தங்களைப் பற்றி விவகரித்தார்கள். இவர்கள் ஒரே விதமான அபிப்பிராயம் சொல்லவில்லையென்பது ஆச்சரியமல்ல. நமது பூர்விக சாஸ்திரங்களைத்



தற்கால அவசியங்களுக்குப் பொருந்தினவைகளாய்ச் செய்வதில் பண்டிதர்கள் ஒரே விதமாய் அபிப்பிராயப்படுவது சாத்தியமல்ல. தற்காலத் தேவைகளை உணர்ந்து அத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் தேசத்தின் அபிவிர்த்திக்குப் பெருந்தடையாயிருக்குமென்று தீவிரமான நம்பிக்கையுடையவர்களுக்கு மட்டும் சாஸ்திரங்களையும் தற்காலத் தேவைகளையும் ஒத்திருக்கும்படிச்செய்யத் தோன்றும். பழைய நூல்களையே படித்த பண்டிதர்களுக்கு இம்மாதிரி தேசாபிமானம் உண்டாவது எதிர்பார்க்கக் கூடியதல்ல. அவர்களுக்குச் சரித்திரம் தெரியாது. தேசத்து முற்கால தற்கால நிலைமைகளையும் அறிந்தவர்களல்ல. இந்தியாவின் பிற்கால நிலைமைக்கு எவைகள் அவசியமோ, அவைகளைப் பற்றியும் அவர்கள் சிந்தித்தவர்களல்ல. உலகத்தில் பற்பல தேசங்களில் தோன்றிக்கொண்டிருக்கும் பிரமாதமான வேற்றுமைகளும் புதுமைகளும் இன்னவென்று அவர்கள் அறிய முயன்றவர்களல்லவென்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை.

ஆகையால் கேவலம் புஸ்தகப் பூச்சிகளாய் இருந்த வீட்டிலேயே இருந்து லோக விவகாரங்களை அறியாத பண்டிதர்களுக்கு இந்தியாவுக்குத் தற்காலம் வேண்டிய மாறுதல்களும் புதுமைகளும் தெரியாமலிருப்பது ஆச்சரியமல்ல. சமுத்திர யாத்திரை செய்வதும் பெண்கள் பெரிய மனுஷியான பிறகு விவாகம் செய்வதும் நாமெல்லோரும் புண்ணிய பூமியென்று அன்புடன் கருதும் இத்தேசத்தின் பிற்கால க்ஷேமத்துக்கு இன்றியமையாதவென்பதை அறியாமல் விரோதமாய் அபிப்பிராயப்பட்டார்கள். [illegible] மட்டும், அதாவது பெண்கள்

விவாகம் செய்யப்படும் போது மாப்பிள்ளைகளுக்குப் பணங் கொடுக்கும் வழக்கம் மட்டும், சாஸ்திர விரோதமென்று ஒரே மனதாய்ச் சொன்னார்கள். இப்படிச் சொன்னது அனுபோகத்தில் எவ்வளவு பலனைக் கொடுக்குமோ தெரியவேண்டும். இவர்களுடைய அபிப்பிராயத்தை விட, பிள்ளைகளை பெண்வீட்டாரிடத்திலிருந்து பணம் வாங்குவதில்லையென்று விவாகத்திற்கு முன்னால் நிச்சயம் செய்து கொண்டால் அதனால் அதிகப் பலன் விளையுமென்று நினைக்கிறோம்.

திருவையாற்றில் கூடின பண்டிதர்களில் பெரும்பாலார் திருத்தங்களுக்கு விரோதமாய் இப்போது அபிப்பிராயப்பட்ட போதிலும், இப்பண்டித சபைமாதிரி பிரதி வருஷமும் அல்லது அடிக்கடியாவது சபை கூடி அவசியமான ஆசாரங்களைப் பற்றிக் கவனிப்பார்களானால் சில வருஷங்களுக்குள் இத்திருத்தங்கள் அவசியமென்று அறிந்துகொள்வார்கள். பண்டிதர்களுடைய அபிப்பிராயம் எப்படியிருந்தாலும், திருத்தங்கள் நடந்து கொண்டேயிருக்கும். பண்டிதர்கள் விரோதமாயிருக்கிறார்களென்று அன்னிய தேசம் போவது நிற்காது. பெண்களுக்கு விவாகவயதும் உயர்ந்து கொண்டே வருகிறது. ஹிந்து சமூகத்தில் பண்டிதர்கள் ஒரு பொருட்டான வகுப்பாகக் கருதப்படவேண்டுமானால், அவர்கள் ஆங்கிலங்கற்று முன்சென்றுகொண்டிருக்கிறவர்களுடன் ஒத்துச் செல்ல வேண்டும். பண்டிதர்களுக்காகத் தேசம் நின்ற நிலையில் இருக்கப்போவதில்லை. உலகமெல்லாம் முன்சென்றுகொண்டிருக்க இந்தியா மட்டும் பின்னிற்க இசையாது. முற்காலத்தைப் போல் இந்தியா தனியான தேசமாய்



உலகத்து மற்றத் தேசங்களுடன் சம்பந்தப் படாத தேசமாயில்லை. மற்றத் தேசங்களுடன் இந்தியாவுக்கு சம்பந்தம் நெருங்கி வருகிறபடியால், மற்றத் தேசங்களைப்போல் இந்தியாவும் முன் செல்ல முயலும். இங்கிலாந்தில் மட்டும் இப்போது சுமார் இரண்டாயிரம் இந்தியப் பிள்ளைகள் படிக்கிறார்களென்றால் அங்கும் மற்றத் தேசங்களிலும் படிப்புக்காகவும் தொழிலுக்காகவும் வேறு காரியங்களுக்காகவும் அன்னிய தேசங்களுடன் பழக்கமும் சம்பந்தமும் பெறும் இந்தியர்கள் எத்தனை பேர் இருக்கவேண்டுமென்று பண்டிதர் அறியக்கடவர். இந்தப் பெரும் சம்பவத்தையறிந்து, பண்டிதர்கள் அதற்கொத்தபடி நடக்காலன்றி, அவர்கள் செல்வாக்கற்றுப் போவார்களென்பதை நிச்சயமாய் நம்பவேண்டும். மேலும் இப்போது ஆங்கிலங்கற்ற பண்டிதர்கள் சிலர் முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். திருவையாற்றுப் பரிஷத்தில் ஒரு பண்டிதர் சமுத்திரயாத்திரை செய்வதற்கு அனுகூலமாகச் சில நியாயங்கள் சொன்னார். கிருஷ்ணன் துவாரகையில் வசித்த போது அவனைப் பார்க்கப் பிராமணர் சமுத்திரம் தாண்டிச் செல்லவில்லையா? மார்மகோவா என்ற இடத்தில் பிராமணர் கப்பல் யாத்திரை செய்தார்களென்று எழுதியிருக்கும் சிலாசாஸனம் இல்லையா? நரேந்திரனாகிய சக்கரவர்த்தி இங்கிலாந்தில் வசிப்பதால் அவரைத் தரிசிக்கப் பிராமணர்கள் செல்லுவது கடமையல்லவா? இவ்விதம் அந்தப் பண்டிதர் தர்க்கித்தார். இவ்வாறு தற்காலத் திருத்தங்களுக்கு அனுகூலமாகத் தர்க்கிக்கும் பண்டிதர்கள் இனி அதிகமாவார்கள். பண்டிதர்கள் சிறிது ஆங்கிலங்கற்றவர்களாயிருந்தாலும், அல்லது, ஆங்கி

லம் கற்றவர்களுடன் பழகினவர்களா யிருந்தாலும், திருத்தங்களின் அவசியத்தை யுணர்ந்து பேசுவார்கள். பழைய காலத்துப் பண்டிதர்களும் மடாதிபதிகளும் சமூகத் தலைவர்களின் மதிப்பைப் பெற்றிருக்க வேண்டுமானால் அவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை மாற்றி, புது நாகரிகத்துக்கு ஒத்தவாறு அபிப்பிராயங்கள் கொள்வது அவசியமாகும்.

## CHAPTER II.

## தேச சஞ்சாரம்.

### இந்தியச் சிறுவர்கள் அன்னிய தேசம் செல்லுதல்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் செய்த பிரசங்கத்தில் சிறுவர்களுடைய படிப்பு முடிந்த பின் அவர்கள் தேச சஞ்சாரம் செய்ய வேண்டு மென்று சொன்னார். காலேஜ்களிற் பெறும் படிப்பினால் மட்டும் புத்தி விசாலம் பெறாது. தேச சஞ்சாரம் செய்து, பல விடங்களில் வெவ்வேறு ஆசாரங்களையும் ஸ்தாபனங்களையும் ஜனங்களின் சுபாவத்தையும் அறிந்தால் மட்டும், புத்தி குறுக்கம் நீங்கி விசாலம் பெறும். ஒரு வருஷம் அல்லது ஆறுமாசமாவது இப்படி தேச சஞ்சாரத்தில் காலம் செலுத்த வேண்டும். இப்படிச் செலுத்தப்படும் காலம் வீணாகாது. மேல் நாடுகளில் இப்படிச் செய்வது கல்விப்பயிற்சியின் பூர்த்திக்கு அவசிய மென்று நினைக்கப்படுகிறது. பட்டம் பெற்ற ஒரு சிறுவன் தான் வசிக்கும் ஒரு சிறு ஊரிலேயே இருந்து காலங்கழிப்பதில் என்ன பிரயோசனம்? "இந்தியாவின் சரித்திரத்தை



அறிய வேண்டுமானால், டெல்லி நகரத்தைப் போய்ப் பார்; ஈஸ்வர சிருஷ்டியின் பெருமையும் அழகும் தெரிய வேண்டுமானால், ஹிமாலய சாரல்களில் திரிந்து அங்கு முனிகள் தவம் செய்வதைப் பார்; சிற்ப சாஸ்திரத்தின் பெருமை தெரிய வேண்டுமானால், ஆக்ராவில் டாஜ் மஹால் மாளிகையைப் பார்; இந்து மதத்தினர் ஈஸ்வரோபாஸனை செய்யும் உற்சாகத்தையும் சிரத்தையையும் அறிய வேண்டுமானால், ஸ்ரீ காசியில் கங்கை நதிக்கரையையும் தேவாலயங்களையும் பார்; நம் தேசம் தற்காலம் செய்துவரும் முற்போக்கு எத்தகைய தென்று தெரிய வேண்டுமானால், அங்கங்கு கிராமங்களிலும் பட்டினங்களிலும் வசிக்கும் ஜனங்களின் வீடுகளிற் புகுந்து அவர்கள் ஜீவிப்பதைப் பார்; ஐரோப்பியத் தேசங்களிற் சில காலம் சஞ்சரித்தால் மேற்றிசை நாகரிகத்தின் நுட்பங்களும் பெருமைகளும் தெரியும்; சமூகத்தின் பொது நன்மை சிற்சில வகுப்பார் மட்டும் கல்வி பெறுவதால் பூர்த்திபெறாது. எல்லா வகுப்பாரும் உயர்ந்து முற்செல்லவேண்டும். எப்போதும் சுறுசுறுப்புக் காட்டுவதினால் நலமும் சிறப்பும் பெறலாம். கீழ் நாடுகளைப் பார்த்து மேல் நாட்டார் மோகித்தாலும் மேல் நாட்டில் நாமும் மோகிக்கக் கூடியவைகள் இருக்கின்றன; குடும்ப வாழ்க்கையின் (Poetry of Life) அழகை அறிய வேண்டுமானால், ஒரு ஆங்கிலேயக் குடும்பத்தைப் போய்ப்பார்,"—இவ்வாறு, ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் தேச சஞ்சாரத்தின் பலனை வர்ணித்தார். தேச சஞ்சாரம் செய்வதில் பலருக்குக் கஷ்டங்களிருந்தாலும் தர்மப் பிரபுக்களும் கல்வியில் அபிமான முள்ளவர்களும் சகாயம் செய்வார்களானால்,

இந்தக் கஷ்டங்கள் நீங்கிவிடும். இந்த யோசனையைப் பற்றி நம் தலைவர்கள் கவனிப்பார்களாக.

## ஹரித்துவார் குருகுலவாசமும் அங்கு கல்வி கற்பிக்கும் விதமும்.

வடக்கே ஹரித்துவார் க்ஷேத்திரத்தில் பஞ்சாப் தேசத்து ஆரிய சமாஜத்தார் குருகுல வாசமென்று பேரிட்டு ஒரு பெரிய காலேஜ் நடத்துகிறார்கள். குருகுலவாசமாவது, நமது வேத சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடி, சிஷ்யர்கள் ஆசாரியரை யடைந்து அவருக்குப் பணிவிடை செய்து, அவர் தயவினால் வித்தை கற்கும் ஸ்தலம். ஹரித்துவாரம், கங்கை நதி மலையிலிருந்து இறங்கி சமபூமியில் பிரவாகிக்கும் மகா க்ஷேத்திரமான திவ்விய ஸ்தலமாகையால், அங்கு இந்த குருகுலத்தை ஸ்தாபித்தது ஆரிய சமாஜத்தாரின் விவேகத்தைக் காட்டுகின்றது. இந்த குருகுலத்தில் பழைய வேத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் தர்மத்துக்கும் மதாசாரங்களுக்கும் விரோதமில்லாமல் ஹிந்துப் பிள்ளைகள் கல்வி கற்று, விஜாதீயப்படாமல் மதாபிமானிகளாகவும், தேசாபிமானிகளாகவும், ராஜ பக்தர்களாகவும் வளருகிறார்கள். இந்த உத்கிருஷ்டமான வித்தியாஸ்தானத்தில் இன்னும் பல விசேஷங்களுமுள்ளன. அவைகளைச் சொல்லப் புகின் வளரும். ஆயினும் இந்த குருகுலம், மகாஷய முன்ஷிராம் என்ற பெரியோரால், அவரைப் போலவே துறவறம் பூண்ட உபதேசிகர்களின் உதவியைப் பெற்று நடத்தப்பட்டு வருகின்றது. இந்தியாவிலுள்ள மற்ற காலேஜுகளில் அனுஷ்டானத்தி[illegible] விராமல் இந்தக் காலேஜில் மட்டும் இருக்கும் [illegible]



முக்கியமான வழக்கத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

சமீபத்தில் இந்தக் குருகுலத்தைச் சேர்ந்த 19 காலேஜ் பிள்ளைகளும், அஸிஸ்டெண்ட் மானேஜர் மகாஷய நந்தலாலும் நாலு வேலைக்காரர்களும் சரஸ்வதி யாத்திரை என்று ஹரித்துவாரிலிருந்து சிம்லாவுக்கு யாத்திரை போனார்கள். இவர்களுடன் இந்தியாவு அமெரிக்க நண்பராகிய மைரான் பெல்ப்ஸும் போனார். இந்த இரண்டு இடத்துக்கும் உள்ள தூரம் 359 மைல். இவ்வளவு தூரத்தையும் செப்டம்பர் மாசம் முழுதும் பிள்ளைகள் வெறுங்காலால் நடந்து போனார்கள். வழியில் ஆலயங்களிலும் தர்மசாலைகளிலும் சில இடங்களில் டாக் பங்களாவிலும் இறங்கிச் சமையல் செய்து சாப்பிட்டுக் களைப்பாறிச் சென்றார்கள். ஒரு நாளைக்குச் சராசரி 10 அல்லது 12 மைலுக்கு அதிகம் நடந்ததில்லை. போன வழியெல்லாம் மலைப் பிரதேசமானதால் பல மலைச்சிகரங்களையும் அரணியங்களையும், பள்ளத்தாக்குகளையும், செழிப்பான கிராமங்களையும் பார்த்துக்கொண்டு போனார்கள். இந்தப் பிள்ளைகள் அனைவரும் ஒரே மாதிரியாய்க் காலையில் 3 அல்லது 4 மணிக்கு எழுந்து, அந்த நாள் பிரயாணத்துக்கு எவ்வித அசௌகரியமுமில்லாமல் மௌனமாய்த் தயார் செய்வார்கள்.

நமது தேசத்தில் அநேக மலைகளும் காடுகளும் வனங்களும் அருவிகளும் நதிகளும் இருந்து, இந்த [illegible] திவ்ய பூமியாக்கியிருக்கின்றன. [illegible] [illegible]க்காவது [illegible] சென[illegible] [illegible] வேண்டும் [illegible]

யினும் கிடைக்கக் கூடாத பதார்த்தங்க ளில்லை. இந்தப் பதார்த்தங்களை அதிக சிரமமில்லாமல் சுளுவாய்ப் பெற்று, திவ்யக்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போய், பல பெரியோருடைய வாசத்தாலும் அருள் செயல்களாலும் புனிதம் பெற்ற ஸ்தலங்களைத் தரிசிக்கலாம். இப்படித் தரிசிப்பதால் மனசுக்கு ஆனந்தமும் உற்சாகமும் விசாலமும் உண்டாவதன்றி ஜகத்தை சிருஷ்டித்த ஈஸ்வரனுடைய சங்கற்பத்தின் அளவிடக்கூடாத பெருமையை ஒருவாறு மனதால் சிந்திக்கவும் இடமுண்டாகின்றது. இப்படி குருகுல வாசத்துப் பிள்ளைகள் யாத்திரை சென்றதில் அவர்களுக்கு தேக ஆரோக்கியம் உண்டாகி, அவர்கள் மனப்பயிற்சி பெற்றது மல்லாமல், உயர்ந்த கருத்துகளும் ஜீவகாருண்யமும் சாந்தமும் தெய்வ பக்தியும் பெற்றார்கள். அவர்கள் யாத்திரைபோன காலமெல்லாம் அவர்கள் வாயினின்று ஒரு ஆக்கிரமான சொல்லாவது அவர்கள் சரீரத்தினால் கடுமையான செயலாவது உண்டானதில்லையென்று மிஸ்டர் மைரன்பெல்ப்ஸ் "மாடர்ன் ரெவியூ" வுக்கு எழுதின வியாசத்தில் சொல்லுகிறார். அடக்கமும், பெரியோரிடத்தில் உபசாரமும், தெய்வ பக்தியும், பிராணிகளிடத்தில் தயவும் பெற்றார்களென்றால், இதை விட அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய விலை பெற்ற பொக்கிஷம் என்ன இருக்கக்கூடும்?

இந்த குருகுல வாசத்தைப்போல தேசத்திலுள்ள மற்ற காலேஜ்களும் ஸ்கூல்களும் ஏன்செய்யக்கூடாது? நேர்த்தியான ஆரணியங்களும் அருவிகளும் நதிகளும் உள்ள மலைப்பிரதேசங்கள் பல தென்னிந்தியாவில் இருக்கின்றன. நீலகிரி, சேர்வராயமலை, கொடைக்



கானல், குற்றாலம், இவைகள் போன்ற நேர்த்தியான தேக சௌக்கியமும் மனதுக்குச் சுகமும் கொடுக்கக் கூடிய மலைப்பிரதேசங்கள் இருக்கின்றன. வருஷத்துக்கு மூன்று மாதம்போல் பிள்ளைகளுக்கு விடுமுறை காலமா யிருப்பதால், அக்காலத்தில் யோக்யமான நல்ல உபாத்தியார் ஒருவர் பிள்ளைகளிற் சிலரை அழைத்துக் கொண்டு இந்த இடங்களுக்குப் போய்ப் பார்த்து வந்தால், அவர்களுக்கு குருகுல வாசத்துப் பிள்ளைகளுக் குண்டான நன்மைகள் உண்டாகக்கூடுமே! நம் தேசத்துச் சிறுவர்கள் பலர் தேசசஞ்சாரம் செய்யாமலே முதுமை யடைகிறார்கள். ஆகையால் இவர்களுக்குக் குறுகின புத்தியும், வீண் கர்வமும், அன்னியரிடத்தில் அவமதிப்பும், அனுபோக மின்மையும் உண்டாகின்றன. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் எந்த மலைப் பிரதேசமானாலும் அந்த இடத்தில் காலேஜ் பிள்ளைகள் வந்து தங்கி, பலவிதமாய் ஆனந்தமும் உற்சாகமும் மன உயர்வும் சரீரத்திடனும் பெற்றுப் போகிறார்கள். இப்படி விடுமுறை காலங்களில் மலைப்பிரதேசங்களில் போய் வசிப்பது அங்கு காலேஜ் பிள்ளைகளுக்கு வெகு பிரியமென்று சொல்லப்படுகின்றது. மூளை வேலை செய்து களைத்துப்போன பெரியோருக்கும் மலை வாசத்தால் சரீரமும் மனசும் களைப்பு நீங்கி, எப்போதையும் விட அதிகத் திடனை யடைகின்றன. இந்தியப் பிள்ளைகளுக்கு இந்த நன்மைகள் கூடாவா? மேற்கண்ட உத்தம குணங்களைப் பெற்று, நம் சிறுவர்கள் குண்டுச் சட்டியில் குதிரையோட்டும் கேவலம் புஸ்தகப் பூச்சிகளாய் வளராமல், கை, கால், காது, வாய், முதலிய அவயவங்களும் அதனதன் சேஷ்டைகளுக்கு உற்ற

வசதிகள் பெற்று, அவைகள் செய்யும் உத்தமமும் பரிசுத்தமுமான வேலைகளால் மனதுக்கு ஞானமுண்டாகி, ஆண்மையும் அறிவும் பெற்ற உத்தம புருஷர்களாகவும் யோக்கியதையும் பரோபகாரச் சிந்தையும் உள்ள பிரஜைகளாகவும் முன்வர வேண்டும்.

### அன்னிய தேசங்களில் கல்வி கற்றல்—
### சீனரின் ஊக்கம்.

சீனதேசத்தைப்போல் பழைய நாகரிகத்தையே தழுவி நிற்கும் மந்தகதியுள்ள தேசம் வேறொன்றும் உலகத்திலில்லையென்று வெகு காலமாய்ச் சொல்லப்பட்டு வந்தது. இப்போது அதுவும் மேல்நாட்டு நாகரிகத்தை விரும்பி பரபரப்புக்காட்டத் தலைப்பட்டிருக்கின்றது. ஜப்பானியர் ருஷ்யாயுத்தத்தில் வென்ற பிறகு ஆசியா முழுமையும் அங்கிருந்துள்ள ஜனங்கள் மனதில் சுவாதீன விருப்பமும் தன் மதிப்பு முண்டாகி வருகின்றனவென்று ஐரோப்பியர் கண்டு சில சமயங்களில் பயத்தையு மடைகிறார்கள். இந்தியாவில் சமீபத்திலுண்டாகிவரும் புதுச் சக்திக்கு இந்த ஜப்பானியர் வெற்றி ஒரு காரணமென்று லார்ட் மின்டோ, லார்ட் மார்லி, இருவரும் ராஜ்யக்கப் பொறுப்பை ஏற்ற ஆரம்பத்திலேயே சொன்னார்கள். பர்ஷியா, துருக்கி, ஈஜிப்ட் இத்தேசங்களில் உண்டாயிருக்கும் புதுச் சக்திக்கும் இது காரணம். ஜப்பானுக்குப் பக்கத்திலுள்ள சீனதேசத்தில் இந்த ஜப்பானிய வெற்றி முக்கியமான பலனை விளைக்காமல் போகவில்லை. [illegible]லையே ராஜாங்கத்தாரால் பல [illegible]துகைகள் செய்யப்பட்டு வருகின்றன. மகா விசாலமான அத்தேசத்தின் உட்பிரிவு



களாகிய மாகாணங்களில் ஒவ்வொன்றிலும் ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சட்ட சபை ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகின்றது. சமீபத்தில் ஒரு பெரும் புரட்சி நடந்து, மஞ்சு ராஜவம்சத்தினர் சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டு, ஒரு குடியரசு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவைகளும் இன்னும் விசாலமான மாறுதல்களும் செய்யப்படுமென்பதில் சந்தேகமில்லை.

இதற்குச் சீன தேசத்தார் தக்க முன்முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிகளில் முக்கியமானது, சீனச் சிறுவர்கள் அன்னிய தேசங்களிற்போய் கல்வி கற்று வருவது. ஜப்பானியர் இந்த உபாயத்தையே அனுஷ்டித்துத் தங்கள் தேசத்தைப் புதிய தேசமாக்கியிருக்கிறார்கள். சீனரும் தங்கள் தேசம் புதிய தேசமாகவேண்டுமென்று விரும்பி, ஜப்பானியரிடத்திலேயே பல வித்தைகளைக் கற்றுக் கொள்வதுமன்றி அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் போய் கற்றுக் கொண்டு வருகிறார்கள். தங்கள் தேசத்தைப் புதிய தேசமாக்க வேண்டுமானால் சீன தேசத்தார் தங்கள் ராஜாங்கத்தை மேல் நாட்டு முறைகளின்படி அமைத்துக்கொள்வதுமன்றி, தரைப்படை, கடற்படை இவைகளைக் கட்டிப் பயிற்சி செய்வதும், ரயில் பாதைகள் முதலான போக்கு வரத்து வசதிகளை ஸ்தாபிப்பதும், தொழில்களின் அபிவிருத்திக்கு வேண்டிய சாஸ்திரங்களைக் கற்பதும், அன்னியரைக் கொண்டு முடிய வேண்டும். ஏற்கனவே, ஜப்பானியரில் பலர் சீனாவுக்கு வந்து [illegible] சேனியப் பயிற்சியிலும் கல்விப் பயிற்சியிலும் உதவி செய்து வருகிறார்கள்.

முக்கியமாய் அன்னிய தேசங்களுக்கே போய்ச் சீனச்சிறுவர்கள் பற்பல வித்தைகளைக் கற்றுவருகிறார்கள். இதுவரையில் இப்படிக் கற்றுத் திரும்பினவர்களையும் தற்காலம் கற்றுக்கொண்டிருக்கிறவர்களையும் சேர்த்தால் 20000-க்குக் குறைவில்லையென்று சொல்லப்படுகிறது. இனி இப்படிப் போய் வரும் சிறுவர் அதிகமாவார்களென்றும் நம்பப்படுகிறது. சில வருஷங்களுக்கு முன்னால் சீனாவில் பாக்ஸர் கலகமென்று அத்தேசத்தார் சிலர் அன்னிய வாசிகளுக்கு விரோதமாய்க் கலகம் செய்ய, அன்னிய தேசத்துக் கவர்ன்மெண்டுகள்—இங்கிலாந்து ஜர்மனி அமெரிக்கா ருஷியா முதலிய தேசங்களின் கவர்ன்மெண்டுகள்—சேர்ந்து அதை அடக்கினார்கள். அப்போது சீனக் கவர்ன்மெண்ட் யுத்தச் செலவுக்காக மற்ற கவர்ன்மெண்டுகளைப்போல் அமெரிக்காவுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கும்படி கேட்டது. அமெரிக்கா பெரிய மனது செய்து அந்த நஷ்ட ஈட்டை வேண்டாமென்று மன்னித்துவிடவே, சீனக் கவர்ன்மெண்டார் அந்தத் தொகையை கல்வி விஷயமாய்ச் செலவுசெய்ய நிச்சயித்திருக்கிறார்களாம். அமெரிக்கா கவர்ன்மெண்டிக்கும் அந்நிய தேசங்களுக்கும் வருஷா வருஷம் நாற்றுக்கணக்கான சிறுவர்கள் அனுப்புவிக்கப் படுவார்களாம். கவர்ன்மெண்டாரால் அனுப்பப்படும் சிறுவர்களைத் தவிர வேறு சிறுவர் பலர் தேசாபிமானத்தாலும் கல்வி விருப்பத்தாலும் அன்னிய தேசம் செல்லக்கூடும். சீனவாதிபத்தியத்தின் மேற்கு எல்லையோரத்தினின்று 3 அல்லது 4 மாதகாலம் பிரயாணம் செய்து கிழக்கு ஓரத்திலுள்ள துறைமுகங்களுக்குச் சீனச் சிறுவர்கள் வந்து, அந்தத் துறைமுகங்



களிலிருந்து அமெரிக்கா முதலான அன்னிய தேசங்களுக்கு யாத்திரை போகிறார்களெனப் படுகிறது. கல்வியின்பொருட்டுத் தூரமான அன்னிய தேசங்களுக்குப் போவதில் இவ்வளவு விருப்பமுள்ள சிறுவர்கள் சமீபத்திலுள்ள ஜப்பானுக்குப் போகாமலிருப்பார்களா? டோகியோ பட்டணத்தில் 4 வருஷங்களுக்கு முன்னால் வசித்த ஒரு இந்தியர், அவ்விடத்து யூனிவர்ஸிடியில் 15,000 சீனச் சிறுவர்கள் படித்ததைத் தாம் பார்த்ததாக எழுதுகிறார். மேற்றிசையிலுள்ள பெயர் பெற்ற எல்லா யூனிவர்ஸிடிகளிலும் சீன மாணவர்கள், இஞ்சினீரிங் சாஸ்திரம், இயற்கை சாஸ்திரம், வியாபாரம், சட்டம், தௌத்தியம், ராஜ தர்ம சாஸ்திரம் இவைகளைப்படித்து வருகிறார்கள். இப்படிப் படிப்பவர்களில் சீனப் பெண்களுமிருக்கிறார்கள். இவர்கள் வைத்தியம், சித்திரவித்தை, குடும்ப நிர்வாகம் ஆகிய இவைகளைக் கற்று வருகிறார்கள். படிக்குமிடங்களிலெல்லாம் சீனர் நல்ல பெயர் வாங்கியே வருகிறார்கள்.

## CHAPTER III.

## மதப்பயிற்சியும் ஒழுக்கப்பயிற்சியும்.

### கல்விச்சாலைகளில் மதப்பயிற்சி.

1910-ம் ௵ மார்ச்சு மீ, சைதாப்பேட்டையில் லார்ட்பிஷப் என்ற கிறிஸ்துவ மதாசாரியர் செய்த ஒரு பிரசங்கத்தில் [illegible] கல்விச் சாலைகளில் மதம் போதிக்கப்படவேண்டுமென்றும், கல்விச்சாலைகளை நடத்தி

வோர் கவர்ன்மெண்டானதால் அப்படிப் போதித்தல் சாத்தியமில்லாமலிருக்கிறதென்றும், மதபக்தியும் நல்லொழுக்கமும் கற்பிக்காதகல்வி பிரயோஜனமற்றதென்றும், ஆகையால் கவர்ன்மெண்டார் கல்விச்சாலைகளை நடத்துவதை விட்டுவிடவேண்டுமென்றும், அந்தந்த சமூகத்தைச் சேர்ந்த சிலர் ஒன்று சேர்ந்து அவரவர் மதத்தைக் கற்பிக்கவேண்டுமென்றும், பேசினார். இப்படிப்பேசினதில் கவர்ன்மெண்டு கல்விச்சாலைகளை நடத்துவதினின்றும் விலகிவிடவேண்டுமென்று சொன்னதுதான் புதிது. கல்விச்சாலைகளில் மதப்பயிற்சியும் அவசியமென்று ஆங்கிலேயர், வெகுகாலமாகச் சொல்லி வருகிறார்கள். இந்தியாவும் இங்கிலாந்தைப் போன்ற தேசமென்று நினைத்து இப்படிச் சொல்லுகிறார்கள். நம் தேசத்தில் ஈஸ்வர பக்தியும் சதாசாரமும் பெருங் குறையும் ஸ்கூல்களில்தான் உண்டாக வேண்டுமென்ற அவசியமில்லை. நமது பூர்வீக வழக்கங்களும் பெரியவர்களுடைய ஆசாரங்களும் முன்னிருந்தனபோல் இருந்துவரும் பட்சத்தில், ஸ்கூல்களிற் பயிற்சியில்லாமலே லார்ட் பிஷப் கோருவது நிறைவேறும். நமது மதாசாரியர்களும் சாஸ்திர விற்பன்னர்களும், பொதுவாய் நமது பெரியோர்களும், நம் சிறுவர்களை நல்ல வழிகளிற் செலுத்தவேண்டியது தங்கள் கடமையென்று உணர்வார்களானல், நமது பழக்க வழக்கங்களிலும் ஸ்தாபனங்களிலும் மதப்பயிற்சிக்கு அவசியமான வசதிகள் இருப்பதைக் காண்பார்கள்.

கல்விச் சாலைகளை நடத்துவதினின்றும் கவர்ன்மெண்டு விலகுவது நிறைவேறக் கூடியதல்ல. கல்வியை நடத்துவதில் கவர்ன்மெண்டிற்குள்ள சம்[illegible]



வரவர நெருங்கி இருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு விருப்பம் உண்டாகி வருகிறதேயன்றி, தளர்ந்து விலகவேண்டுமென்ற விருப்பம் உண்டாகவில்லை. இப்படித்தான் இனியும் இருக்குமென்று நம்புகிறோம். அந்தந்த சமூகத்துத் தலைவர்கள் தங்கள் சிறுவர்களைத் தங்கள் விருப்பப்படி படிப்பிக்க வேண்டுமென்ற முயற்சி கவர்ன்மெண்டின் ஆதரவில்லாமலே செய்யப்பட்டு வரவேண்டுமென்று நினைக்கிறோம். நம் சிறுவர்களின் நடத்தையைப்பற்றி, ராஜாங்கத்தார் மனதில் வரவர சம்சயமும் அச்சமும் உண்டாகிவருகின்றன. இந்த நடத்தைக்குக் காரணம் அச்சிறுவர்கள் ஸ்கூல்களிற் பெறும் பயிற்சி யென்று நினைக்கப்படுகிறது. ஆகையால் ஸ்கூல்களையும் காலேஜ்களையும் தங்கள் பார்வையிலேயே வைத்து நடத்தவேண்டுமென்பது ராஜாங்கத்தாரின் முறையாய் ஏற்பட்டு வருகின்றது. இந்த முறை சரியானதென்று நாம் நினைக்கவில்லை. சிறுவர்களின் கல்வியில் கவர்ன்மெண்டுக்கு எவ்வளவு அக்கறையோ அவ்வளவு பெற்றோர்களுக்கும், பொதுவாய்ச் சமூகத்தினருக்கும், உண்டு. ஆகையால், கல்விச்சாலைகளை நடத்துவதை ராஜாங்கத்தார் சமூகத்தினருக்கு முழுதும் கொடுத்து விடாவிட்டாலும், அவர்களின் ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் இப்போதைவிட அதிகமாய்த் தழுவி, அவைகளை நடத்துவதே உசிதமாகும்.

மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூலில் தியஸாபிகல் கான்பெரென்ஸ் நடந்த போது, ஸர் S. சுப்பிரமணி [illegible] T. சதாசிவ அய்யரும் இந்தியச்

* இவர் இப்போது ஜஸ்டிஸ் மிஸ்டர் T. சதாசிவ அய்யர்.

சிறுவர்களின் மதக்கல்வியைப் பற்றிப் பேசினார்கள். இதைப்பற்றிப் பேச இவ்விரு பெரியவர்களைக் காட்டிலும் தகைமையுடையோர்களை நம்மவருள் காண்புதரிது. நம் தேசத்தில் இந்தியர்களின் நற்பெயரைக் கெடுத்து அவர்களின் தன்மைக்கு விரோதமாகவும், நம் நற்காலத்துக்கு இடையூறாகவும், சில வருஷங்களாகத் தோன்றிவரும் அராஜக வெறியானது, பெரும்பாலும் நம் சிறுவர்களையே பற்றியதாய், அவர்களுக்கும் அவர்கள் கொடுமைக் கிலக்காகும் பிறருக்கும் உயிர் நஷ்டத்தை யுண்டாக்குவதை நோக்கி வருந்தாதவர்கள் இரார்கள். இது நம் தேச க்ஷேமத்தைக் கோரியவர்களுக்கும் கவர்ன்மெண்டிக்கும் பெருங்கவலையை யுண்டாக்கி யிருக்கிறது. இக்கொடிய வெறியையொழிப்பது எவ்வாறென்று இந்தியப் பிரமுகர்கள் பலவிடங்களில் சிந்தைகொண்டு, பல உபாயங்கள் செய்து, தாமாகவும் கவர்ன்மெண்டோடு கலந்தும், பாடுபட்டு வருகிறார்கள். சிறுவர்களை ராஜீயக் கலக்கங்களிற் சேரவிடக்கூடாதென்று அபிப்பிராயம் பரவி வருகிறது. இதோடு, மதக்கல்வியைச் சிறுவர்களுக்கு ஊட்டுவதையும் ஒரு பரிகாரமாகப் பலர் கருதுகிறார்கள். இந்தியாவில் பொதுக் கல்வி முறையில் மதப்பயிற்சிக்கே இடம் அமைக்காதிருப்பது ஒரு பெருங்குறை யென்றும், இக்குறையால் தெய்வபக்தி, பெரியோரிடம் பணிவு, அடக்கம், ஒத்தோரிடம் அனுதாபம், ஜீவகாருண்யம் முதலிய மதப்பயிற்சியால் விளையக்கூடிய நற்குணங்கள் நஷ்டமாகி, சமூகங்கட்கு ஹானியுண்டாகிற தென்றும், சுமார் 50 வருஷமாகக் கவர்ன்மெண்டு இந்த விஷயத்தில் காட்டி வந்த அசட்டையின்



பலனை இந்த அராஜக நிகழ்ச்சி ரூபமாக நம்தேசம் அனுபவிக்கிற தென்றும், அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஸர் S. சுப்பிரமணிய அய்யரும் மிஸ்டர் டி. சதாசிவ அய்யரும் இவ்விஷயத்தில் தங்களுக்குள்ள ஆழ்ந்த உணர்ச்சியை வெளியிட்டார்கள். ஸர் S. சுப்பிரமணிய அய்யர், இந்த அராஜகச் செயல்கள் கவர்ன்மெண்டின் கண்களைத் திறந்து விட்டன என்றார். மிஸ்டர் சதாசிவ அய்யரும் அராஜக வெறியர்கள் தவறான மத உணர்ச்சியால் தூண்டப்பட்டவர்களென்று கருதவேண்டும், என்றார். இருவரும் மதக்கல்வி இதற்கு மருந்தாகு மென்றும், எவ்வித மதக் கல்வியும் பலவகைப்பட்ட ஜனங்களைக்கொண்ட நம் தேசத்தின் தன்மைக் கேற்றபடி அமைவதாகு மென்றும், அப்படி யமைப்பதில் இராஜ்யம், அதைச் சேர்ந்தவர்களும் எவ்வாறு உதவி செய்யக்கூடு மென்றும் காட்டினார்கள். ஸர் S. சுப்பிரமணிய அய்யர் மதமாற்றலாலுண்டாகும் கொடுமையையும் தீங்கையும் பற்றி மிகுந்த ஆத்திரமும் சூழ்ச்சியும் விவகாரமும் காட்டிப் பேசினார். ஒவ்வொரு சமூகத்துக்கும் தேசத்துக்கும் தக்கபடி மதம் அமைகின்றது. ஒரு ஜனத்தை அதன் மதத்தினின்று மாற்றுவது அந்த ஜனத்தின் முற்போக்கைத் தடுப்பதாகு மென்றார். உலகமெல்லாம் ஆத்ம ஞானத்தைப் பரப்புவது இந்தியாவின் பொறுப்பென்றும், அந்தப் பொறுப்பை வகிக்க யோக்கியதை யுண்டாகும்படி இந்தியா முதலில் ஆத்மஞானம் நிரம்பியதாகவேண்டு மென்றும், இது [illegible] மென்றும் சொன்னார். இந்துக் குடும்பங்களில் மதக் கல்வி புறக்கணிக்கப்

படுவதையும், தேசம் இப்போதுள்ள நிலையில் மதக் கல்வி விஷயத்தில் பாடுபட தலைவர்கள் முற்படாமையையும் குறித்து வருந்தினார். சிறுவரைத் திருத்த முயலுவோர் தம் நடத்தையே சிறுவர்க்கு ஒரு படிப்பினையாயிருக்கும்படி நடக்கவேண்டுமென்றும், அப்படி இப்போதில்லாதிருப்பது பெரும் வசையாகுமென்றும் இருவரும் கண்டித்துப் பேசினார்கள். வீடுகளில் எப்போது சிறு பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் புருஷர்கள் கல்வியும் மதமும் சரித்திரமும் வீட்டில் கற்பிக்கிறார்களோ அப்போது தான் இந்த வசை நீங்கும்! வெளியில் போனால் பிள்ளைகள் தம் மதத்துக்கும் வழக்கத்துக்கும் பாதகமான பல கண்டு அநுபவிக்கிறார்கள். அவ்வநுபவம் நல்லது பொல்லாதது என்று அவர்களுக்கு எங்கே யார் சொல்வார்கள்? தாய் தகப்பன் அண்ணன் தம்பி யன்றோ வீட்டில் சொல்லவேண்டும்.

மிஸ்டர் சதாசிவையர் நம் சிறுவர்கள் மதமாறுதலுக்கு நம்மில் வயதில் பெரியவர்களின் நடத்தையும் ஒரு காரணமாகுமென்றார். எடுத்துக்கொண்ட வேலையில் ஈடுபடுவதையும், விடாமுயற்சியையும், மொத்தத்தில் ஒழுக்க நலத்தையும் கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களிடமிருந்து நாம் கற்கவேண்டுமென்றார். கிறிஸ்தவ மதப்பிரசாரகர்களைக் கண்டு வியந்து மோகித்து நம் சிறுவர்கள் கிறிஸ்தவர்களாகிறார்கள் என்றார். இது உண்மையாயிருக்கக் கூடுமாயினும், முழு உண்மையுமல்ல. இக்காலத்துச்சிறுவர்களைக் கிறிஸ்தவ மதமானது மதமாக மட்டும் கவரவில்லை. [illegible] இக்காலம் மேனாட்டார் உலகவாழ்வில் அடைந்துள்ள மேம்பா



டும் அடங்கியதாகச் சிறுவர்கள் மதிக்கிறார்கள். அவ்வளவு உலக ஆதிக்கியத்தையும் செல்வத்தையும் வளத்தையும் பெருவிக்கும் இக்கால நாகரிகமானது மேனாட்டில் பரவியுள்ள கிறிஸ்தவ மதத்தால் ஆகிய தென்று தங்கள் மனதில் அழுந்த உணருகிறார்கள். சுவாதீன புத்தியும், ஊக்கமும், ஒற்றுமையும், தைரியமும், உலகத்தை உருமாற்றிச் செய்துள்ள வேலைகளைக் கண்முன் பார்த்து வியந்து, அவையனைத்தும் கிறிஸ்தவ மதத்தைப் பற்றியவர்களால் ஆயின வென்று அறிகிறார்கள். இக்கால நாகரிகமும் தர்மமும் வேறு; புராதன நாகரிகமும் தர்மமும் வேறு; அக்காலத்துக்கு அது ஒத்தது; இக்காலத்துக்கு இதுவே ஒக்கும்; என்று நினைக்கிறார்கள். "ஒரு கன்னத்திலடித்தால் மற்றொரு கன்னத்தையும் அடித்தவனுக்குக் காட்டு" என்று கிறிஸ்து சொன்னபடி மேனாட்டார் நடந்திருந்தால், அவர்கள் இராஜ்யமும் மேம்பாடும் எப்படியிருக்கும்? புத்தர் கட்டளையையும் கன்பூசியஸின் நீதியையும் ஜப்பான் அநுசரித்திருந்தால், இக்காலத்து முதற்றர ராஜ்யங்களுள் ஒன்றாக மதிக்க என்னும் படியாயிருக்குமா? பர்ஷியா துருக்கி போன்ற புராதன தேசங்கள் எந்த வழியைப்பற்றி முன்னுக்கு வந்து கொண்டிருக்கின்றன? சாகக்கிடந்த சைனா உயிர்க் குறி காட்டுவது எதனால்? இவ்வாறு பல கேள்விகள் தங்கள் கண்முன் காண்பவற்றாலும் கேட்பவற்றாலும் படிப்பவற்றாலும் சிறுவர்கள் மனதில் உதிக்கின்றன. இந்த சமயத்தில் மிஸ்டர் சதாசிவ அய்யர் எடுத்துக் காட்[illegible] [illegible] [illegible] [illegible] பொருத்த அவர்கள் [illegible]

வெறுப்பாக முதிர்கின்றது. நம் சமூகத்தைத் திருத்தவும் கூடுமோவென்று உள்ளம் அழிகிறார்கள். கடல் தாண்டக்கூடாது; சிசுவிதவை ஜன்மமெல்லாம் விதவையே; மாயும் கிழம் மழலைப் பெண்ணை மணக்கலாம். இவை போன்ற அக்கிரமங்களைச் சகியாது அகற்றவும் முடியாது நம் சிறுவர்கள் சமூகத்தையும் மதத்தையும் ஒக்கத்தள்ள முயலுகிறார்கள். ஹிந்து மதம் வேறு சமூகம் வேறு அல்லவாகையால், இரண்டையும் தொலைத்து விட்டால் தேசாபிமான கைங்கரியத்துக்குச் சாதகமாயிருக்குமென்று கருதுகிறார்கள்.

இப்படி நாம் எழுதுவதால் மதமாற்றலைச் சற்றும் அங்கீகரித்ததாக நினைக்கலாகாது. சிறுவர்கள் மனதில் சுழலும் எண்ணங்களை வெளியிட்டோம். காலதர்மம் என்பது ஒன்றுண்டு. அது மாறக்கூடியது. உலக வாழ்க்கையில் வளமையைத் தேடுவது இக்கால தர்மமாயிருக்கிறது. இதை யனுசரித்து நடப்பது தவறென்று தோன்றவில்லை. இகமேம்பாட்டைத் தேடுவதில் இடையூறாகாதபடி நம் மதத்தையும் ஆசாரங்களையும் திருத்தியமைப்பது நம் தேசாபிமானிகளின் கடமையாக வேண்டும். நம்மதமும் ஆசாரவிவகாரங்களும் உட்கருத்திலும் உண்மையிலும் இகமேம்பாட்டைத் தேடுவதில் தடையாகாவென்று காட்டுவதும் அவற்றைத் திருத்தும் ஒரு வழியாகும். இவ்வழியே சாத்தியமான வரையில் நடக்கவேண்டியது. அப்புறம் தேசநன்மைக் குற்றபடி பற்றவேண்டிய வேறு வழிகளையும் கூசாது பற்றவேண்டும். ஜப்பான், பெர்ஷியா, துருக்கி போன்ற தேசங்கள் தங்கள் மதங்களை மாற்றிக் கொண்டா முன்னுக்கு வந்தன? என்று கேட்பது சரியாகாது-



அவைகளுள் சமூகக்கட்டு வேறு மதம் வேறு. மதம் மாறாமல் சமூகக்கட்டை மாற்றலாகும். நம்முள் அவ்விதமில்லை. ஆகையால், மகாத்மாக்களின் சங்கற்பமென்றும் நம்மதமே மகோன்னதமானதென்றும் சொல்வதோடு நில்லாமல், இக்காலதர்மத்தையும் கூட்டித் திருத்தங்கள் செய்வது நலம். மிஸ்டர் T. சதாசிவய்யர் சொன்னது போல, பிரிட்டிஷ் ஆட்சியானது தாராளத் தன்மையுடையதாயும் தாராள முயற்சிகளை யெல்லாம் ஆதரிப்பதாயும் இருப்பதால், அதன் ஆதிக்கியத்தின்கீழ் அமைதியோடு நாம் முற்படும்படியான முயற்சிகள் எத்தனையோ செய்ய வாய்த்திருக்கிறது. இதன் பொருட்டு இந்தியர்கள் எல்லோரும் நன்றியும் திருப்தியும் கொள்ளல் தகும்.

## ஒழுக்கப்பயிற்சி.

பம்பாய் பட்டணத்தில் 1910-ம் வருஷம் ஏப்ரல் மாதம், போதக நிபுணர்கள் பலர் சேர்ந்து ஸ்கூல்களில் ஒழுக்கப் பயிற்சி செய்வதைப்பற்றி ஆலோசனை செய்தார்கள். வழக்கம்போல், கவர்னர் ஸர் ஜார்ஜ் க்ளார்க் (லார்ட் சைடன்ஹாம்) பிரசன்னமாயிருந்து தமது அபிப்பிராயங்களை ஒரு பிரசங்கம் செய்து அறிவித்தார். மற்றவர்களும் பிரசங்கங்கள் செய்தார்கள். ஆலோசனையின் மொத்தமுடிவு என்னவெனில், ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் பிள்ளைகளுக்கு ஒழுக்கப் பயிற்சி அவசியம். ஆனால் இந்த ஒழுக்கப்பயிற்சி மதப்பயிற்சியை ஆதாரமாகக் கொள்ள வேண்டுமா? அல்லது பேர்போன நூலாசிரியர்கள் எழுதிவைத்திருக்கும் நூல்களைக் கற்று அதனாற் கிடைக்கும் பயிற்சி போதுமா? என்பதுதான் விவாதம். ஒழுக்கப்

பயிற்சி என்பது, பிள்ளைகளின் புத்தியை எவ்விதமாய்ப் பயிற்சி செய்தால் அவர்கள் துர்நடத்தைகளை விலக்கி, நல்ல வழிகளிற் செல்லும் குணவான்களாவார்களோ, அந்தப்பயிற்சி. இது அவரவர் தம் முன்னோர் அநுஷ்டித்த மதக் கொள்கைகளிற் பக்தி வைத்து, அவர்களைப்போல் ஆஸ்திக்கிய புத்தியும் சதாசாரமும் கொள்வதால் உண்டாகக்கூடும். இப்படியுண்டாவது தான் சாத்தியமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். வேறு சிலர், மதத்தை நேராகப் போதிக்காமலே உயர்ந்த காவியங்களைப் படிப்பதால் உண்டாகுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஸர் ஜார்ஜ் கிளார்க்கின் அபிப்பிராயம் என்னவென்றால்:—"கவர்ன்மெண்டு ஸ்கூல்களில் மதங்களைப் போதித்தல் சாத்தியமல்ல, உயர்ந்த நூல்களைக் கற்பதாலும், பெரியோர்களது சரித்திரங்களைப் பக்தியுடன் படிப்பதாலும் நல்லொழுக்கம் உண்டாகும். ஹிந்து நூல்களில் இப்படி நல்லொழுக்கத்தைத் தரக்கூடியவை திருக்குறள் போன்ற சுவடிகள் அநேக மிருக்கின்றன. கவர்ன்மெண்டு ஸ்கூல்களில் இவைகளை எடுத்துப் போதிப்பதில் ஆட்சேபமில்லை. மற்ற ஸ்கூல்களில் பிள்ளைகள் தங்கள் தங்கள் பூர்வீக மதங்களை நேராகவே உபாத்தியாயர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்."—இவ்வாறு ஸர் ஜார்ஜ் கிளார்க் அபிப்பிராயப்பட்டார். தற்காலம் நம்தேசத்தில் பிள்ளைகள் தாறுமாறான நடத்தை கொண்டவர்களாயிருப்பதால், இந்த ஒழுக்கப் பயிற்சிப் பிரசினையானது இவ்வளவு தீவிரமாய் வாதிக்கப்பட்டு வருகின்றது.

நமது அபிப்பிராயத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுவோம்; கல்விச் சாலைகளில் நம் பிள்ளைகள் எவ்வளவு



மதப் பயிற்சியும் ஒழுக்கப் பயிற்சியும் பெற்றாலும், பிள்ளைகளுக்கு வீடுகளில் பெரியோர் நடந்து காட்டுவதும் வெளியில் நல்ல சகவாசம் கிடைப்பதுமே நற்பயிற்சிக்கு முக்கிய ஹேதுக்கள். வெளியில் போய் உழைக்கும் புருஷர்கள் வீட்டிலிருக்கும்போதெல்லாம் சிறுவர்களுக்குச் சரித்திரம், தத்தமனுபவம் முதலியவற்றை உபதேசம் செய்யவேண்டும். ஹிந்துக்களுக்குள் தேவாலயங்களும், புண்ணிய தீர்த்தங்களும், சுபதினங்கள் விரதங்கள் என்ற அநுஷ்டானங்களும், மடாதிபதிகளும், சாஸ்திரவிற்பன்னர்களும், இருக்கிறவரையில் நமது மதத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பலம் இருந்துகொண்டேயிருக்கும். ஆனால் இவர்கள் தற்காலம் சீர்கெட்டிருப்பதை தேசாபிமானிகள் முன்வந்து திருத்தவேண்டும். இப்படித் திருத்திவிட்டால் ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் செய்யப்படும் பயிற்சியைப் பற்றி நாம் அதிகமாய்க் கவனிக்க வேண்டியதில்லை. நம் முன்னோர்கள் இந்த விஷயத்தில் போதுமான தக்க முயற்சிகள் செய்து வைத்திருக்கிறார்கள். அவைகளின் உண்மையான கருத்துகளை அறிந்து பிள்ளைகளுக்குப் போதிக்கிறவர்கள் தானில்லை. பிள்ளைகளுக்குப் போதிக்கக் கடமைப்பட்ட பெரியோர்களே அறியாதவர்களாயும் சிரத்தை யற்றவர்களாயும் இருக்கிறார்கள்.

ஸர் குருதாஸ்பானர்ஜி சொல்லுவது.

கல்கத்தா நகரத்தில் நம்மவர்கள் சேர்ந்து, "ஜாதீயக் கல்விச் சபை" என்று ஒரு சபை ஸ்தாபித்து, அதன் பார்வையின் கீழ் ஒரு ஜாதீயக் கலாசாலையும் ஜாதீய வைத்தியசாலையும் ஜாதீயத் தொழிற் கல்விச்சாலையும் ஸ்தாபித்திருக்கிறார்கள். நம்தேசத்தில் சுதேசி

முயற்சி பிரபலமானது முதல் ஜாதியக் கல்வி, அதாவது நம்மவர்களால் நம் தேசத் தன்மைக் குற்றபடி நடத்தப்படும் கல்வி, அவசியமென்று பேச்சும் எழுத்தும் விசேஷமாய்த் தோன்றினும், வெங்காளத்தில் மட்டுந் தான் இது ஒருவாறு நிறைவேறி வருகிறது. அங்க பெரிய மனுஷர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறபடியால், இது வெறுங் கூச்சலாய் முடியாமல் காரியத்திலும் சிறிது தலையெடுத்து வருகின்றது. இந்த ஜாதியக் கல்விச்சபையில் சம்பந்தப்பட்ட பெரிய மனுஷரில் ஸர் குருதாஸ் பானர்ஜி முக்கியஸ்தர். இவர் சிலகாலம் கல்கத்தா ஸர்வ கலாசாலையின் வைஸ்—சான்ஸலரா யிருந்தவர். லார்டு கர்ஸன் காலத்தில் நியமிக்கப்பட்ட யூனிவர்ஸிடி கமிஷனிலும் ஒரு மெம்பராயிருந்தார். இவர் இப்போது வயது சென்றவரா யிருந்தாலும், தேச நன்மைக்குற்ற விஷயங்களில் சுறுசுறுப்புக் காட்டி வருவது சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. இராஜாங்க சம்பந்தமான விஷயங்களில், இவர் பிரவேசிப்பதில்லை. கல்வி சம்பந்தமாயும் ஆசாரத்திருத்த சம்பந்தமாயுமுள்ள விஷயங்களில் இவர் தமது படிப்பையும் அனுபோகத்தையுங்கொண்டு உதவி செய்யச் சித்தமாயிருப்பவர்.

மேற்சொன்ன ஜாதிய சபையால் நடத்தப்படும் கலாசாலையில் நமது ஆரிய மதத்தைப்பற்றியும் ஆரிய ஆசார அனுஷ்டானங்களைப் பற்றியும் பிள்ளைகளுக்குப் பிரசங்கங்கள் செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1908-ம் வருஷத்தில் இந்தக் கலாசாலையில் போதகரான தர்க்கசரண் வேதாந்த தீர்த்தர் என்பவர் ஹிந்து ஆரிய மதத்தைப்பற்றி உபந்நியாசங்கள் செய்தார். அடுத்த வருஷத்தில் ஸர் குருதாஸ்



பானர்ஜி ஆரிய ஆசார அனுஷ்டானங்களைப் பற்றி வெங்காளிப் பாஷையில் உபந்நியாசங்கள் செய்தார். இந்த உபந்நியாசங்களில் இவர் சொன்னது இன்னதென்று விஸ்தாரமாக இங்கிலீஷில் வெளிவரவில்லையாயினும், அதன் சுருக்கம் கல்கத்தாப் பத்திரிகை ஒன்றில் வெளியா யிருக்கின்றது. இந்த சுருக்கத்தைப் பார்க்கும்போது, அவர் சதாசாரம் அல்லது நல்லொழுக்கங்களின் பிரமாணங்களை விவரித்ததாகத் தெரிகின்றது. இன்னின்ன சமயங்களில் பிள்ளைகள் இன்னின்ன மாதிரியாய் நடந்து கொள்ளவேண்டுமென்றுவது, அரசரிடத்திலும், பெரியோரிடத்திலும் அயலாரிடத்திலும், அல்லது வியாபாரம் வர்த்தகம் முதலிய விவகாரங்களிலும் இன்னின்னது சதாசாரம் அல்லது இன்னின்னது துராசாரம் என்றுவது, அவர் சொன்னதாகத் தெரியவில்லை. ஆயினும், நல்லொழுக்கமிது, தீயொழுக்கமிது என்று பகுத்தறிந்து, நல்லொழுக்கத்தை அனுஷ்டிப்பதில் புத்திக்குச் சில ஸமயங்களில் தடுமாற்றம் நேரிடுவதை எடுத்துச் சொன்னார்.

உதாரணமாக, ஒருவன் ரஸ்தாவில் நடந்து கொண்டிருக்கையில் தன் முன்னால் ஒருவன் ஓடுவதைக் கண்டான். ஓடினவனைப்பிடித்துக்கொலை செய்யும்பொருட்டு பின்னால் ஓடிவந்த ஒரு பாதகன், ரஸ்தாவில் போனவனைப்பார்த்து, ஓடினவன் எப்படிப் போனானென்று கேட்டால் அவன் உண்மையைச் சொல்லிக் கொலைக்குக் காரணமாகிறதா? அல்லது உண்மையை மறைத்துக் கொலையைத் தடுக்கிறதா? என்று தடுமாற்றமுண்டாகக் கூடும். அப்படிப்பட்ட சமயத்தில் புத்தியை நிச்சயம் செய்து கொள்வது கஷ்டம். மேல்நாட்டு தத்துவ

ஞானி ஒருவர் இத்தகைய தடுமாற்றமான சங்கடத்தில் பொய் சொல்லுவது குற்றமல்லவென்று நிச்சயிப்பார். சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாது புறம்பான கொலை பாதகனிடத்தில் உண்மை சொல்ல வேண்டிய கடமை ஏற்படவில்லையென்று இவர் நிச்சயிப்பார். எவன் சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நல்வழியிற் செல்லுவதும் தீயவழியை அகற்றுவதுமாயிருக்கிறானோ அவனிடத்தில் மட்டும் உண்மை சொல்லுவதும், உண்மையை மறைக்காமலிருப்பதும் கடமையாகும். ஆரிய மகாரிஷிகள் இம் இம்மாதிரியான பிரசினைகளை வேறு மாதிரியாக நிச்சயிக்கிறார்கள். இராஜாளிப் பக்ஷியால் விரட்டப்பட்டு, உயிருக்குத்தப்பி யோடின புறா சிபிச் சக்கிரவர்த்தியின் மடியில் விழுந்து அடைக்கலம்புக, அந்த சக்கிரவர்த்தி இரண்டுக்கும் கேடில்லாமல் தன் தேகத்தை அரிந்து கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. உண்மையைக் காக்கும் கடமை இப்படியிருக்க; பிராமணன் பசு முதலிய ஸாதுக்களைக் காக்கும் விஷயத்தில் உண்மையை மறைப்பது பாவமில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்றிசையார் சொல்லுவது சரியோ, அல்லது நம் பூர்வீக ரிஷிகள் சொல்லுவது சரியோ, என்ற தர்மா தர்ம விவேகத்திற்குப் பயிற்சி அவசியமென்று ஸர் குருதாஸ்பானர்ஜி சொன்னார். ஒருவன் தன் விவேகத்தால் சரியான வழி இதுவென்று தெரிந்து கொண்டாலும், அநுபோகத்தில் அதைப் பின்பற்றிச் செல்லுவது கஷ்டமாயிருக்கும். ஸர்குரு தாஸ் பானர்ஜி சொன்னதில் இவ்வளவு தான் மேற்படி பத்திரிகையில் வெளியாயிருக்கின்றது. பயிற்சி இன்ன விதமாய்ச் சிறுவர்க



ளுக்குக் கிடைக்கவேண்டுமென்ற விஷயத்தில் இவருடைய அபிப்பிராயம் என்னவோ தெரியவில்லை.

நம் பூர்வீக சாஸ்திரங்களைப் பிரமாணமாகக் கொள்ளுவதும் பெரியோர் சொல்லுக்கு அடங்கி நடப்பதும் மனச்சாக்ஷியை மீறி நடக்காமலிருப்பதும் ஆகிய இவைகளே இந்தப் பயிற்சியாகுமென்பது நமது அபிப்பிராயம். தற்காலத்துச் சிறுவர்கள் முதலிரண்டு அம்சங்களையும் கவனிப்பதில்லை. மனச்சாக்ஷிப்படி அவர்கள் நடப்பதாக நாம் வைத்துக்கொண்டாலும், மனச்சாக்ஷி என்பதும் பயிற்சியால் லக்ஷண மடைகிறதாகையால், சிறுவர்கள் இந்த முதலிரண்டு பிரமாணங்களின்படியே மனச்சாக்ஷியைப் பயிற்சி செய்துகொள்ளவேண்டும். பள்ளிப் பிள்ளைகளிற் பலர் சுருட்டுப் பிடிப்பது தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமற்றதாய் அதை வழக்கமாக்கிக் கொள்ளுகிறார்கள். அந்த வழக்கத்தால் விளையும் தீங்குகள் அக்காலத்தில் அவர்களுக்குத் தெரியாவிட்டாலும், பிற்காலத்தில் நன்றாய்த் தெரியும். சாஸ்திரத்தைப் பிரமாணமாய்க் கொண்டாலும், பெரியோர் சொற்படி நடந்தாலும், இந்தத் தீயவழக்கம் சிறுவயதில் உண்டாகாது. இம்மாதிரியான ஒழுக்கப் பயிற்சி தற்காலம் நம்பிள்ளைகளுக்கு மிக்க அவசியம். தங்கள் பிறப்பிடத்தையும் பெற்றோர் உற்றோரையும் விட்டுப் பட்டணங்களில் எதேச்சையாய் வசிக்கும் சிறுவர்கள் கெட்டவழக்கங்களையும் அநாவசியமான புது வழக்கங்களையும் செய்து கொள்ளக் கூடியவர்கள். இவ்வழக்கங்கள் அவர்களுக்குப் படியாமல் அவர்களை நல்ல வழிகளில் நிறுத்துவது, ஸர் குருதாஸ் பானர்ஜி போன்ற பெரியவர்களின் கடமை. ஸதாசாரங்களை விதித்தும்

பிரமாணங்களைப் போதிப்பதோடுங்கூட, பழக்க வழக்கங்களிலும் நடத்தையிலும் அந்தப் பிரமாணங்களை அநுஷ்டித்து நிறைவேற்றுவது எப்படியென்றும் போதிக்கவேண்டும். அப்போதைப்போது பிள்ளைகளிடத்தில் தோன்றுங் கெட்டவழக்கங்களைக் கண்டித்தும், நல்ல வழக்கங்களைச் சிலாகித்தும், தக்க திருஷ்டாந்தங்களுடன் தங்கள் வீடுகளில் பெரியோர் உபந்நியாசங்கள் செய்யவேண்டும். எல்லாவற்றிலும் முக்கியம், சமூகத்தலைவரும் குடும்பத்தலைவரும் ஸதாசாரங்களை அநுஷ்டித்து, சன்மார்க்கங்களிற் சென்று காட்டவேண்டும்.

## கல்கத்தாவில் அர்த்தோதய யோக புண்ணியகாலம்.

கல்கத்தா பட்டணத்தில் கங்கை நதி சமுத்திரத்தில் கலப்பதால், அங்கே கடைசியாய் நேரிட்ட அர்த்தோதய புண்ணிய காலத்தில், லட்சக் கணக்கான ஜனங்கள் ஸ்நானத்துக்காகக் கூடினார்கள். கல்கத்தாவானது எப்போதுமே சுமார் 10 லட்சம் ஜனங்களடங்கிய மகா பட்டணம். சாமானிய காலத்திலேயே அன்னியன் ஒருவன் புதிதாய்ப் போனால், விட்ட இடம் தொட்ட இடம் தெரியாமல் திண்டாடுவான். இப்படிப்பட்ட மகா புண்ணிய காலத்தில் இந்த பத்து லட்சத்தோடு இன்னொரு 4 அல்லது 5 லட்சம் சேருமானால், பட்டணத்தின் நிலைமை எப்படியிருக்குமோ மனதில் எண்ணிக் கொள்ளலாம்! வட இந்தியாவில் புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்வது நம் தென்னிந்தியாவைவிட அதிகம். அங்கே இவ்விடத்திலிருப்பது போல, கோவில்களும் உற்சவங்களும் விசேஷமாயில்லை. புண்ணிய காலங்களில் கங்கை, யமுனை, முதலான நதிகளில்-



ஸ்நானம் செய்யும் நிமித்தம் ஜனங்கள் லட்சக் கணக்காய்க் கூடுவார்கள்.

மேற்சொன்ன புண்ணியத்தில் வெகு தூரமான இடங்களிலிருந்து கிழங் கட்டைகளும், நொண்டி, குருடு முதலியவைகளும், கையாலாகாதவர்களும், நோயாளிகளும், மூடர்களும், துஷ்டர்களும்,—மனிதரில் எப்படியெப்படி சுபாவ பேதங்களும் குணபேதங்களுமுண்டோ அப்படியெல்லாம்—புண்ணியம் சம்பாதிக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் பெரும்பாலரும், திருட்டுத் தொழில் முதலான துஷ்கிருத்தியங்களுக்காகச் சிலரும், வந்து குவிந்து, கல்கத்தாப் பட்டணத்தை உருத் தெரியாமற் செய்து விட்டார்கள். இப்படி வந்தவர்களில் கல்கத்தாவின் அநுபோகமே இல்லாதவர்களும், கேவலம் கிராமவாசிகளாய்ப் பெரும் பட்டணங்களைப் பார்த்திராதவர்களும், அங்குள்ள வீதிகளையும், வண்டிகளையும், ஜனங்களையும், கடைகளையும், மார்க்கட்டுகளையும் பார்த்துப் புத்திமயக்கங் கொள்ளக் கூடியவர்களும், லட்சக்கணக்காய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் அந்தச் சமயத்தில் அந்த மகாபட்டணத்தில் தங்களுக்கு ஆபத்தில்லாமலும், தங்களால் பிறர்க்கு ஆபத்தில்லாமலும், ஸ்நானம் செய்து, தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்பவேண்டுமே! சாமானிய உற்சவ காலங்களில் சிறிய கூட்டங்கள் ஆயிரக்கணக்காய்ச் சேரும்போதுகூட, எத்தனை பெயருக்கு ஆபத்து நேரிடுகின்றது! எத்தனை பெயர் சொத்துக்களைத் திருட்டுக் கொடுக்கிறார்கள்! பிள்ளை குட்டிகளையும் கூடவந்தவர்களையும் விட்டுப் பிரிந்து அவஸ்தைப்படுகிறவர்கள் எத்தனை பெயர்! வழி தெரியாமல் இடம் விட்டு இடம் போய்க் கஷ்டப்படுகிற

வர்கள் எத்தனை பெயர் பசியாலும் பிணியாலும் வருந்துகிறவர்கள் எத்தனை பெயர்! கல்கத்தாவில் இவைகளெல்லாம் ஒன்றுக்குப் பத்தாக நேரிடக்கூடியனவா யிருந்தன.

இப்படி நேரிடக்கூடியதைக் கல்கத்தா தேசாபிமானிகள் முன்னதாகவே யறிந்து, வருகிற கூட்டங்களுக்கு எல்லா விதங்களிலும் ஒத்தாசை செய்ய வேண்டுமென்று மொத்தமாக யோசனை செய்து, பற்பல தொழில்களைப் பற்பல வகுப்பார் ஏற்றுக்கொண்டு, எவ்விதத் துன்பமும் யாத்திரிகர்களுக்கு நேரிடாமல் சர்வ ஜாக்கிரதை செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். அப்படியே, கல்கத்தா ஸ்கூல் பிள்ளைகளில் ஆயிரம் இரண்டாயிரம் பெயர் வாலண்டியர்களாய், இடுப்பில் சிவப்புக் கச்சைகளைக் கட்டிக் கொண்டு, கையில் தடியையேந்தி, எந்த விதமாய் வேலை செய்து யாத்திரிகர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமோ அப்படிச்செய்யச் சித்தமானார்கள். பட்டணத்துப் பெரிய மனுஷரும் இந்தச் சிறுவர்களை நடத்தப் பொறுப்பேற்றனர். சிலர் ரயில் ஸ்டேஷன்களண்டை நின்று, வந்திறங்கும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தார்கள். சிலர் டிராம்வண்டிகள் போகும் வீதிகளில் அங்கங்கே நின்று, கிழங்கட்டைகளையும், கூன் குருடுகளையும் ஏற்றுவதிலும் இறக்குவதிலும், தெரியாத இடங்களைச் சொல்லுவதிலும், ஒத்தாசை செய்தார்கள். சிலர் ஸ்நான கட்டங்களில் நின்றுகொண்டு, கூட்டங்கள் இறங்கும் போதும் ஏறும் போதும், நெருக்கத்தால் மிதியுண்டும் [illegible] கஷ்டப்படுகிறவர்களுக்கு ஒத்தாசை செய்தார்கள். வைத்தியங் கற்



றுக் கொண்டிருந்த சிலர் அங்கங்கே கூடாரங்களில் ஆஸ்பத்திரிகள் வைத்துக் காலரா கண்டவர்களுக்கும், மற்றோருக்கும் வைத்தியஞ் செய்தனர். சிலர் குளங்குட்டைகளில் ஜனங்கள் அசுத்தமான தண்ணீரைக் குடித்து வியாதி சம்பாதித்துக் கொள்ளாமல் காத்து, நல்ல தண்ணீரைத் தருவித்துக் கொடுத்தார்கள். இவ்விதங்களாகவும் வேறு விதங்களாகவும் கல்கத்தாச் சிறுவர்கள் மகா ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும், வாயில் ஈப்புகுந்தது தெரியாமல் அன்ன ஆகாரம் தூக்கமிவைகளையுமிழந்து, தங்கள் சகோதரர் சகோதரிகளுக்காக உழைத்தார்கள். கங்கையில் முழுகிப் போனவர்களைத் தாங்கள் ஜலத்தில் முழுகித் தப்புவித்தவர்கள் சிலர். காலரா கண்டு கதியில்லாமல் மரிக்குந் தருவாயிலிருந்தவர்களை மருந்து ஆகாராதிகள் கொடுத்துக் காப்பாற்றி, அவர்களை ஊருக்குப்போகும்படி அனுப்பினவர்கள் சிலர். அனாதைப் பிரேதங்களைச் சுடுகாட்டிலிருந்து தகனஞ் செய்வித்தவர்கள் சிலர்.

இப்படி இந்தப்பிள்ளைகள் உழைத்ததில் போலீஸாரும் உத்தியோகஸ்தரும் யாதொரு தொந்தரவும் செய்யாமல் சிறுவர்களை உற்சாகப்படுத்தினரென்று நாமறிந்து சந்தோஷப்படுகிறோம். அதிகாரிகளும் இவர்கள் செய்த மகோத்தமமான வேலையை மெச்சி பகிரங்கமாக எழுதினார்கள். ஆங்கிலேயப் பத்திரிகையாகிய "இங்கிலிஷ்மன்" பத்திரிகை கூட இவர்களைப் புகழ்ந்தால், இவர்கள் செய்த மகா உத்தமமான காரியத்துக்கு வேறு சாட்சியும் வேண்டுமோ? கல்கத்தா இந்தியப் பத்திரிகைகள் அளவில்லாத சந்தோஷத்தையும் பெருமையையுங் காட்டி, பெங்காளி ஜனத்தாரின்

ஒற்றுமைக்கும் அபிமானத்துக்கும் இந்தியாவுக்கே நல்ல காலம் பிறந்ததற்கும் இதைவிட மங்களகரமான சூசகம் வேறென்ன விரும்பக் கூடியதென்று மகிழ்ந்தனர்.

இந்த அர்த்தோதய புண்ணிய காலத்தில் அந்நகரச்சிறுவர்கள் செய்த கைங்கரியங்கள் என்ன அற்புதமானவை? தம்முடலின் உயிர் உரிமைகளை அர்ப்பணஞ்செய்து யாத்திரைக்காரருக்குப் பணிவிடை செய்தார்கள். அக்காலத்தில் அவர்கள் காட்டின கட்டுப்பாடும், ஒற்றுமையும், ஜீவகாருண்யமும், அவர்கள் செய்த செய்கைகளும், எளிதில் மறக்கக்கூடியவைகளல்ல. அப்படி யவர்கள் செய்தது தேசமெங்கும் தோன்றி யிருக்கும் நவீனக் கிளர்ச்சியின் விசேஷத்தோற்றமேயன்றி, கல்கத்தாவில் மட்டும் காணப்பட்டதாகக் கொள்ளக் கூடாது. வெங்காளத்தில் வேறு இடங்களிலும் சிறுவர்கள் இதே மாதிரி தேசபக்தியைக் காட்டி வருகிறார்கள். பம்பாய், பிரயாகை, பாஞ்சாலம், சென்னை, முதலான தேசங்களில் சிறுவர்கள் பின்தங்கி யிருக்கிறார்களென்றேனும் சொல்லத்தகுமா? எல்லா இடங்களிலுமே பள்ளிச் சிறுவர்கள் இந்தியாவில் எக்காலத்திலும் இல்லாதபடி, மாதாவின் சிஸ்ருஷையில் சந்தோஷத்தையும் பெருமையையுங் காட்டிவருகிறார்கள். இவர்கள் இப்படிப் புது வழிகளிற் புகுவது தீங்குக்கு ஹேதுவாகுமென்றும், அப்படிச் செய்வதை மூத்தோர் அடக்குவது கடமையென்றும், சிலர் நினைக்கிறார்கள்.

இப்படி நினைப்பது தப்பென்றே நாம் சொல்லுவோம். மூத்தோர் எவ்வளவு அடக்கப்பார்த்தாலும்



இந்த நவீனக் கிளர்ச்சி அடங்காதென்பது நிச்சயம். அடக்குவதால் சிறுவர்கள் படிப்பில் தேறி தக்க ஜீவனோபாயங்கள் பெறுவார்களென்று நினைக்கக்கூடும். நமது அனுபோகத்தில், பாலியத்தில் பொதுக் காரியங்களில் பிரவேசித்து, தேசத்துக்காக உழைக்கும் விருப்பமுள்ள சிறியோர் பிற்காலத்தில் தமது வாழ்க்கையிலும் பெருமை யடைகிறதைக் கவனித்திருக்கிறோம். மேலும், தேசத்தில் லட்சக்கணக்கான சிறுவர்களிற் சிலர் தேசத்தின் பொருட்டு கஷ்ட நிஷ்டூரங்களை யனுபவித்தாலென்ன? கல்வி யென்பது கேவலம் வயிற்று வளர்ப்புக்காகவும், சரீர சுகத்துக்காகவும் இராமல், பாரமார்த்திகமான உத்தம குணங்களைப் பயிற்றுவிப்பதாயு மிருக்குமானால், நம்மாதாவான பாரததேவியைத் தற்கால நிலையிலிருந்து கிளப்பி உயர்த்தும் முயற்சியில் சிறுவர்கள் ஏதேனும் செய்வது பொருந்தியதாகவே கொள்ளத்தக்கது.

## முன்னோர்களைப் பூசித்தல்.

முன்னோர்களைப் பூசித்து வழிபாடு செய்யும் வழக்கம் இந்தியாவில் மிகவும் புராதனமானது. ஹிந்துக்களுடைய சாஸ்திரங்கள் பலவற்றிலும் இந்த வழிபாடு திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஹிந்துவும் தன்னுடைய முன்னோர்களை முக்கியமான சடங்கு காலங்களிலெல்லாம் பக்தியோடு வழிபடவேண்டுமென்றும், அவ்விதம் வழிபடாது போனால் தனக்கும் அம்முன்னோர்களுக்கும் நல்ல கதி கிடைப்பதில்லையென்றும், ஸ்மிருதிகள் கூறுகின்றன. எவன் தன்முன்னோர்களை வழிபடப் பாத்திரம் பெறுகிறானோ அவனேதான் அவன் முன்னோர்களுடைய சொத்

துக்கள் உரிமையாகுமென்று சகல பாஷியக்காரர்களும், முக்கியமாய் வெங்காளத்து பாஷியக்காரர்கள், மிகவும் கண்டிப்பாய்க் கூறியிருக்கிறார்கள். அதாவது, முன்னோர்களை நினைத்துப் பூசிப்பது வெறும் மதச் சடங்கு மட்டுமல்ல; சொத்துக்களுக்கும் அது உரிமையாகச் செய்வதென்ற ஆசையைக் காட்டி, அவ்வழிபாட்டை நிலைநிறுத்தக்கூடிய விதிகளையுண்டு பண்ணியிருக்கிறார்கள். இவ்விதிகள் ஒவ்வொரு குடும்பத்திலும் பந்து ஜனங்கள் முன்னோர்களைப் பூசிக்கும் வழக்கத்துக்கு ஏதுவாகும். இது போலவே பெரிய ஜனத்தலைவர்களாகவும், நாட்டுக்காக உழைத்தவர்களாகவும், கீர்த்தி பெற்ற அரசர்களாகவும், உள்ளவர்களைக் கடவுள் அம்ஸமென நம் நூல்கள் சொல்லி, அவர்களைப் பூசிப்பதின் நன்மைகளையும் ஆதி பண்டிதர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். தற்காலம் நாம் இவ்விடத்தில் விசாரிக்க அவசியமில்லாத பல காரணங்களால், நம் நாட்டிலிருந்த அனுஷ்டானங்களும் கட்டுப்பாடுகளும் தளர்ச்சியடைந்து, குன்றியும் மங்கியும் போய்விட்டன, ஏனென்றால், தாய் தகப்பன்மார்கள் ஆங்கிலம் படிக்காத சாஸ்திரிகளாய் அல்லது சாதாரண கிராம வாசிகளாய் இருக்கிறார்கள். ஆங்கிலப் புஸ்தகங்களில் சிறுவர்கள் வாசிக்கும் விஷயங்களுக்கும் நம் கிராமங்களில் நடப்பனவற்றிற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்துவிட்டு நம் கிராம சாம்பிரதாயங்களின் அனுஷ்டானத்தில் அவர்கள் தளர்ச்சி பெறாமலிருப்பது சாத்தியமா? சாஸ்திரங்களை முறைப்படிப் படிக்கவாவது அல்லது சாஸ்திரப்படி நடக்கவாவது தற்காலத்தில் தூண்டுதலில்லையென்றே சொல்லத் துணியலாம். இவைபோன்ற



சில காரணங்களால் முன்னோர் வழிபாடு குறைந்துவந்த போதிலும், சென்ற சில வருஷங்களாக தேசத்தில் ஐக்கியமும் சகோதரபாவமும் முன்னிலைமை பின்னிலைமைகளை ஒத்திட்டுப் பார்த்து உள்ளதைக் கிரகிக்கும் தன்மையும் அதிகமாகி, நவீன உணர்ச்சி தோன்றி, வெகு காலமாக முன்னோர்களுக்குச் செலுத்தப்படாமல் மங்கியிருந்த நன்றி, சிற்சில விடங்களில் சிறிது தலைகாட்ட வாரம்பித்திருப்பதுபோல் கருதக் கூடிய குறிகள் தோன்றியிருக்கின்றன. திருஷ்டாந்தமாக, இந்தியாவை யரசாண்ட ஆக்பர் சக்கிரவர்த்தியின் பிறந்த நாளைக் கொண்டாட சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக யோசனை செய்யப்பட்டதும், சில விடங்களில் கொண்டாடப்பட்டதும், பத்திரிகைகள் மூலமாய் வெளியாயிருக்கின்றன. மகாராஷ்டிர தேசத்தில் சிவாஜியின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. இன்னும் இந்தியாவின் வேறு சில பாகங்களில் அங்கங்குள்ள தலைவர்களை வழிபாடு செய்ய முயற்சிகள் செய்யப்படுவதையும் சித்தியடையாது போவதையும் அறிவோம். நாளாகவாக இவ்வித வழிபாடு பலப்படுமோ அல்லது நசித்துப் போமோ நாம் அறியோம். ஆனாலும், வருஷத்திலொரு நாளாவது அங்கங்கேயுள்ள ஜனங்கள் ஒன்றுகூடிப் பெரியோர்களைப் பூசித்தல் தேசத்தில் நல்லுணர்ச்சியை உண்டுபண்ணுமென்பதை யொருவரும் மறுக்கமாட்டார்கள். சில தினங்களுக்கு முன்னால், சிந்து தேசத்து இந்து சபையின் ஆதரவின் கீழ், ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒரு பெரிய கூட்டங்கூடி, ஆக்பரை மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடினார்கள். அப்போது சபைத்தலைமை வகித்த மிஸ்

டர் ஹரிச்சந்திரர் என்பவர் இவ்விதக் கூட்டத்தின் நன்மையைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினார்.

ஆக்பர் சக்கிரவர்த்தியின் குணாதிசயங்கள் பல:— இவர் மகமதிய அரசராயிருந்தபோதிலும், ஹிந்துக்களுடைய மதானுஷ்டானங்களில் தலையிட்டவரல்ல. ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் கொள்கைகளைப் பின்பற்றி யொழுகுவதில் யாதொரு நிர்ப்பந்தமும் இருந்திருக்கவில்லை. ஜாதி வித்தியாசத்தாலும் மத வித்தியாசத்தாலும் இவர் தம் பிரஜைகளைப் பாரபக்ஷமாய் நடத்தினவருமல்ல. இவர் காலத்தில் ஹிந்துக்களே சேனாதிபதிகளாகவும் மந்திரிகளாகவும் மாகாணக் கவர்னர்களாகவும் இருந்தார்கள். ஜனங்களை ஐக்கியப் படுத்தித் தேச நன்மைக்குப் பலமான அஸ்திவாரமான ஏற்பாடுகள் செய்வதில் இவர் மகா மதியூகியாக இருந்தார். எல்லாப் பிரஜைகளும் தங்களுக்குள் சுதந்திர விஷயங்களில் வித்தியாசமின்றி ஏகோபித்து ராஜாங்கத்துக்குப் பெரிய பலமாயிருக்கவேண்டுமென்ற எண்ணத்தை மனதிற்கொண்டு, இவர் தம் அரசாட்சியை வெகு சிறப்பாய் நடத்தினார். இப்பேர்ப்பட்ட பெரியவரை நாம் பூஜிப்பது மிகவும் உசிதமானது. இவருடைய ஞாபகச்சின்னமாக யாதொன்றும் ஏற்படுத்தப் படாதிருப்பது நம்மவர்களுக்குப் பெருங் குறையாயிருக்கிறது. நம் முன்னோர்கள் விஷயத்திலும் நமக்கு நன்மை செய்து பாடுபட்டவர்கள் விஷயத்திலும் நம்மிடம் நன்றியறிதல் இல்லை யெனக் குற்றஞ் சொல்லக்கூடிய ஸ்திதிக்கு நம் தேசம் வந்திருக்கிறது. இது மிகவும் துக்கத்தைக் கொடுக்கக்கூடியது.



ஆக்பர் சக்கிரவர்த்தி காலத்தில் அனுபவித்த சுதந்திரங்கள் பலவற்றை நாம் பிரிட்டிஷ் அரசாக்ஷியிலும் அனுபவிக்கிறோம். சில அம்சங்களில் ஒன்றிரண்டு சுதந்திரங்கள் இன்னும் கொடுக்கப்படவில்லை யென்றாலும், கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரங்களின் பூர்த்தியான நன்மையை நாம் அனுபவிக்கிறோ மென்பதில் சந்தேகமில்லை. சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு இந்தியாவில் ராஜப்பிரதிநிதியாயிருந்து, மகா நீதிமானென்று பேர் வாங்கிய லார்டு ரிப்பனை நம்மவர்கள் மறக்கமாட்டார்கள். இவருடைய நிருவாக காலத்தில் ஜனங்கள் சில சுதந்திரங்களை யடைந்து, ஆக்பருடைய நாளை நினைத்துக்கொள்ளக் கூடியவர்களாயிருந்தார்கள். லார்டு ரிப்பன் மனோதைரியத்தையும் மனச் சாக்ஷியையும் விடாமல், ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளின் தூஷணையை அலக்ஷியஞ் செய்து, ஜன நன்மையை நாடியவராயிருந்தார். லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்டு (Local Self Government) என்று சொல்லப்படும் ஸ்தல சுய ஆட்சி யென்ற சுதந்திரத்தினால் முனிசிபாலிடிகளிலும் டிஸ்டிரிக்ட் போர்டுகளிலும் பிரதிநிதி யம்சத்தை யுண்டுபண்ணி, நம்மவர்களின் நன்றியறிதலுக்குப் பாத்தியம் பெற்றவர் இவரே. கல்கத்தாவில் பிரசுரமாகும் 'காபிடல்' என்ற வாராந்த வர்த்தகப்பத்திரிகையில் "மாக்ஸ்" என்ற பேர்போன நிருபர் சொல்லுகிறபடி, 1857–58-ம் வருஷத்து சிப்பாய்க் கலகத்துக்குப் பிந்திய ராஜப்பிரதிநிதிகளில் இவரே சிரேஷ்டமானவர். ஆனால் நாம் ஆக்பர் சக்கிரவர்த்தியை மறந்தது போலவே லார்டு ரிப்பனையும் மறந்து விட்டோம். ஆக்பருக்கும் லார்டு ரிப்பனுக்கும் ஞாபகச் சின்னங்க

ளேற்படுத்தி, முன்னோர்களை வழிபடுவோர்களென நமக்கமைந்திருக்கும் நற்பெயரை நாம் பாதுகாக்க வேண்டும். உபயோகமற்றவர்களும் தேசத்துக்குத் தீமை செய்தவர்களுமாகிய பலருக்கு ஞாபகச்சின்னங்கள் வெகு துரிதத்திலேற்பட்டு, மேற்கண்ட பெரியோர்களுக்கு மட்டும் ஏற்படாதிருந்தால், நம்மவர்களின் நற்குணங்கள் வாடிக்கெட்டுப் போய் விட்டதெனக் குற்றஞ் சொல்லும்போது, நம்மால் எவ்விதம் பதில் சொல்ல முடியும்?

### பாதிரிக்கூட்டங்களும் ஹிந்து மதமும்.

பிரிட்டிஷ் தேசத்தில் முக்கியமான பட்டணமாகிய எடின்பரோவில் கிறிஸ்தவ மிஷனரிகளின் கூட்டமொன்று சமீபத்தில் நடந்தது. கிறிஸ்தவ மிஷனரிகள், அதாவது பாதிரிகள், பற்பல ஸொஸைடிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் கிறிஸ்தவ மதத்தைச் சேராத எல்லாத் தேசங்களிலும் போய், கிறிஸ்தவமதத்தைப் பரவச்செய்கிறார்கள். ஸொஸைடிகள் பலவிருந்தும், அவைகளால் ஆதரிக்கப்படும் பாதிரிகள் பலராயிருந்தும் அவர்களுக்குள் முழு ஒற்றுமையும் இருக்கின்றது. ஒரே காரியத்தில் பிரவேசித்திருப்பவர்களானதால், ஒருவருக்கொருவர் பொறாமை பாராட்டாமல், தனியாய் உழைக்க வேண்டிய காலங்களில் தனியாய் உழைத்தும், ஒன்று சேர்ந்து தங்கள் பலத்தை அதிகப்படுத்திக் கொண்டு, பொது நோக்கத்தை நிறைவேற்ற வேண்டிய காலத்தில் ஒன்று சேர்ந்தும், இந்த ஸொஸைடிகள் கோடிக்கணக்கான ஜனங்களின் மதக்கொள்கைகளுக்கும் லௌகிக லாப நஷ்டங்களுக்கும் காரணமாயிருக்கின்றன. ஐரோ



ப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களாதலால் மதபோதகர்களான இவர்களுக்கு லௌகிக பலம் வேண்டியமட்டும் இருக்கின்றது. நமது தேசாசாரியர்களைப்போல இந்தப் பாதிரிகள் சந்நியாசிகளல்ல. நமது தேசாசாரியர் தங்களையடுத்த சிஷ்யர்களுக்கு ஆத்ம ஞானம் உண்டுபண்ண முயலுவதுபோல, இந்தப் பாதிரிகள் முயல்வதில்லை. தங்களுடைய மதத்தை அந்நியருக்கு உபதேசிப்பதில் எந்த உபாயம் சௌகரியமானாலும் அதைக் கொண்டு அந்நியரைத் தங்கள் மதத்திற் சேர்க்கிறார்கள். இந்தப் பாதிரிகள் தங்கள் தேசத்துக் கவர்ன்மெண்டின் ஆதரவையும் பலத்தையும் எவ்வளவு தூரம் தங்களுடைய தொழிலுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாமோ அவ்வளவு தூரம் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக, ஜர்மனி தேசத்துப் பாதிரியொருவர் சைனாவில் உழைப்பவராயிருந்து, சைனா ஜனங்களால் ஏதேனும் தொந்தரை யடைந்தால், ஜர்மனிக் கவர்ன்மெண்டார் சைனாக் கவர்ன்மெண்டாரிடம் புகார்செய்து, தக்க ஈடுவாங்கி விடுவார்கள். இவ்வாறே, ஒரு முறை இரண்டு ஜர்மனிப் பாதிரிகளை சைனா ஜனங்கள் கொலை செய்து விட்டார்களென்று சைனாக் கவர்ன்மெண்டைப் பயமுறுத்தி "கையாச்சு" என்ற ஒரு துறைமுகத்தை ஜர்மனி பிடுங்கிக் கொண்டுவிட்டது. ஆகையால், கிறிஸ்தவ மதாசாரியர் என உலகத்தாருக்கு ஆத்ம லாபத்தைக் கோரும் இவர்கள் அவனவன் சித்தம் பரிபக்குவம் பெற்று, ஆத்ம ஞானத்தால் மோக்ஷம் பெறட்டுமென்று இராமல் தந்திரோபாயத்தையும் அனுஷ்டித்து மதப்பிரசாரம் செய்கிறார்கள்.

இந்தியாவில் கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு இயல்பாகவே செல்வாக்கிருக்கின்றது. ஆளுஞ் ஜாதியாரைச் சேர்ந்தவர்களானதால் பாதிரிகளிடத்தில் ஜனங்கள் மரியாதையும் பயமும் கொண்டிருக்கிறார்கள். இவர்களால் ஜனங்களுக்குப் பலவழிகளில் நன்மையும் செய்யப்படுகின்றது. பலர் ஜனங்களிடத்தில் உண்மையான அபிமானம் வைத்து அவர்கள் க்ஷேமப்படவேண்டுமென்று கோருகிறார்கள். ஆகையால் பாதிரிகளும் ஜனங்களும் பெரும்பான்மையும் விரோதமின்றி நேசமாகவே பழகுகிறார்கள். நமது கவர்ன்மெண்டார் மதவிஷயங்களிற் பிரவேசிப்பதில்லையென்று விதி செய்துகொண்டிருந்தபோதிலும், கிறிஸ்தவப் பாதிரிகள் தங்கள் மதத்தை இந்தியாவில் பரவச்செய்வதில், தங்கள் இஷ்டசித்திக்கு இடையூறு நேரிடாதபடி, கவர்ன்மெண்டின் உதவியைத் தேடுகிறார்கள். எடின்பரோ பட்டணத்தில் கூடின கூட்டத்தில் பாதிரிகள் செய்த தீர்மானம் என்னவென்றால், இந்தியாவிலுழைக்கும் பாதிரிகள், எந்தஸொஸைடியைச் சேர்ந்தவர்களானாலும், அவர்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றி நெருங்கி விசாரிக்க வேண்டும்; முக்கியமாய், கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் பிரவேசிக்காமலிருப்பதைப்பற்றியும், பாதிரி ஸ்கூல்களுக்குப் பணவுதவி செய்வதைப் பற்றியும், கிறிஸ்தவர்களான இந்தியரின் நிலைமையைப் பற்றியும், தேச சமஸ்தானங்களில் பாதிரிகள் வேலை செய்யப் பாத்தியம் பெறுவதைப் பற்றியும், விசாரிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. அந்தச் சமயத்தில் ஒருகாலத்தில் பம்பாய்க்கவர்னராயிருந்த லார்ட் ரே என்பவர் பேசினார். அவர் நல்ல



கவர்னரென்று பேர் வாங்கினவர்; பாதிரித் தொழில் செய்கிறவரல்லர்; ராஜாங்க விவகாரங்களில் லிபரல் கட்சியாருக்குச் சாதகமாயிருப்பவர். இப்படிப்பட்டவர் அநேகந் தடவைகளில் பாதிரிமார் கூட்டங்களிற் பேசி, அவர்கள் செய்யும் வேலையில் அநுதாபம் காட்டிவருகிறார். அவர் இந்தக் கூட்டத்திற் சொன்ன ஒரு யோசனை என்னவென்றால், இந்தியாவில் பாதிரிமார்கள் சேர்ந்து ஒரு பொதுபோர்டு, அல்லது சங்கம், ஸ்தாபித்துக்கொண்டு, அதன்மூலமாய் அவர்களுக்கு வேண்டியவற்றைக் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்துப் பெறவேண்டுமென்றார். கிறிஸ்தவர்களான இந்தியர்களைச் சேர்த்து, தனியான கிறிஸ்தவபீடம் ஒன்று ஸ்தாபித்து, அது பாதிரிகளின் பார்வையில் வல்லமையும் செல்வாக்கும் பெறும்படி செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

லார்ட் ரே சொன்னதை நாம் கவனிக்கவேண்டும். அவர் சொன்னபடி, ஒரு பொதுவான போர்ட் ஸ்தாபிக்கப்பட்டு, அது கவர்ன்மெண்டை நெருக்கும்போது கவர்ன்மெண்டானது, நமது மகாஜன சபை போன்ற சபைகளை நடத்துவதுபோல, அதை நடத்தமாட்டாது. ஐரோப்பிய வர்த்தகக் கூட்டத்தார் சொல்லும் யோசனைகள் எப்படி மதிக்கப்படுகின்றனவோ அப்படி இந்தப் பாதிரி போர்ட் சொல்லும் யோசனைகளும் மதிக்கப்படும். இந்தியாவின் பூர்வீக மதங்களை அழித்து கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபிப்பதே நோக்கமாகக் கொண்ட இந்தப் பாதிரிக் கூட்டத்தார் தங்களுடைய எல்லாச் சக்திகளையும் உபயோகித்துச் செய்யும் முயற்சிகள் எவ்வாறு முடியுமோ யார் சொல்லுவார்? கிறிஸ்து மதத்தைப் பரவச் செய்ய முயலு

வோருக்குள்ள ஆதாரவுகளும் பலமும் ஹிந்து மதத்தைக் காக்க அக்கரைப்பட்டவர்களுக்கு இல்லை. ஆரிய சனாதன தருமம் சந்திர சூரியர் உள்ள வரையில் பிரகாசித்து நிற்குமென்றே நாம் நம்புகிறோம். ஆனால் அது இந்தத் தருமத்தின் உள்ளுறை வன்மையினாலேயே சித்திக்க வேண்டும்.

### சால்வேஷன் ஆர்மி.

கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தங்கள் மதத்தை ஸ்தாபிக்கும் நோக்கங் கொண்டு, நமது ஜனங்களுக்குப் பல வழிகளில் நன்மை செய்து, அவர்களுடைய பிரியத்தைச் சம்பாதிப்பதையும், காலாந்தரத்தில் அவர்களுடைய முயற்சிகளால் நமது சனாதன தர்மத்துக்கு ஆபத்து நேரிடக்கூடியதையும், பற்றிச் சொன்னோம். இந்தப் பாதிரிகளுடைய ஸொஸைடிகளைச் சேராமல், தனியான ஸொஸைடியாக சால்வேஷன் ஆர்மி (Salvation Army) என்ற கூட்டத்தாரும் நம் தேசத்திற் செய்து வரும் அதிசயமான வேலைகளை நாம் அறிவதவசியம். இவர்கள், மற்றப் பாதிரிகள் பற்பல இடங்களில் தனி மனிதராயிருந்து வேலை செய்து வருவதுபோல் செய்யாமல், கூட்டங் கூட்டங்களாக அமர்ந்து வேலை செய்கிறார்கள். இவர்களை ஒரு சைனிய மென்று இவர்களுக்குத் தலைவரான பூத் டக்கர் (Booth Tucker) * என்பவர் சொல்லிக்கொள்கிறார். அதாவது, கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு மோக்ஷம் சம்பாதித்துக் கொடுப்பதில் அவர்களுடைய அஞ்ஞானத்துடன் போர் செய்யும் சைனியமாம். இந்தச் சைனியத்துக்கு முக்கி

* இவர் இப்போது இறந்துபோய் விட்டார்.



யத் தலைவர் மிஸ்டர் பூத் டக்கர். இவரின் அதிகாரத்துக்குட்பட்டுச் சில தலைவர்கள் இருக்கிறார்கள். இவர்களின்கீழ் மற்றவர்கள் சாமானிய ஸோல்ஜர்கள். இந்தச் சைனியத்தில் 2250 ஆபீஸர்கள், அதாவது தலைவர்கள், இருக்கிறார்கள். இவர்களில் 160 ஆங்கிலேயரைத் தவிர, மற்றவர்கள் இந்தியக் கிறிஸ்தவர்கள். இந்த இந்தியத் தலைவர்கள் 16 இடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களிற் பலர் ஸ்திரீகளுமிருப்பதால் அவர்களைக்கொண்டு நம் குடும்பங்களிலும் இந்தச் சைனியத்தின் வேலை நடத்தப்படுகிறது. முக்கியமாய், கீழ் ஜாதிகளுக்குப் பலவிதமான நன்மைகள் செய்து அவர்களைத் தூக்கிவிடப் பார்க்கிறார்கள். நெசவுக்காரர்கள் நிலைமையில் விசேஷ அக்கரை பாராட்டி, அவர்களுக்காகப் பல நெசவு ஸ்கூல்கள் ஸ்தாபித்திருப்பதுமன்றி, ஆமத்நகரத்தில் புதிதான நெசவுத்தறி வைத்துச் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். பங்களூர் பட்டணத்திலும் வேறு இடங்களிலும் பட்டுப் பூச்சி வளர்க்கும் பண்ணை ஸ்தாபித்து, பட்டு செய்யுந் தொழிலைப் போதித்து வருகிறார்கள். பஞ்சாப், பம்பாய், சென்னையில் தெலுங்கு ஜில்லாக்களாகிய இடங்களில், கள்வர் முதலிய குற்றத்தொழில் செய்யும் ஜனங்களைத் திருத்தி, விவசாயம் முதலியன செய்து, யோக்கியமான ஜீவனம் செய்வோராக்கி வருகிறார்கள். மேலும், சால்வேஷன் ஆர்மியார் பஞ்சமர்களிடத்தில் விசேஷப் பிரியங்காட்டி வருகிறார்கள். இந்தியாவில் இப்போது 40 லக்ஷம் கிறிஸ்தவர்களுக்கு மேலில்லையாகையாலும், மொத்தம் முப்பது கோடி ஜனங்களிருப்பதாலும், இந்த சால்வேஷன்

ஆர்மி ஒன்றல்ல வேறு எவ்வளவு கிறிஸ்தவக் கூட்டத்தார் புகுந்து வேலை செய்தாலும், இடமிருக்கிறதென்று மிஸ்டர் பூத் டக்கர் சொல்லுகிறார். இந்த ஆர்மி நம்மைப் போல் உடுப்பு உடுப்பதாலும், வாத்தியங்களுடன் தெருக்களில் பஜனை செய்யும் வழக்கத்தாலும் அறியாத கீழ் ஜாதியாரின் அபிமானத்தைப் பெறுகிறார்கள். நம் இந்திய தேசத்தில் 40 லக்ஷம் கிறிஸ்தவர்களும் 600 லக்ஷம் மகமதியர்களும் வேறு சில்லரை மதத்தினரும் போக பாக்கியுள்ளவர்கள் ஹிந்து வைதீக மதத்தை அங்கீகரிப்பவர்கள். இவர்களும் வரவரக் குறைந்து கொண்டே தான் வருகிறார்கள்.

## CHAPTER IV.

### கள் உண்ணல்.

#### ஜர்மெனியில் ஒரு நல்ல சட்டம்.

ஜர்மனி தேசத்தில் கூலிவேலை செய்து பிழைக்கும் ஒருவன் தன் சம்சாரத்துக்குப் போதுமான கூலி சம்பாதிக்கிறவனாயிருந்தும், சம்பாதிப்பதைக் குடி முதலான கெட்ட வழிகளில் அழித்துப் பெண்சாதி பிள்ளைகளைக் காப்பாற்றாமல் விடுகிறானென்று ஸ்தல அதிகாரிகளுக்குத் தெரிந்தால், அவன் சட்டப்படி ஒரு மைனரைப்போலக் கருதப்படுகிறான். அவனுக்கு ஒரு கார்டியனை மாஜிஸ்டிரேட்டு நியமித்து, அந்தக் கார்டியனிடத்தில் அவனுக்குள்ள கூலியைக் கொடுக்கும்படி, எஜமானனுக்கு மாஜிஸ்டிரேட் சொல்லலாம். இந்தக் குடியன் வேலை செய்யாமல் இருக்கப் பார்ப்பானானால்



போலீஸார் அவனை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தலாம். ஒவ்வொரு ஜில்லாவிலும் இப்படிப்பட்ட கேஸ்களை கவர்ன்மெண்டுக்கு ரிப்போர்ட்டு செய்ய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மடமையினாலும் கெட்ட வழக்கங்களாலும் அழிந்துபோகும் ஏழைகளிடத்தில் கருணை வைத்துச் செய்யப்பட்டிருக்கும் இந்தச் சட்டம்போல், இந்தியாவிலும் ஒரு சட்டம் செய்தல் சாத்தியமானால் ஏழைகளுக்கு அளவற்ற நலம் செய்வதாகும். இந்தியாவிலும் வரவரக் குடியும் சூதும் ஏழை ஜனங்களுக்குள் பரவி வருகின்றன. நாளெல்லாம் கஷ்டப்பட்டு வேலைசெய்து சம்பாதிக்கும் சொற்பக் கூலியைச் சாயந்திரம் வீடு செல்கையில், வழியிலுள்ள கள்ளுக்கடையில் எறிந்துவிட்டு, வீட்டுக்குக் குடி மயக்கத்துடன் செல்வதன்றி, சம்பாதித்த கூலியில் பாதியைக்கொண்டோ அல்லது வெறுங்கையாகவோ தன் பெண்சாதி பிள்ளைகளைச் சந்திக்கும் பேதையைவிடப் பரிதாபமான பிராணி என்ன இருக்கின்றது? வெளியில் வேலைக்குப்போன புருஷன் அடுத்தநாள் தனக்கும் தன் சம்சாரத்துக்கும் சாப்பாட்டுக்குப் போதுமான பணத்துடன் வராமல், பாதிச் சாப்பாட்டுக்கும் போதாத கூலியைக்கொண்டு வந்து கொடுத்து, ஆவலாதி சொல்லும் பெண்சாதியைத் திட்டி அடித்து இம்சை செய்வானானால், அந்த சம்சாரம் பேய்க்கணமாகுமே யன்றி கௌரவமான குடும்பமாகாது. கூலிவேலை செய்வோன் தேகத்திலுள்ள சக்தியைக் கொடுத்து வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும், எலும்பு ஒடியச் சுமந்தும், சம்பாதிக்கவேண்டியவன். அப்படிச் சம்பாதிக்கவேண்டிய

வன் இரவில் வீட்டுக்குவந்து, தானும் தன் பெண்சாதி பிள்ளைகளும் கூடிய வரையில் புஷ்டியான ஆகாரத்தைப் பரிபாரஉண்டு, சுகமாய் நித்திரை செய்தாலன்றி, முதல் நாள் இழந்தசக்தி மறுநாள் அவனுக்குத்திரும்பிவராது. இத்துடன் குடியும் இருந்தால், அவன் சரீர சக்தி இரண்டுவிதமாயும் குறைந்து போகின்றது. கொல்லன் ஒருவன் பகலெல்லாம் உலைக்கூடத்தில் எரியும் நெருப்பு முன்னாகப் பழுக்கக்காய்ச்சின இரும்பைச் சம்மட்டியா லடித்துத் தேக முழுவதும் வேர்வையால் நாளெல்லாம் நனைய, மாலை வேலை முடிந்ததும் தன்சிரமத்தைத் தீர்த்துக்கொள்ள வெண்ணிச் சம்பாதித்ததில் பாதியைக் கொண்டு கள்ளோ சாராயமோ அருந்துகிறான். அந்தச் சமயத்துக்கு அது ஒருவாறு சிரமத்தைத் தீர்ப்பது போல் தோன்றினாலும், அது அவன் சரீரபலத்தை வரவரக்குறைத்துக் குடிப்பதை மேன்மேலும் அவசியமாக்கி, கடைசியில் அவன் அற்பாயுளில் வியாதிகொண்டு மாண்டு போகிறான். வேலை செய்யும் சிரமத்தைக் குடியால் தீர்த்துக்கொள்வதை விடப் புஷ்டியான ஆகாரத்தால் தீர்த்துக்கொள்ளுதல் எவ்வளவோ நலமென்று இந்தப் பேதைக்குத் தெரியவில்லை. தெரிந்தாலும் அவன் அறிவை அவனுடைய வழக்கம் வென்று விடுகிறது.

இந்தக் குடியினாலே நமது வேலைசெய்யும் வகுப்பார் முற்றிலும் ஈனஸ்திதியில் இருந்து வருகிறார்கள். கொல்லன், தச்சன், கருமான், கன்னான், தட்டான், மூட்டை சுமப்பவன், வெட்டு வேலை செய்பவன், இவர்களும் மற்ற ஒவ்வொரு தொழில் வகுப்பாரும் குடிவழக்கத்தால் அழிந்து போகிறார்கள். நெசவு செ



வோர் குடியால் அழிந்து போவது பிரசித்தம். தற்காலம் சுதேசிய ஊக்கத்தால் நெசவுத் தொழிலை ஆதரிக்க விரும்பி, ஆயிரக்கணக்கான முதல் வைத்து நெசவுத் தொழில் செய்ய முன் வந்தாலும், வேலைக்காரர்கள் இந்தக் குடிவழக்கத்தால் சரியாய் வேலை செய்யக் கிடைக்காமல் அந்த முயற்சிகள் பயன்படாமல் போகின்றன. நெசவுக் காரர்களின் க்ஷேமத்துக்காகச் செய்யப்படும் எல்லா முயற்சிகளும் அவர்களுடைய இந்தக் கெட்ட வழக்கத்தால் நிறைவேறாமல் போகின்றன. விவசாயிகள் அதிகமாய்க் குடிப்பது வழக்க மில்லாம லிருந்தது. அவர்களும் இப்போது குடிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். வேலைசெய்து பிழைக்கும் நம் ஏழை ஜனங்கள் இந்த வழக்கத்தை விடாமல் தொட்டுக் கொண்டே வருவார்களானால், அவர்கள் எப்போதும் நல்ல நிலைமைக்கு வரமாட்டார்கள். அவர்களுக்குப் படிப்பும் அறிவும் உண்டு பண்ணுவதே இதற்கு முக்கியமான நிவர்த்தி. கவர்ன்மெண்டார் அப்காரி திட்டங்களைத் திருத்தி, ஏழைகளுக்குக் கள்ளு கிடைப்பது சுலபமாயிராமல் கஷ்டமாக்கி விடுவார்களானால், அப்போது இந்தக் கெட்ட வழக்கம் சிறிது குறையக் கூடும். ஜர்மெனியில் செய்யப்பட்டிருக்கும் சட்டத்தைப்போல் இந்தியாவில் ஒரு சட்டம் செய்வது சாத்தியமல்ல. ஏனெனில், ஜர்மெனிபோன்ற மேல்நாடுகளில் வேலை செய்வோர் தொழிற் சாலைகளில் ஒன்றாய்ச்சேர்ந்து ஒரே முதலாளியின்கீழ் வேலை செய்கிறார்கள். முதலாளியைக்கொண்டு வேலை செய்வோரின் நடக்கையை ஒருவாறு திருத்துதல் சாத்தியம். இந்தியாவில் இந்த வழக்கமில்லாததால், ஜர்மெனிச்சட்

டம்போல் இங்கே செய்தல் எவ்வளவு விரும்பத்தக்கதாயினும் சாத்தியமில்லாததாயிருக்கின்றது.

## இந்தியாவில் கள் குடியைப்பற்றிப் பார்லிமெண்டில் பிரஸ்தாபம்.

ஹிந்துக்களுடைய பூர்வீக மதாசாரங்களின்படி கள்ளுண்ணல் பெரும் பாவமாகக் கருதப்பட்டபோதிலும், தற்காலம் இந்தக் கெட்ட வழக்கம் கீழ் ஜாதிகளிற் பரவி வருகிறதென்பதிற் சந்தேகமில்லை. மகமதியர்களின் மதக்கொள்கைகளின்படியும் இந்த வழக்கம் பெரும் பாவமாயினும், அந்த வகுப்பாரில் கீழ் ஜாதிகளிலும் இது பரவி வருகிறது. ஹிந்துக்கள் மகமதியர் இருவகுப்பாரின் மேல் ஜாதியாருள் இந்தத் துர்வழக்கம் முற்றிலுமில்லையென்று சொல்லுதல் உண்மையாக மாட்டாது. மேல்நாட்டு நாகரிகத்தின் பழக்கத்தால் அன்னிய பானங்களைப் பருகுதல் அநேகரது துர்வழக்கமாகி வருகிறது. ஆயினும், நம் தேசத்து உயர் வகுப்பார், மேனாட்டு உயர் வகுப்பாரைப்போல, இந்தத் துர்வழக்கத்தைப் பொதுவாகக் கொள்ளமாட்டார்களென்று சொல்லலாம். நமது சீதோஷ்ண இயல்பும் மதாசாரங்களும் இந்த வழக்கத்துக்கு விரோதமாயிருக்கிறபடியால், விவேகிகளும், அபவாதத்துக்குப் பயப்படுகிறவர்களும், இந்த வழக்கத்தினின்றும் விலகியே இருப்பார்கள். ஆனால் கீழ் ஜாதி ஜனங்களுக்குள் இந்தத் தடைகளில்லாமல், கள் குடித்தல் வருஷத்துக்கு வருஷம் அதிகமாகப் பரவி வருகிறதென்று நினைக்கப் போதுமான திருஷ்டாந்தங்களிருக்கின்றன.



இந்த வழக்கத்தை யடக்குதல் அவசியமென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவது போல ராஜாங்கத்தாரும் ஒப்புக்கொண்டாலும், இந்த விஷயமாய் ராஜாங்கத்தார் செய்த முயற்சியொன்றும் நாம் எடுத்துச்சொல்லக்கூடியதில்லை. இங்கிலாந்தில் வேலை செய்யும் வகுப்பாருக்குள் இந்த வழக்கம் பலமாய்ப்பரவி, அளவற்ற தீங்குகளுக்குக் காரணமாகி வந்தபடியால், அதை யடக்கும் நோக்கங்கொண்டு ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தச் சங்கத்தார் இந்தியாவிலும் இந்த வழக்கம் பரவிவருவதைப் பார்த்து, இங்கும் அதை யடக்க வேண்டுமென்று கருதி, இந்தியா கவர்ன்மெண்டாருக்கு இந்தக் கொடுந்தீங்கின் வளர்ச்சியை ஓயாது காட்டிவந்தார்கள். இந்தச் சங்கத்தாரின் முயற்சியினாலேயே நமது ராஜாங்கத்தாரின் மனச்சாக்ஷி கிளறப்பட்டு, இந்த வழக்கத்தை வளரவிடுவது தங்கள் நோக்கமல்லவென்று சொல்லிக்கொள்ள நேரிட்டிருக்கிறது. உண்மையில், இந்த வழக்கம் பரவுதலால் கவர்ன்மெண்டுக்கு விசேஷ வரும்படி கிடைப்பது காரணமாக அது பரவி வருகிறதேயன்றி அடக்கப்பட்டு வருவதாகத் தோன்றவில்லை. மேற்சொன்ன சங்கத்தாரின் தூண்டுதல்களுக்கு இசைந்து, அடிக்கடி விசாரணைகள் நடத்தி, இதை யடக்கும்படியான திருத்தங்கள் செய்வதாகக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருந்தாலும், அப்படி முற்றிலும் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. எங்கெங்கு கள்ளுக்கடைகள் புதிதாய் ஸ்தாபிக்கப்படுகின்றனவோ அங்கங்கு ஜனங்களின் அபிப்பிராயத்தை முன்னதாக வறிந்து ஸ்தாபிக்கப்படவேண்டும்; அதாவது, ஜனங்கள் கூடாதென்று

சொல்லுகிற இடங்களில் அவைகள் ஸ்தாபிக்கப் படக் கூடாது என்பது இந்தத் திருத்தங்களி லொன்று. இந்த ஒரு திருத்தமாவது கண்டிப்பாய் நிறைவேற்றப் படுமானால், ஊரிலுள்ள கள்ளுக்கடைகள் குறைந்து, ஏழைகளுக்குள் இந்த வழக்கம் பெருகாதிருக்கக் கூடும். இந்தத் திருத்தம் அவசிய மென்று 1907-ம் வருஷம் ஆகஸ்டு மாசம் இந்தியா கவர்ன் மெண்டார் செய்த ஒரு தீர்மானத்தில் சொல்லி யிருந்தபோதிலும், அப்படி நடத்தப் படாததால், சிலகாலத்து முன்னால் காமன்ஸ் சபையில் மேலே சொன்ன சங்கத்தாரைச் சேர்ந்த ஸர் ஹெர்பர்ட் ராபர்ட்ஸ் என்ற நம் நேயரில் ஒருவர், "ஏன் அப்படி நடத்தப்பட வில்லை" என்று கேட்டார். "கள்ளுக்கடைகள் புதிதாக ஸ்தாபிக்கப்படுவதில் எந்த இடங்களில் அவைகள் ஸ்தாபிக்கப்படலாமோ அல்லது எத்தனை கடைகள் ஸ்தாபிக்கப்படலாமோ, என்பதைப்பற்றி அவ்விடத்து ஜனங்களுடைய அபிப்பிராயம் கூடிய வரையில் தவறாமல் கேட்கப்படவேண்டும்" என்றும், "அந்த அபிப்பிராயம் கிரமமாய்ப் பதிவு செய்து கொள்ளப்பட வேண்டும்" என்றும், "கவர்ன்மெண்டு செய்த தீர்மானமானது, எல்லா மாகாணங்களிலும் நிறைவேற்றப்பட்டதா? இந்த விஷயமாய்க் கவர்ன்மெண்டுக்கு ஆலோசனை சொல்லும் பொருட்டு எத்தனை பட்டணங்களில் எத்தனை முனிசிபாலிடிகளில் கமிட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன? இந்தக் கமிட்டியில் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் மெம்பர்களாயிருக்கிறார்களா?" என்றும், ஸர் ஹெர்பர்டு ராபர்ட்ஸ் கேட்டதற்கு மிஸ்டர் புக்கானன், இந்தியாவுக்கு எழுதித் தான் பதில் சொல்லக்கூடுமென்று சொல்லி விட்டார்.



[illegible] மட்டில், இம்மாதிரிக் கமிட்டிகள் ஏற்பட்டிருப்பதாகவாவது அவ்விடத்து ஜனங்களது அபிப்பிராயத்தைக் கேட்டே கள்ளுக் கடைகள் ஸ்தாபிக்கப்படுவதாகவாவது தெரியவில்லை. ஸர் ஹெர்பர்ட் ராபர்ட்ஸ் கேட்டபடி கவர்ன்மெண்டு கண்டிப்பாய்ச் செய்து வரும்பட்சத்தில், லக்ஷக்கணக்கான ஏழைகளை மடித்து லக்ஷக்கணக்கான குடும்பங்களில் தொல்லையாக அக்கத்தை நாட்டும் இந்தக் கொடிய வழக்கம் ஒருவாறு குறையும். நமது தொழிலாளிகள் முன்னுக்கு வராமல் கேவலம் ஈனஸ்திதியி லிருப்பதற்கு இந்த வழக்கமே முக்கிய காரணமென்பது அனுபவமுள்ளவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இந்த வழக்கத்தை அவர்கள் ஒழிக்கிறவரையில் நல்ல நிலைமைக்கு வரமாட்டார்களென்பதும் நிச்சயம். தேசத்தின் க்ஷேமம் வேலை செய்வோரின் க்ஷேமத்தைப்பற்றினது, வேலை செய்வோரின் க்ஷேமம் அவர்களுடைய ஒழுக்கத்தைப் பற்றியது. ஒழுக்கமென்பதே இல்லாம லடிக்கும் இக் கொடிய வழக்கத்தை நிறுத்தல் கவர்ன்மெண்டாரது பொறுப்புப்போல் தேசாபிமானி ஒவ்வொருவரது பொறுப்புமாகும்.

கவர்ன்மெண்டின் உத்தேசம் கள்ளுக்குப் போட்டிருக்கும் வரியை அதிகப்படுத்திக் கள்ளுண்ணலைக் குறைக்கவேண்டு மென்றிருக்க, அது அதிகமாவது விசனகரமானது. சென்னையில் சமீபத்தில் கூலி வேலை செய்வோர் அதிகமாகி யிருக்கிறார்கள். முனிசிபாலிடி, டிராம்வே, ரயில்வேக் கம்பெனிகள், இ கள் அதிக வேலைக்காரர்களை உபயோகப்படுத்துகின்றன. கறுப்புக் காலமான[illegible] கூலிக்கா

பட்டணத்திற் பிழைக்கவந்து சேருகிறார்கள். இந்தக் கூலிக்காரர்களை கள்குடிப்பவர்களாய், கட்குடி அதிகமாகி வருகிறது. கவர்ன்மெண்டினுடைய அபிப்பிராயம் கள்குடிக்கும் வகுப்பாராகிய கூலி வேலைக்காரர்கள் முன்னைவிட இப்போது அதிகப் பணம் சம்பாதிப்பதால் அதிகமாய்க் குடிக்கிறார்களென்பது. இது வாஸ்தவமானால் இதைவிடப் பரிதாபமான சம்பவமில்லை. கூலிவேலை செய்வோர் அதிகப் பணம் சம்பாதித்தால் அதைக் கட்குடியில் செலவு செய்யவேண்டும்? பசியார உண்ணவும் இடுப்பு நிரம்ப உடுக்கவும் பிள்ளை குட்டிகளை நல்ல ஆகாரம் முதலியவை கொடுத்து வளர்க்கவும் நல்ல வீடுகளில் வசிக்கவும் இந்த சம்பாத்தியம் உபயோகப்படக்கூடாதா?

இவ்வாறு, ஏழைகள் துன்மார்க்கத்தால் கெட்டுப் போவதைத் தடுக்க ஏதேனும் உபாயம் செய்வதவசியம். குடிவிலக்குச் சங்கத்தார் சென்னையிலும் சிலர் இருக்கிறார்களென்று நினைக்கிறோம். அவர்களாவது இந்த விஷயத்தில் ஊக்கங்காட்டி ஏழைகளை இந்த வழக்கத்தினின்று காக்க வேண்டும். சென்னையில் மட்டுமல்ல, தேசமெங்குமே இந்த வழக்கம் அதிகப்பட்டு வருவதாகத் தெரிகிறது. நம் தேசத்தாருடைய துராசாரங்களைத் திருத்தி, அவர்களை நல்லவழிக்குக் கொண்டுவரவேண்டுமென்று விரும்பும் தேசாபிமானிகள் ஏழை ஜனங்களுடைய இந்தக் கெட்டவழக்கத்தைத் திருத்துவதைவிடச்செய்யக் கூடிய திருத்தம் வேறொன்றுமில்லை.

# CHAPTER V.

## தாழ்ந்த ஜாதியார்.

பம்பாயை விட்டு ஜன்ம தேசம் போன ஸர் ஜான் மூர் மெக்கன்ஸிக்கு ஜனங்கள் பலவிதமாய் உபசாரங்கள் செய்ததில், தாழ்ந்த வகுப்பாரை உயர்த்த முயன்றுவரும் சங்கத்தாரும் தங்கள் முயற்சிகளில் அவர் காட்டிவந்த அனுதாபத்திற்காக அவரை உபசரித்தார்கள். அந்தச் சமயத்தில் அந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர் தாழ்ந்த வகுப்பாரிடத்தில் தாம் வைத்திருக்கும் தயவையும் அன்பையும் காட்டி, அந்தச் சங்கத்தார் செய்து வருங்காரியங்களைப் புகழ்ந்து பேசினார். அநேககாலந் தொட்டு அந்த தாழ்ந்த வகுப்பார் பலதொந்தரைகளையும் வருத்தங்களையும் சகித்து வருவது ஸர்ஜான் மூர் மெக்கன்ஸிக்கு அவ்வளவு ஆச்சரியமாய்த் தோன்றவில்லை. அந்த வகுப்பார் தங்கள் கேவலமான நிலைமையில் திருப்தி கொண்டவர்களாய் ஜீவித்து வருவதே அவருக்கு ஆச்சரியமாய்த் தோன்றி வருகிறது. ஹிந்து சமூகத்தில் ஜாதி பேதங்கள் இருப்பதும் இந்தப் பேதங்களுக்கு வெளிப்புறத்தில் ஹிந்து ஜாதி ஒன்றிலும் சேராமல் அசுத்தமானவர்களென்று கருதப்படும் ஒரு வகுப்பார் இருப்பதும் அன்னியருக்கு ஆச்சரியமாயிருக்கின்றது. மற்றத் தேசங்களிலானால் ஒரு வகுப்பார் தங்களை உயர்ந்தவர்களென நினைத்துக்கொண்டு விசேஷ சுதந்திரங்கள் பாராட்டுவதும் மற்ற வகுப்புகளைச் சேர்ந்தவர்கள்

தாழ்ந்தவர்களென்று கருதப்பட்டு அப்படியே நடத்தப்படுவதும் பொதுவாய் சமூகத்திற் பெருங்குழப்பத்தையும் கூர்மையான விரோதத்தையும் உண்டாக்கும். தாழ்ந்த வகுப்பார் தங்களை உயர்ந்த வகுப்பார் கொடுமையாய் நடத்துவதாகச் சினந்து கலகம் செய்து தங்களை உயர்த்திக் கொள்ளப் பார்ப்பார்கள். தங்கள் நிலைமையில் திருப்தி கொண்டவர்களாயிருக்க மாட்டார்கள். இந்தியாவில் அப்படியில்லை. அந்தந்த வகுப்பார் தங்கள் தங்கள் நிலைமையானது இயல்பாயுண்டானதாக நினைக்கிறார்களேயன்றி, மற்றோரது கொடுமையாலாவது பொறாமையாலாவது உண்டானதாக நினைப்பதில்லை. பிராமணன் சூத்திரன் சண்டாளன் எல்லா வகுப்பாருக்கும் அவரவர் பூர்வ ஜன்மங்களிற் செய்த கருமங்களின் பயனாக ஜன்மம் உண்டாயிருக்கின்றது. இந்த ஜன்மத்தில் நல்ல கருமங்கள் செய்தால், அடுத்த ஜன்மத்தில் உயர்ந்த கதியைப் பெறலாம். ஆகையால், அவனவன் நிலைமைக்கு அவனவன் கருமமே காரணமின்றி, வேறு காரணமில்லை. உயர்ந்த நிலைமையை நல்ல காரியங்களால் அடைவதில் தடைசெய்வோருமில்லை. சண்டாளனும் நல்ல காரியங்களால் ஜன்மாந்திரத்தில் பிராமணனாகிவிடலாம். இப்படி அறிந்து சாஸ்திரங்கள் கற்பிப்பதால் இந்தக் கற்பனையை நம்பி எல்லா ஜாதியார்களும் சமாதானமாயும் திருப்தியுடனும் பல்லாயிரம் வருஷங்களாக வாழ்ந்து வருகிறார்கள். இந்த அதிசயத்தை ஸர் ஜான் மூர் மெக்கன்ஸி தம் பேச்சில் எடுத்துச் சொல்லி, தாழ்ந்த வகுப்பாருடைய கதி ஜன்மாந்திரங்களில் எவ்வாறாயினும், இந்த ஜன்மத்தில் அவர்கள் அடையக்கூடிய சுகத்துக்கும் பெரு



மைக்கும் தடை இருக்கக்கூடாதென்று வற்புறுத்தினார். நம் தேசத்திற் பிறந்து வளர்ந்து நம் அயலாராக ஜீவிக்கும் ஒருவனை அசுத்தனென்று நினைத்து ஒதுக்கி வைப்பதும், அவனுக்கு அவன் புத்தியினாலும் சிரமத்தினாலும் கிடைக்கக்கூடிய சுகங்கள் கிடைக்காமற் செய்வதும், ஒருக்காலும் சரியாகமாட்டா. ஜாதி வேற்றுமைகளைப் பாரமார்த்திக நோக்கங்களுடன் விவகரிக்கையில் அவைகளைப்பற்றி நாம் என்ன நினைத்தாலும், உலக விவகாரங்களில் தாழ்ந்த ஜாதியானை அசுத்தனென்று நினைக்க நியாயமில்லை. அப்படி நினைப்பதைப் புத்திமான்களான இந்தியர் அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

பம்பாய் ராஜதானியில் மாகர் எனப்படும் வகுப்பார், தென்னிந்தியாவில் பஞ்சமரெனப்படுவோரைப்போல், தீண்டாதவர்களெனக் கருதப்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய நிலைமையை உயர்த்தவேண்டுமென்று மேற்படி சங்கத்தாரும் கவர்ன்மெண்டாரும் கவலைப்பட்டு வருகிறார்கள். அவர்கள் புத்தியிலாவது ஊக்கத்திலாவது குறைந்தவர்களல்ல. தக்க படிப்பில்லாமலே அவர்கள் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கமாவது சாமர்த்தியமாவது இல்லையெனக் கூடாதென்பதற்குத் திருஷ்டாந்தமாக, கோதாவரிக் கால்வாய் வேலையில் ஒரு மாகர் (Mahar) ஜாதியான் லக்ஷ ரூபாய்க் கதிகமாகக் கண்ட்ராக்டு எடுத்து நடத்தி வருவதைச் சொன்னார். அவ்விதம் வேலை செய்யக் கூடியவன் சாமர்த்தியமும் அறிவும் உள்ளவனாயிருக்க வேண்டுமேயன்றிச் சாமானியனாயிருக்கமாட்டான். அதேமாதிரி மற்றத்தொழில்

களிலும் இந்த வகுப்பார் புகுந்து, செல்வமும் அந்தஸ்தும் அடையக் கூடியவர்கள். மாகர் ஜாதியாரில் படிப்புள்ளவர்களுக்குக் கவர்ன்மெண்டார் உத்தியோகங் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் படிப்பும் அநுபோகமும் இல்லாத வரையில் இந்த ஜாதியார் முன்னுக்கு வருதல் சாத்தியமல்ல. சாதாரணமான ஸ்கூல்களில் பாமர ஏழைகளாகிய இவர்கள் சேர்ந்து படிப்பதில்லை. சில முனிசிபல் ஸ்கூல்களில் இவர்கள் சேர்ந்தாலுங்கூட, மற்ற உயர் வகுப்புப் பிள்ளைகளுடன் கலக்காமல் தனியாயிருப்பார்களாகையால், இவர்கள் உபாத்தியாயர்களுடைய கவனத்தைப் பெறுவதில்லை. கிராமாந்தரங்களில் இவர்களுடைய படிப்புக்கு வசதிகளே இல்லை. இந்தத் தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க உபாத்தியாயர்கள் கிடைப்பதும் கஷ்டமாயிருக்கின்றது.

ஆகையால், முதலிலேப்பில் இவர்களுக்குத் தனியாக ஸ்கூல்கள் ஸ்தாபிப்பதும் இவர்கள் ஜாதியைச் சேர்ந்தவர்களை உபாத்தியாயர்களாகப் பயிற்றுவிப்பதும் அவசியமென்று ஸர்ஜான்மூர் மாக்கென்ஸி சொன்னார். கவர்ன்மெண்டார் சம்பந்தப்பட்ட மட்டில், அவர்களால் கிடைக்கக் கூடிய சகாய மனைத்தையும் இந்த மாகர் ஜாதியாரும் மற்றத் தாழ்ந்த ஜாதியாரும் பெறுவதில் தடையில்லை. ஆனால் அவர்களுடைய சிறுமைகள் கவர்ன்மெண்டாலுண்டாகாமல் சமூக ஏற்பாடுகளினாலேயே உண்டாயிருக்கிறபடியால், சமூகத் தலைவர்களாயிருந்து படிப்பும் செல்வாக்கும் உள்ளவர்கள் இந்த வழியில் ஊக்கம் செலுத்தவேண்டும். லாகூர் ஆரிய சமாஜத்



தாரை ஸர்ஜான்மூர் மெக்கன்ஸி உதாரணமாகச் சொன்னார். இந்த சமாஜத்தார் ஹிந்துக்களென்று சொல்லிக்கொண்டும், வேதங்களைப் பிரமாணமாக அங்கீகரித்தும், பல வழிகளில் ஹிந்து சமூகத்தை உயர்த்த முயன்று வருகிறார்கள். தாழ்ந்த ஜாதியாரை யண்டி, அவர்களுடைய சிறுமைகளை எடுத்துக்காட்டி, அவர்களை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவருவதை முக்கியமான நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் மற்றப் பாகங்களிலும் ஆரிய சமாஜத்தாரைப்போல ராஜபக்தியுள்ள ஜனங்கள் சங்கங்கள் ஸ்தாபித்து, நூற்றுக்கணக்காய்ப் பிரசங்கிகளையும் போதகர்களையும் கிராமங்களுக் கனுப்பி, இந்தத் தாழ்ந்த வகுப்பாரை கண் திறக்கும்படி செய்யவேண்டுமென்று, இந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர் மிகுந்த பரிவுடன் பேசி முடித்தார்.

## பஞ்சமர்களும் மிராசுதார்களும்.

செங்கற்பட்டு ஜில்லாவில் சில புறம்போக்கு நிலங்கள் பயிர் செய்யாமற் கிடக்கிறபடியால், சில பஞ்சமர் அவைகளைப் பயிர் செய்ய வேண்டுமென்று விரும்பி கவர்ன்மெண்டுக்கு மனுச் செய்து கொள்வதாகவும், அப்படிச் செய்யும்போது மிராசுதார்கள் அந்த நிலங்கள் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டு பறையர்களுக்குக் கிடைக்காமற் செய்து விடுவதாகவும், மிஸ்டர் C. H. மொனுஹன் (Monahan) என்கிற பாதிரி ஒரு பத்திரிகைக்கு எழுதுகிறார். அந்த ஜில்லாவில் புறம்போக்கு நிலம் ஏதேனும் ஒருவன் பயிர் செய்யக் கேட்டால், அந்த நிலம் முதலாவது மிராசுதார்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்; அவர்கள் வேண்டாமென்றால் மட்டும் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படலாம்;

என்று சர்க்கார் ஒழுங்கிருக்கின்றது. இந்த ஒழுங்கை யனுசரித்துப் பறையர்களுக்கு நிலங் கிடைக்கக் கூடாதென்ற கெட்ட எண்ணத்துடன், மிராசுதார்கள் தரிசு நிலத்தைத் தாங்கள் வாங்குவதுபோல வாங்கி, இரண்டொரு வருஷம் அதற்குள்ள சொற்ப வரியித்தாவையும் கொடுத்துப் பிறகு அதை வேண்டாமென்று விட்டுவிடுகிறார்கள். மறுபடியும் ஒரு பஞ்சமன் அந்த நிலம் தனக்கு வேண்டுமென்று சர்க்காருக்கு மனுச்செய்துகொண்டால், மறுபடியும் மிராசுதாரன் ஒருவன் முன்வந்து மேற்படி சர்க்கார் ஒழுங்குப்படி அதைப் பெற்று இரண்டொரு வருஷத்திற்குப் பிறகு அதை விட்டுவிடுகிறான். இவ்வாறு பஞ்சமர் சொந்தமாய் நிலம் பெற்று வாழக்கூடாதென்றும், அவர்கள் எப்போதும் தங்களுக்கு அடிமைகளாக இருக்கவேண்டுமென்றும், மிராசுதார்கள் கெட்டெண்ணங் கொண்டிருக்கிறார்களென்று இந்தப்பாதிரி எழுதுகிறார்.

இது உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் செங்கற்பட்டு மிராசுதார்களுக்குப் பெருமையாகமாட்டாது. அநாதிகால வழக்கத்தை அனுசரித்து, மேற்குலங்களைச் சேர்ந்த மிராசுதார்கள் ஈன ஜாதியென்று நினைக்கப்படும் பஞ்சமர்களுக்கு சுவாதீனம் வரக்கூடாதென்றும், அவர்கள் சொத்துள்ளவர்களாகக் கூடாதென்றும், தங்களின்கீழ் பண்ணை வேலை செய்து கூலிபெற்று ஜீவிப்பதே அவர்களுக்குப் பொருத்தமென்றும், எண்ணுவது சகஜம். ஹிந்து சமூகத்தின் அமைப்பு அவ்விதமாகவே இதுவரையிலும் இருந்து வருகின்றது. பஞ்சமர்கள் சொத்துக்காரராகிவிட்டால், அவர்களின் கீழ்



மற்ற ஜாதியார் வேலை செய்து ஜீவிப்பது சாமானிய ஹிந்துக்களுக்கு மனதிலும் எண்ணத்தகாததாயிருக்கின்றது. பஞ்சமர் மிராசுதாராகவும் முதலியாரும் பிராமணரும் பண்ணையாட்களாக வேலை செய்யவும் நேர்ந்து விட்டால், உலகமே பாழாகிவிடுமென்று ஹிந்துக்கள் நினைக்கக் கூடியவர்கள். அந்தந்தக் குலத்துக்கு ஒவ்வொரு தொழில் பொருந்தியதாக ஏற்பட்டிருப்பது இன்று நேற்று உண்டானதல்ல. பல்லாயிரம் வருஷங்களாக ஜாதி வித்தியாசங்களை யொட்டி இந்த ஏற்பாடு இருந்து வருகின்றது. ஆயினும், இந்தப் பூர்வீக ஏற்பாடுகளெல்லாம் பல காரணங்களால் மாறிக்கொண்டு வருவதை மிராசுதார்களாவது மற்ற மேற்குலத்தாராவது அறியாமலிருக்கவில்லை. இவர்களுடைய விருப்பம் எப்படியிருந்தாலும், எண்ணம் எப்படியிருந்தாலும், மேற்குறித்த நவீன காரணங்கள் அவைகளின் வேலையைச் செய்துகொண்டுதான் போகும். இந்தக்காரணங்கள் கலியுகமென்று நாம் சொல்லும் இக்காலத்தில் வேலை செய்துகொண்டிருக்கின்றனவாயினும், மேனாட்டாருடைய பிராபல்லியம் இத்தேசத்தில் நிலைத்ததுமுதல், இந்தக் காரணங்கள் விசேஷ சக்தியுடன் வேலை செய்து வருகின்றன. அநேக அம்சங்களில் ஹிந்துக்களுடைய பூர்வீக வழக்கங்களுக்கும் விருப்பங்களுக்கும் விரோதமாயிருக்கின்றன.

ஏற்கெனவே அனேக மாறுதல்கள் நேரிட்டிருக்கின்றன. அனேக இடங்களில் மேற்குலத்தார் தலைமுறை தத்துவமாய் அனுபவித்து வந்த சுதந்திரங்கள் அவர்களை விட்டு விலகி எல்லாக் குலத்தாரும் சாமா

ளியமாய்ப் பெற்று அனுபவிக்கக்கூடியவைகளாகி விட்டன. அநேகங் கிராமங்களில் இது வரையில் பிராமணரே மிராசுதார்களாய் இருந்துவந்தது போய், பறையர்களும் மகமதியர்களும் மிராசுதார்களாகிவிட்டார்கள். இந்தப் பறையரும் மகமதியரும் பெரிய மனுஷர்களாகவும் அவர்களின்கீழ் ஹிந்துக்களில் மேற்குலத்தாரெனப்படுவோர் சம்பளமோ கூலியோ பெற்றுப் பிழைக்கிறவர்களாயும் ஆகி விட்டார்கள். யுகதர்மமே ஜாதி வித்தியாசம் அந்தஸ்து வித்தியாசம் முதலிய வித்தியாசங்களுக்கு விரோதமாயிருக்கின்றது. கீழ் வகுப்பாரெனப்படுவோர் தாழ்ந்த நிலைமையிலும், மேற்குலத்தாரெனப் படுவோர் உயர்ந்த நிலைமையிலும் இருப்பது இயற்கைக்கு விரோதமென்று கருதுவது நியாயமெனத் தோன்றி வருகிறது. சாமானிய ஹிந்துக்களுக்கு மேற்கண்ட பூர்விக வித்தியாசங்கள் சகஜமெனத் தோன்றும்போது, ராஜீயத் திருத்தங்களையும் ஆசாரத் திருத்தங்களையும் வேண்டி உழைக்கும் நம்மவரிற் சிலர் மேற்படி வித்தியாசங்கள் நம்முடைய முற்போக்குக்கு விரோதமென்றும் அவைகளை ஒழித்துவிட வேண்டுமென்றும் முயன்று வருகிறார்கள். இப்படி முயன்று வருவோரே தற்காலம் செல்வாக்குள்ளவர்களாயும் நினைத்ததைச் சாதிக்கக் கூடியவர்களாயுமிருக்கிறார்கள்.

வசவா யுகதர்மமென்று நாம் சொல்லுவதே மேம்பாடு பெற்று ஹிந்து சமூக அமைப்பின் அநாதி லக்ஷணங்கள் மாறிக்கொண்டு போகுமென்பதில் சந்தேகமில்லை. ஏற்கெனவே சில மாறுபாடுகள் உண்டாயிருக்கின்றன:—பிராமணச் சிறுவர்கள் சந்தியாவந்த



னம் செய்வதில்லை; தாய் தகப்பன் திவசங்கள் 12 மணிக்கு மேற்பட்டுச் செய்ய வேண்டியிருக்க, ஆபீசுக்கும் தொழிலுக்கும் அவசரமாய்ப் போகவேண்டி 10 மணிக்குள்ளேயே செய்து விடுகிறார்கள்; பிராமணர் மேல் நாட்டாரைப்போல் உடுப்பு உடுக்கிறார்கள்; கடைகளில் வெளிப்பட வைத்திருக்கும் தின்டிகளைப் பிராமணர்கள் தின்கிறார்கள்; ஆபீசுகளில் பறையன், பிராமணன், துலுக்கன் யாவரு மொன்றாய்க் கலந்து, பிராமணன் வீட்டுக்குத் திரும்பி வந்தால் ஸ்நானம் செய்கிறதில்லை; ரெயிலிலும் சத்திரம் சாலை சாவடிகளிலும் புண்ணியாவாசகம் பண்ணாமலும் சமையல் சாப்பாடு செய்கிறார்கள். இத்தகைய மாறுதல்கள் எத்தனையோ நேரிட்டு வர, அவைகளை எதிர்த்தல் பயன்படாதென்பதையும் நாம் அறிய வேண்டும். இன்னும் நூறு வருஷத்திற்குள்ளாக, 21வது நூற்றாண்டில், ஹிந்து சமூகத்தின் உருவம் எப்படி மாறிப்போகுமோ, நமது சனாதன தர்மங்களும் ஆசார அனுஷ்டானங்களும் எவ்வாறு குலைந்து போகுமோ, ஈசனே அறிவான்! மத்தியில் விவேகிகளான நம்மவர்கள் காலவேற்றுமையைக் கருதி சமயோசிதமாய் நடந்து கொள்வது அவசியம். இப்படி திருக்குறளும் பலகால் முறையிடுகிறது. பறையர்கள் முன்னுக்கு வரக்கூடாதென்று பிராமணராவது முதலியாராவது முயற்சி செய்தல் பயன்படாது. திருக்குறள், பறையர் பந்துக்கள் நட்பர் இவர்களுக்கெல்லாம் நடுவு நிலைமையாயிருந்து, அவர்களிடம் தயவும் அன்பும் பாராட்டவேண்டுமென்று முறையிடுகின்றது. அவர்களுடைய க்ஷேமத்தை மற்ற ஜாதியார் விரும்புவதே

எல்லா வகுப்பாருக்கும் நலம் செய்வதாகும் என்று திருக்குறளும் பகவத்கீதையும் முறையிடுகின்றன. ஆதிகாலத்தில் நம் முன்னோர்கள் செய்த ஏற்பாடுகள் அக்காலத்திற்குப் பொருந்தினவாயினும் இக்காலம் அவைகளையே பற்றி நிற்பது தீங்கு விளைப்பதாகும். ஆகையால் மிஸ்டர் C. H. மொறுகன் என்கிற பாதிரி செங்கற்பட்டு மிராசதார்களின்பேரில் சொல்லும் குற்றம் உண்மையானாலும் உண்மையல்லவானாலும், பொதுவாய் நமது ஜனங்கள் ஜாதி வேற்றுமையைப் பாராட்டாமலும் வேறுவிதமாய்ப் பரஸ்பர துவேஷம் காட்டாமலும் அன்புடனும் சிநேக பாவத்துடனும் ஒருங்கே வாழ்வது நம் தேசத்தின் க்ஷேமத்திற்கு அவசியமாகும்.

## பஞ்சமர்களும் தாகசாந்தியும்.

திருநெல்வேலி ஜில்லா வாசியாகிய மிஸ்டர் T. B. பாண்டியன் என்கிற ஒரு கிறிஸ்தவக் கனவான், பஞ்சமர்களுக்குத் தாகசாந்தியின் பொருட்டு அந்த ஜில்லாவில் கிணறுகள் வெட்டுவித்து வருகிறார். கிணறுகளில் நல்ல ஜலமிருந்தால் அது தாகசாந்திக்கும் சமயலுக்கும் சரீரசுத்திக்கும் உதவும். உஷ்ண தேசமாகிய இத்தேசத்தில் நல்லஜலம் வேண்டியமட்டும் கிடைக்காவிட்டால், ஜனங்களும் ஆடு மாடுகளும் படக்கூடிய கஷ்டம் இவ்வளவாகுமென்று நாம் சொல்ல வேண்டிய இல்லை. அநேக இடங்களில் ஆறாவது குளமாவது இல்லாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். ஊருக்கு வெளியிலுள்ள ஒரு கிணற்றிலிருந்தோ அல்லது வேறு ஏரி குளங்களிலிருந்தோ ஜலம் கொண்டுவந்து தினத்தைப் போக்குவதாயிருக்கின்றது. திருநெல்வேலி ஜில்லாவி-



லேயே பல இடங்களில் ஜலவசதி ஊருக்குள் இல்லாமல், தூரமான இடத்திலிருந்து ஸ்திரீகள் நூற்றுக் கணக்காய்க் காலை வேளையில் ஒரு குடத்தில் நல்ல ஜலத்தைத் தலைமேற் கொண்டு வரிசையாய்ப் போவதைப் பார்க்கலாம். தினத்தின் மத்தியில் ஜலம் ஆய்விட்டால் வீட்டிலுள்ளோர் மறுநாள் ஜலம் கொண்டு வரப்படுகிறவரையில் கஷ்டப்படுவதாகவே யிருக்கும். இப்படிப்பட்ட இடங்களில் ஜாதி வித்தியாசக் கொடுமையால் உயர்ந்த வகுப்பாருக்குக் கிடைக்கும் ஜலம் பஞ்சமருக்கில்லையென்று தடுத்து விட்டால், அந்தப் பஞ்சமர் படக்கூடிய கஷ்டம் இவ்வளவாகுமென்று மனதில் யூகிக்கலாம். ஜலவசதியுள்ள இடங்களிலுங்கூட இந்தப் பஞ்சமர்கள் உயர் வகுப்பார் ஜலம் எடுக்கும் இடத்தில் ஜலம் எடுக்கக்கூடாதென்று தடுக்கப்படுகிறார்கள். ஊருக்குப் புறங்களில் அசுத்தமான ஜலம் கிடைக்குமானாலும் அதை யுபயோகித்துத் திருப்தி யடைய வேண்டியவர்களா யிருக்கிறார்கள். மாடுகள் குடிக்கு மிடத்திலுங் கூட, பஞ்சமர் ஜலம் எடுக்க இடம் பெறுவதில்லை. நம்மவரில் கோடை காலத்தில் வழிப்போக்கர்களுக்குத் தாகசாந்திக்காகத் தண்ணீர்ப் பந்தல் வைப்பது உத்தமமான தர்மமாகக் கொள்ளப் படுகிறது. இப்படி தர்மமாக வைக்கப்படும் தண்ணீர்ப் பந்தலிலுங்கூட, பஞ்சமர்களுக்கு ஜலம் கொடுக்கிற வழக்கமில்லை. உண்மையில், இந்தப் பஞ்சமர்கள் ஆடு மாடுகளிலும் கேடாய் அவர்களுடைய ஹிந்து சகோதரர்களால் நடத்தப்படுகிறார்கள். அவர்கள் ஜீவப்பிராணிகள் என்பதையே நாம் மறந்து விட்டோம். அவர்களுக்குப் பசியுமில்லை தாகமுமில்லை, எந்த உணவே

னும் எவ்வளவேனும் அவர்களுக்குப் போதும்." இவ்வாறு கருணையென்பது துளிகூட இல்லாமல் இந்த ஜனங்களை நாம் நடத்திவருகிறோம்.

இப்படிப்பட்ட நிலைமையில் பஞ்சமர்களிடத்தில் மிஸ்டர் பாண்டியன் கருணைவைத்து, அவர்கள் வசிக்குமிடங்களுக்குச் சமீபத்தில் நல்ல ஜலமுள்ள கிணறுகள் வெட்டுவித்து, இந்தப் பெருங்கஷ்டத்தைத் தீர்க்கவேண்டுமென்று எண்ணங்கொண்டார். அவர் கிறிஸ்து மதத்தை தழுவினவரானதாலோ வேறெக் காரணத்தாலோ இந்த உத்தமமான தர்ம விஷயத்துக்கு, இத்தேசத்தில் சகாயத்தைத் தேடாமல், அமெரிக்காவுக்குப்போய் இங்குபஞ்சமர் படும் கஷ்டத்தை எடுத்துச் சொல்லி, சிலதிரவியம் சேர்த்து, அதைக்கொண்டு திருநெல்வேலி ஜில்லாவில் பற்பல இடங்களில் கிணறுகள் வெட்டி வருகிறார். ஒருவன் திருக்குறள் வாசித்து அதன்படி நடந்தாலும், பகவத்கீதைபின்படி நடந்தாலும், அப்படியே பறையர்பேரிலும் மற்றக் கீழ்வகுப்பார் பேரிலும் அன்பும் அருளும் பூணுவான். ஆகையால், கிறிஸ்தவன் படிக்கும் பைபிளுக்கும், நம்முடைய குறளுக்கும் கீதைக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. இப்போது ஐரோப்பா தேசங்களில் கிறிஸ்தவர்கள் பிணங்களைச் சுடத் தொடங்கி விட்டார்கள். ஆகவே நம் மதத்துக்கும் கிறிஸ்தவ மதத்துக்கும் உள்ள வித்தியாசம் மற்றுப் போய் வருகின்றன. இது வரையில் 24 கிணறுகள் வெட்டப்பட்டு, அவைகளுக்கு அமெரிக்காக் கிணறுகள் என்று பேர் வைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷார் செய்த சகாயத்தைக் கொண்டு இரண்டு கிணறுகள் வெட்டப்பட்டு, அவைகளுக்குப் பிரிட்டிஷ்



கிணறுகள் என்று பேர் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டில் ஒரு கிணறு நம் கவர்னர் ஸர் ஆர்தர் லாலியின் சகாயத்தால் பாளையங்கோட்டைக் கருகில் தட்டான்குளம் என்ற இடத்தில் வெட்டப்பட்டு, சில தினங்களுக்கு முன்னால் சில ஐரோப்பியரும் ஹிந்துக்களும் கூடி, ஆடம்பரத்துடன் அதனை அந்தவூர் பஞ்சமர்களின் உபயோகத்துக் கென்று விளம்பினார்கள். தட்டான் குளத்தில் வெட்டப்பட்ட இந்தக் கிணறு நல்ல ஜல ஊற்றமுள்ளதென அங்கு வந்திருந்த டாக்டர் C. B. ராமராவ் சொல்ல எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். கடவுள் அருளால் இந்தக் கிணற்றில் ஜலம் ஆடையிலும் கோடையிலும் குறைவில்லாமல் ஊறிக்கொண்டேயிருக்கவேண்டும். இந்தக் கிணற்றைப் பஞ்சமர்களுக்கு ஒப்புவித்த சமயத்தில் திருநெல்வேலி கிறிஸ்தவ மதாசாரியரான பிஷப் பாதிரியும் சில ஐரோப்பியரும் வந்திருந்ததுமன்றி, சில ஹிந்துக்களும் பிராமணர்களும் வந்திருந்தார்களென்பது தெரிந்து களிக்கிறோம். இந்த ஜில்லாவில் இது வரையில் 26 கிணறுகள் * வெட்டப்பட்டிருப்பதால், சுமார் 2600 பிராணிகளுக்காவது தாகசாந்திக்கு வசதி ஏற்பட்டிருக்கின்றது. தாகத்தின் கொடுமை பசியின் கொடுமையைவிடக் கொடிது. சோறு இடுதல் சிறந்த புண்ணியமென்று சொல்லப் பட்டாலும், தாகவிடாய் தீர்க்க நீர் இடுதல் அதிலும் உயர்ந்த புண்ணியம்.

* இதற்குப்பிறகு, மதுரை ராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களில் பல கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

ஆறிடு மேடு மடுவும் போலாஞ்
செல்வ மாறிடு மேறிடு மாநிலத்தீர்—
சோறிடும் தண்ணீரும் வாரும் தருமமே
சார்பாக உண்ணீர்மை வீறுமுயர்ந்து.

மிஸ்டர் பாண்டியன் செய்து வரும் இந்தத் தர்மம் இன்னும் விசேஷமாய்ப் பரவிக் கைகூடி, பஞ்சமர்களுக்கு இந்தக் கஷ்டம் முற்றிலும் நீங்க வேண்டுமென்று யார்தான் பிரார்த்திக்க மாட்டார்கள்? ஆனால் இந்த விஷயத்தில் மிஸ்டர் பாண்டியனுக்கு ஹிந்துக்களிடமிருந்து விசேஷ சகாயம் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. இது அந்த சமூகத்தாருக்குப் பெருமையல்ல. இதுவரையில் ஹிந்துக்கள் பஞ்சமர்களை மிருகங்களிலும் கேடாய் நடத்தி வந்த நிந்தை போகட்டும். இனியேனும், அவர்களை உடன் பிறந்தவர்கள் போற்கருதி, அவர்களுடைய குறைகளைத் தீர்க்க நம்மவர் முன்வரவேண்டும். ஜீவகாருண்யத்தை விடப்பெரிதான தர்மமில்லை.

அருளில்லார்க்கவ்வுலகமில்லை
பொருளில்லார்க்கிவ்வுலக மில்லாதியாங்கு.

தாழ்ந்த வகுப்பாரை உயர்த்த வேண்டுமென்று புதிதாய் உணர்ச்சி தோன்றி வரும் இக்காலத்தில் மிஸ்டர் பாண்டியன் செய்துவரும் தர்மத்திற்கு அமெரிக்கரும் பிரிட்டிஷாரு மட்டுமே சகாயம் செய்வார்களானால், அது ஹிந்துக்களுக்குப் பெரும் இகழ்ச்சியாகவே இருக்கும்.

பறையர், பள்ளர், முதலிய கீழ்த்தர ஜாதியார்களுக்குக் கல்வியறிவு கொடுத்து அவர்களை முன்னிலைப் படுத்த சமீபகாலத்தொட்டு முயற்சிகள் செய்யப்பட்டு



வருவதும், அம்முயற்சிகள் தகுதியான பிரதிபலனைக் கொடுத்திருப்பதும், மிகவும் திருப்தியான விஷயங்கள். பிறப்பினாலேயே ஈனர்களென்றும், விருத்திக்கும் கல்விக்கும் புறம்பானவர்களென்றும், அவர்களுடன் பழகுவதும், அவர்களை முற்படுத்த முயல்வதும், தகாத காரியங்களென்றும், நினைக்கப்பட்ட காலம் போய்விட்டது. மேல்நாட்டு நாகரிகம் பரவிக் கல்வியும் அறிவும் எல்லாருக்கும் பொதுவென்ற அபிப்ராயம் பலப்பட்டுத் தேசத்திலேயே நல்ல உணர்ச்சி தோன்றிவரும் இக்காலத்தில் கீழ் ஜாதியார்களைக் கைதூக்கிவிடப் பல வழிகளில் முயற்சி செய்யப்பட்டு வருவதில் ஆச்சரியமில்லை. நாட்டின் சில பாகங்களில் பணம் படைத்தவர்கள் இவ்வித முயற்சிகளுக்கு உதவி செய்யவும் முன் வந்திருக்கிறார்கள். பம்பாயில் சாஸ்திரக் கல்வி பயிர்ச்சிக்காக லக்ஷக் கணக்காப் பணங் கொடுத்து உதவி செய்திருக்கும் ஜேகப் ஸாஸூன் என்ற ஒரு பெரிய தனிகர் கீழ்த்தர வகுப்பாருடைய கல்விக்காகவும் சிறிது பொருள் உதவியிருக்கிறார். இவர் காட்டிய முன் மாதிரியைப் பின்பற்றி இன்னும் பல பிரபுக்கள் உதவி செய்ய ஆரம்பித்தால் பஞ்சமர் போன்ற கீழ்ஜாதியாரின் நன்மைக்காக ஆங்காங்கு செய்யப்படும் முயற்சிகள் பலப்படும். மிஸ்டர் ஆண்ட்ரு கார்னிஜி என்ற பெரிய கோடீஸ்வரர் தம் தேசத்தில் கீழ்த்தர நிலைமையிலுள்ளவர்களை முற்படுத்த ஏராளமான பணம் செலவழித்து வருகிறார். இந்தியாவில் முக்கியமாய் கிறிஸ்தவப் பாதிரிகள் இந்த விஷயத்தில் ஊக்கமுடையவர்களாயிருக்கிறார்கள். கீழ்த்தர ஜாதியார் கல்வியில்லாதவர்களாதலால் அவர்களை எளிதில்

கிறிஸ்தவர்களாக்கிப் பிற்பாடு அவர்களை முன்னிலைப் படுத்தும்படியாகப் பல முயற்சி செய்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். புதிய உணர்ச்சிகளை அவர்கள் மனதில் உதிக்கும்படி செய்து, அந்தஸ்திலும் கௌரவத்திலும் அவர்களை முன்னிலைப்படுத்தி விடுகிறார்கள். கிறிஸ்தவர்களாக்கும் நோக்கத்துடன் இம்மாதிரி இவர்கள் செய்கின்றார்களெனச் சொல்லப்படும் கண்டனத்தில் உண்மையிருந்தாலும் உண்மையில்லாதுபோனாலும், நம் நாட்டுப் பஞ்சமர்களும் மற்றும் புறம்பாகிய ஜாதியார்களும் முன்னிலையடைகின்றார்களென்ப துண்மையென்பதை யொருவரும் மறுக்கமாட்டார்கள். கிராமங்களிலும் மற்றும் பழங்காலத்துக் கட்டுப்பாடு தளராத விடங்களிலும் வசிக்கும் பஞ்சமர் முதலிய கீழ்ஜாதியார் ஊருக்குள் புகவும் ஊர்க் கிணறுகளில் தண்ணீர் இறைக்கவும் சுதந்திரம் பெறாமல் எவ்வளவோ சங்கடப்படுகிறார்கள். இவர்களுடைய கஷ்டத்தையும் துன்பத்தையும் அறிந்து, அமெரிக்காவிலுள்ள பிரபுக்கள் பணம் அனுப்பி, அதனுதவியால் பஞ்சமர்களுக்கென்றே கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றனவென்று சொன்னோம். சென்னை ராஜதானியில் இத்தகைய கிணறுகளும் கல்விச்சாலைகளும் பல விருக்கின்றன.

பிரமஞான சபையின் தலைவராயிருந்து காலஞ்சென்ற கர்னல் ஆல்காட் பஞ்சமர்களுக்காகச் சில பாடசாலைகள் ஏற்படுத்தினார். இந்தப் பாடசாலைகள் இப்போது மிகவும் நல்ல நிலைமையில் இருக்கின்றன; இந்தப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குச் சம்பளமில்லை. கவர்ன்மெண்டார் செய்யும் உதவியாலும்



இதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் மூலதனத்திலிருந்து வரும் வரும்படியாலும் பாடசாலைகள் மிகவும் ஒழுங்காய் நடைபெறுகின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கும் உபாத்திமார்களுக்கும் மிகவும் சிநேகபாவமான சம்பந்தமுண்டாயிருக்கின்றதென்றும் மிகவும் அன்பாகவும் தங்கள் சொந்தப் பிள்ளைகளைப் போலவே உபாத்திமார்கள் மாணவர்களிடம் பிரீதியும் பற்றும் காட்டி வருகின்றார்களென்றும், ஒரு நிருபர் சென்னை ஆங்கிலப்பத்திரிகையொன்றில் எழுதியிருப்பதை நோக்கி மிகவும் சந்தோஷப்படுகிறோம். பஞ்சமர்களை முன்னிலைப் படுத்தவும் அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவும் எவ்வளவு முயற்சி செய்யப்பட்டாலும் தகும். இத்தகைய கீழ்ஜாதியார்களைப் பல நூற்றாண்டுகளாக அடக்கிக் காலின் கீழ் தேய்த்து, அவர்களிடமிருந்து சகல வேலையும் வாங்கி சௌக்கியமடைந்த மேல்தர ஜாதியார்—இவ்விஷயத்தில் தங்கள் தங்களாலியன்ற பண உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கீழ்த்தர வகுப்பார் அனுபவிக்கும் இடையூறுகளும் துன்பங்களும் இக்காலத்தில் நாளாக வாக மட்டுப்படுவது அவசியமென்றாலும், அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் விஷயத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பணவுதவி கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதிக முயற்சி செய்யப்படுமாதலால், பொருள் படைத்தவர்கள் கொஞ்சம் ஊக்கங்காட்டுவது அளவற்ற நன்மையைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும்.

## மிஸ்டர் அண்ணாமலைச் செட்டியார்—
## பஞ்சமர்களுக்காக நன்கொடை.

[illegible]ட் ஜில்லா கானாடுகாத்தான் வாசியாகிய ராவ்பகதூர் அண்ணாமலைச் செட்டியார் பஞ்சமர்களின் உபயோகத்துக்காக கிணறுகள் வெட்டிக் கொடுக்கும்படி 1,515-ரூபாய் கொடுத்திருக்கிறாரென்றும், இந்தக் கிணறுகளில் ஐந்தாவது கிணறு சமீபத்தில் வெட்டப்பட்டு அவ்வகுப்பாரின் பிரயோசனத்துக்காகத் திறந்து வைக்கப்பட்டதென்றும் அறிந்து சந்தோஷப்படுகிறோம். ராவ்பகதூர் அண்ணாமலைச் செட்டியார் செல்வவானானதாலும், தர்மப் பிரபுவானதாலும், இந்தச் சிறிய தொகையை தர்மத்துக்காகச் செலவிடுவது அவருக்கு ஒரு பொருட்டல்ல. இம்மாதிரி நூறுமடங்கு அதிகத் தொகையாயினும் செலவுசெய்யக் கூடியவர். ஆயினும் இரண்டு விஷயங்களுக்காக இந்த தர்மத்தை சிலாகிக்கிறோம். முதலாவது செட்டிமார்கள் லௌகிக விஷயங்களுக்காக தர்மம் செய்வதும் தேசக்ஷேமத்துக்குரிய தொழில்களில் பணம் போடுவதும் அரிது. அவர்கள் ஏராளமாய் வட்டிக்குக்கொடுத்த பணத்தின் வரும்படியைக் கொண்டு கோவில்கட்டுவது, சத்திரம் போடுவது, பாடசாலை ஸ்தாபிப்பது, இவைகளை தக்க தர்மங்களென்று நினைத்திருந்தார்கள். இந்த நம்பிக்கை இப்போது குறையாவிட்டாலும் சாமானிய ஜனங்களுக்கு உபகாரமான விஷயங்களும் தங்களுடைய மிகுந்த செல்வத்துக்குப் பாத்தியம்பெற்றவைகளென்று உணர்ந்துவருகிறார்கள். பலதொழில்களும் அங்கங்கே செட்டிமார்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளல்லாமல் பஞ்சமர்களின் உபயோகத்துக்காகச் செலவு செய்



வதும் ஒரு தர்மந்தானென்று செட்டிமார்கள் அறியத்தலைப்பட்டது நமக்குச் சந்தோஷமாயிருக்கிறது. பிராமணர்களுக்கு உபகாரமாக என்ன தர்மஞ் செய்யக்கூடுமோ அவைகளே சரியான தர்மங்களென்று நினைத்திருந்தவர்கள், இப்போது ஹிந்து ஜாதி வகுப்புகளைச் சேராமல் இளப்பமாக நினைக்கப்பட்டு வந்த பஞ்சமர்களும் அவர்களுடைய கஷ்டம் நீங்கும்படியாக உயர்ந்த வகுப்பார்களிடமிருந்து உபகாரம் பெறுவது நமது தர்மசிந்தைக்குப் பொருத்தமென்று நினைக்க ஆரம்பித்தது, யாருக்குத்தான் சந்தோஷமாயிராது? பஞ்சமர்களுக்கும் கஷ்டங்கள் உண்டென்பதை ஹிந்துக்கள் உணராதவர்களாகவே இருந்தார்கள். அவர்களுக்கும் பசிப்பிணியும் தாகவிடாயும் உண்டென்று உயர்ந்த வகுப்பார் இப்போது தான் அறியத்தலைப்பட்டிருக்கிறார்கள். பசு பக்ஷியாதிகள் உள்பட ஜீவப்பிராணிகளுக்குத் தர்மம் செய்ய விருப்பமுடைய ஹிந்துக்கள் பஞ்சமர்களின் கஷ்டங்களைக் கவனிக்காமல் விட்டுவிட்டிருந்தார்கள். கஷ்டங்களை அனுபவிக்கிறவர்களுக்கு அவைகளை நீக்குவதல்லவோ உத்தம தர்மம். மேலும், இன்னொருவிதமாயும் பஞ்சமர்களுக்கு உயர் குலத்தோர் ஒத்தாசை செய்வது அவசியம். என்னவெனில் ஹிந்துக்களில் ஜாதிவித்தியாசம் இருப்பதையும், தாழ்ந்த வகுப்பார்களை உயர்ந்த வகுப்பார் அலக்ஷியம் செய்து கொடுமை செய்வதையும், இந்தியாவில் வசிக்கும் ஆங்கிலேயரும், குடியேற்ற நாட்டு வெள்ளை ஜனங்களும் கண்டு அவர்களுக்குச் சரிசமானமான சுதந்திரங்களை நமக்குக் கொடுக்க ஆட்சேபிக்கிறார்கள். இப்படி ஜாதி வித்தியாசமும் கொடுமையும்

நம் தேசத்தில் இருக்கிற வரையில் அவைகள் நாம் முன்னுக்கு வருவதற்குப் பெருந்தடையா யிருக்கும். இதை யுத்தேசித்தும் ராவ் பகதூர் அண்ணாமலைச் செட்டியார் செய்த தர்மம் சிலாகிக்கத்தக்கது.

பஞ்சமர்களின் படிப்பு சிறிது சிறிதாய்ப் பரவி வருவதைப் பார்த்து எவரும் சந்தோஷப்படுவார்கள். மைசூர் சமஸ்தானத்தில் சில தேசாபிமானிகள் சேர்ந்து இவர்களின் படிப்பை முற்படுத்த முயற்சிகள் தீவிரமாய்ச் செய்கிறார்கள். ஏற்கெனவே இவர்களால் பஞ்சமப் பெண்களுக்கென்று இரண்டு ஸ்கூல்களும், பஞ்சமப் பிள்ளைகளுக்கென்று ஒரு ஸ்கூலும், இரண்டு இராப்பள்ளிக்கூடங்களும் மைசூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்கூல்களில் எழுத வாசிக்கமட்டும் சொல்லிக் கொடுக்கப்படாமல் சில தொழில்களும் சொல்லி வைக்கப்படும். தற்காலம் பிரம்பு வேலை சொல்லிவைக்கப்படுகின்றது. இவர்களின் முயற்சிக்குப் பஞ்சமர் வெகு திருப்திகரமாய் இணங்கி வருகிறார்கள். மைசூரில் செய்யப்படும் முயற்சி கைகூடும் பட்சத்தில் தேசத்தின் மற்ற இடங்களிலும் இம்மாதிரி ஸ்கூல்கள் ஸ்தாபிக்க முயற்சி செய்யப்படும். ஆயினும் இவ்வளவு விசாலமான பிரயத்தனம் ஜனங்களிடமிருந்து பணவுதவி கிடைத்தாலன்றி சாத்தியமல்ல. ஆகையால் மைசூர் தேசாபிமானிகள் ஜனங்களின் ஒத்தாசையை நாடி, ஒரு பிரார்த்தனை பிரசுரம் செய்திருக்கிறார்கள். மைசூர் மகாராணி இவர்கள் ஸ்தாபித்திருக்கும் சொஸைடிக்குப் போஷகராயிருந்து, ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுத்திருக்கிறார்.



இதேமாதிரியாய் மலையாளத்தில் பஞ்சமர்களின் படிப்புக்காக அங்குள்ள உயர்வகுப்பார் சிலர் முயற்சி செய்து வருகிறார்கள். ஏற்கெனவே சுமார் 6 ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டுப் போயின. ஏரநாட் தாலூகாவில் P. P. ராமன் நம்பூத்திரிபாட் லார்ட் ஹார்டிஞ்ஜின் பிறந்த தினக் கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாய் ஒரு பஞ்சம ஸ்கூல் ஸ்தாபித்து, அதை அந்த தாலூக் போர்ட் வசம் ஒப்புவித்து விட்டாரென்று அறிந்து சந்தோஷப்படுகிறோம். இவைகளைத் தவிர டிஸ்டிரிக்ட் போர்டுகளும் முனிசிபாலிடிகளும் அங்கங்கே இந்த ஜாதிப் பிள்ளைகளுக்காக ஸ்கூல்கள் ஸ்தாபித்து வருகிறார்கள். கவர்ன்மெண்ட் மட்டும் இவர்களின் நன்மைக்கென்று விசேஷப் பிரயத்தனம் எதுவும் செய்யாமலிருக்கிறார்கள். பஞ்சமப் பிள்ளைகள் தாழ்ந்த ஸ்திதியில் இருப்பவர்களானாலும், இந்திய ஜனங்களில் ஒரு முக்கியமான வகுப்பினர். மகமதியர் போன்ற பிற்பட்ட வகுப்பினர் முன் செல்லும்படி கவர்ன்மெண்ட் அநுதாபத்தால் விசேஷ உதவிசெய்து வரும்போது, பஞ்சமர்களுக்கும் ஏன் செய்யக்கூடாதோ அறியோம். ஹிந்துக்களில் உயர்வகுப்பாரும் இவர்களைச் சீர்ப்படுத்தக் கடமைப்பட்டவர்கள். மைசூர் சொஸைடியார் சொல்லுவதுபோல பஞ்சமர்களும் ஹிந்து சமூகத்தைச் சேர்ந்தவர்கள். ஹிந்து சமூகம் ஒருமிக்க முற்படுவது அந்த சமூகத்தின் நன்மைக்கு அவசியமானால், இப்பஞ்சமர்களை விட்டு விடுவது விவேகமல்ல.

# CHAPTER VI.

## ஸ்திரீகளும் ஜாதீய நிகழ்ச்சியும்.

கல்கத்தாவில் இந்தியன் யூனியன் சொஸைட்டி என்கிற சபை முன்பாக மிஸஸ் பி. எல். ராய் என்கிற இந்துமாது, நம்மவர்கள் தற்காலம் ஜாதீய உணர்ச்சி கொண்டு நாம் ஒன்றாய்த் திரண்டு உயர்ந்த நிலைமைக்கு வரும் நோக்கத்துடன் செய்துவரும் முயற்சிகளில், ஸ்திரீகள் எவ்வளவு தூரம் எவ்விதமான சம்பந்தத்தை வகிக்கலாமென்கிற விஷயமாய், ஒரு மகோபந்யாசம் செய்தார்.

பொதுவாகப் பேசில், "ஜாதீய நிகழ்ச்சி" என்பது என்ன? வெகு காலமாய்த் தூக்கத்தில் அமிழ்ந்து கிடக்கும் நம்மை விழிக்கச் செய்து, நம்மவர் மனதில் நம் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்கிற விருப்பத்தை உண்டுபண்ண, நம்மில் தேசாபிமானிகளும் தீரர்களும் சத்தியவான்களும் இடைவிடாது செய்துவரும் முயற்சியே ஜாதீய நிகழ்ச்சி எனப்படும். அந்நிய தேசங்களது முறைப்படி கல்விகற்று வரும் நம்மவர்கள் நம் முன்னோர்களது உன்னதமான மகிமை பெருமைகளை மறந்திருப்பதால் அவைகளைப்பற்றித் தற்காலம் சிந்திக்கச் செய்வதும் இந்த நிகழ்ச்சியாம். அது ஹிந்துக்களாகிய நமக்கு இயற்கையாயுள்ள மனவலியையும் சரீர வலியையும் விரியச் செய்து, நமது பெருங் குணங்களை விசாலித்



துப் பெருக்குவதாகும். பூர்வம் நம்முன்னோர்கள் எந்தத் தொழில்களிலும், கலைகளிலும், சாஸ்திரங்களிலும் நிகரற்றவர்களென்று கீர்த்திபெற்றிருந்தார்களோ அந்தத் தொழில்களையும், கலைகளையும், சாஸ்திரங்களையும்பற்றி விருப்பம் உண்டாகும்படி செய்து, நமது சமூக அமைப்பைக் காலோசிதமாக மாற்றிப் புதுமாதிரிகளுக்கு இசையச் செய்து, உலகத்தில் பெயர் பெற்ற ஜனசமூகங்கள் மத்தியில் நம் சமூகம் ஒன்றாக விளங்குமாறு உதவி செய்வதாகும். இந்த ஜாதீய நிகழ்ச்சியில் ஸ்திரீகளாகிய நாம் ஒருபங்காக வகிக்க நமக்கு என்ன பாத்தியம்? உலகத்தில் எல்லா ஜன சமூகங்களும், ஸ்திரீ புருஷர்களாகிய இரண்டு பாகங்களால் அமைந்தவை. ஒரு பாகத்தை நீக்கிவிட்டால் மற்றது நசித்துப்போம். இவ்வாறு இந்த இரண்டு பாகங்களும் பிரிவற்று, ஒன்றுபோல ஒத்துழைத்து, ஒரே நோக்கங்களும் ஆசைகளும் கொண்டப்பெற்றாலன்றி, இந்த ஜாதீய முயற்சி எங்ஙனம் நிறைவேறும்? முன்னேற்றத்துக்கு சிந்தையிலும் கருமத்திலும் ஒரே மாதிரியான விருப்பம் உள்ளேறி இருத்தல் அவசியமன்றோ? நமது ஜன்ம பூமியின் பொருட்டு உழைப்பது புருஷரது கடமையாவது போல் ஸ்திரீகளது கடமையுமன்றோ? ஆகையால் தேசத்து விவகாரங்களில் கலந்து பங்கு வகிக்க நமது ஸ்திரீகள் போதுமான கல்வி கற்றவர்கள் அல்லவென்று சிலர் சொல்லக் கூடும். அப்படியிருக்குமாயின், அந்த நிலைமையை அகற்றுவது நாமெல்லோரும் செலுத்தவேண்டிய கடமையாகும்.

கல்வி யில்லாததினாலேயே தேச விவகாரங்களை ஸ்திரீகள் அறிய மாட்டார்களென்பது உண்மையல்ல.

சில சமயங்களில் எழுதப்படிக்கத் தெரியாத ஸ்திரீகள் கூடப் பொது விவகாரங்களைப்பற்றிப் புத்தியோடு பேசுவதை நான் பார்த்திருக்கிறேன். உயர்ந்த கல்வி கற்று நலம் பெற்ற புருஷர்களும் ஸ்திரீகளும், ஸ்திரீகளுக்குக்கல்வி புகட்டுவதைக் கடமையாகவேற்று, ஸ்திரீகள் தேச சமூகத்தில் ஒரு பாலாரானதால் தேசத்தின் அபிவிருத்திக்கு புருஷர்களைப் போல பொறுப்புக்கொண்டவர்களென்றும், அவர்களுடைய பளுவை அவர்கள் தைரியமாய்ச் சுமக்கவேண்டுமென்றும், உணரும்படி செய்யவேண்டும். ஸ்திரீகளாகிய நாம் நம்மில் பதிந்து கிடக்கும் சக்திகளைக் கிளப்பி, நம் தேசத்துக்கு அவைகளை அர்ப்பணம் செய்துவரவேண்டும். நம்மால் ஏதேனும் நன்மை செய்யப்படவேண்டுமானால், நாம் புருஷர்களைப் பின் பற்றிச் செல்வது போல, நம்மை அவர்கள் பின்பற்றி வரும்படி நடத்தவும் வேண்டும். நாம் மேற்பூணவேண்டிய வேலையானது ராஜீயம் மாத்திரமல்ல, நம் ஒழுக்கத்தையும் பற்றினது; சொந்த க்ஷேமத்தைக் காரணமாகக் கொண்டதல்ல; நியாய விதிகளையும் கடமையையும் காரணமாகக் கொண்டது.

சிறுவர்களுடைய மனதைப் பயிற்றுவது பெரும்பான்மையும் ஸ்திரீகளின் தொழிலாக விடப்பட்டிருக்கிறது. நமது பிள்ளைகளும் பெண்களும் இளம்பருவத்திலேயே தேச நன்மையில் அக்கறை பாராட்டி ஒரு பெரும் ஜனசமூகத்தின் அவயவிகளுக்கு உரியவாறு ஜீவிக்கும்படி அவர்களுக்குப் போதிக்க வேண்டும். நம் ஜனங்களது முற்கால சரித்திரத்திலும் சாம்பிரதாயங்களிலும் பெருமை பாராட்டவும், நம்முன்னோர்



களது மேலான லக்ஷியங்களினின்றும் இப்போது நாம் எவ்வளவு தூரம் நழுவி விட்டோமென்பதை அறியவும், ஆதிகாலத்து உன்னத நிலைமைக்கு மறுபடியும் நமது ஜனங்கள் உயருமாறு எவ்விதம் ஜீவிக்கவேண்டுமோ அவ்விதம் ஜீவித்தல் அவர்களைப் பொறுத்த பாரம் என்பதை அறியும்படியும் வீட்டில் அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். ஐரோப்பியப் படிப்பை நான் இகழ்வதாக ஒரு நிமிஷமேனும் நீங்கள் நினைக்கவேண்டாம். ஆனால் நமது சரித்திரத்தையும், நூல்களையும், மதகிரந்தங்களையும் அந்நிய பாஷையில் கற்று போதித்து, நமது ஜன்மபூமியைப் பற்றித் தப்பான எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கொள்ளாதிருக்கும்படி ஐரோப்பியப் படிப்போடுகூட நம்மால் கற்பிக்கப்படும் நேரான படிப்பும் அவசியம். ஆகையால் நம் சிறுவர்களுடைய வாழ்க்கையை நல்வழியில் திருப்புகிறோமென்று நாம் கவலை கொள்ளக்கடவோம். நாம் புத்திசாலிகளாயும், நியாயத்துக்குக் கட்டுப்பட்டவர்களாயுமிருந்து, நம் பிள்ளைகள் நம் ஜனத்தாருக்குப் பெருமையாகவும் நமது ராஜீய ஆசா மகக் கருத்துகளை உண்மையாக விளக்குவோராயும் இருக்கும்படி, அவர்களை நடத்தக்கடவோம்.

சில ஸ்திரீகள் வேலை செய்யவேண்டியது வீட்டுக்குள் என்றும், அதைத் தாண்டிப் பகிரங்கமாக ஏதேனும் செய்ய முயன்றால் தாய்க்கும் பத்தினிக்கும் உரிய கடமைகளை அசட்டை செய்தவர்களாவார்களென்றும், பழைய தர்க்கத்தைச் சிலர் உதகரிப்பார்கள்; வீடு என்பது என்ன? நீங்கள் பிறந்து, வாழ்ந்து, பொதுவாய் வசிக்குமிடம்; அது நீங்கள் அமைதியையும், சுகத்தை

யும் எதிர்பார்க்கும் புனிதஸ்தலம். அப்படி இருக்கும் அதைத்தான் நீங்கள் அதிகமாய் அசட்டை செய்கிறீர்கள். மற்ற எவ்விதமான புனித ஸ்தலத்திலும் மாறுதலும் விரிவும் தோன்றிவர, அந்நியர் கோவில்களும் நமது தேவாலயங்களும் மற்ற இம்மாதிரியான ஸ்தாபனங்களும் புது அமைப்புப் பெற்று மாறிவர, அவைகள் சம்பந்தமான பூஜானுஷ்டானங்கள் திருத்தப்பட்டுவர, ஸ்திரீகள் பூஜை நிவேதனங்கள் செய்துவரும் ஆலயமாகிய நமது கிருகம் மட்டும் எப்போதும் போலவே தொடப்படாமலிருந்து வருகிறது. கிருகத்தில் ஸ்திரீகள் பெருக்கி மெழுகிச் சமைத்துக் குற்றேவல் செய்வதுதான் சரியென்றும், அந்த நிலைமையை மாற்றுதல் தகாதென்றும், புருஷன் எவ்விதத் திருத்தத்தையும் வெறுக்கிறான். இந்த ஏற்பாடு பழைய காலத்திற்கு ஒத்திருந்தது, அப்போது ஒவ்வொரு குடும்பமும் அதுவே ஒரு சமூகமாய் இருந்ததுமன்றி, அதைவிட உயர்ந்த சமூகத்தின் சம்பந்தமில்லாமலும், "எனது தேசம்" "எனது ஜாதி" என்கிற பாவமே இல்லாமலும், இருந்தது. இப்போது சமூகத்தில் பரஸ்பர கடமைகள் விரிந்து, புருஷரும் ஸ்திரீகளும் ஒருவருடன் ஒருவர் தடையின்றிப் பழகவும் துணை நிற்கவும் அதிகமான அவசியம் நேரிட்டிருப்பதால், ஸ்திரீக்கு அவர் புருஷன் அன்பாய் இருக்கிறார் என்பது மட்டும் போதாது; புருஷனுக்கும் அவர் ஸ்திரீ பொறுமையாயிருப்பது மட்டும் போதாது; அவர்கள் விவாகம் செய்யும்போது ஒரு குடும்பத்தை ஸ்தாபித்து அதில் ஒருவர்க்கொருவர் தோழன் தோழியாக ஜீவிக்கலாமென்று எதிர் பார்க்கின்றனர்; அங்கே



அவர்கள் ஒன்றாய் வேலை செய்தும், ஒன்றாய் வாசித்தும், ஒவ்வொன்றையும் சேர்ந்து செய்யவும் எதிர்பார்க்கின்றனர்; ஆனால், பொதுவாய் அநுபோகத்தில் இப்படி நேரிடுகிறதில்லை. இதை நோக்கித்தான், நமது சாஸ்திரத்தில் பார்வதி பிராட்டி சிவமூர்த்தியின் பாதி பாகத்தினளாகச் சொல்லப்படுகிறது. பெரும்பான்மையும் ஸ்திரீ புருஷர் வெவ்வேறு அந்தஸ்தில் அமைகிறார்கள். புருஷனது உரிமைகளும் வேலைகளும் வேறு; ஸ்திரீயின் உரிமைகளும் வேலைகளும் வேறு. அவனது ஆட்டங்களுக்கும் பொழுதுபோக்குகளுக்கும் அவனுடைய கிளப்புக்கும் அவனுடைய விவாத ஸபைகளுக்கும் அவன் செல்ல, ஸ்திரீயானவள் வீட்டிலேயே அடைபட்டு சமையல் செய்து மற்ற வேலைகளும் செய்து நாளைப் போக்குகிறாள். இந்த நிலைமையில் ஒரு கிருகம் எப்படி விருத்தியடையும்? புருஷன் தன் ஸ்திரீயைத் தனக்கு உண்மையான துணையாக்கிக் கொள்ளட்டும். தான் செய்யும் வேலையிலும் தன்னுடைய சந்தோஷம் விளையாட்டு முதலியவைகளிலும் அவளைச் சகாவாகக்கொண்டு அநுபவிக்கட்டும். அப்போது ஒரு மேன்மையான நாகரிகம் உண்டாகும். ஸ்திரீயினுடைய அந்தஸ்து பராதீனமாயிருப்பது போய் ஸ்வாதீனமாகும்போது, இந்திய ஜாதியின் குடும்பவாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் புது மாதிரியாய் அமைக்கப்படும். ஸ்திரீகள் அடிமைகளாகவும் புருஷர் எஜமானர்களாகவும் இருக்கிறவரையில் எந்த ஜாதியும் முன்னுக்கு வராது. தாயானவள் சுவாதீனம் பெற்று இருந்தால் உலகத்துச் சமூக வாழ்க்கையும் ராஜீயவாழ்க்கையும் சீர்ப்படும். அப்போது நாம் முன்

போல இன்னொரு முறை ஒரு ஜாதியாவோம். ஜாதி என்ற பெயரும் நமக்குப் பொருந்தும்; நாலு திக்குகளிலும் உள்ள உலகத்தார் நம்மை மதித்து உபசரிப்பார்கள்.

## ஹிந்துப் பெண்களின் கல்வி.

நமது தேசத்தில் ஆண்பிள்ளைகளின் கல்வி விசாலித்து உயர்ந்து வருகிறதே யன்றி பெண்பிள்ளைகளின் கல்வி மெதுவாய்ப்பரவித் தாழ்ந்த நிலைமையிலேயே இருந்து வருகிறது. இப்படியிருப்பதைப் பற்றி அநேகம் புத்திமான்கள் துக்கப்பட்டபோதிலும், பெரும் பான்மையான ஜனங்கள் கவலைப்படாதவர்களா யிருக்கிறார்கள். கல்வியானது பொருள் சம்பாத்தியத்திற்கு ஒரு வழியென்கிற எண்ணமிருப்பதால், ஆண்பிள்ளைகளின் கல்வி விருத்தியாகி வருகின்றது. பெண்பிள்ளைகள் கல்வியைக் கொண்டு சம்பாதிக்க வேண்டுமென்பது ஹிந்துக்களின் எண்ணமாவது வழக்கமாவது அல்லவாகையால், அந்தக்கல்வி தீவிரமாய் விருத்தியாகி வரவில்லை. ஆயினும், மேல் வகுப்பாருள்ளும் பெண்பிள்ளைகளின் கல்வி கவனிக்கப்பட்டு வருவதில், அந்தக்கல்வி இந்த விதமானதாயிருக்க வேண்டுமென்பதைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் இருந்து வருகின்றன. சிலர் நமது பெண்கள் பிள்ளைகளைப் போலவே ஆங்கிலங்கற்று யூனிவர்சிடி பரீட்சைகள் தேற வேண்டுமென்று நினைக்கிறார்கள். சிலர் ஆங்கிலங்கற்பது அநாவசியம், தமிழும் சம்ஸ்கிருதமும் தெரிந்தால் போதுமென்கிறார்கள். வேறு சிலர், பெண்களுக்கு எழுத வாசிக்கத் தெரிந்து வீட்டு வேலைகள் செய்யப் போதுமான பழக்கம் கிடைக்கு



மானால் போதுமென்கிறார்கள். இவைதான் அபிப்பிராய பேதங்கள் போலத் தோற்றினாலும் உண்மையில் பேதங்களல்ல. பிள்ளைகளுக்கு எப்படி நானாவிதமான படிப்புகளும் ஏற்றத் தாழ்வுள்ள படிப்புகளும் அவரவர்களுடைய அந்தஸ்துக்கும் விருப்பத்துக்கும் சௌகரியத்துக்கும் தக்கபடி அமைதல் பொருந்துமோ, அப்படியே பெண்களுக்கும் பொருந்தும். சில பெண்கள் ஆங்கிலத்தை ஆழக்கற்று உயர்ந்த நூல்களையும் சாஸ்திரங்களையும் படித்துப் பரீக்ஷைகள் தேறிப் பிராபல்லியம் பெறக்கூடும். வேறு சிலர், தங்கள் சுயபாஷையிலும் நமது முன்னோர்க ளியற்றின நூல்களின் பாஷையாகிய ஸம்ஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றும் தாம் அறிந்தவைகளைப் பிறர்க்குப் போதித்தும் நன்மை செய்யக்கூடும். வேறு சிலரோ, இவ்விரண்டு விதமான பயிற்சிக்கும் சௌகரியமின்றித் தாழ்ந்த படிப்பையும் பெண்களுக்குரிய வீட்டு வேலைகளையும் கற்று அடக்கத்துடன் ஜீவிக்கக்கூடும். இவைகளெல்லாம் முற்றிலும் பொருந்தினவையே யன்றி ஒன்றிற்கொன்று இளப்பமெனக் கருதக் கூடியனவல்ல. இம்மூன்றையுந் தாண்டி இன்னொரு விதமான பயிற்சியுண்டு. அதை நம்மவர்கள் தற்காலத்தில் கவனிப்பதாகத் தெரியவில்லை. நம்பிள்ளைகள் படிப்பில் எப்படி முன்னோரது மாதிரியை மறந்து, தற்கால மேல்நாட்டு மாதிரியையே பின்பற்ற, அதனால் விளையும் செல்வப் பயனிலும் மனப்பயிற்சியிலும் திருப்தியடைந் திருக்கிறோமோ, அப்படியே பெண் பிள்ளைகளின் கல்வியிலும் மேல் நாட்டாரது மாதிரிகளையும் அபிப்பிராயங்களையும் மதித்து நம்முன்னோரது மாதிரியை மறந்திருக்கிறோம்

இப்படி மறந்திருப்பது நம் தேசத்தாப் பிற்காலப்பெருமைக் குற்றதல்லவென்று நமக்கு நாமே எடுத்துக்காட்டாவிடினும், நம் க்ஷேமத்திற் கவலைவைத்த சில அன்னியர் காட்டுகிறார்கள். இப்படிக் காட்டும் அன்னியர் ஸ்திரீகளாயிருப்பதும் ஓர் ஆச்சரியம். மிஸெஸ் அன்னிபெஸன்டும், சகோதரி நிவேதிதாவும், நம்தேசம் ஆதியிலிருந்த உன்னத நிலைமையை விட்டு நழுவிக் கேவலநிலைமைக்கு வந்து விட்டதைப்பற்றி வருந்தி, மறுபடியும் பழைய உன்னத நிலைமைக்கு நம்தேசம் வரவேண்டுமென்ற பெரும் விருப்பத்தால் பல வழிகளில் உழைத்து வருகிறார்கள். இந்தப் பெண்கல்வி விஷயமாய் சகோதரி நிவேதிதா சொல்வதை சில வார்த்தைகளால் இங்கே குறிப்பிட விரும்புகிறோம் அதாவது.—

"எத்தேசமானாலும் அதன் பிற்கால அபிவிருத்தியானது பூர்வீக மாதிரிகளைப் பின்பற்றிப் பூர்வீகச் சரித்திரத்தைத் தொட்டு நின்றால் மட்டும் சாத்தியமேயன்றிச் சம்பந்தமில்லாத தூரதேசங்களுடைய மாதிரிகளையும் சரித்திரங்களையும் நம் தேசத்தில் புகுவித்து அவைகளால் பூர்வீக சம்பந்தத்தை யறுத்துவிடுவது உண்மையான அபிவிருத்திக்கு விரோதமே யாகும்." என்று இவர் அபிப்பிராயப்படுகிறார். நமது பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் விஷயத்திலும் அன்னிய மாதிரிகளையும் சரித்திரத்தையும் பார்த்துச் செய்தல் சிலாக்கியமாகாதென்கிறார். ஹிந்துக்களாகிய நமது முற்காலச் சரித்திரத்தில் வாழ்க்கையின் எந்தக் கூறிலும், தங்கள் உத்தமகுணங்களாலும் பெருங் கருமங்களாலும் கீர்த்திபெற்று, உலகந்தாருப்ப மலை விளக்குகள் போல்



தங்கள் பெயரை நாட்டின உத்தமஸ்திரீகள் இல்லாமற் போகவில்லை. உதாரணமாக, ராஜபுத்திர நகரமாகிய சித்தூரில் பத்மினி யென்கிற பேர்பெற்ற ராஜஸ்திரீ சத்துருக்களால் சங்கடங்கள் நேரிட்ட காலத்தில் எத்தனையோ ஆச்சரியமான பெருங்காரியங்கள் செய்திருக்கிறார். சாந்த் பீபீயையும் மான்சி ராணியையும் வேறு உதாரணங்களாகச் சொல்லலாம். தெய்வ பக்தி, தவம், சீலம் முதலியவைகளில் பேர்பெற்ற ஸ்திரீ மீராபாய். தேச ஆட்சி நிர்வாகத்தில் பேர்பெற்றவர்களான ராணி பவானி, அகல்யாபாய், (கிப்பாரா தேசத்து) சாந்தா பாய், ஆகியவர்கள். சாவித்திரி, சீதா ஆகிய புண்ணிய நாமங்கள் ஸ்திரீகளின் கற்பு முதலிய ஒழுக்குகளுக்கு அழிவில்லாத சான்றாகும். கன்னிகைப் பெருமைக்கும் பதிவிரதா தர்மத்துக்கும் உமா, காந்தாரி, இப்பெயர்களைவிடச் சிறந்த பெயர்கள் உள்ளனவா? இவ்வாறு சகோதரி நிவேதிதா சொல்லி, இந்த ஆரிய வர்த்தமானது பூர்வ காலத்துப் பெருமையையும் பெயரையும் திரும்பப் பெறவேண்டுமானால், ஹிந்து ஸ்திரீகள் மேலே சொன்ன உத்தம ஸ்திரீகளைப்போல் பயிற்சி பெறவேண்டுமென்று சொல்லுகிறார். உண்மையிலோ தற்காலத்துக் கல்விமான்களின் விருப்பமானது தங்கள் பெண் குழந்தைகள் மேல்நாட்டு ஸ்திரீகளைப்போல விளங்கவேண்டுமென்று இருக்கிறதே யன்றி மேற்குறித்த ஸ்திரீகள் சரித்திரத்தை அறியவேண்டுமென்றுகூட வெளிப்படுவதில்லை.

### ஹிந்து ஸ்திரீகளுக்குள் கவின சக்தி.

கூர்ச்சர நாட்டைச் சேர்ந்த ப்ரோச் என்ற இடத்தில் ஸ்திரீகள் சேர்ந்து ஒரு பொருட்காட்சி நடத்தின

போது, லேடி மூர் மெகன்ஸி தற்காலம் இந்திய ஸ்திரீகளுக்குள் தோன்றிவரும் நவீன சக்தியைக் குறிப்பிட்டுச் சில வார்த்தைகள் சொன்னார். எப்படி இப்போது புருஷருக்குள் புதுலட்சியங்களும் புதுவிருப்பங்களும் தோன்றி, அவைகளை நிறைவேற்றுவதில் ஒரு நவீன சக்தியுண்டாயிருக்கின்றதோ, அப்படி ஸ்திரீகளுக்குள்ளும் உண்டாயிருக்கின்றது. உலக முழுதுமே இந்தச்சக்தி பெண்பாலார்க்குள் காணப்பட்டு வருகிறது. பிரிட்டிஷ் தேசத்தில் சில ஸ்திரீகள் தங்கள் ஜாதியாருக்குப் பார்லிமெண்டு நியமனங்களில் * வோட்டுக் கொடுக்கச் சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்று போராடுகிறதைப் பத்திரிகைகளை வாசிக்கும் ஹிந்து ஸ்திரீகள் அறிவார்கள். இப்படிப் போராடுவது வோட்டுக் கொடுக்கும் சுதந்திரத்தை விரும்பி மட்டும் செய்யப்படுவதல்ல. ஸ்திரீ ஜாதியாகிய மானிட வகுப்பாருக்கு இதுவரையில் மறுக்கப்பட்டிருக்கும் சுதந்திரங்கள் இனிக் கிடைக்க வேண்டுமென்று விரும்பியே, இந்தப் போராட்டம் செய்யப்பட்டு வருகின்றது. ஸ்திரீகளுக்குப் பொருள் வன்மையும் மனவன்மையுமன்றிப் பாரமார்த்திக வன்மையும் உண்டாக வேண்டும். பொருளிட்டலே பிரதானமாகக் கருதும் இக்காலத்துச் சுபாவம் மாறி, ஸ்திரீகள் தங்கள் ஒழுக்கத்திலும் சிந்தையிலும் பாப புண்ணிய பகுத்தறிவை மேற்கொண்டு, நல்லொழுக்கமும் ஜீவகாருண்யமும் பாரமார்த்திக புத்தியும் பெறுவது அவசியம். இப்படிப் பெறவேண்டுமென்று விரும்பியே உலகத்தில் எப்பாகத்திலும் ஸ்திரீகள் நவீன

* வோட்டு—Vote—பொறுக்குச்சீட்டு.



சக்தி காட்டிவருகிறார்கள். இந்திய ஸ்திரீகளும் இதே மாதிரி நவீனசக்தி காட்டிவருவது இந்திய ஜனங்களின் பிற்கால கதியைக் குறிக்கின்றது. மானிடவர்க்கம் காலவளவில் முதிர்ச்சி பெறுவதற்கு இந்த நவீன சக்திகொண்ட ஸ்திரீகள் தங்கள் பங்குக்குற்ற உதவியைச் செய்து மானிடப் பிறப்பு நிறைவேறும்படி செய்வார்கள்.

இப்படி லேடி மூர் மெகன்ஸி (Mackenzie) பேசினார். இவர் பம்பாய்க் கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் இரண்டாவது மெம்பரின் மனைவி. இவர் இவ்வாறு பேசியது தமிழ் ஸ்திரீகள் சிலருக்கு அதிசயமாய்த் தோன்றக் கூடுமாயினும், வட இந்தியாவில் அநேக இடங்களில் ஹிந்து ஸ்திரீகள் படிப்பும் தெய்வபக்தியும் இயற்கையான சாமர்த்தியமும் பெற்றுப் பெரும் விஷயங்களில் சிந்தை செலுத்தக் கூடியவர்களாயிருப்பதை அறிந்த இந்த ஆங்கிலேய ஸ்திரீ இவ்வாறு பேசுவது அதிசயமல்ல. சமீபத்தில் லாகூர் பட்டணத்தில் ஹிந்து ஸ்திரீகள் கூடித் தேசக்காரியங்களைப்பற்றி விவகரித்தார்கள். குடும்பத்திலும் குடும்பத்தைத் தாண்டியும் ஸ்திரீகள் புருஷர்கள் மீது செலுத்தக்கூடிய செல்வாக்கை உபயோகித்துச் செய்யக்கூடிய நன்மை எவ்வளவோ உண்டு. வீட்டுக்குள் சிறுவரைப் பயிற்றுவிப்பதும் வீட்டுக்கு வெளியில் புருஷர் செய்யும் காரியங்களைச் சீர்ப்படுத்துவதும் ஸ்திரீகளுடைய சக்தி. இந்த இரண்டு வழிகளாலும் ஸ்திரீகள் செய்யக் கூடிய பெருங்காரியங்கள் பலவுண்டு. லாகூர் கூட்டத்திற் பேசின மிஸ்டர் சௌதரி, ஸ்திரீயை அபலையென்பது தப்பென்றும், அவள்தான் சக்தி

என்றும், சொன்னார். நமது சாஸ்திரங்களின் உட்கருத்தின்படி புருஷனுக்கும் ஸ்திரீக்கும் சமமான சக்தி அமைக்கப்பட்டிருக்கின்றது.

## ஸ்திரீகளும் தேச விருத்தியும்.

தேசத்தின் க்ஷேமத்தையும் விருத்தியையும் நாடி உழைக்கும் பல வழிகளிலும் ஸ்திரீகள் எவ்வளவு தூரம் ஆடவர்களுக்கு உதவியாக விருக்கலாமென்ற கேள்விகள் இப்போது பிறந்திருப்பது, பிரிடிஷ் கல்விக்கும் பிரிடிஷ் நாகரீகத்துக்கும் ஒரு திருஷ்டாந்தமாகுமென நாம் திருப்தியடைகிறோம். தேசவிருத்தி யென்பது எவ்வளவோ அர்த்த புஷ்டியான பதம். ஒரு காலத்தில் இந்திய தேசம் உன்னத நிலைமையிலிருந்த தென்பதும், தற்போது பல அம்சங்களில் க்ஷீணித்துக்கொண்டிருக்கின்றதென்பதும், பழைய படியும் உன்னத ஸ்திதியை யடைய எல்லாரும் முயற்சி செய்யவேண்டுமென்பதும், ஜனங்களுடைய புத்திபலம் சமூகபலம் இவைகளைப் பெருக்கிச் சாஸ்திர ஞானம் தொழில், வியாபாரம், ஆசாரம் முதலிய மார்க்கங்களில் முன்னேறி, உண்மை, அபிமானம், பொது உணர்ச்சியாகிய குணங்களைத் துணையாகக் கொண்டு சந்தர்ப்பங்களுக்குத் தக்க இணக்கமும் காலத்துக்குத் தக்க கோலமும் விருத்தி முகமும் காட்டிப் பாடுபட வேண்டுமென்பதும், மற்றத் தேசங்களைப் பார்த்து அவைகளிலுள்ள நன்மையான மாதிரிகளைப் பின்பற்றி நாமே நம்மைத் தைரியமாய்ச் சீர்திருத்திக் காலக்கிரமத்தில் நம்மை மூடக்கியிருக்கும் அநாகரிக பழக்க வழக்கங்களை உதறி யெறிந்து வெளிப்பட வேண்டுமென்பதும், இன்



னும் பலவும், தேசவிருத்தி யென்ற பதத்தில் அடங்கியிருக்கும் பொருள்களாகும். ஆகையால் பொதுஜன க்ஷேமத்தை யதிகப்படுத்துமாறு உழைக்கப் பல வழிகளிருக்கின்றன. இந்த வழிகளில் எந்த வழியை ஸ்திரீகள் பின்பற்றலாமென்பதும், ஒவ்வொரு வழியிலும் எவ்வளவு தூரம் செல்லலாமென்பதும், இவ்விதம் செல்ல ஸ்திரீகள் அடைந்திருக்கும் தகுதியும் செல்வாக்கு மெத்தன்மைத்தானவை யென்பதும் விசேஷமாய்க் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்.

நம் நாட்டு ஸ்திரீகளில் அநேகமாய் எல்லாருக்கும் தகுதியான கல்வியில்லையென்பது மறுக்க முடியாத விஷயம். மிஸஸ் ராய் இவ்விஷயத்தை யெடுத்துக்காட்டி ஒத்துக்கொள்கிறார். தற்போது அங்குமிங்கும் சில பெண்கள் உண்மையிலேயே நன்கு கற்றவர்களாயிருக்கிறார்களென்றாலும், பொதுப்படை நோக்கும்போது பெண்கல்வி மிகவும் குறைந்த நிலைமையிலேயே யிருக்கின்றது. உயர்தரக்கல்வி பெறக்கூடிய தக்க வயதுடைய பெண்கள் படிப்பை அலக்ஷியஞ் செய்கின்றார்கள். இதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம். ஆடவர்கள் தங்கள் பெண்களைப் படிக்க விட விரும்புவதில்லை யென்பது ஒரு காரணமாகலாம். ஆடவர்கள் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் சில பெண்கள் படிக்க விரும்புவதில்லை யென்பதும் ஒரு காரணமாகலாம். அல்லது படிப்புச் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயினிகள் தக்க அளவு போதுமான முயற்சி செய்வதில்லை யென்பதும் ஒரு காரணமாகலாம். எது காரணமானாலும் பெரும்பான்மையான ஸ்திரீகள் இருள் மூடி

ஆடவர்களுடைய அவாக்களிலும் நோக்கங்களிலும் கலந்து உழைக்கச் சக்தியும் ஊக்கமு மில்லாதிருக்கின்றார்களென்று ஏற்படுகிறது. ஏறக்குறையப் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுமிகள் எத்தனையோ பேர் பள்ளிக்கூடங்களில் வாசிக்கிறார்களென்பதும், இவர்களுடைய தொகையும் இவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளின் தொகையும் முன்னைவிட இப்போது அதிகமென்பதும், உண்மை தான். ஆனால் இச்சிறுமிகள் கற்கும் பாடப் புஸ்தகங்களின் அறிவினாலேயே தேச விருத்தியைத் தேடவேண்டும் என்ற அவா உண்டாகுமெனக் கருத இடமில்லை. தக்க வயதில் வீட்டில் வைத்துக் கற்கும் கல்வியும், கேட்கும் அறிவும், பழகியுணரும் அநுபவமுமே அவர்கள் மனதில் பெரும் நோக்கங்களைத் தூண்டவேண்டும். இந்த வீட்டுக் கல்வி இன்னும் வெகுதூரம் பரவுவது மிகவும் அவசியம். சென்னைப்பட்டணத்தில் சென்ற 1906-ம் வருஷத்தில் 56 ஸ்திரீகள் வீட்டுக் கல்வி பெற, அதற்கடுத்த வருஷம் 40 ஸ்திரீகளும் அதற்கடுத்த வருஷம் 30 ஸ்திரீகளுமே கற்க விரும்பினார்கள். விஷயங்கள் இவ்விதமிருந்தால் பெண்களுடைய உதவி ஆடவர்களுக்குக் கிடைப்பதும், பெண்கள் தேச விருத்திக்காக உழைப்பதும் சமீபத்தில் நேரிடக்கூடிய சம்பவங்களாகத் தோன்றவில்லை.

சிறு பெண்களைப் பெற்றோர்கள் அடக்கிப் பிரா வெளிக் கல்வி கொடுக்கக்கூடிய வயது வந்த பெண்களை யடக்கியாள்வது சாத்தியப்படாது. அவர்களே விருப்பமும் ஊக்கமும் காட்டுதலில்லாமல் உயர்தரக் கல்வியும், நாகரீக உணர்ச்சியும், தேச விருத்தியைத் தேடு



வதில் உண்மையான பற்றும், அவர்களுக்கு உண்டாவது அருமை. ஊசி நுழைந்தால் நூல் செல்லும். பெண்களே கல்வியில் விருப்பம் காட்டாதிருந்தால் அடிபிடி கட்டாயத்தின் பேரில் மூளையிலேற்றப்படும் அறிவு அறிவாக மாட்டாது. உபாத்தியார்களுக்குக் குறைவில்லாதிருந்தும், கொடுக்கப்பட்ட உபகாரச் சம்பளங்களுக்குக் குறைவில்லாதிருந்தும், எடுத்துக்கொள்ள வேண்டிய சிரமத்துக்கும் முயற்சிக்கும் குறைவில்லாதிருந்தும் சென்னைப்பட்டணத்தில் 1906-ம் வருஷம் படித்த 56 ஸ்திரீகள் 1908-ம் வருஷம் 30 ஸ்திரீகளாகக் குறைந்தார்கள். புருஷர்கள் பி.ஏ., பி. எல். தேறி கூத்தாடிக் கூத்தாடிப் பஜனை பண்ணப்போனால் வீட்டில் பெண் கல்வி எப்படி அபிவிருத்தியாகும், பெண் கல்வியைப் பற்றிப் பிரசங்கம் செய்யும் சிலர் இந்த அம்சத்தைச் சில சமயங்களில் மறந்து போகிறார்கள். வெளியில் தொழில் செய்துவிட்டு வீடு சேர்ந்த புருஷர்கள் வீட்டில் ஸ்திரீகளைக் கூட்டிச் சிறிது நேரம் கல்வி கற்பிக்க வழக்கம் செய்தாலன்றி வீட்டுக் கல்வி விருத்தியாகும் வழி தோன்றவில்லை. மிஸ் ஏ. டெனென்ட் என்ற அமெரிக்க ஸ்திரீயும் இதையே சொல்லுகிறார். "புருஷர்களாகிய நீங்கள் ஸ்திரீகளுக்குச் சொன்னால் ஸ்திரீகள் உங்கள் வார்த்தையை மீறுவார்களா" என்று எத்தனையோ தரம் உபதேசித்திருக்கிறார். கால நாகரீகத்தில் சொற்பத் தகுதியும் சொற்ப அந்தஸ்துமுடைய ஆடவர்கள் கூடத் தங்கள் ஸ்திரீகளின் கல்வியை வெறுப்பது கிடையாது. தேசத்தின் பற்பல பாகங்களில் ஸ்திரீகளின் கல்விக்காக எத்தனையோ சங்கங்களும், சபைகளும், ஆச்சிரமங்களும்

அமைக்கப்பட்டு ஆடவர்கள் முயற்சி செய்தே வருகிறார்கள். திருஷ்டாந்தமாகப் பம்பாயில் "சேவா-சதன்" சங்கம் வேலை செய்து வருகிறது. இதில் 100 ஸ்திரீகள் சேர்ந்திருப்பதாகவும், வைத்தியம், சுகாதாரம் முதலிய கல்விகள் கற்பிக்கப்படுவதாகவும், சில ஸ்திரீகள் உபாத்திமார்களாகச் சென்று மற்ற ஸ்திரீகளுக்கு நற்போதனை செய்வதாகவும் தெரிகிறது. இந்தச் சங்கம் செய்யும் வேலை மிகவும் அருமையும் பிரயோசனமுமானது; இதைப்போல் இன்னும் பல சங்கங்கள் ஏற்பட்டு, கல்வியறிவு பரவி, ஸ்திரீகள் தங்கள் தங்கள் கடமைகளை யுணர்ந்து, தங்களால் செய்யப்படக்கூடிய வேலையின் உன்னதத்தை யறிந்து, தாங்களே உற்சாகங் கொள்ளவேண்டும். இதற்கு ஆடவர்கள் தங்களால் கூடிய உதவி யெல்லாம் செய்வார்கள்; அப்படிச் செய்தே வருகிறார்கள். தேச விருத்தியை உணர்தற்குக் கல்வி ஒருவேளை அவசியமில்லா திருக்கலாம், ஆனால் தேச விருத்திக்காக உழைப்பதற்குக் கல்வி அவசியம் வேண்டும். மிஸஸ் ராய் இந்த வித்தியாஸத்தை யெடுத்துக் காட்டினார். இவரைப்போல் பல பிரசங்கிகள் வெளியேறினும் "சேவா-சதன்" போன்ற சபைகள் தேச முழுவதிலும் பரவினும், ஸ்திரீகளைக் கல்வியில் ஊக்கங் கொள்ளச் செய்வது சாத்தியமாகலாம். சிறுமிகள் பெறும் பாடசாலைக் கல்வி பிற்கால வீட்டுக் கல்விக்கு ஒரு ஆரம்பமாகவும் அஸ்திவாரமாகவுமிருக்குமென்பதையும் ஒப்புக்கொள்கிறோம். இருந்தாலும் உயர்தரக் கல்வியாகிய வீட்டுக் கல்விக்குமே பெண்கள் விருப்பங் காட்டவேண்டும். அதற்கு ஆடவர்களும் உதவியாகவும் அனுசரணையாகவு மிருத்தல் வேண்டும்.



58743

மிஸ் ஏ. டெனென்ட் சொல்கிறபடி செய்தால் ஒவ்வொரு வீடும் ஒரு "சேவசாதன்" போலாகிவிடும். இதற்காக யாரும் எல்லா முயற்சியும் செய்யவேண்டும். அப்படியானால் தேசவிருத்தியில் ஆடவரும் ஸ்திரீகளும் கலந்துழைப்பது பயனும் பிரயோசனமும் கொடுப்பதாகும். தோன்றியிருக்கும் குறிகளை நோக்கும்போது இப்பேர்ப்பட்ட நல்ல காலம் இந்தியாவுக்கு வருமென்று நம்பக்கூடியது.

## ஹிந்து ஸ்திரீகளின் முன்னேற்றம்.

ஹிந்து ஸ்திரீகள் வரவர அறிவும் நாகரீகப்பயிற்சியும் பெற்று முன்னுக்கு வருவதைக் காட்டுகிற குறிகளைக் கண்டு சந்தோஷப்படுகிறோம். பூனாவில் ஜைனர் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடந்ததில் லக்ஷாதிபதியான ஒரு சேட்டின் மனைவியார் மற்ற ஜைன ஸ்திரீகள் பலர் கூடிச் செய்த உபசாரத்தைப் பெற்றார். இம்மாதிரி தற்காலம் நம் தேசத்தில் பல இடங்களில் ஸ்திரீகள் கூடி குசலப்பிரஸ்னங்கள் செய்து கட்டுச் செய்து கொள்வதுமன்றி, தங்களுக்குச் சொந்தமல்லாத மற்றப் பொது விஷயங்களைக் கவனித்து வருவதைக்கண்ட தேசாபிமானி எவருக்குத் தான் சந்தோஷமுண்டாகாது? ஸ்திரீகள் தங்கள் கிரஹங்களிலேயே வசித்து கிரஹ கிருத்தியங்களையே கவனித்து வர வேண்டுமென்று நமக்குள் பூர்விகமான கட்டுப்பாடு இருந்தபோதிலும், அதனை பொது ஸ்தலங்களில் சௌகரியமான நேரத்தில் கூடிப் பொது விஷயங்களைக் கவனிப்பதற்குத் தடையாகக் கொள்ளக் கூடாது. இயற்கையிலேயே ஸ்திரீ புருஷர்களுக்கு அவரவர்க்குரிய கடமைகள் பிரிவு பெற்றிருந்தாலும்

ஒரு பாலார்க்குரிய கடமைகளை மற்றப் பாலார் கவனிக்காமல் ஒதுங்கி யிருக்கவேண்டுமென்று விதித்தல் அநர்த்தத்திற்கு ஏதுவாகும். மேல் நாடுகளிலுங் கூட ஸ்திரீகளுடைய கர்மம் வீட்டுக்குள்ளேயே யிருந்து, வீட்டு வேலைகளையே கவனித்தல், புருஷரின் தர்மம் வெளியில் சஞ்சரித்துப் பொருள் சம்பாதித்துக் குடும்ப சம்ரக்ஷணை செய்தல், என்று பாகிக்கப்பட்டிருந்தாலும், இந்த வரையறைக்குட்பட்டு இருபாலாரும் பொதுக் காரியங்களில் கவனம் செலுத்தாமல் முற்றிலும் ஒழியவேண்டுமென்ற விதியாவது அநுஷ்டானமாவதில்லை. ஆயினும், மேல் நாடுகளில் ஸ்திரீகள் சில சமயங்களில் தங்கள் வரையறையை மீறிப் புருஷருடைய உரிமைகளிலும் கடமைகளிலும் புகுந்து புத்திமான்கள் மனதில் கவலை யுண்டுபண்ணி வருகிறார்கள். உதாரணமாக இங்கிலாண்டில் சில ஸ்திரீகள் தங்கள் பாலார்க்கு பார்லிமெண்டு ஸ்தானம் பெறப் பாத்தியம் வேண்டுமென்று கலக்கம் செய்து வருகிறார்கள். அமெரிக்காவில் ஸ்திரீகள் புருஷர் செய்யும் உத்தியோகங்களைச் செய்து வருகிறார்கள். ஆண்பால் பெண்பால் என்ற வேற்றுமையின்றிக் கலந்து வேலை செய்தும், ஆட்டம் பாட்டுக்களுக்குப் போயும் ஒன்றாய்ப் பழகி வருகிறார்கள். அத்தேசங்களில் இந்த பால்பிரிவினை குறைந்துகொண்டு வருகிறதென்று சொல்லலாம். அங்கு இப்படி யிருந்தாலும், நம் தேசத்தில் முன்னோர்களால் செய்யப்பட்டிருக்கும் வரையறையின் நோக்கத்துக்கு விரோதமாய் நம் ஸ்திரீகள் மீறி நடப்பது அநாவசியம். அப்படி மீறி நடப்பதை நாம் கோரக்கூடாது. நம் ஸ்திரீகள் அப்படி நடக்கவும் மாட்



டார்கள். ஆயினும் ஒழிந்த நேரத்தில் ஸ்திரீகளை ஒன்றுகூடி தேச நன்மையைக் கவனித்தல் அவர்கள் தர்மத்திற்குப் பொருந்தாததல்ல. புருஷர் ஜனோபகாரமான காரியங்களில் முயற்சி செய்தல் அவர்களது தர்மம். புருஷர் செய்வதில் ஸ்திரீகள் உதவியாயிருப்பதும் ஸ்திரீகளுடைய தர்மந்தான். அவர்களுடைய உதவியில்லாவிட்டால், புருஷருடைய முயற்சிகள் முழுப்பலனையும் கொடுக்கமாட்டா. ஸ்திரீகள் கல்வி கற்று அறிவும் அநுபோகமும் பெற்று, தேசக் காரியங்களில் கவனம் செலுத்திப் புருஷர்க்கு உதவி செய்வதால் அவர்களுடைய இயற்கைக் குணங்களுக்கும் ஸ்வதர்மத்துக்கும் விரோதமில்லை. நம் ஸ்திரீகள் இப்போது அறிவினர்களாய் வீட்டிற்கு வெளியில் நடப்பவைகளைக் கவனிக்காமல் ஒழிந்த காலத்தை வீண்காலமாக்கி வருவதிற் பயனில்லை. புருஷருடைய முயற்சிகளின் இயற்கையையும் நோக்கங்களையும் அறிந்து, தங்கள் அநுதாபத்தாலும் ஆதரவாலும் உதவி செய்தல் பெரும் பயன் விளைப்பதாகும். ஆகையால் நம் பெரியோரின் மனைவி மக்கள்மார்கள் முன்னுக்கு வந்து தம் சகோதரிகளைச் சேர்த்து தேச க்ஷேமத்தை கவனிப்பது பிற்கால நன்மைக்குற்ற முக்கியமான குறிகளில் ஒன்றாகும்.

## நமது விவாக வழக்கங்கள்.

கல்கத்தா நகரத்தில் நமது விவாக வழக்கங்களிற் சிலவற்றைத் திருத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அதில் அநேகம் பெரிய மனுஷர்கள் மெம்பர்களா யிருக்கிறார்

கள். ஹைகோர்ட் ஜட்ஜ்களும், டாக்டர்களும், பத்திராசிரியர்களும், மற்றோரும் மெம்பர்களாயிருக்கிறார்கள். பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் சிறு பிராயத்தில் விவாகம் செய்யப்படும் வழக்கத்தையும் விவாக காலத்தில் பெண்களுக்காகவாவது பிள்ளைகளுக்காகவாவது பெரும் பரிசுகள் வாங்கப்படும் வழக்கத்தையும் நிறுத்த வேண்டுமென்று இந்தச் சங்கத்தார் முயன்று வருகிறார்கள். இவ்வழக்கங்களைத் திருத்த முயற்சிகள் செய்யப்படுவது இப்போது மாத்திரமல்ல சென்ற 50 வருஷங்களாகவே செய்யப்பட்டு வருகின்றனவென்று சொல்லலாம். தென்னிந்தியாவில் காலஞ்சென்ற திவான் பகதூர் R. ரகுநாதராவ் அவர்களும் வேறு பல கல்விமான்களும் இவ்விஷயமாய்ப் பல முயற்சிகள் செய்திருக்கிறார்கள். பெயர் போன வீரேசலிங்கம் பந்துலு செய்து வருவதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. வங்காளத்தில் பெண்களுக்குச் சிறுபிராயத்தில் விவாகம் செய்வது சர்வ சாதாரணமாய் இருந்து வருகிறது. விவாகத்தோடு கூடவே பெண்கள் புருஷர் வீட்டிலிருந்து அங்கேயே இருந்து விடுகிறார்கள். சாந்திக் கலியாணமும் உடனே நடந்து விடுகிறது. இந்த வழக்கத்தால் நேரிடும் பெரிய தீங்குகளை நோக்கியே, லார்டு லான்ஸ்டௌன் கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில், சுமார் இருபத்தைந்து வருஷத்திற்கு முன்னால், பெண்களுக்கு 12 வயது ஆவதற்கு முன்னால், அவர்களுடைய சம்மதமிருந்தாலும், புருஷரின் சம்பந்தம் கூடாதென்று தடுத்துச் சட்டம் செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தைப்போல் மைசூர், பரோடா முதலிய தேச



மன்னர்கள் ஆளும் சமஸ்தானங்களிலும் இந்த வழக்கத்தைத் தடுத்துச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படித் தடுக்கப்படும் பெண்கள் தகாதவயதில் கர்ப்பவதிகளாய்ப் பலதீங்குகளுக்குக் காரணமாவது நிற்கவில்லை. வங்காளத்தில் இந்தத் தீங்குகள் அதிகமாயிருப்பதால் அவ்விடத்துத் தேசாபிமானிகள் இப்போது அதைப்பற்றித் தீவிரமாய் ஆலோசனை செய்வது ஆச்சரியமல்ல. இந்த ஆலோசனை இது வரையில் செய்யப்படாமலிருந்ததே ஆச்சரியம். இந்த விஷயமாய் தேசத்துப் பற்பல பாகங்களிலுள்ள கல்விமான்கள் என்ன அபிப்பிராயங்கள் கொண்டிருக்கிறார்களென்று அறியும் பொருட்டு மேற்படி சங்கத்தார் சிலகாலத்திற்கு முன்னால் 472 பேருக்குக் கடிதம் எழுதினார்கள். அவர்களில் 88 பேர் பதில்கள் அனுப்பினதில், ஒருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் பெண்களுக்கு விவாகம் 14 வயதுக்கு மேற்பட்டே நடக்கவேண்டுமென்று எழுதினார்கள். பிள்ளைகளுக்கு 23 வயதுக்குப் பிறகுதான் விவாகம் நடக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். இப்படிப் பதில் சொன்னவர்களில் நமது சென்னை நிர்வாகசபையில் மெம்பராயிருந்த காலஞ்சென்ற மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யரும் ஒருவர். இந்தபால விவாக வழக்கத்தினாலேயே ஹிந்து ஜனங்கள் படும் துன்பங்களில் பெரும்பான்மையும் நேரிட்டிருக்கின்றனவென்று இவர்கள் எல்லோரும் அபிப்பிராயப்பட்டார்கள். நீர் ரோகம், பயித்தியம் பிடிப்பது, காசம், பேதி, இவை போன்ற ரோகங்கள் சிறு வயதில் ஸ்திரீ புருஷ சம்பந்தத்தினாலேயே உண்டாகின்றனவென்று அநுபோகசாலிகளான ஹிந்து வைத்தி

யர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த வழக்கங்களால் நேரிடும் தீங்குகளைப் பற்றி விஸ்தாரமாய் எழுத வேண்டுமானால் ஒரு பெரும் புஸ்தகம் எழுதினாலும் போதாது. மந்த புத்தி யுள்ளவர்களுங்கூட அநுபோகத்தில் இவைகளைத் தெரிந்து கொள்ளக்கூடும். பால விவாக வழக்கமானது சாஸ்திரத்தில் விதிக்கப்படவில்லையென்று சாஸ்திர விற்பன்னர் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படியிருந்தும் இது வெகுகால வழக்கமாக இருந்து கொண்டு நமது ஜனங்களை அழிக்கின்றது. இந்தக் கல்கத்தா சங்கத்தாரும் மற்றோரும் இந்த வழக்கத்தை அடக்கும் பொருட்டு அநுஷ்டிக்கக்கூடிய உபாயங்களில் இரண்டு முக்கியமானவைகளாகச் சொல்லப்படுகின்றன. முதலாவது, சாமான்ய ஜனங்கள் மனதில், முக்கியமாய் ஸ்திரீகள் மனதில், இளம்பருவத்தில் விவாகஞ் செய்வதால் நேரிடும் தீங்குகள் படும்படியாய்ப் பிரசங்கங்கள் மூலமாயும் துண்டுப் பத்திரிகைகள் மூலமாயும் சமாசாரப் பத்திரிகைகள் மூலமாயும் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். இரண்டாவது, காலேஜுகளில் விவாகமான பிள்ளைகளைச் சேர்ப்பதில்லை என்று அவைகளை நடத்துவோரும் கவர்ன்மெண்டாரும் ஒழுங்கு செய்யவேண்டும்.

இப்படி ஒழுங்கு செய்யும்படியாய்க் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் பொது ஜனங்களுக்கு இந்த விஷயத்தில் வெறுப்புண்டாயிருப்பதாகக் கவர்ன்மெண்டாருக்குச் சந்தேகமில்லாமல் தெரிகிறவரையில் தேசாசாரங்களைப்பற்றிய இந்த விஷயத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். ஜனங்களுக்கு அருவெறுப்பு வந்து



விட்டால் இந்த வழக்கம் தானாய் நின்றுவிடும். அப்போது கவர்ன்மெண்டார் பிரவேசிப்பது அவசியமல்ல. மைசூர் பரோடாவைப்போல் தேசமன்னர் ஆளும் சமஸ்தானங்களில் கவர்ன்மெண்டு பிரவேசிக்கலாம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அன்னியராகையால் நமது ஆசாரங்களிற் பிரவேசிக்க அஞ்சுகிறார்கள். ஹிந்து மகமதிய அரசர்கள் தங்கள் பிரஜைகளை நன்றாயறிந்தவர்களாகையால், அவர்கள் பிரவேசிப்பதால் ஜனங்கள் மனதில் விபரீதமான அபிப்பிராயம் உண்டாகாது. மடாதிபதிகளையும் பண்டிதர்களையும் பிரமுகர்களையும் சேர்த்து ஆலோசனை செய்து அரசர் பால விவாகத்தைத் தடுக்க ஒழுங்கு செய்வார்களானால், ஜனங்கள் அதற்குச் சம்மதிப்பார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் இது சாத்தியமல்ல. ஜனங்களே இதில் முக்கியமாய் முயலவேண்டும். நம் சிறுவர்களுக்கு இதில் நல்ல புத்தியுண்டாயிருக்கிறதென்று நம்பிச் சந்தோஷப்படுகிறோம். ஸ்ரீகாசியில் 300 பிள்ளைகள் வரையில் ஒன்றாய்ச் சேர்ந்து 25 வயது ஆகிறவரையில் தாங்கள் விவாகஞ் செய்து கொள்வதில்லையென்று பிரதிக்கினை செய்திருக்கிறார்களாம். மற்ற இடங்களிலும் இம்மாதிரிப் பிள்ளைகள் கட்டுப்பாடு செய்து கொள்ளக்கூடும். ஆயினும், பெற்றோர்களே விசேஷமாய் இந்த வழக்கம் நடந்தேறி வருவதற்குக் காரணமாயிருப்பதால், அவர்கள் மனதைத் திருத்துவதுதான் அவசியம். அப்படித் திருத்துவதற்கு உழைத்துவிட்டுப் புருஷர்கள் வீடு திரும்பியவுடன் தம் வீட்டுப் பெண்களையாவது திரட்டி இந்த விஷயமாய்ப் பேசவேண்டும்.

சமீபத்தில் காசிப்பட்டினத்தில் ஆசாரத்திருத்தக் கூட்டமொன்று நடந்தபோது, பால விவாகத்தைக் கண்டித்து வழக்கம்போல் ஒரு தீர்மானம் பிரேரிக்கப் பட, மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்டு ஒரு முக்கியமான பிரசங்கம் செய்தார். ஹிந்துக்களாகிய நமது மதாபிவிர்த்தியிலும் ஆசாரம், கல்வி, முதலியவைகளின் அபிவிர்த்தியிலும் இவர் கொண்டிருக்கும் சிரத்தையைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. மகா புத்திமானும் படிப்பாளியாயும் அனுஷ்டானமுள்ளவளாயுமிருக்கும் இவர், பாலவிவாகத்தாலுண்டாகும் தீங்குகளைப் பலமாய்க் கண்டித்துப் பேசாமல் எப்படி யிருக்கக்கூடும்? ஆசாரத்திருத்தக் கூட்டங்கள் நம் தேசத்தில் அநேக இடங்களில் பிரதி வருஷமும் நடத்தப்படுகின்றன. பாலவிவாகம் மகா கெட்ட வழக்கமென்று தீர்மானமும் செய்யப்படுகிறது. செய்யப்பட்டாலென்ன? தீர்மானத்தை அங்கீகரித்து, மீட்டிங்கில் கையைத் தூக்கும் மேதாவிகள் வீட்டிற்கு வந்தால், ஸ்திரீகளும் விருத்தர்களும் சொல்லும் சொல்லுக்குப் பிரதி சொல்லச் சக்தியற்றவர்களாய், பழைய வழக்கப் படியே செய்துவிடுகிறார்கள். மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்டு 25 வயதுள்ள சிறு பெண்ணாயிருந்த காலம் முதல் பொதுக் காரியங்களுக்காக உழைப்பதையே தொழிலாய்ப்பெற்று எந்த தீர்மானத்திற்காகத் தம்கையை உயர்த்தினாரோ அந்தத் தீர்மானத்தின்படி கண்டிப்பாய்ச் செய்தும், எந்தத் தீர்மானத்தின்படி தம்மால் செய்யமுடியாதோ அந்தத் தீர்மானத்துக்காக கையை உயர்த்தாமல் ஓர் உறுதியாக இருந்தும், வருவதாகச் சொன்னார். நம்மவர்கள் இவ்வளவு உறுதியாயிருப்



பார்களானால், இந்தத் திருத்தம் எவ்வளவோ தூரம் அனுஷ்டானத்திற்கு வந்திருக்கும். இந்தக் கெட்ட வழக்கம் சாஸ்திரத்தைப் பொருத்திருக்கிறதென்று சொல்லுவோருக்கு மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்டு ஒரு நல்ல பதில் சொன்னார். சாஸ்திரம் செய்தவர்கள் எவ்வளவு ஞானவான்களாயிருந்தாலும், அவர்கள் விதிக்கும் விதிகள் சிருஷ்டியில் இயற்கையாய் விதிக்கப்படும் விதிகளை விட, பிரமாணமுள்ளவைகளல்லவென்றார். இந்த விஷயத்தில் இயற்கை விதி எப்படியிருக்கின்றது? பக்குவ காலத்திற்கு முன் விவாகம் செய்வதால் இகபரம் இரண்டிற்கும் சாதகமான சரீரமும் அதன் உட்புலன் புறப்புலன்களும் நசிக்கக் காரணம் ஏற்படுகின்றது. மனிதன் நசித்தால் ஜன சமூகமே நசிக்கின்றது. இப்படி நேரிடும் நாசத்தைவிட விவாகத்தைக் கண்டிக்கும் பிரமாணம் ஏது வேண்டும்?

நேற்று வரையில் குழந்தையாயிருந்து பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டிருந்த பெண் இன்று பிள்ளையைப் பெற்ற தாயாகிவிடுகிறாள். இதனால் எவ்வளவு தீங்குகள் விளைகின்றன வென்று கவனிப்போம். சரீரம் முதிர்வதற்கு முன் பிரசவம் நேரிடுவதால் தாய்க்குப் பல பிணிகள் நேரிடுகின்றன. காசம், வயிற்றுவலி; இரத்த சோகை, முதலிய ரோகங்களால் நம்மில் எத்தனையோ பெண்கள் மாண்டு போகிறார்கள். இரண்டாவது, பிறந்த குழந்தை சக்தியற்றுத் தாய்க் குழந்தையாகவே மாண்டு போகின்றது. தாயும் குழந்தையும் பிழைத்திருந்தாலுங்கூட, பால வயதுள்ள பெற்றவள் குழந்தையை வளர்க்கும் அபாரமான கடமையை எப்படி அறிவாள்? இக்காலத்

தில் சிறு பெண்கள் தங்கள் கணவருடன் தனியாய் வசிக்க வேண்டியவர்களாய் விடுவதால், பழைய காலத்தைப் போல் குடும்பத்திலுள்ள பெரியோரது சகாயத்தைப் பெறக் கூடிய நிலைமையில் இல்லை. குழந்தையின் சரீரத்தையாவது மனதையாவது சரியாய்ப் பயிற்சி செய்யத் தெரியாதவர்களாய், தங்கள் மக்களின் கேட்டுக்குத் தாங்களே காரணமாகிறார்கள். மூன்றாவது, இதனால் குடும்பத்திலுண்டாகும் துக்கம் செலவு இவைகளைப் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. நான்காவது, தாயும் பிள்ளைகளும் ரோகிகளாயும் திடனற்றவர்களாயு மிருந்தால், ஜன சமூகம் எப்படி ரோகமற்றதாயும் திடனுள்ளதாயும் இருக்கும்? மனத்திடன் பெற்ற மேதாவிகள் ஜனங்களின் ஒழுக்கத்தையும் புத்தியையும் பாரமார்த்திக சிரத்தையையும் வளர்க்கிறார்கள்; சரீரத்திடன் பெற்ற சாமானிய ஜனங்கள் சக்தியை உபயோகித்து தேசத்தின் செல்வத்தை வளர்க்கிறார்கள். இந்த இரண்டு மில்லாமற்றானே இந்தியா தற்காலம் பரிதாபமான நிலைமையில் இருக்கின்றது? இவ்வளவு பெருந் தீங்குகள் பிரத்தியட்சத்தில் இயற்கையாய் நேரிட நாம் பார்க்கும்போது, அப்படி நேரிடுவதைக் கடவுள் விதித்த பிரமாணமெனக் கருதாமல், எது சாஸ்திரமென்று நாம் கொள்ளுகிறோமோ அது சொல்வது தான் பிரமாணமென்று கருதுவது விவேக மல்ல.

இந்த வழக்கத்தைத் திருத்துவதற்கு ஒரு சுலபமான வழியை மிஸ்ஸெஸ் அன்னிபெஸன்ட் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிறார். நம் பூர்வீக வழக்கப்படி, ஹிந்துக்களுக்குப் பிரம்மச் சரியமென்றும் கிர



ஹஸ்தா சிரமமென்றும் வரையறை ஏற்பட்டிருந்தது. வித்தியாப்பியாச காலமெல்லாம் வித்தியார்த்தி விவாகமில்லாதவனாய், அநாவசியமான சரீர சுகங்களை விரும்பாமல் கல்வி கற்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. கல்வி கற்று முடிந்த பிறகு, விவாகம் செய்து கொண்டு, கிரஹஸ்தா சிரமத்தில் பிரவேசிக்கவேண்டியவனாயிருந்தான். சாஸ்திரப்படி நடப்பதாகச் சொல்லிக் கொள்ளும் ஹிந்துக்கள் ஏன் இந்த வரையறையை மறந்துவிட்டார்களோ? பிள்ளைகள் ஸ்கூல்களில் வாசிக்கும் காலம் முடிகிறவரையில் விவாகம் கூடாதென்று ஏன் விதிக்கக்கூடாது? கவர்ன்மென்டு ஸ்கூல்களில் இவ்விதம் செய்தல் சாத்தியமில்லாவிட்டாலும், நம்மவர்கள் வைத்து நடத்தும் ஸ்கூல்களில் இந்த விதியை அனுஷ்டிக்கக்கூடாதா? ஸ்ரீ காசியில் மிஸ்ஸெஸ் அன்னிபெஸன்டு வைத்து நடத்தும் காலேஜில் இம்மாதிரி விதி அனுஷ்டிக்கப் படுவதாகவும் இதனால் படிப்புக்கு எவ்வித இடைஞ்சலும் உண்டாகவில்லை யென்றும், சொல்லப்படுகின்றது. கிறிஸ்தவப் பாதிரிமார்கள் நமது ஆசாரங்களைப் பற்றி இங்கிலாந்துக்குப் போனால் இகழ்ந்து பேசுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இங்கு நடத்தும் காலேஜுகளிலும் ஸ்கூல்களிலும் இந்த வழக்கத்தைக் குறைக்குமாறு மேற்கண்டபடி விதி செய்ய இஷ்டமில்லாதவர்களாயிருக்கிறார்கள். மொத்தத்தில் ஜனத் தலைவர்கள் தைரியமாய்க் கஷ்ட நஷ்டங்களைப் பாராமல், இந்தத் திருத்தத்தை நிறைவேற்றினாலன்றி ஹிந்து ஜனத்துக்கு நேரிட்டிருக்கும் பெருந்தீங்கு அகலாது. தன் மறுப்பும் தன்னஷ்டமும் எல்லாத் திருத்தங்களிலும்

அவசியமாய் நேரிடும். சமூக அபிவிருத்திக்கு ஆத்மத் தியாகம் இன்றியமையாதது. சரித்திரத்தை எப்படிச் சோதித்துப் பார்த்தாலும், ஆத்மதியாகம் செய்யச் சக்தியற்ற சமூகம் முன்னுக்கு வந்ததாகக் காணோம். ஆத்மதியாகம் புருஷார்த்த சாதகங்களில் உத்தமமானதாகக் கொண்ட பெரியோரது பரம்பரையில் உதித்த நாம் தற்காலம் பயங்காளிகளாய்ப் பிரதி மனிதனுக்கும் சமூகத்துக்கும் மனமறியக் கேடு செய்வது என்ன பரிதாபம்?

இப்படி ஆத்மத்தியாகம் நடக்கவேண்டுமென்றால் வீட்டில் புருஷர்கள் ஒரு மணியோ இரண்டு மணியோ அல்லது சமயம் வாய்த்தபோ தெல்லாமோ, பெண்களுக்கு நல்வழிகளை உபதேசம் பண்ணவேண்டும். அப்போதுதான் பெண்கள் நமக்குத் துணையாவார்கள்.

## ஹிந்து விதவைகளின் நிலைமை.

ஹிந்து விதவைகளின் பாரமரிப்புக்காக அமிருதஸரஸில் ஒருவித ஆச்ரமம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் மிஸ்டர் காளிராம்ஸூரி யென்பவரும், மிஸ்டர் தர்ம தாஸ்ஸூரி யென்பவரும் ஒரு துண்டு பத்திரிகை வெளியிட்டு, நமக்கும் ஒரு பிரதி யனுப்பியிருக்கின்றார்கள். பஞ்சாபிலுள்ள பிரம்ம சமாஜத் தலைவர்களுடைய முயற்சியின் பேரில் லாகூரில் ஏற்கெனவே ஒருவித ஆச்ரமம் அமைக்கப்பட்டுத் திருப்தியாக நடந்து வருவதாய்த் தெரிகிறது. அமிருதஸரஸிலும் இப்போது செய்யப்படும் முயற்சி அநேகமாய்க் கைகூடி விட்டதாகவே கருதவேண்டியிருக்கிறது. லாலா சந்தர்தாஸ் லாலா என்ற ஒரு கனவான் தமக்குச் சொந்தமான ஒரு பெரிய வீட்டை விதவாச்சிரமத்திற்காகக் கொடுத்திருக்கிறார்.



பஞ்சாப் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவரும் சர்க்கார் உத்தியோகம் செய்து தற்போது பென்ஷன் வாங்குபவருமாகிய லாலா ஸம்ராகாமாரும் அவருடைய மனைவியாரும் இந்த விதவாசிரமத்தின் தலைமை பூண்டு தங்களுடைய மிகுதி ஆயுள் காலை இம் முயற்சியிலேயே செலவுசெய்ய முன் வந்திருக்கிறார்கள். குவெட்டாவிலுள்ள பாய் கீர் பால்ஸிங் என்ற கனவான் 500 ரூபாய் இவ்வாசிரமத்துக்காக நன்கொடை யளித்திருக்கிறார். இன்னும் பணம் வேண்டுமென்று இவ்வாசிரமத்தின் செக்ரிட்டெரிகள் இருவரும் ஜனங்களுக்கு விண்ணப்பஞ் செய்திருக்கிறார்கள். தனிகர்களாயும் தருமசிந்தை யுடையவர்களாயு முள்ளோர் இந்த நற்காரியத்துக்கு உதவி செய்ய முன் வர வேண்டுமென்றும், இக்காரியம் கைகூடிச் சித்திபெற வேண்டுமென்றும் நாம் விரும்புகின்றோம்.

வெகு காலந்தொட்டு ஹிந்து விதவைகளின் நிலைமை மிகவும் பரிதாபமாகவே இருந்து வருகிறது. சிறு வயதிலேயே புருஷனை யிழந்து கண்ணீர் விட்டழுது பரிதவிக்கும் இளம் பெண்களுக்கு ஏற்படும் தொல்லைகளும் இம்சைகளும் பல. சரியான ஆகாரமில்லாமல், மிகவும் கேவலமான ஸ்திதியில் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். எந்தச் சந்தோஷக் காரியத்துக்கும் அவர்கள் அனாதர்களாகி விடுகிறார்கள். ஆடையாபரணங்களை யிழந்து, சில வகுப்புகளில் முண்டனஞ் செய்யப்பட்டு, இருட்டறைக் காவலாய் ஒதுக்கப்படுகிறார்கள். வெளியே போனாலும் அவர்களுக்கு இம்சை; தீய சகுனமாகக் கருதப்பட்ட அவர்கள் எங்கேனும் எதிரே வந்தாலும் இம்சை. பெற்றோர்களாலும் சில

சமயங்களில் அவர்கள் சற்றுக் கடுமையாகவே நடத்தப்படுவதுண்டு. பொதுவாக ஒரு குடும்பத்தில் விதவைகளிருப்பதே அந்தக் குடும்பத்திற்கு ஒரு பெரிய துர்க்குறி யெனக் கருதப்படுகிறது. மகா நாகரீகம் பொருந்தியதென்று உலகத்தாரால் மெச்சப்படுகிறதும், சமீபத்தில் குடியேற்ற மந்திரியாகிய லார்ட் ஒருவரால் வாயாரப் புகழப்பட்டதுமாகிய இந்தியாவில் இத்தகைய பரிதாப அநாகரீகம் தோய்ந்து மங்காதிருப்பதைப்பற்றி நமக்கு நாமே துக்கப்பட வேண்டி யிருக்கிறது. குடும்ப நிலைமையையும், குடும்ப சம்ரக்ஷணையையும், குடும்பப் பெருக்கையும் வாழ்வையும் பற்றி ஆதிரிஷிகள் விதித்திருக்கும் நியமங்களைப் பார்த்தால் எவ்வளவோ ஜீவகாருணியமும் பெருந் நோக்கும் அவைகளில் பொதிந்திருக்கின்றன.

மனுமுதலிய ஸ்மிருதி ஆசிரியர்கள் விதவைகளை அலக்ஷியப் படுத்தி அடுப்பங்கரையில் அடைக்க வேண்டுமென்று எங்கும் சொல்லவில்லை. புஷ்பவதி யாகு முன்பும், இல்வாழ்க்கையாரம்ப மாகுமுன்பும் விதவையான கன்னிகை எவ்வளவு உயர் ஜாதியா யிருந்தாலும், அதாவது பிராமண ஜாதியாயிருந்தாலும், மறுவிவாகம் செய்யலாமென்று மனு அநுமதி கொடுத்திருக்கிறார். இல்வாழ்க்கையை யநுபவித்த ஸ்திரியுங் கூடப் புத்திரபாக்கியம் பெறுவதற்கு ஆதிரிஷிகள் சில வழிகளைச் சிறிது கட்டுப்பாடுடன் ஏற்படுத்தி யிருந்தார்கள். உண்மையை நோக்கும் போது, பழய நூல்களில் ஸ்திரீகளுக்கு எவ்வளவோ சுதந்திரங்கள் கொடுக்கப் பட்டிருந்தன. எட்டுவகைக் கலியாணங்களுண்டென்றும், பதினான்கு வகைப்



புத்திரர்களுண்டென்றும் ஆதியில் வகுக்கப் பட்டிருந்தன. பிற்பாடு காலக் கிரமத்தில் இவ்வதுப்புகள் குறைவது விரும்பத் தக்கதே யென்றாலும், மனப்பாங்கும் சுயேச்சையு மில்லாத உயிரற்ற பிராணிகளுக்குச் சமமாக விதவைகளை நடத்த வேண்டுமென்று எங்கும் சொல்லப் படவில்லை யென்றே தெரிகிறது.

விதவைகளுக்கு மறு விவாகம் செய்வது சாஸ்திர சம்மதமான தென்ற அம்சத்தைப் பற்றிப் பேச நாம் இப்போது வரவில்லை. கஷ்ட நிஷ்டூரங்களை யநுபவிக்கும் விதவைகளின் சம்ரக்ஷணைக்காகவும், பாது காப்புக்காகவும் அவர்களுக்கு நற்புத்தியும் மனவிசாலமு முண்டாகும் பொருட்டாகவும், தேசாபிமானிகளும் விவேகிகளும் முயற்சி செய்ய முன் வந்தால், அம் முயற்சிக்கு மற்றவர்கள் தங்களால் கூடிய சகாயமெல்லாம் செய்யவேண்டுமென்பதே நம்முடைய கோரிக்கை. புண்டித்த நிலையும், சுகாதாரக் குறைவால் மெலிந்தும் நோயுற்றும் வாடிய உடலுடன் பரிதாபக் கண்ணீருடன் தாங்கியிருக்கும் விதவைகளை ஒரு ஆசிரமத்தில் சேர்த்து, அவர்களுடைய துக்கத்தை மாற்றும் பொருட்டும் சத்காரியத்தில் அவர்களுடைய புத்தியையும் வாழ்நாளையும் செலுத்தும் பொருட்டும் ஏற்படுகிற விதவா சிரமமானது எவ்வளவோ ஜீவகாருண்ணியத்துக்கு அறிகுறியாகின்றது. உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி யென்ற பிரிவுகள் அநாகரிக புத்தியால் பலப்பட்டு, விதவா விவாகத்தில் ஆக்ஷேபமில்லாத கீழ்த்தர வகுப்பாரும் உயர்ந்த வகுப்பாரைப் பின் பற்றுவது தங்களுக்கு ஒரு பெரிய சிலாக்கியமும் மேன்மையு மென மடமையால் கருதுகிறார்கள். கொஞ்

சம் பணமும் செல்வாக்குமுள்ள கீழ்த்தர ஜாதியார் பிராமணர்களைப் போல் நடந்து கொள்வதில் வேதாசீர்வாதம் கிடைக்கிறதென மயங்கி, இல்லாத ஆசாரங்களைப் புகட்டிப் புஷ்பவதியாகு முன்னர் தங்கள் சிறுமிகளுக்குக் கலியாணஞ் செய்து, வீடு நிறைய விதவைகளை வைத்துக் கொண்டு, தங்களுடைய மடமையிலேயே ஆழ்ந்து மனம் புழுங்குகிறார்கள். இவ்விதம் படிப்படியாக எல்லா ஜாதியாரும் செய்ய முன் வருவதால் விதவைகளும் அதிகப் படுகிறார்கள். விதவைகள் படும் இம்சைகளும் அதிகப் படுகின்றன. அநாகரீகமானதும் கொடுமையானதும், சுய நலத் தந்திரமானதுமான ஜனசமூகக் கட்டுப் பாட்டை உதறி யெறிந்து தீர்க்க புத்திகாட்டும் தைரியமில்லாததால், "நாமென்ன செய்கிறது? கோஷ்டியார் ஒத்துக் கொள்ள மாட்டார்களே!" என்று விவேகிகளாயுள்ளவர்களும் வீட்டுக் கூச்சலுக்கடங்கி விடுகிறார்கள். இந்த அநாகரியம் தீமையையே தரும். இவையெல்லாம் யாரால் உண்டாகின்றன? நாமே காரணம்!

ஆசாரத் திருத்தக் கான்பரன்ஸில் ஜஸ்டிஸ் ஸர் C. சங்கரன் நாயர் பேசியபோது, நம்முடைய ஆசாரவழக்க அனுஷ்டானங்களை நாகரீகத் திற்கியைய மாற்றிக் கொள்வது மிகவும் அவசியமென வற்புறுத்தினார். லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை இதை யொரு பெரிய ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஆசாரத் திருத்தத்தில் பின் வாங்கியிருக்கும் இந்தியர்கள் ராஜாங்கத் திருத்தத்தில் கைக்காட்டுவதும் அதிகச் சுதந்திரம் கேட்பதும் பொருந்தாத விஷயமெனச் சுட்டிச் சொல்லுகிறது. இது மிகவும் சரிதான்.



சென்ற சில வருஷங்களில் ஆசாரத் திருத்த அபிசத்தியும் தைரியமும் நம்பிக்கையும் கொடுக்கக்கூடிய சில நற்குறிகள் தோன்றி யிருக்கின்றன. பம்பாயில் ஒருவிதவாசிரமம் ஏற்பட்டு, மிகவும் செம்மையாகவும் திருப்தி யாகவும் நடை பெற்று வருகின்றது. சென்னை ராஜதானியில் சில விதவா விவாகங்கள் நடந்தேறி யிருக்கின்றன. இத்தோடு பெண் கல்வியும் வருஷத்தோறும் விருத்தியாவது கவர்ன்மெண்ட் ரிப்போர்ட்டு களிலேயே விளங்குகின்றது. ஜன சமூகத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் சும்மா விராமல் ஏதேனும் தேச நன்மையான வேலையைச் செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியும் பலப்பட்டு வருகின்றது. உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஸ்திரீகளும் ஓய்ந்த நேரங்களில் பின்னல் தையல் போன்ற வேலைகளைச் செய்ய வேண்டு மென்ற ஆலோசனை சமீப காலந் தொட்டு ஊக்கமாய் வெளியிடப்பட்டு வருகின்றது. சென்னையில் டாக்டர் நஞ்சுண்டராவ் சில பெண்களைக் கொண்டு தையல் போன்ற நல்ல வேலையைச் செய்து வருவதும் விரும்பத் தக்கது. இன்னும் காலக் கிரமத்தில் இத்தகைய உணர்ச்சியும் அது சம்பந்தமான முயற்சியும் பலப்படுவதில் இடையூறுகளுண்டாகு மென்று தோன்றவில்லை. சென்னையிலும் ஒரு பெரிய விதவாசிரமம் ஏற்படுவது மிகவும் நன்றாயிருக்கும். இவ்விதம் விதவாசிரமம் ஏற்படுத்தி, தையல், பின்னல், சரிகை செய்தல், பூவேலை செய்தல், மேல் சோடு செய்தல் முதலிய தொழில்களை விதவைகள் செய்யும்படிக் கற்பிக்கலாம். எல்லா விதவைகளுக்கும் சத்கிரந்தங்கள் போதிக்கலாம். சிலரை

உபாத்தியாயர்களாக அனுப்பலாம், சிலரைப் பெண் வைத்தியர்களாக்கலாம். இவர்களுடைய அழுகையையும் துக்கத்தையும் மாற்றிச் சந்தோஷத்தையும் ஊக்கத்தையு முண்டுபண்ணி, இன்னும் எவ்வளவோ நல்ல வழிகளில் இவர்களை உபயோகிக்கலாம். அமிருத சரசில் இத்தகைய நோக்கம் கொண்டு விதவாசிரம மேற்படுத்தப்பட்டு வருகிறதென்று சொன்னோம். இதனால் ஏற்படும் நன்மைகளை நம்மவர்கள் உணர்ந்து இன்னும் பல ஆசிரமங்கள் ஏற்படுத்த முயல வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

ஹிந்துக்களின் அனுஷ்டானமும், சாஸ்திரமும் எப்படியிருந்தாலும், வைதவ்யம் அடைந்த ஸ்திரீகள் ஆயுளெல்லாம் அந்த நிலைமையை அனுபவிக்கும்படி செய்வது கொடுமையென்றும், பல தீங்குகளுக்கு ஏதுவென்றும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நம்பி, ஸ்திரீகள் புனர்விவாகம் செய்வது சட்ட விரோதமாயிராமல் செய்திருக்கிறார்கள். இப்படிச் சட்டம் செய்ததற்கு முன்னேயே நம் தேசத்து அரசர்களும், பண்டிதர்களும் புனர் விவாகங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று அப்போதைப்போது முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் மேற்கண்டவாறு பிரிட்டிஷ் சர்க்காரார் சட்டம் செய்த பிறகே இந்த வழியில் தீவிரமான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

சுமார் 25 வருஷத்திற்கு முன்னால் கல்கத்தாவில் பண்டித ஈஸ்வர சந்திர வித்தியாசாகரென்பவர் ஹிந்து ஸ்திரீகளுக்குப் புனர் விவாகம் சாஸ்திர விரோதமல்லவென்று வாதித்து, அதற்குத் தக்க ஆதாரங்களைக்



காட்டி, தமது குமாரனுக்கு ஒரு கைம்பெண்ணை விவாகம் செய்துகொள்ள அனுமதி கொடுத்தார். அந்தக் காலத்தில் அவர் அப்படிச் செய்தது மகா தைரியமும் தேசாபிமானமுமான காரியமென்று கருதப்பட்டது. அவரை இப்போதும் ஜனங்கள் ஒரு மகானென்று கொண்டாடுகிறார்கள். அவருடைய ஜன்மதினம் கல்கத்தாவில் பகிரங்கமாய்க் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த மகானுக்குப் பிறகு பம்பாயில் கர்ஸன்தாஸ் மூல்ஜி என்ற ஒரு குஜராத்திய வைசியர் இந்த விஷயத்தில் வெகு ஊக்கங்காட்டி உழைத்ததால், அவரைத் தற்காலத்துத் திருத்தக் கக்ஷியார் இந்தத் திருத்தத்திற்கு மூலபுருஷரில் ஒருவராகக் கொண்டாடுகிறார்கள். புனாவில் விஷ்ணுசாஸ்திரி என்கிற ஒரு பிராமண கனவான் இதே மாதிரி உழைத்தபடியால் அவருடைய பெயர் அவ்விடத்தில் பிரபலமாய் வழங்கி நின்றது. இந்த இருவர் பெயரையுஞ் சொல்லிப் பம்பாயில் நடந்த வருஷோற்சவம் கொண்டாடப்பட்டது. போனவருஷம் இதேமாதிரி கொண்டாடப்பட்டபோது அதிக ஜனங்கள் வந்து கூடவில்லையாயினும் இந்த வருஷம் ஒன்றுக்குப் பத்தாய் ஜனங்கள் கூடவே மண்டபத்தில் இடமில்லாமல் பலர் திரும்பிவிட நேரிட்டதாம். இப்படி ஜனங்கள் இத்தனை கூடினதற்குக் காரணம், அந்தக் கூட்டத்தை நடத்தினவர்கள் முன்னதாகவே ஒரு பெரிய காகிதத்தில் விதவா விவாக வருஷோத்சவமும் கர்ஸன் தாஸ் ஜெயந்தியும் அன்று தினம் நடக்கப்போகின்றனவென்று கண்டு, பண்டித ஈஸ்வரசந்திர வித்யாசாகரைப் போலவும், பண்டித விஷ்ணுசாஸ்திரியைப் போலவும் படம்வரைந்து,

அவர்கள் கையில் பேர்போன பாராஸாஸ்மிருதி வாக்கியம் "நஷ்டே மிருதே (Etc)" என்பதைப் பிடித்திருப்பது போலக் காட்டியும், அவர்களைப் பார்த்து அநேக பால விதவைகள் தங்கள் துக்கத்தைக் காட்டிப்பிரார்த்திப்பது போல் எழுதியும், ஊரூராய்த் தெருக்களில் ஒட்டினார்கள். இப்படி ஒட்டியிருந்ததை ஜனங்கள் அங்கங்கே வாசித்து இந்த வருஷோத்ஸவக் கொண்டாட்டத்தின் நோக்கத்தில் ஒற்றுணர்ச்சி கொண்டு வந்தார்கள் எனப்படுகிறது.

கல்கத்தா, பம்பாய், புனா இவ்விடங்களில் இந்த விஷயமாய் நடந்து வந்த முயற்சிகளைப் பார்த்து தென்னிந்தியாவிலும் சிறிது ஊக்கம் தோன்றிற்று. பண்டித வித்தியாசாகர், பண்டித விஷ்ணு சாஸ்திரி, கர்ஸன்தாஸ், இவர்களைப் போல தென்னிந்தியாவில் ராவ் பகதூர் வீரேசலிங்கம் பந்துலுவைச் சொல்லவேண்டும். இவருடைய பிரயத்தனத்தினால், தென்னிந்தியாவில், முக்கியமாய் தெலுங்கு ஜில்லாக்களில், அநேகம் புனர்விவாகங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இவர் ராஜமகேந்திரத்தில் ஸ்கூல் உபாத்தியாயரான சாமானிய நிலைமையிலிருந்தவர். செல்வமாவது செல்வாக்காவது இல்லாதவர். ஆயினும், இவரது தைரியத்தாலும், பொது நலப்பிரியத்தாலும், இந்த விஷயத்தில் நல்லோரனைவரும் புகழும்படியான பெருங்காரியம் செய்து வந்திருக்கிறார். இங்கும் ஹிந்து ஸ்திரீ புனர்விவாக சம்பந்தமாய் ஒரு வருஷோத்ஸவம் நடத்தல் அவசியமென்றே நினைக்கிறோம். இது இன்னம் நமக்குள் பொதுவான வழக்கமாகவில்லையாயினும், ஜனங்களுக்கு இந்த விஷயத்தில் ஆதியிலிருந்த விரோதம்



இப்போதில்லையென்று நம்புகிறோம். ஆசாரத்திருத்தக்காரர் இந்த விஷயமாய்ச் சொல்வதை ஜனங்கள் தப்பாய்க் கிரகிக்கிறார்கள். அவர்கள் ஹிந்து விதவைகள் புனர்விவாகம் செய்து கொள்வது அவசியமென்றாவது கட்டாயமென்றாவது, அல்லது எல்லா விதவைகளும் அப்படிச் செய்துகொள்ள வேண்டுமென்றாவது சொல்லவில்லை. சிறுபிராயத்தில் வைதவ்யமடைந்த பெண் அவளுக்குத் தக்கவயது வந்தபோது புனர்விவாகம் செய்து கொள்வதில் விருப்பப்பட்டால் ஜனங்கள் அவளைத் தடுப்பதும் அப்படிச் செய்து கொண்டால் அவளை ஹிம்ஸிப்பதும் கூடாதென்று மாத்திரம் சொல்லுகிறார்கள். இது யுக்திக்கு ஒத்ததாயிருப்பதுமன்றி, சாஸ்திர சம்மதம் பெற்றதென்றும், காலஞ்சென்ற திவான்பகதூர் ரகுநாதராவ் முதலான ஆன்றோர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

## CHAPTER VII.

### கைம் பெண்களுக்குங் கல்வி.

புனாவில் ஹிந்து விதவாசிரமத்தில் படிப்புப் பெறும் பெண்களுக்குப் பரிசளிப்பு சமீபத்தில் நடந்தபோது, கவர்னர் ஸர் ஜார்ஜ் க்ளார்க் (இப்போது லார்ட் ஸைடன் ஹாம்) வந்திருந்து தமது அநுதாபத்தைத் தெரிவித்தாராம். காலஞ்சென்ற மகாதேவ கோவிந்தரானடேயின் சம்ஸாரம், எப்போதும் அவர் ஹிந்து ஸ்திரீகளின் உயர்வுக்காக உழைக்கும் வழக்கம்போல், புனாவில் இந்த சமயத்தில் வந்திருந்து, ஹிந்து விதவைகளின் க்ஷேமத்திற்காக உதவி செய்

வது அவசியமென்று பேசினார். நமது சாஸ்திரங்களிலும், ஆங்கிலத்திலும் மகா பண்டிதரான டாக்டர் ஸர் ராமகிருஷ்ண கோபால் பந்தர்க்கர், ஹிந்துக்களுள் புருஷனை இழந்த ஸ்திரீகளின் நிலைமை மகா பரிதாபமானதென்றும், அவர்களை அந்த நிலைமையில் வைத்திருத்தல் ஹிந்துக்களுக்குப் பெருமையல்லவென்றும், பொருள்படப் பேசினார். புனாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்த ஆசிரமம் போல் இரண்டொரு இடங்களுக்குமேல் இந்த ஆசிரமங்கள் ஸ்தாபிக்கப்படாததினால் நமது விதவைகள் விஷயமாய் நாம் செலுத்தும் கவலை முற்றிலும் போதாதென்றே சொல்லவேண்டும்.

முதலாவது, புருஷரோடு வாழும் ஸ்திரீகளைக் கல்விகற்காத மூடர்களாய் வைத்திருப்பது போலச் சம்சாரப் பளுவைத் தாங்கியிராத கைம்பெண்களையும் படிப்பிக்காமல் மூடர்களாய் வைத்திருக்கிறோம். இரண்டாவது, இந்தக் கைம்பெண்களைப் பலவிதமான சிறுமைகளுக்குட்படுத்தி, அவர்களை கடவுளுடைய சாபத்தைப் பெற்றவர்கள்போலக் கருதி நடத்துகிறோம். மேற்குலத்தைச் சேர்ந்தவர்களாய்ப் போதுமான சம்ரக்ஷணை பெறக்கூடியவர்களான ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றி நாம் இங்கே பிரஸ்தாபிக்கவில்லை. அநேகாயிரம் புருஷரிழந்த ஸ்திரீகள் தக்க சம்ரக்ஷணையும் சாமானிய சரீர சௌக்கியங்களுமில்லாமல், மனம் உறுதியிழந்து, நெகிழ்ந்து, தீய நெறிகளிற் செல்லுகின்றார்கள். இதை நாமனைவரும் அநுபோகத்தில் பார்த்து வருகிறோம். உலகத்தில் வறுமையே தீங்குகளுக்குப் பிரதான காரணமாயிருக்கின்றது. இந்த வறுமையோடு மனதிற்குச் சமாதானம் கொடுக்கக்



கூடிய கல்வியறிவும் சகல பிராணிகளுக்கு மவசியமான சரீர சுகங்களும் இல்லாவிட்டால், மனது தீயவழிகளிற் செல்லுவது எளிதாகின்றது. நமது சாஸ்திரப்படிக்கும் பூர்வாசாரப் படிக்கும் ஸ்திரீகள் அவர்கள் ஆயுளெல்லாம் புருஷருடைய சம்ரக்ஷணையிலிருக்க வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. இந்த சம்ரக்ஷணை தற்காலத்து நிலைமையில் அநேக விதவைகளுக்குக் கிடைப்பதில்லை. பூர்வம் ஹிந்துக் குடும்பங்கள் பிரிவுபடாமல் ஒன்றாயிருந்து, ஒரே இடத்தில் வாழ்வனவாயிருந்ததினால், இயற்கையான இரக்ஷகரை இழந்த ஸ்திரீகள் தங்கள் புருஷர் குடும்பத்திலாவது பெற்றோர் குடும்பத்திலாவது வசித்து, நன்னெறி தவறாமல் ஜீவித்தல் சாத்தியமாயிருந்தது. தற்காலம் ஹிந்துக் குடும்பங்கள் பல காரணங்களால் ஒரே இடத்தில் சேர்ந்திராமல் சிதறிப்போகிற படியால், கைம் பெண்கள் நாதனில்லாமல் கைவிடப்படுகிறார்கள்.

மேலும் முற்காலத்தில் நமது ஸ்திரீகளுக்குக் கல்வி இல்லாவிட்டாலும் லௌகிக சுகங்களை மறந்து, பரலோக சிந்தைகளில் செல்லும்படியான வசதிகள் பல விருந்தன. இக்காலத்தில் புருஷர்களுக்கே பரலோக சிந்தைகள் உண்டாகாமல் சிற்றின்பங்களிலேயே அவர்கள் பக்தி வைத்தவர்களாயிருக்கும்போது, ஸ்திரீகளுக்கும் அந்த இயல்பு உண்டாகின்றது. தவிர, பூர்வம் கிராமாந்தரங்களில் வசித்த ஸ்திரீகள் இப்போது பட்டணங்களில் வசிக்கிறார்கள். இதனாலும் கெட்ட நெறிகளிற் செல்லல் எளிதாகிறது. ஆகையால் தற்காலம் ஹிந்து விதவைகளுக்குத் தக்க சம்ரக்ஷணையை உண்டு பண்ணுதல் அவசியமாகின்றது.

இந்த சம்ரக்ஷணை எங்கெங்கு ஒருகுடும்பத்தில் சேர்ந்து வசிப்பதால் கிடைத்தல் சாத்தியமல்லவோ, அங்கங்கு இவர்களுக்குக் கல்வியால் உண்டாகும் ஞானத்தாலும், தங்களுக்கும் அந்நியர்களுக்கும் நன்மை செய்யக்கூடிய தொழில்களாலும், அதை உண்டாக்குதல் சாத்தியம். விரதாதிகளால் காயசோஷணமும், புராண சிரவணம், கடவுள் வழிபாடு, திவ்விய தேச யாத்திரை—இவைகளால் உண்டாகக் கூடிய சிற்றின்ப வெறுப்பும், முற்காலத்தில் சாத்தியமா யிருந்ததுபோல இக்காலத்தில் சாத்தியமல்ல. ஹிந்து விதவைகள் அனைவருக்குமே இவைகள் சாத்தியமல்லவென்று நாம் சொல்லவில்லை. அநேக ஸ்திரீகள் தங்கள் கதியைச் சிந்தித்து மறுஜன்மத்திலாவது நல்லகதி கிடைக்க வேண்டுமென்று உத்தமமான நெறிகளைப் பின்பற்றி ஜீவிக்கிறார்கள். ஆயினும், பலருக்கு இப்படி ஜீவித்தல் சாத்தியப்படாமையால், கல்வி யறிவாலும், லௌகிகத் தொழில்களாலும் கிடைக்கக்கூடிய சம்ரக்ஷணை அவசியமாயிருக்கின்றது. மேலும், சம்சாரப் பளுவைத் தாங்கியிராத இந்த ஸ்திரீகள் தக்க காவலுக்கு உட்பட்டவர்களா யிருந்தாலும், மன உறுதி கொண்டவர்களா யிருந்தாலும், தங்கள் காலத்தையும் புத்தியையும் வீண் போக்காமல் தங்கள் சகோதரிகளுக்கு நலமான வழிகளில் செலுத்தக் கூடுமல்லவா? படிப்புள்ளவர்களாயும் உபயோகமுள்ள தொழில் எதையேனும் கற்றவர்களாயு மிருந்தால், இந்து விதவைகள் தேசத்துக்கே அருமையான நன்மை செய்பவர்களாவார்கள். மானிட ஜன்மம் எடுத்த எல்லாருமே சரீர சுகத்தையும் லௌகிக இன்பத்தையும் வெறுத்து, உடம்பை யுலர்த்தி மறுமையைச் சிந்தித்தே



ஜீவிக்கச் சக்தி யுள்ளவர்களல்ல. இப்படி சக்தியற்றவர்களுக்குப் புனா விதவாசிரமத்தில் செய்யப்படுவது போல் கல்வியும் தொழிற் பயிற்சியும் தந்து சம்ரக்ஷித்தல் அவசியமென்பது விளங்கும்.

## நமது ஸ்திரீகளும் அலங்கார வித்தையும்.

நம் தேசத்தில் அநாதி காலத்தொட்டு செழித்து வந்த அநேக விசித்திர வித்தைகள் இப்போது அழிந்து போய்விட்டன வென்று அநேகர் விசனப்படுகிறார்கள். சிலோன் வாசியாகிய டாக்டர் குமாரஸாமி இந்த விஷயமாய் இந்தியாவுக்கு நேரிட்டிருக்கும் தீங்கைப் பற்றி விசனப்பட்டுப் பல இடங்களில் பிரசங்கங்கள் செய்து, நம்மவர்களுக்குப் பிரக்ஞை யுண்டாக்கி வருகிறார். இவரைப் போல இங்கிலாந்தில் மிஸ்டர் E: B. ஹாவல் (Havell) என்கிற ஒரு ஆங்கிலேய நண்பர், அலங்கார வித்தையில் இந்தியாவானது ஆதிகாலத்தில் அடைந்திருந்த பெருமையை இப்போது அது இழந்து விட்டதைப் பற்றித் துக்கித்து, அந்த வித்தை மறுபடியும் முன்போல நம் வீடுகளில் பயிற்சி செய்யப்பட்டாலன்றி இந்தியாவுக்குப் பழைய பெருமை யுண்டாகாதென்று, பத்திரிகைகளில் எழுதி வருகிறார். நம் தேசத்தில் ஸ்திரீகள் வீட்டுக்குள்ளேயே நூல் நூற்பதும், துணி நெய்வதும் வழக்கமாயிருந்து வந்ததை நாம் அறிவோம். பஞ்சாப் தேசத்தில் உயர் வகுப்பு ஸ்திரீகள் கூட இப்படிச் செய்வதுண்டென்றும், அவர்கள் ராட்டினங்களில் நூல் நூற்கும்போது பாடும் பாட்டானது கேட்போர் மனதில் ஆனந்தத்தையும் தெய்வ பக்தியையும் உண்டாக்குமென்றும் சொல்லுகிறார். ஆஸாம் (Asam) தேசத்

இல் ஒரு வழக்கம் இருக்கின்றதாம். என்னவெனில், குடும்பத்தில் விவாகமாகாத பெண்கள் தங்கள் சோபன முகூர்த்தத்தில் தங்களுக்கும் தங்கள் மணமகற்கும் உதவும்படியான வஸ்திரங்களைச் செய்து வைத்துக் கொள்வதுண்டாம். இந்த வழக்கம் தென்னிந்தியாவில் சில இடங்களில் சமீபகாலம் வரையில் இருந்ததென்று கேட்கிறோம். இன்னும் எத்தனையோ திஷ்டாந்தங்கள் சொல்லக்கூடும்.

சிறு பெண்கள் காலை நேரத்தில் வீடுகளைச் சுத்தம் செய்து அலங்காரமான கோலங்கள் போடுகிற வழக்கம் இப்போது மறைந்து கொண்டு வருகிறது. இந்தக் கோலங்களை எவ்வளவோ யுக்தியாகவும் விசித்திரமாகவும் போட நம் பெண்கள் கற்றுக்கொள்வார்கள். உயர் குலத்து ஸ்திரீகள் நந்தவனங்களில் புஷ்பச் செடிகள் வைத்துப் பயிர் செய்து தேவதார்ச்சனைக் காகவும் சொந்த அலங்காரத்திற்காகவும் புஷ்பங்களைக் கொய்து தொடுக்கிற வழக்கம் போயே விட்டது. நம் வீடுகளில் உபயோகப் படும் ஒவ்வொரு தட்டு முட்டுச்சாமானும் ஏதோ ஒரு மாதிரியான சித்திரவேலை கொண்டதா யிருக்கும். நமது குத்துவிளக்குகள், செம்புகள், பஞ்சபாத்திரங்கள், தாம்பாளங்கள் — இவைகள் சித்திரவேலை இல்லாமல் இருக்கமாட்டா. எந்த வேலை செய்தாலும், வேலைக்காரர் அதில் ஒருவிதமான அழகு வாய்ந்த சித்திரம் வரையாமல் இருக்கமாட்டார்கள். இப்போது குத்துவிளக்குகளுக்குப் பதிலாய்க் கண்ணாடி விளக்குகளும், செம்பு தாம்பாளங்களுக்குப் பதிலாய்ப் பீங்கான் பாத்திரங்களும், உபயோகத்துக்கு வந்து



விடவே பழைய காலத்துச் சாமான்களால் உண்டாக்கப்பட்டு வந்த விசித்திர வேலைப் பிரியம் மறைந்து கொண்டு வருகிறது.

'ஹிந்து'ப் பத்திரிகைக்கு எழுதும் மிஸ்டர் ஹாவல் இந்த விஷயமாய் இந்தியாவுக்கு நேரிட்டிருக்கும் சீரழிவைப் பற்றி மிகுந்த கவலைப்பட்டு, படித்த இந்தியர்கள் ஜாதி வித்தியாசங்களை ஒழித்து விட வேண்டுமென்று முயல்வது முற்றிலும் சரியல்லவென்று வாதிக்கிறார். நமது ஹிந்துக் குடும்பங்களில் அநேக சடங்குகள் சம்பந்தமாயும், தெய்வ பூஜை சம்பந்தமாயும், நேர்த்தியான பல வழக்கங்கள் இருந்து வந்தன. இவைகளெல்லாம் இப்பொழுது அந்நிய நாகரிகத்தின் சக்தியால் அழிந்து கொண்டு வருகின்றன. ஹிந்துக் குடும்பங்கள் பூர்வ வழக்கங்களைக் கைவிட்டு ஆங்கிலேயக் குடும்பங்கள் போல் உருமாறி வருவதில், ஆங்கிலேயக் குடும்பங்களுக்குரிய அழகான வழக்கங்களைக் கொள்ளாமற் போய், அழகும் சாரமும் அற்றுப்போகின்றன. இப்படியெல்லாம் இந்தியாவுக்குக் குறைவுகளுண்டாவது அதில் அன்பு வைத்தவர் அனைவர்க்கும் ஆழ்ந்த விசனத்தை யுண்டு பண்ணுகின்றது. ஆனால் இந்தக் குறைகள் என்ன காரணங்களினால் உண்டாகின்றனவோ அவைகளைத் தடுக்க இந்தியா சக்தி பெற்றிருக்கவில்லை என்பதை நினைக்கும்போது, இந்த விசனம் இன்னும் அதிகமாய் ஆழ்ந்து கூர்மை அடைகின்றது.

### ஹிந்துக்களில் ஜனானா (படிதாண்டாப் பத்தினி) வழக்கம்.

தமிழ் ஸ்திரீகளுக்குள் ஜனானா வழக்கமில்லை. ஜனானா வழக்கமாவது, ஸ்திரீகள் தங்கள் புருஷர்

அல்லது குடும்பத்தைச் சேர்ந்த கிட்டின பந்துக்களாகிய ஆண்பிள்ளைகள் கண்ணில் படலாமே தவிர மற்ற ஆண்பிள்ளைகள் கண்ணில் படாமலும், வீட்டை விட்டு வெளியில் அன்னியர் பார்க்கும்படி சஞ்சரிக்காமலும் ஜீவிக்க வேண்டுமென்னும் வழக்கம். இந்த வழக்கம் ஆதியில் மகமதியரால் கொண்டு வரப்பட்டதென்றும் அவர்களைப் பார்த்து ஹிந்துக்கள் அதை அனுஷ்டிக்கிறார்களென்றும் நம்பப் படுகிறது. மகமதியருடைய மேம்பாடு அதிகமாயிராத இடங்களில் இந்த வழக்கம் அனுஷ்டானத்தி லில்லை. தமிழர், மகாராஷ்டிரர், தென் இந்தியாவின் மேற்கு பாகத்து ஜனங்கள், இவர்களுக்குள் இந்தவழக்கமில்லை. வங்காளம், வட இந்தியா, பஞ்சாப் இந்த மாகாணங்களில் மகமதிய ஸ்திரீகளைப் போல, கூலிவேலை செய்யும் வகுப்பாரைத் தவிர்த்து, மற்ற ஹிந்து ஸ்திரீகள் அனைவரும் இந்த வழக்கத்தையனுஷ்டிக்கிறார்கள். இராஜ குடும்பங்களில் மட்டும், மகா ராஷ்டிர குடும்பங்களானாலும் திராவிட குடும்பங்களானாலும் விலக்கில்லாமல், இது சர்வ சாதாரணமாக இருக்கின்றது. பூர்வ காலத்து நம் க்ஷத்திரிய இராஜ குடும்பங்களில் எவ்வளவு தூரம் இந்த ஜனானா வழக்கம் இருந்ததோ நிச்சயமாய்த் தெரியவில்லை. பொதுவாய் ஸ்திரீகள் நாணமும் அடக்கமு முள்ளவர்களாய்ப் புருஷர் சகவாசத்தினின்று ஒருவாறு ஒதுங்கியிருக்க வேண்டுமென்பது இந்துக்களில் எல்லா வகுப்பிலுமுள்ள பொதுவான அனுஷ்டானமா யிருந்தாலும், வீட்டுக்குள் தங்களுக்குப் பிரத்தியேகமாய் அமைத்துள்ள பின்கட்டில் அடைபட்டிருப்பதும், விசேஷ சமயங்களில் புருஷரு



டன் பேச நேரிட்டால் படுதா ஒன்று தொங்கவிட்டு அதிலுள்ள துவாரங்கள் வழியாகப் பேசுவதும், வெளியிற்போக நேரிட்டால் தங்கள் முகத்தையும் சரீரத்தையும் திரையால் மூடிக் கொள்வதுமாகிய வழக்கம் பூர்வீக காலத்து ஹிந்துக்களுள் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த வழக்கத்தால் ஸ்திரீகளுக்கு நேரிடும் பல கஷ்டங்களைப் பற்றி இங்கு விவகரிப்பது நமது எண்ணமல்ல. இதை யனுஷ்டிப்பவர் இதைத்தாங்கியே பேசி, இதை விட்டுவிட்டால் ஸ்திரீகளுக்குப் பல கேடுகள் நேரிடுமென்று நம்புகிறார்கள். ஸ்திரீகளே இதைத் தங்களுக்குற்ற அந்தஸ்தென்றும் மரியாதை என்றும் கருதுகிறார்கள். மேல்நாட்டு நாகரிகத்தை யங்கீகரித்த சிலர் மட்டும் இந்த வழக்கத்தைக் கண்டித்துப் பேசியும் தங்கள் குடும்பங்களில் நீக்கியும் வருகிறார்கள்.

ஹிந்துஇராஜ குடும்பங்களில் இந்த அனுஷ்டானத்தைப் பற்றிச் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்துபோன மிஸெஸ் இராம்ஸே மெக்டனல்ட் சில திருஷ்டாந்தங்களைச் சொல்லி லண்டன் பத்திரிகையொன்றி லெழுதியிருக்கிறார். பூர்வ இராஜபுத்திர இராஜ வம்சங்களில் ஒன்றாகிய உதயப்பூர் சமஸ்தானத்து இராஜாவை அவர் பார்த்தபோது நடந்ததைப் பின் வருமாறு சொல்லுகிறார்:—இந்த மகா ராஜாவை மகா ராணாவென்று சொல்லுவது வழக்கம். அவர் தற்காலத்து மேல்நாட்டு நாகரிகத்து வலையில் அகப்பட்ட அரசரில் ஒருவரல்ல. பழையகாலத்து இந்து நாகரிகம் மறைந்து போகிறதென்றும், பல புதுமைகள் தோன்றி வருகின்றனவென்றும் விசனப்பட்டுப் பேசினர். மிஸஸ்

சாம்லே மெக்டானல்டுடன் பேசினபொழுது தமது முழங்கால்களுக்குக் குறுக்கே கத்தியை வைத்துக் கொண்டு பேசினார். இவருக்குக் கிரமப்படி அமைச்சர் இருந்து ஆலோசனை சொன்னபோதிலும் சில சமயங்களில் அமைச்சரது ஆலோசனைப்படி நிறைவேற்றாமல், தமோற்ற மனடந்து தாமதிப்பது வழக்கம். இதற்குக் காரணம், தாம் செய்த முடிவை ஜனானிலுள்ள தமது மனைவி அங்கீகரிப்பதில்லை. உதயப்பூர் மகாராணி மற்ற இராஜபுத்திர ஸ்திரீகளைப் போல் ஜனானா வழக்கத்தை வெகு கண்டிப்பாய் அனுஷ்டிப்பவர். சமஸ்தானத்து விவகாரங்களைத் தமது புருஷரிடமிருந்தும் தம்மைச் சுற்றியுள்ள ஸ்திரீகளிடமிருந்தும் அறிய வேண்டியவர். அப்படியிருந்தும், இவர் இராஜீய விவகாரங்களில் மகாராஜாவுக்குச் சமானமான செல்வாக்கைச் செலுத்தி வருகிறார்.

இன்னொரு திருஷ்டாந்தமாக, மிஸ்ஸெஸ் மெக்டானல்டு குவாலியர் சமஸ்தானத்து ஸிந்தியாபிரபுவின் தாயாரைச் சொல்லுகிறார். ஸிந்தியா மகாராஜா வெகு காலம் மைனராயிருந்தபோது, பெரிய மகாராணியான இவரே தமது குமாரனைப் பயிற்றுவதும் இராஜாங்கத்தை நடத்துவதுமான பெருமையைக் கொண்டிருந்தார். தமது குமாரன் முதிர்ந்த வயதடைந்து தற்காலம் ஆங்கிலேய நாகரிகத்தை முற்றிலும் ஏற்றவர் போலிருந்தாலும், தம் தாயாருடைய செல்வாக்குக்கு அடங்கினவராகவே இருக்கிறார். மகாராஜாவுக்குப் பிள்ளை இல்லாத் துக்கம் அவர் மனதில் பெரும்பளுவாயிருப்பதால் ஹிந்து வழக்கப்படி வேறு விவாகம் செய்து கொள்ளுவாரோ, அல்லது ஆங்கிலேய வழக்



கத்தை யனுசரித்து இப்போதுள்ள ஸ்திரீயை ஒட்டியே இருப்பாரோ எனச் சந்தேகிக்கப்படுகிறது.

பரோடா இராஜகுடும்ப ஸ்திரீகளையும் ஒரு திருஷ்டாந்தமாக மிஸ்ஸெஸ் மெக்டானல்டு சொல்லுகிறார். இந்த மகாராஜா தமது மனைவி மக்களுடன் அடிக்கடி அன்னிய சஞ்சாரம் செய்கிறவரானாலும், அன்னிய தேசங்களில் ஜனானா வழக்கத்தை முற்றிலும் ஒழிப்பவரானாலும், அவர் தம் சமஸ்தானத்திலிருக்கும்போது மட்டும், ஸ்திரீகள் ஜனானா வழக்கத்தை அனுஷ்டித்தே வருகிறார்கள். மகாராஜாவின் மூத்த குமாரன் காலஞ் சென்று விட்டபடியால், அக்குமாரனை மணம் புரிந்த பெண் வைதவ்விய மடைந்து, மற்ற ஹிந்து ஸ்திரீகளைப்போல் உலகவாழ்க்கையினின்றும் நீங்கி ஜீவிக்கிறார். தம் புருஷனுடனும் பிதாவுடனும் அன்னிய சஞ்சாரம் செய்த சமயங்களில் ஜனானா வழக்கத்தை யொழித்து மேல் நாட்டு ஸ்திரீகளைப்போல் நடமாடினவரானாலும், இப்போது வைதவ்வியத்தினால் வீட்டுக்குள்ளேயே அடைபட்டு, தம் பிள்ளைகளைக் கவனிப்பதும் கல்வி கற்பதுமாய்க் காலங்கழித்து வருகிறார். வங்காளத்தில் ஜனானா வழக்கம் வெகு கண்டிப்பாயிருந்த போதிலும், பாத்வான் மகாராஜாவின் மனைவி அதை யொழித்தே விட்டார்.

இந்தத் திருஷ்டாந்தங்களை மிஸ்ஸெஸ் சாம்லே மெக்டானல்டு எடுத்துச் சொல்லுவது, ஹிந்து ஸ்திரீகள் ஜனானாவில் அடைபட்டிருந்தாலும், அவர்கள் பெருங் காரியங்கள் செய்யக்கூடுமென்றும், ஜனானாவில் நடப்பதை அறிய வகையற்ற ஆங்கிலேயர்கள் ஜனங்

களது மனதிலிருப்பதை அறிய முடியாதென்றும், இந்தியாவை ஆறுவாரத்திற்குள் அறிந்து விட்டார்களென்று தம்மைப் போன்றவர்களைக் கேலி செய்யும் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் இந்தியாவில் எவ்வளவு காலம் வசித்தாலும் பிரயோசனமில்லையென்றும் காட்டும் நோக்கத்துடனேயன்றி வேறல்ல.

### இந்திய ஸ்திரீகளும் மேல்நாட்டு ஸ்திரீகளும்.

டாக்டர் J. C. போஸ் என்னும் பிரக்கியாதிபெற்ற சாஸ்திர விற்பன்னரின் பத்னியாகிய ஸ்ரீ அபலாபோஸ் "இந்திய ஸ்திரீகளும் மற்ற ஸ்திரீகளும்" என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். டாக்டர் J. C. போஸ் கல்கட்டா காலேஜில் சாஸ்திர போதகராயிருந்து, தம் சாஸ்திர ஆராய்ச்சியால் உலகமெங்கும் பரவிய கியாதிபெற்றவர். சாதாரணமாய் அசேதன வஸ்துக்களென்று கருதப்படும் இரும்பு, செடி போன்றவைகளும் உணர்வும் அறிவும் உடையனவென்று அநேக சோதனைகளால் நிரூபித்து, மேனாட்டு சாஸ்திரிகளின் வியப்பையும் மதிப்பையும் அடைந்தவர். இவர் இருதயத்தில், நம் புராதன பெரியோரிடத்தும் அவர்கள் நமக்கு வைத்திருக்கும் விலைமதிக்கவொண்ணாத பூர்வார்ஜிதமாகிய கலைகளிலும் மிகுந்த பக்தி வைத்திருக்கும் ஊறிந்து. இவருக்கு வாய்த்த மனைவியாரும் இவரையொத்த மனத்தன்மைகொண்டவரென்றும் இவரின் அன்னிய தேசப் பிரயாணங்களிலெல்லாம் அந்த அம்மாளும் கூடப்போனதாகவும் பிரஸ்தாப வியாசத்தால் வெளியாகிறது.

நம்மில் ஆண் பிள்ளைகள் அயல் தேசங்களிலும் இங்கும் இந்திய ஸ்திரீகளைப்பற்றிப் பேசும்போதெல்



லாம், அந்த ஸ்திரீகள் தங்கள் கிரகங்களில் மிகுந்த கஷ்டத்துக்குட்பட்டு, இகழப்பட்டும், அடிமையாக்கப்பட்டு மிருப்பதுபோலப் பேசிப் பிறர் அனுதாபத்தைத் தூண்டுகிறார்களே, இது என்ன அறியாமை? என்று ஸ்ரீ அபலா போஸ் கேட்கிறார். அயல்நாடுகளில் ஸ்திரீகள் உழைப்பும் பாடும்படவில்லையென்பது உண்மையல்ல. வெளியிற் பார்ப்போர் ஆண்களாதலால், மேனாட்டு வீடுகளின் அமைப்பையும், ஏற்பாட்டையும், சிங்காரத்தையும், தூய்மையையும் கண்டு மலைக்கிறார்கள். அப்படி வீடுகளுக்குத் தோற்றத்தை யுண்டுபண்ண, அந்த ஸ்திரீகள் தினசரி எவ்வளவு பாடுபட்டிருப்பார்களென்னும் விசாரத்தில் இவர்கள் மனம் செல்வதில்லை. அமெரிக்கா போன்ற தேசங்களில் வேலையாள் கிடைப்பது அருமை; அதிகப் பணமும் கொடுக்கவேண்டும்; ஆகையால் யந்திர சாதனங்களின் உதவியைக்கூடிய மட்டில் அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அது எப்படியாயினும், இந்திய ஸ்திரீகளைப்போல மேனாட்டு ஸ்திரீகள் வீட்டில் உழைப்பதில்லையென்றே வைத்துக்கொள்வோம். ஒழிவு நேரம் அதிகமாய்க் கிடைத்தாலென்ன? காலத்தை எப்படி உபயோகிப்பதென்பதல்லவோ முக்கியமான பிரசினை? ஒழிவுநேரமென்றால் அர்த்தமென்ன? எந்த வேலை செய்யும்பொருட்டு எந்த வேலையினின்று ஒழிவு தேடுகிறது? ஞானமுள்ள ஒரு ஸ்திரீ, விளையாட்டுகளுக்கும், பரஸ்பர பேட்டி செய்வதற்கும் காலம் வேண்டியிருக்கிறதென்று தான் கணவனது துணையாகவும், தாயாகவும், இல்லாளாகவும் வசிக்கவேண்டிய பாரத்தினின்று விலகிக் கொள்ள முயலலாமா? சமூகத்தில் ஒவ்வொரு

ஸ்தாபனமும் நல்லது, அல்லது தீயது, என்று நிர்ணயிப்பதெப்படி? அது குணத்தை யுயர்த்துகிறதா? அல்லது தாழ்த்துகிறதா? என்று சோதிக்கவேண்டும். மானிட சுபாவம் மேம்பாடு அடைகிறதா என்பது நாகரிகத்தைப் பற்றிய முடிவான கேள்வியாகும். சமூகத்துக்கும், அதனுட்பட்ட ஒவ்வொரு மனிதருக்கும் பரஸ்பரம் இருக்கும் சம்பந்தத்தை யோசிக்கும்போது, நற்குணத்திற்கு அடையாளமென்ன? அன்பும், ஆத்மத்யாகமும், தான் தனது என்னும் உணர்ச்சியை ஆயுள் முழுவதும் தாழ்த்தியடக்கி வைத்தலும், ஆகிய இவையே நற்குணத்திற்கு அறிகுறிகளாகும். படிப்பு வேண்டுமென்பது எதற்கு? அதிகமாயும், அதிகமான வழிகளாலும், அதிக ஸ்திரமாயும் அன்பையுண்டாக்குகின்றதென்பதே கல்விப் பெருக்கின் லட்சணம். இப்படி யிராவிடில், கல்வி மானிடர்க்கு நன்மையல்ல; தீமையே யாகும். போட்டி செய்வதும், விளையாடுவதும், பகட்டாயுடுத்துவதும், அலங்காரங்கள் செய்துகொள்வதும் ஆகிய வற்றால் நடத்தையிலும் குணத்திலும் உயர்வு ஏற்பட்டு விடுவதானால், இந்திய ஸ்திரீகளும் அவைகளை யடைவதை லட்சியமாகக் கொள்ள வேண்டியது தான்.

மேனாட்டு ஸ்திரீகள் செல்வமும் அது காரணமாக அடையும் சுதந்தரங்களும் வேறு; புஸ்தகப் படிப்பாலல்ல, பயிற்சியின் பயனாகப் பெறும் ஒழுங்கும் தூய்மையும் பொலிவும் வேறு. இவற்றை நாம் கலந்து பார்க்கக்கூடாது. பிரித்துப் பார்த்தால், அடக்கமுள்ள மேனாட்டு ஸ்திரீயும் சாதாரண இந்து ஸ்திரீயைப்போல் உழைப்பவள் தான், என்று



ஸ்ரீ அபலாபோஸ் சொல்கிறார். மேனாட்டுச் சகவாசத்தால், இக்காலத்து 'சுக்ரஹணி'யின் பாரம் அவள் பாட்டி காலத்திலிருந்ததிலும் அபாரமாய் அதிகப்பட்டிருப்பதுண்மையே. ஆனால் பரிசுத்தமும் பொலிவும் அந்தப் பாட்டி காலத்தில் தான் நிகரற்றுப் பூர்த்தியாயிருந்தனவென் றுணரவேண்டும். சம்சாரத்தைப் பாதுகாக்கவும், ஆளவும் சக்தி யதிகமுண்டாகும் பொருட்டே கல்வி நமக்கு வேண்டுமே யன்றி, சம்சாரத்துக்குச் செலுத்தவேண்டிய கடமைகளை யொழித்துவிடும் பொருட்டல்ல; ஸ்திரீகள் சுதந்தரமென்று கூச்சல் போடும் இக்காலில் மனித ஜன்மத்தின் முக்கிய சுதந்தரம் யாதெனில், ஊழியம் என்றும், தன் வீட்டுக்கும் தன் ஜனத்துக்கும் ஊழியம் செய்வதிலும் ஒரு ஸ்திரீக்கு தெய்வத்தன்மை பெற்ற சுதந்தரம் வேறில்லை யென்றும் மறக்கப்போகாதென்று எச்சரித்து விட்டு, நம் ஜாதீய நன்னெறியைவிட்டு விலகாது நம்மைக் கடவுள் காப்பாராக என்று இந்த அம்மை பிரார்த்தனை செய்கிறார்.

"மேனாடுகளில் இரண்டுவிதமான ஸ்திரீகளுண்டு. தன்னலமும், தோற்றப் பிரியமும், சுகத்தில் நாட்டமும் கொண்டு சம்சார பாரத்துக்கு அஞ்சியவரையும், கிரகத்தை யன்றி வெளியிடத்தில் பிரகாசிக்க ஆவல் கொண்டு, பொறுப்புணர்ச்சி யின்றியும், வரம்பு கடந்தும் நடப்பவரையும் போல் உள்ளவர் ஒருவிதம். மற்றொரு விதமான உயர் மாதர்களை, இந்தியாவிற்போல, அமெரிக்கா ஐரோப்பாவிலும் பார்த்திருக்கிறேன். அவள் குடும்பத்துக்கே தன்னையும் தன் வாழ்நாளையும் அர்ப்பணம் செய்கிறவளாய், ஸாவித்திரி யென்னும் பேரைக்

கேட்ட மாத்திரத்தில் அவள் அந்நியளாயிருந்தாலும், மனக்கிளர்ச்சி கொள்பவளாய், ஓயாது உழைத்து தன் கணவன் குழந்தைகளுக்குக் கூடிய சாதகங்கள் செய்து அவர்களை யின்றிச் சுகானுபவம் எப்படி யிருக்குமென்று ஸ்மரிக்கவும் செய்யாதவள்.”

மேனாட்டை யொட்டிய எந்த வழக்கமும், எந்த குணமும், எந்த ஸ்தாபனமும் இந்திய சமூகத்துக்கு அவசியமாகும்; அவையில்லாமையால் இந்திய சமூகம் அளவில்லாத சங்கடங்களை யனுபவிக்கிறது என்று, அவற்றில் மோகம் கொண்டவர்கள் பலர் நம்முள் படித்தவர்களிலும் இருக்கிறார்கள். இவ்வித மனச்சார்பு கொண்டவர்கள் ஒரு புறமிருக்க, மேனாட்டு நாகரிகம் கேவலம் உலகவாழ்க்கையின் தேவைகளைப் பெருக்கி, அதற்கான சௌகரியங்களை யமைத்து, உயர்புலனுக்கும் பாரமார்த்திக ஞானத்துக்கும் வழிவிடாமற் செய்து விடுகிறதென்று அந்த நாகரிகத்தில் வெறுப்பும் சம்சயமும் கொண்டவர்களுக்கும் நம்மிற் குறைவில்லை. ஆனால், இவ்விரண்டு அபிப்பிராயங்களுக்கும் ஆதாரமில்லையென்று சொல்வதற்கில்லை. விசாரிப்போரின் மனச்சார்பையும் பார்க்கக் கிடைத்த தருணங்களையும் இடங்களையும் பொறுத்து அபிப்பிராய மாறுபடுவது சகஜமே. அவரவர்கள் பரிச்சயத்தின் மேல் அபிப்பிராயம் வெளியிடுவதால், மேனாட்டு நாகரிகத்தைப் பற்றி முழுமையும் முடிவாய் நிர்ணயிக்க அந்த அபிப்பிராயம் போதாமையாகிறது. ஸ்ரீ அபலாபோஸைப் போல படிப்பும், பக்தியும், தேசாபிமானமும், அன்னியதேசப் பழக்கமும் உடைய நம்மாதர்கள் மேனாட்டுச் சகோதரிகளையும், அவர்கள் சம்



சார வாழ்க்கையையும் பற்றிப் பேசத் தகைமை யுள்ளவர்களென்று யாரும் ஒப்புக் கொள்வார்கள். ஆகையால் இந்த அம்மாள் மேனாட்டாருள் எவ்வளவோ உத்தம மாதர்களிருக்கிறார்களென்று சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்கள் வாழ்க்கையும் உள்ளமும் இந்திய மாதர்கள் வாழ்க்கையும் உள்ளமும் ஒரு தன்மையவே என்பதும், “செல்வமிருந்தென்ன, அதனால் ஆத்ம ஞான முண்டாகுமா”? என்று நாடும் மனப்பான்மையே ஸ்திரீகளுக்குப் பொருத்தமானது என்பதும் இக்காலம் சாதாரணமாய்க் காணப்படும் பல தப்பெண்ணங்களையும் கெட்ட வழக்கங்களையும் நீக்கக்கூடியன.

## ஜப்பானிய ஸ்திரீகள்.

நம் தேசத்தில் ஸ்திரீகள் பொதுவாய் வேலை செய்து சம்பாதிப்பது வழக்கமல்ல. கேவலம் கூலிக்காரர்கள் வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள் மட்டும் வீட்டிற்கு வெளியே போய் சம்பாதிப்பதுண்டு. மற்ற வகுப்புகளைச் சேர்ந்த ஸ்திரீகள் வீட்டு வேலைகளைச் செய்வார்களே யன்றி வெளியே போய், புருஷரைப் போல் சம்பாதிப்பது வழக்கமில்லை. நம் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று சொல்லும்போது சாமானிய ஜனங்கள் ஸ்திரீகள் படித்துச் சம்பாதிக்கப் போகிறார்களாவென்று அதை ஒரு ஆக்ஷேபமாகச் சொல்லுகிறார்கள். ஜப்பான் தேசத்தில் ஸ்திரீகளின் நிலைமை வேறு மாதிரியாக இருப்பதாகத் தெரிகின்றது. விவசாய வேலையும் கூலிவேலையும் செய்யும் ஸ்திரீகளன்றி மற்ற ஸ்திரீகள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயினும்,

ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து சம்பாதிப்பது வழக்கமா யிருப்பதாக அறிகிறோம். உயர்ந்த வகுப்பு ஸ்திரீகளும் வேலை செய்கிறது உண்டாம்; வேலை எதற்குச் செய்கிறாய் என்றால், "என்ன, பைத்தியக்காரனா யிருக்கிறாய்? வேலை செய்யாமல் தூக்கத்திலும் வீண் பேச்சிலும் காலம் கழிக்க வேண்டுமா? என்று இந்த ஸ்திரீகள் பதில் சொல்லுவார்களாம். ஜப்பானில் ஆண் பிள்ளைகளைப் போல பெண் பிள்ளைகளும் ஸ்கூல்களில் வாசிப்பது கட்டாயமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இலவசமாக ஆறு வருஷகாலம் கீழ்த்தர ஸ்கூல்களில் படிப்புப் பெறுவார்கள். ஆகையால், எந்தப் பெண் எந்த வேலை செய்தாலும், அவள் படித்தவளாகவே யிருப்பாள். இன்னவேலை செய்வது, இன்னவேலை செய்வதில்லை என்கிற வித்தியாசமுமில்லை, அம்பட்டன் வேலை செய்வார்கள்; ஷாப்புகளில் வேலை செய்வார்கள்; பாக்டரி அல்லது தொழிற்சாலைகளில் வேலை செய்து கூலி பெறுவார்கள்; சங்கீத வாத்தியங்கள் செய்வதிலும், சங்கீதம் சொல்லி வைப்பதிலும், ஜீவனம் செய்வார்கள். போஸ்டு ஆபீஸ்களிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும் குமாஸ்தாக்களாக இருப்பார்கள்; தையல்வேலை செய்வார்கள். இந்த நானாவித வேலைகளுக்கு தினம் ஆறு அணா முதல் 1½ ரூபாய் வரைக்கும் கூலிகள் கிடைக்குமாம். அநேக ஸ்திரீகள் ஸ்கூல்களில் உபாத்தியார்களாயிருந்து கௌரவமாய் ஜீவனம் செய்வார்கள். இந்த வேலைகள் அனைத்தும் சாமான்னிய மத்திய வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள் செய்ய, சம்பாதித்து ஜீவிக்கும் நிலைமையில் இல்லாத உயர்குல ஸ்திரீகள் சும்மா இருப்பதில்லை. இவர்



களில் அநேகர் வைத்திய சாலைகளில் தாதிமார்களாய் அமருகிறார்கள். தாதிவேலை செய்கிறதற்குப் படிப்பு அவசியமாகையால், அத்தொழிலுக்காக ஏற்பட்டிருக்கும் ஸ்கூல்களில் பயிற்சி பெற்று, ஒரு சர்டிபிகேட்டும் (Certificate) பெறுவார்கள். சர்டிபிகேட்டு இல்லாதவர்கள் இந்த தாதிவேலை செய்ய யோக்கியதை இல்லாதவர்களாகவே கருதப் படுவார்கள். ஜப்பானில் ஸ்திரீகளடங்கிய தேசாபிமான சங்கம் ஒன்று இருக்கின்றதாம் அதில் தேசத்தில் எல்லாவகுப்புகளையும் சேர்ந்த ஸ்திரீகள் மெம்பர்களாய்* இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தேசம் சமாதானமா யிருக்குங் காலங்களில் பொது நலத்தின் பொருட்டு மதம், ஒழுக்கம், கல்வி, தொழில் இத்தகைய பற்பல துறைகளில் வேலை செய்வார்கள். ஜப்பானியரது மதம்பௌத்த மதமாகையால் அந்த மதத்தைப் போதிக்கும் ஆசாரியர்களாய்ப் பல ஸ்திரீகள் வேலை செய்வார்கள். யுத்த காலங்களில் இந்த தேசாபிமானச் சங்கத்தில் சேர்ந்த ஸ்திரீகள் யுத்தத்துக்குச் சென்றிருக்கும் போர்வீரர்களுக்கு அவசியமான உடை, உண்டி முதலிய பதார்த்தங்களைச் செய்து அனுப்புவார்கள். சில ஸ்திரீகள் யுத்த களத்திற்கே சென்று அங்கு காயப்பட்டவர்களுக்கும், வியாதி வந்தவர்களுக்கும் தாதிமார்களாய்ப் பணிவிடை செய்வார்கள். இவ்வாறு ஸ்திரீகளும் புருஷரைப்போல் படித்தவர்களாயும், தேசாபிமான முள்ளவர்களாயும் சோம்பல் என்பதே இல்லாமலுழைக்கிறவர்களாயும் இருப்பார்களானால் ஜப்பான் தேசம் சொற்ப காலத்திற்குள் உன்னத நிலைமைக்கு வந்திருப்பது ஆச்சரியமல்ல. அத்தேசத்தாருக்கு இம்

மாதிரியான உயர்ந்த குணங்கள் அமைந்தது என்ன விசேஷ காரணங்களாலோ அறியக் கூடவில்லை. என்றாலும், சாதி பேதமின்மை, சிறு தேசமாயிருத்தல், பாஷை வேறுபடாமல் ஒன்றாயே இருத்தல், மதமும் ஒன்றாகவே அமைந்திருத்தல், நாகரிகத்தைப் (பிலிப்பைன் தீவாரைப்போல முரட்டுச் சாதியார்கள் அல்ல) படைத்திருத்தல், குளிர்ந்த தேசத்தில் வசித்து சுறுசுறுப்பான தன்மை கொண்டிருத்தல் ஆகிய இவையாவும் காரணங்கள் என்னலாம். அவர்களுடைய சரித்திரமும், அவர்களுடைய செயல்களும், அன்னியர்களுடைய நல்ல குணங்களை கிரகிக்கும் சக்தியும் அத்தியாதிசயமாயிருக்கின்றன. இந்தியர் ஜப்பானியரைப் போல் ஆகக்கூடுமென்று நாம் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறோம். அத்தேசத்தைப் பற்றி நாம் கேள்விப்படுகிறதைப் பார்த்தால், அதற்கும் நம்தேசத்திற்குமுள்ள வித்தியாசம் ஒழிக்கக் கூடியதாய்த் தோன்றவில்லை. ஆயினும், இந்தியாவும் மேலான ஸ்திதிக்கு வருமென்றே நாம் நம்பியிருக்கிறோம்.

## குழந்தைகளின் மரணம்.

கல்கத்தாவில் பிரசுரமாகும் "காபிடல்" என்கிற பத்திரிகையில், வெங்காளத்திலும் இங்கிலாந்திலும் நேரிடும் குழந்தைகளின் மரண விகிதங்களை ஒப்பிட்டு, வெங்காளத்தில் பிறந்த குழந்தைகளில் அரைப்பங்கு இறந்து போவதாகத் தெரிவதால், கவர்ன்மெண்டார் அதற்குக் காரணங்களை விசாரித்து அறிந்து, வெங்காளத்து மரண விகிதங்களைக் குறைக்கவேண்டுமென்று ஒருவரெழுதுகிறார். இங்கிலாந்தில் இந்த வருஷத்தில் முதல் 3 மாசங்களில், 1000-க்கு 122 குழந்தைகளும்,



இரண்டாவது 3 மாசங்களில் 1000-க்கு 95 குழந்தைகளும் இறந்துபோயின. இதற்கு முற்பட்ட பத்துவருஷங்களில் நேரிட்ட மரணங்களைவிட மேலே குறிப்பிட்ட மரணங்கள் சராசரி 17 குறைவெனக் கணக்கிடப்படுகிறது. வெங்காளத்திலோ பிரதி மாசமும் 5000 குழந்தைகள் இறந்து போகின்றன. இப்படி மரணங்கள் நேரிடுவதைக் கவர்ன்மெண்டார் கவனியாமலிருப்பது பிசகென்றும் இந்தப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கின்றது.

பிறந்த குழந்தைகள் ஜீவித்து புஷ்டியாய் வளர்ந்து யௌவன பருவத்தில் பொருளாகக் கூடிய பற்பல தொழில்களை நடத்தினாலன்றித் தேசம் க்ஷேமப்படுவது சாத்தியமல்ல. பிறந்த குழந்தைகள் இறவாமல் ஜீவித்திருப்பதோடு, புஷ்டியுடன் வளர்க்கப்படவும் வேண்டும். இந்த இரண்டும் நம்தேசத்தில் இல்லை. ஆகையினாலேயே, வேலைசெய்யும் வகுப்பார் வரவரத் திடனற்றவர்களாய் அதிகவேலை செய்ய முடியாமல், அவர்களும் கஷ்டப்படுவதன்றி, தேசத்துக்கு விளையக்கூடிய நன்மையும் குறைந்து போகின்றது. வெங்காளத்தில் மாசம் 5000 குழந்தைகள் இறந்து போனாலும், பிழைத்திருக்கும் குழந்தைகளில் எத்தனை புஷ்டியுடன் வளர்ந்து வியாதி வெக்கைகளில்லாமல் வேலைசெய்யக் கூடியனவாய் இருக்கின்றனவோ தெரியாது. பிழைத்திருக்கும் குழந்தைகள் திடகாத்திரங் கொண்டவையாயிராமலிருந்தால், அவைகள் ஒருவர்க்கும் பிரயோசனமாயிராமல் இருப்பதோடுங்கூட, தொந்தரவுக்குக் காரணமுமாகும். நம்தேசத்தில் சில பாகங்களில் ஜனவிருத்தி கிரமமான விகிதப்படி ஆக

யில்லையென்று கவலைக்கிட முண்டாயிருக்கின்றது. பிறந்த குழந்தைகளில் சரிபாதி குழந்தைப் பருவத்திலும், மிகுந்தவை அற்பாயுளிலும் மாண்டு போய் விட்டால், ஜனவிருத்தி எப்படி. கிரமப்படி ஆகும்? இப்படிப்பட்ட நிலைமையானது உலகத்தில் எத்தேசத்திலுமில்லை. இதைப்பற்றி நம்மவர்கள் கவலை செலுத்த வேண்டுமென்று பலமுறை பலர் சொல்லுகிறார்கள்.

இதன் காரணங்களைக் கவர்ன்மெண்டார் தக்கவர்களைக் கொண்டு விசாரணை செய்து பிரசுரப்படுத்துவது அவசியமாயினும், அவைகளுக்கு நிவர்த்திகள் பெரும்பாலும் ஜனங்கள் செய்துகொள்ள வேண்டியனவேயன்றி, கவர்ன்மெண்டார் செய்யக்கூடியன அதிகமில்லை. முக்கியமான காரணங்கள் நம்மவரின் வறுமையும் அறியாமையும் என்று தொகுத்துச் சொல்லலாம். ஸ்திரீ புருஷர் திடசரீரிகளா யிருந்தாலன்றி, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பலமற்றவைகளாய் அற்ப வியாதிகளால் மாண்டுபோகும். முக்கியமாய் ஸ்திரீகள் கர்ப்ப காலத்தில் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். அரை வயிற்றுக்கு மில்லாமல், இரவெல்லாம் உழைத்து ஜீவிக்கும் கர்ப்பிணிகள் பெறும் குழந்தைகள் உயிருடன் இருத்தல் அரிது. உயிருடனிருந்தாலும், குழந்தைக்குத் தக்க ஆகாரம் கொடுத்து வளர்க்கவும் மற்றப்படி அது வியாதிமுதலான ஆபத்துக்களுக்குத் தப்பும்படி செய்யவும் தாய்மார்களுக்கு அறிவு அவசியம் வேண்டும். இப்படி வறுமையாலும் அறிவின்மையாலும் நேரிடும் தீங்கு பெரும்பாலும் ஏழை வகுப்பாரில் நேரிடுகின்றதாயினும், உயர்ந்த வகுப்பாரில் அறியாமையால் நேரி



டும் தீங்குகளுக்குக் குறைவில்லை. "காப்பிடல்" பத்திரிகை குறிப்பிடும் மரண விகிதம் கல்கத்தா, பம்பாய், போன்ற பெரும் பட்டணங்களில் நேரிடுகின்றதாயினும், சிறு பட்டணங்களிலும், குக்கிராமங்களிலும் மேற்குறித்த காரணங்களால் அநாவசியமான மரணங்கள் நேரிடாமலிருப்பதில்லை.

ஏழைகளுக்கு நேரிடும் ஆபத்துக்களை ஏழைகளே நிவர்த்தி செய்துகொள்ளச் சக்தியற்றவர்கள். தேசத்தில் தொழில்கள் அதிகமானால் ஏழைகளுக்கு ஜீவனோபாயங்கள் அதிகப்பட்டு, அவர்களைப்பிடிக்கும் வறுமை குறையும். கிராமாந்தரங்களிலும், மற்றிடங்களிலும் ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டு ஏழை வகுப்பாரிலும் அறிவு பரவுமானால், பெற்றோர்கள் அறிவுள்ளவர்களாகி, குழந்தைகளை ஆபத்து நேரிடாமல் வளர்ப்பார்கள். பெரும் பட்டணங்களில் ஏழைகள் வந்து குவிகிறார்கள். அவர்களுள் அநேகர் பிழைப்பில்லாமலும், வசிக்க இடமில்லாமலும், தெரு ஓரங்களிலும் சாக்கடை ஓரங்களிலும் வசித்துப் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பவர்கள் உண்டு. இவர்களுக்குத் தர்மவான்களும் கவர்ன்மெண்டும் இரங்கி உதவி செய்யவேண்டும். பசியார ஆகாரங் கொடுக்கும்படியான தொழில்களை உண்டாக்க வேண்டும். சுத்தமான வாசஸ்தலங்களையும் உண்டாக்கி ஏழைகளை அங்கே வசிக்கும்படி செய்ய வேண்டும். போதுமான வைத்திய சாலைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அநாதைகளாய்த் திரியும் குழந்தைகளை போஷிடத்தில் சேர்த்து வளர்க்கும்படியான ஆசிரமங்கள் ஏற்படவேண்டும். பெரும் பட்டணங்களிலாவது படிப்பைக்

கட்டாயமாக்கி, ஏழைகளுக்கு இலவசமாய்ச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இவையெல்லாம் ஐரோப்பிய தேசங்களில் செய்யப் படுகின்றன, ஜனங்கள் வெகு நெருக்கமாய் வசிக்கும் பட்டணங்களடங்கிய இங்கிலாந்தில் 1000-த்தில் 100-க் கதிகப்படாத மரணங்கள் நேரிட, ஜனங்கள் அவ்வளவு நெருக்கமில்லாமல் வசிக்கும் கிராமங்க ளடங்கிய வங்காளத்தில் 1000-த்தில் 500-குழைந்தைகள் இறப்பதற்கு மேற்சொன்ன காரணங்களை யன்றி வேறில்லை. தற்காலம் நம் தேசாபிமானிகள் எத்தனையோ வழிகளில் தேச க்ஷேமத்தை நாடி யுழைக்கிறார்கள். ராஜாங்க சுதந்தரம் எவ்வளவு நமக்குக் கிடைத்த போதிலும், உயர்தரக் கல்வியும் சாஸ்திர ஞானமும் எவ்வளவு பரவின போதிலும், ஒழுக்கமும் நாகரிகமும் எவ்வளவு சீர்பட்ட போதிலும், சர்வஜனங்களுக்கும் ஜீவனத்துக் காதாரமான அன்ன வஸ்திராதிகளை யுண்டு பண்ணும் வேலை செய்யும் வகுப்பார் பல மில்லாதவர்களாய்ப் பிணியால் வருந்துவோ ராயும் அற்பாயுளில் இறப்பவர்களாயு மிருந்தால், அந்தத் தேசம் எப்படிச் செழிக்கும்?

## சிசுவதை.

இந்தியாவில் சிசுவதை இரண்டு வகைப்படுமென்று சொல்லலாம். (1) குழந்தையை ஆண்பெண் என்னும் வித்தியாசம் பாராமல் கொலை செய்தல்; (2) பெண் குழந்தையைக் கொலை செய்தல். இவற்றில் முதல் வகையான கொலை மற்ற நாடுகளில் எக்காரணங்களாற் செய்யப்படுகிறதோ, அக்காரணங்களாலேயே இந்தியாவிலும் செய்யப்படுகிறது. ஆனால் இந்தியாவில் பால விவாகமும், விதவைகளுக்கு மறு மண மின்மையும்,



ஆகிய இரண்டு வழக்கங்கள் இருக்கின்றன. முதல் வழக்கம், வயதான கன்னிப்பெண்கள் நெறிதவறி, கள்ளத்தனமாய்ப் பிள்ளைகள் பெற்று, அவற்றைக் கொலை செய்வதாகிய மற்ற நாடுகளில் காணப்படும் கொடுமை இந்தியாவில் மிகாமல் தடுக்கிறது. விதவைகளுக்கு மறு விவாகத்தை அனுமதிக்காமையாகிய மற்றொரு வழக்கத்தால் கள்ளத்தனமாய்ப் பிள்ளைகள் பெற்றுக் கொலை செய்வது இந்தியாவில் மிகுகிறது. ஆகவே, சிசுவதை செய்வதாகிய குற்றத்திற்கு உட்படுபவர்கள் மேனாடுகளில் பெரும்பாலும் கன்னிகைகளா யிருக்க, இந்தியாவில் பெரும்பாலும் ஹிந்து விதவைகளா யிருக்கிறார்கள்.

பெண்ணாய்ப் பிறந்த சிசுக்களைக் கொலை செய்வது இந்தியாவில்தான் நடக்கிறது. இதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம். ராஜபுத்திரர்கள், தாகூர்கள் போன்ற க்ஷத்திரிய ஜாதியார்களிற் சில வகுப்பார், தங்கள் பெண்களுக்குத் தங்களுக்குச் சமமான குடும்பத்தில் சம்பந்தம் கிடைக்காவிட்டால், தங்கள் குலத்துக்கு இழிவாகுமென்று கருதுவது இக்கொலைக்கு ஒரு காரணம். பெண்களைப் பெற்றோர் விவாகம் செய்யும்போது மிகுந்த ஆடம்பரமாக நடத்தவேணுமென்று வழக்கத்தில் ஏற்பட்டுப்போனதால், அப்படிப் பெரும் பணம் செலவு செய்வதற்குப் பயப்படுவது இன்னொரு காரணம். மூன்றுவது, வயது வந்த பிறகு பெண்களைக் கன்னிகைகளாய் வைத்திருப்பது மானக்கேடு என்றுள்ள கொள்கை.

1870-ம் வருஷத்தில் பெண் சிசுக்களைக் கொலை செய்வதைத் தடுக்கும்படி பிரிட்டிஷ் கவர்ன்மெண்

டார் ஒரு சட்டம் செய்தார்கள். இந்தக் கொடுமை இப்போது நிரம்பவும் குறைந்திருந்தும் ஒழிந்தபாடில்லை: 1870—ல் சட்டம் செய்வதற்கு முன் கவர்ன்மெண்டார் இக்கொடுமை எவ்வளவு நடக்கிறதென்று நிர்ணயிக்கும் பொருட்டு ஒரு விசாரணை நடத்தினார்கள். காசியில் அநேக கிராமங்களிற் பெண் குழந்தைகளே இல்லை. மைன்புரியில் முப்பது கிராமங்களில் 329 ஆண் குழந்தைகளும் 37-பெண் குழந்தைகளும் இருந்தன. ஒன்பது கிராமங்களில் பெண் குழந்தைகளே இல்லை. மேலும், வடமேற்கு மாகாணங்களில் ராஜபுத்திரர்கள் வசிக்கும் ஏழுகிராமங்களில் 104—ஆண் குழந்தைகளுக்கு ஒரே பெண் குழந்தையும், வேறு ஒன்பது கிராமங்களில் 71-ஆண் குழந்தைகளுக்கு ஏழு பெண்குழந்தைகளும் இருந்தன. கூர்ச்சர தேசத்தைச் சேர்ந்த கத்தியவாரிலும் (Kathiawar) கச்சிலும் (Kutch) இந்தக் கொடுமை அதிகமிருந்தது. (1840-ல்) கச்சில் ஜடேஜா என்னும் சுத்த இராஜபுத்திரக் குழந்தைகளாய் 4912 ஆண்களும் 335 பெண்களும் இருந்தன. இந்தக் கொடுமையை அடக்கும் பொருட்டுச் சில திட்டங்கள் செய்த விடங்களில் பெண் குழந்தைகளின் தொகை நிரம்பவும் பெருகியதென்று கவர்ன்மெண்டாருக்குத் தெரியவந்தது. உதாரணமாக, மைன்புரியில் ராஜபுத்திரப் பெண் குழந்தைகளே இல்லாதிருந்து, 13 வருஷங்களில் 250 பெண் குழந்தைகளாயும் ஆக்ரா டிஸ்டிரிக்டில் சில வருஷங்களில் பெண்களின் தொகை இரட்டித்தும் பெருகிவிட்டது.

மொத்தத்தில் பெண் சிசுக்களைக் கொலைசெய்வது இப்போது அரிதாகி விட்டது; நாகரிகம் பெருத சில



மலைச்சாதியார்களுள் இது நடைபெறுகிறது. கவர்ன்மெண்டார் இதை நிறுத்தப் பாடுபட்டு வருகிறார்கள். இப்போதும் அரிதாக இரண்டொரு கேசுகள் வெளிவருகின்றன. சிசுக்களை ஆணையும் பெண்ணையும் கொலை செய்யும் மற்றொருவிதக் கொடுமை அதிகமாயிருக்கிறது. விதவைகள்—பொதுவாய் உயர் வகுப்பார்கள்—மறு விவாகம் செய்யக் கூடாதென்ற நிர்ப்பந்தம் இருக்கிற வரையில், இந்தக் கொடுமையும் நீங்காதிருந்து வருமென்றே கருதவேண்டும். குழந்தை பிறந்தவுடன் அதைக் கொன்று மறைத்து வைத்து இரகசியமாய் ஒழித்துவிடப்படுகிற தாகையால், இந்தச் செய்கை, கொலையும், மறைத்து ஒழித்தலுமாகிய இரண்டு குற்றங்கள் அடங்கியது. இவ்விரண்டு குற்றங்களுக்கும் தனித்தனி தண்டனை இந்தியன் பீனல் கோடில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### அனாதைக் குழந்தைகள்.

சமீபத்தில் சென்னை ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளாகிய ஸர் ரால்ப் பென்ஸனும் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர்-ரஹீமும் [illegible] மகா கோரமான கொலைக்கேஸில் தண்டனையை அப்பீலில் உறுதி செய்தார்கள். விசாகபட்டணம் ஜில்லாவில் லிங்கப்பனசா என்கிற ஒரு ஊரில் கூலிவேலை செய்யும் ஒருவன் வேலைசெய்து விட்டுப் பகலில் வீட்டுக்குவந்து தன் பெண்சாதியைச் சாப்பாடு போடும்படி கேட்க, அவள் குழந்தைகள் தொந்தரவு செய்தபடியால் சாப்பாடு தயாராகவில்லை, தயாராகச் சற்றுநேரம் செல்லுமென்று சொன்னாள். உடனே அந்த வேலைக்காரன் அடங்காத வெறிகொண்டு வாளை எடுத்துத் தன் பெண் ஜாதியை ஒரே வீசாய்

வீசிக்கொன்று பிள்ளைகளையும் வீச ஆரம்பித்து, மூன்று பிள்ளைகளைக்கொன்று விட்டான். அதற்குள் மூத்த குழந்தையாகிய 7-வயதுப் பெண் கடைசிக் குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு வெளியே ஓடித் தப்பிக்கொண்டாள். கொலை செய்தவன் செஷன் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டபோது, அந்தச்சமயத்தில் தனக்கு வெறிவந்து ஒன்றும் தெரியாமல் செய்ததாகச் சொல்லியும், செஷன்ஸ் கோர்ட்டிலும் ஹைகோர்ட்டிலும் அவனுக்கு மரணதண்டனை விதித்து உறுதிசெய்யப்பட்டது. சென்னை H. E. கவர்னர் கருணைகூர்ந்து தமது சுதந்தரத்தைச் செலுத்தி மரணதண்டனையைத் தீபாந்திர சிட்சையாக மாற்றினாலன்றி, இவன் சில தினங்களில் தூக்கப்பட்டுப்போவான். மேற்றிசைத் தேசங்கள் சில வற்றில் கொலைக்குக் கொலைவாங்கும் சட்ட நிபந்தனை இல்லாமல்; கொலைக்குற்றம் செய்தவர்களை ஆயுள் பரியந்தம் காவலில் வைப்பதைத் தவிர மரணதண்டனைக்கு உட்படுத்துவதில்லை. இந்தியாவிலும் இப்படிச் சட்டத்தை மாற்றவேண்டுமோ என்கிற விஷயத்தைப்பற்றி இங்குக் கவனிப்பது நமது நோக்கமல்ல.

கொலை செய்தவனுக்கு ஆயுள் பரியந்தம் தீபாந்திர சிட்சை விதித்தாலும் பிள்ளை குட்டிகளைக் காப்பாற்ற அவன் உதவமாட்டான். அப்படிப்பட்ட மூர்க்கன் வசத்தில் தப்பின குழந்தைகளை மறுபடி ஒப்புவிப்பதும் சரியல்ல. இந்த வெறியன் மூன்று குழந்தைகளைக் கொன்றதுந் தவிரத் தாயையும் கொன்றுவிட்டான். இவனையும் சட்டப்படி தூக்கிவிட்டால் தப்பின இரண்டு குழந்தைகளைச் சம்ரக்ஷிப்பவர் இல்லை. இந்தக்



குழந்தைகளின் கதியென்ன? சமீபத்தில் இதுபோன்ற ஒரு கேஸில் தாயானவள் தண்டனைப்பட, குழந்தைகள் கதியற்றுப் போயின. இம்மாதிரி கேசுகள் அடிக்கடி நேரிடுவதுமன்றி வேறு காரணங்களாலும் சிறு குழந்தைகள் ரக்ஷிப்பவர்களில்லாமல் நிர்க்கதியாய் விடப்பட்டுப் போக, அக்குழந்தைகள் நல்ல சகவாசமில்லாமலும், நல்ல தொழில்களில்லாமலும் கெட்ட வழிகளில் பிரவேசித்துத் தங்களுக்கே தீங்கு செய்து கொள்வதுமன்றி, ஊராருக்கும் அவர்களுடைய துர்நடத்தையால் தீங்கு விளைவிக்கிறார்கள். சில சமயங்களில் இப்படிப்பட்ட அநாதைக் குழந்தைகள் எந்த ஜாதியைச் சேர்ந்தவையாயினும் கிறிஸ்தவப் பாதிரிகள் கண்டு தங்கள் சம்ரக்ஷணையில் வைத்துக் கொண்டு கிறிஸ்தவர்களாக்கி விடுகிறார்கள். இப்படி நேரிடுவதைத் தடுப்பது கவர்ன்மெண்டின் கடமை யென்று சொல்லலாம். கவர்ன்மெண்டின் கடமை யில்லாவிட்டாலும் தேசத்திலுள்ள பிரபுக்களும் தர்மசிந்தையுள்ளவர்களும் மதாபிமானிகளும் நாதனற்றுப்போகும் குழந்தைகளை ரட்சித்து நல்ல வழிகளில் கொண்டுவரும்படியான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஐரோப்பிய தேசங்களில் இம்மாதிரி செய்வது சாதாரண வழக்கம். ஹிந்துக்களுள் அன்னசத்திரம் கட்டுவதும், கோவில் குளங்கள் நிர்மாணிப்பதும், எப்படி உத்தமமான தர்மமாக மதிக்கப்படுகின்றனவோ, அப்படி அத்தேசங்களில் அநாதாலயங்கள் ஸ்தாபித்து நடத்துவது உத்தமமான தருமமாகக் கருதப்படுகிறது. ஹிந்துக்களுக்குள் இந்த வழக்கம்

ஏற்படவில்லை. அனாதைக் குழந்தைகளை ஜாதி வித்தியாசம் பாராமல் ஓரிடத்தில் சேர்த்துத் தருமத்துக்காக இரட்சிப்பது அவசியமாய் ஏற்படவில்லை. ஜனங்கள் விவசாயம் செய்து கிராமாந்தரங்களில் வசிப்போராய், குடும்பங்கள் சிதறிப் போகாமல் ஒன்றாய்ச் சேர்ந்து நடத்தப்பட்டதாலும், பட்டணங்களில் ஜனங்கள் திரளாய் வசித்து அன்றாடம் வேலை செய்து பிழைப்பது வழக்கமாயில்லாததாலும், ஜாதி வித்தியாசங்கள் பாராட்டுவது நமது இயல்பாயிருந்தபடியாலும், அனாதாலயங்களைக் கிறிஸ்துவ ஜாதியார் ஸ்தாபித்துத் தர்மம் செய்வதுபோல் ஹிந்துக்களுள் அந்த வழக்கம் உண்டாகவில்லை.

ஆயினும், தற்காலம் நம் தேசத்தில் அநேக மாறுபாடுகள் தோன்றி வருகிறபடியால், தாய் தகப்பனில்லாத குழந்தைகளை உறவின் முறையார் வைத்து இரட்சிக்கும் வழக்கமும் நின்று போய்விட்டது. இப்படி இரட்சிப்பது அவசியமென்பதை அறிந்து நம் தேசத்திலுங் கூடச் சிற்சில இடங்களில் புண்ணியவான்கள் இந்தத் தருமத்தைச் செய்துவருகிறார்கள். [illegible] தெலுங்கு ஜில்லாவில் இம்மாதிரி ஒரு அனாதாசிரமம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. சென்னையில் கடைசியாக காங்கிரஸ் நடந்தபோது பம்பாயிலிருந்து வந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் சந்தாவர்க்கரும், ஸர் பாலசந்திர கிருஷ்ணவும், சென்னைப் பிரமுகர்கள் சிலரும் கவர்னரின் அக்கிராசனத்தின்கீழ்க்கூடி அனாதாலயம் ஒன்று ஸ்தாபித்தார்கள். பம்பாய் நகரத்தில் இம்மாதிரி ஒன்று இருந்து நடந்துவருவதாகத் தெரிகிறது. சென்னையிலும் ஒன்று அவசியமென்று பம்பாயிலிருந்து வந்த



பிரபுக்களின் பிரேரணையின்பேரில் மேற்கண்டபடி முயற்சி செய்யப்பட்டது. ஜனத்தொகை பெருகி வசிக்கும் நமது தேசத்தில் லக்ஷக்கணக்கான ஏழைகள் ஸ்திரமான ஜீவனோபாயங்கள் இல்லாமல் வருந்துகிறார்களானபடியால் எங்கெங்கு எத்தனைக் குழந்தைகள் நாதனற்று வருந்துகின்றனவோ கடவுள் அறிவார். இந்தக் குழந்தைகளை ஓர் இருப்பிடத்தில் சேர்த்து, அன்னவஸ்திரம் கொடுத்து, ஒரு நல்ல தொழிலைக் கற்பித்து, யோக்கியர்களாக்கி விடுவதைவிட உத்தமமான தர்மம் எதுவோ நாம் அறியோம். வயிற்றுக் கின்றியும், இருப்பிடமின்றியும், திக்கற்றுத் திரியும் குழந்தைகள் எந்த ஜாதியானாலென்ன? கீழ் ஜாதியைச் சேர்ந்தனவென்று வருந்தும் குழந்தைகளைத் தலையெடுத்துப் பாராத கல்நெஞ்சனை உயர் குலத்தானை உயர் குலத்தானென்று நாம் சொல்லமாட்டோம். உயர் குலத்தானாயினும், தர்மம் செய்வோனாயினும் கற்றறிந்த விவேகியாயினும் ஜீவகாருண்யமில்லாவிட்டால் அவன் இருந்தும் இல்லாதது போலவே ஆவான். ஹிந்துக்களாகிய நாம் அநேக உத்தம குணங்களை அனாதிகாலமாய் [illegible] பூஷணமாகக் கொண்டிருப்பதை உலகத்தார் அறிவாரானாலும், ஜாதி வேற்றுமை பாராட்டப்பட்டு, ஜீவகாருண்யம் ஜாதி வரையறைக்கு உட்பட்டிருப்பது பெரும் வசையாயுள்ளது. அனாதைகள் தாழ்ந்த குலத்தோராயிருப்பது ஜீவகாருண்யம் தடையின்றிக் கசிந்து பெருகுதற்குக் காரணமேயன்றித் தடையாகக்கூடாது.

குழந்தைகளின் சம்ரக்ஷணைக்காக சென்னையில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அது ஆரம்பத்தில்

கவர்னர் தோட்டத்தில் பாங்க்வெட்டிங் ஹாலில் (விருந்து மண்டபம்) கூடிற்று. தக்கபடி சம்ரக்ஷணையில்லாமல் அநேகம் குழந்தைகள் வறுமையால் வருந்துவதுமன்றி துன்மார்க்கங்களில் பிரவேசிக்கின்றனவென்றும், சில குழந்தைகளைப் பெற்றோரே கெட்ட வழிகளிற் செலுத்தி அதனாலேயே சம்பாதிக்கிறார்களென்றும், இதைக்கூடிய வரையில் தடுக்கவேண்டுமென்றும், இந்தச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. H. E. கவர்னரும், லார்ட் பிஷப்பும், மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிமும், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரும், மிஸெஸ் ஹாட்செல் என்ற ஆங்கிலேய ஸ்திரியும், அந்தச் சமயத்தில் பேசினார்கள். இந்த சங்கத்துக்கு ஸ்திரமான கட்டடம் வேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டதற்கு, அவ்வாறு செய்யச் சௌகரியமில்லையென்று ஸர் ஆர்தர் லாலி அறிவித்தார். காலஞ்சென்ற டாக்டர் வரதப்ப நாயுடு இந்த சங்கத்துக்காக 30,000 ரூபாய் ஏற்கெனவே கொடுத்திருக்கிறார். இன்னும் திரளான பொருள் சகாயம் அவசியமாகையால் பேசினவர்கள் அனைவரும் இந்த சகாயத்தை வேண்டி தருமசிந்தையுள்ளவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

அப்பொழுது 43 பிள்ளைகள் இந்த சங்கத்தின் சம்ரக்ஷணையிலிருந்தனர். இந்தப் பிள்ளைகள் பூர்வ ஸ்திதியில் இருந்தபடியிராமல் நல்ல வழிகளில் வளர்ந்து வருகிறார்களென்று ஜஸ்டிஸ் ஸர் C. சங்கரன் நாயர் சொன்னார். ஆனால் சில பிள்ளைகளைச் சேர்த்து நல்ல வழிகளிற் பயிற்சி செய்வது பெரிய காரியமல்ல. பெற்றோர்கள் பிள்ளைகளைத் துன்மார்க்கங்களில் செலுத்திச் சம்பாதிக்கும் கோரமான வழக்கத்தை திருத்துவதும்,



குழந்தைகள் நாதனற்றவர்களாய் இருப்பிடமாவது அன்ன வஸ்திரங்களாவது எதுவுமின்றித் திரிந்து, திருட்டு முதலிய குற்றங்களைச் செய்து, ஜீவிப்பதைத் தடுப்பதும் பெரிய காரியமெனச் சொல்லப்படாது. தற்காலம் மேற்றிசை நாகரிகம் நம் தேசத்தில் பரவி வரவே குழந்தைகள் நாதனற்றவர்களாய்த் திரியவும், இம்மாதிரியான சங்கங்கள் ஸ்தாபித்து அவைகளை சம்ரக்ஷிக்கவும் நேரிட்டிருக்கின்றது. கல்கத்தா, பம்பாய், சென்னை முதலான பெரிய பட்டணங்களில் தொழில்கள் பெருகி வருவதால் வறுமையாற் பீடிக்கப்படும் ஏழைகள் அப்பட்டணங்களில் வந்து ஜீவிக்கிறார்கள். ஜீவனம் பெறக்கூடியவர்கள் அந்த ஜீவனத்தில் பிழைக்கிறார்கள். ஜீவனம் பெறக் கூடாதவர்களும் பலர் இருப்பதால், அவர்கள் மனம் வறுமையால் கெட்டிப்பட்டுத் தீய வழிகளிற் செல்லக் கூச்சமற்றுப் போகின்றது. அவர்கள் தாங்களே துன்மார்க்கங்களில் பிழைக்க முயலுவதுமன்றிப் பிள்ளைகளையும் அவ்வழிகளில் செலுத்துகிறார்கள்.

கல்கத்தா பட்டணத்தில் இப்படிப்பட்ட பிள்ளைகள் 900 வரையில் இருப்பதாகச் சமீபத்தில் அங்கே ஸர் ஆண்டி[illegible] நடத்தின விசாரணையால் தெரிந்தது. பம்பாயிலும், பஞ்சாலைகள் முதலான பாக்டரிகளில் புருஷர்களும் ஸ்திரீகளும் குழந்தைகளும், ஆயிரக்கணக்காய்க் கூலி வேலை செய்கிறார்களானதால், அங்கும் நாதனற்ற குழந்தைகள் அநேகம் இருக்கக்கூடும். மற்றப் பெரிய பட்டணங்களிலும் பறைச்சேரிகள், சந்து பொந்துகள், ரஸ்தா ஓரங்கள் இவைகளில் அநேக ஏழைகள் தங்குமிடமும் பிழைப்பும் இல்லாமல் பிள்ளைகளைப்பெற்று சேர்ந்த

வேலையைச் செய்து ஜீவிக்கிறார்கள். நம் தேசத்தில் ஆதிகாலத்தில் அனாதைகளை ரக்ஷிக்க இருந்த ஏற்பாடுகள் இப்பொழுதில்லை. ஜனங்கள் கிராமங்களிலே வசிக்கிறவர்களாயிருந்து ஜீவனோபாயங்களும் பெற்றிருந்தால் துன்மார்க்கங்களில் பிரவேசிக்கமாட்டார்கள். எவ்வளவு ஏழையானாலும் அவனுடைய பந்து ஜனங்கள் அவனைத் தங்கள் குடும்பங்களில் வைத்து சம்ரக்ஷிப்பார்கள். இப்போது கிராமங்களிலேயே வசிப்பதும் பந்துக்களைக் குடும்பத்தில் வைத்து ரக்ஷிப்பதும், இந்த இரண்டும் நின்று போய்க்கொண்டிருக்கின்றன. மேற்றிசை தேசங்களைப்போல லக்ஷக்கணக்கான ஜனங்கள் வசிக்கும் பெரிய பட்டணங்கள் உண்டாகிக்கொண்டு வருகின்றன. இந்த மாறுதலினாலேயே ஜீவனமற்ற ஜனங்களும் நாதனற்ற குழந்தைகளும் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். துர்நடத்தைகள் அதிகமாகி வருகின்றன. தற்காலம் நாகரிகமென்பது கெட்ட வழக்கங்கள் தோன்றுவதும் அவைகளை அடக்க முயல்வதுமா யிருக்கின்றது. மேல்நாடுகளைப்போல இந்தியாவும் மாறிக்கொண்டு வருகிறது. பெற்றோர் தம் பிள்ளைகளைத் துன்மார்க்கங்களில் நடத்துவதும், அப்படி நடத்திச் சம்பாதிப்பதும் அப்படிப்பட்ட பிள்ளைகளைச் சம்ரக்ஷிக்க சங்கங்கள் ஏற்படுவதும் மேல்நாட்டு வழக்கமே யன்றி இது வரையில் இந்தியாவில் வழக்கமில்லை. இப்போது இந்த வழக்கம் அவசிமாகி வருவதால் ஏழைகளிடத்தில் கருணையுள்ளவர்கள் இவ்விஷயத்தில் உதவி செய்ய முன் வரவேண்டும், சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் சம்ரக்ஷணை சங்கம் ஜனங்களது ஆதரவைப்பெற்று



அதன் நல்ல நோக்கங்களை நிறைவேற்றி வரவேண்டுமெனக் கோருகிறோம்.

## இங்கிலாண்டில் குழந்தைகளின் சம்ரக்ஷணை.

நாகரிக வளர்ச்சியினால் மனித ஜாதிக்குப் பலவிதமான நன்மைகள் உண்டான போதிலும், பலவிதமான கடும் தீமைகளும் உண்டாகின்றன. தற்கால நாகரிகத்தால் காலப் பிரிவினையும் ஸ்தானப் பிரிவினையும், அற்றுப் போயின எனலாம்; அதாவது உலகத்தில் ஒரு பாகத்தில் சம்பவிப்பவைகளை மின்சார வேகத்தால் தூரமான மற்றப் பாகங்களில் அதே நிமிஷத்தில் அறிவித்து விடலாம். ராய்ட்டர் தந்திகள் என்று நம் ‘சுதேசமித்திரனில்’’ நாம் பிரதிதினமும் பிரசுரிக்கும் தந்திகள் இங்கிலாண்டில் நடக்கும் விஷயங்களை, இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும், தென் ஆபிரிக்காவுக்கும், அமெரிக்காவுக்கும், உலகத்து நாலு மூலைகளுக்கும், சொற்ப நேரத்திற்குள் அறிவித்து விடுகின்றன. தற்கால நாகரிகத்தால், மின்சார விசையை நாம் அறிந்திராவிட்டால், இவ்வாறு சமாசாரங்கள் மூலைக்குமூலை எட்ட வருஷக்கணக்கான காலம் செல்லும். அப்படியே நீராவி விசையால் புகைக் கப்பல்களும், இருப்புப் பாதைகளும் (ரயில்வண்டிகளும்) அதிசீக்கிரத்தில் உலகத்தில் எவ்விடத்திலும் செல்லுகின்றன; ஆகையால், தற்காலம் காலதேச பேதங்கள் அற்றுப்போயினவென்றே சொல்லலாம். இவைகளைப் போல நாகரிகத்தால் எவ்வளவோ நன்மைகள் விளைந்து மனித ஜாதிக்குச் சௌகரியங்கள் அதிகப்பட்டிருக்கின்றன. இவைகளோடு பெரும் தீமைகளும் உண்டாகின்றனவென்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுவோம். இங்கி

லாண்டில் பிரதி மனிதனும் ஸ்திரீயும், சுதந்திரம் பெற்று இருக்கிறார்களென்று சொன்னோமல்லவா? ஸ்திரீகள் சுதந்திரம் பெற்றிருப்பதால் அவர்கள் வீட்டு வேலையைச்செய்து சம்சாரத்தைப் பாதுகாத்துக் காலம் போக்காமல், வீட்டைவிட்டு வெளியில் போய்ப் பற்பல விதமான அலுவல்கள் செய்து சம்பாதிக்கிறார்கள். சிறு பிராயத்தில் விவாகம் செய்து கொள்ளாமல் வயது முதிரும் வரையில் புருஷனில்லா திருப்பதனாலும் பர்த்தாவினுடைய காவலில்லாமல் வேற்றிடங்களில் பல புருஷர்களோடு கலந்து வேலை செய்வதாலும், குடி முதலிய துர்ப்பியாசங்களாலும், விபசாரம் நேரிடுகிறது. இவ்வாறு விபசாரத்தால் பிறக்கும் குழந்தைகளும், கிரமமாய்ப் பிறந்தாலும் பெற்றோரது ஸம்ரக்ஷணையைப் பெறாமல் கைவிடப்படும் குழந்தைகளும், இங்கிலாண்டில் அதிகமா யிருப்பதாகத் தெரிகிறது. இக்குழந்தைகளைப் பிடித்துக் கூலிக்கு வளர்க்கும் சிலர் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்நியர் பெற்ற குழந்தைகளைக் கூலிக்காக வளர்க்கும் ஸ்திரீகளோ புருஷர்களோ, எப்படி வளர்ப்பார்களென்றும், அக்குழந்தைகள் எப்படி வளருமென்றும் நாம் மனதில் ஊகிக்கலாம். ஒரு முறை குழந்தைகளைக் கூலிக்கு வளர்ப்பவரிடம் ஒப்புவித்து விட்டால், பெற்றோர் அவைகளைக் கவனிப்பதில்லை. பெற்றோர்க்கு இயற்கையாயுள்ள அன்பும், அக்கரையும், கவலையும் இல்லாமல் வளரும் குழந்தைகளுக்கு என்ன விதமான கதி உண்டாகுமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. அவைகள் படும் கொடுமைகள் மனித இயல்புக்கே பெரும் குறைவாய் முடிய இங்கிலாண்டி



லுள்ள தர்மவான்களும், ராஜதந்திரிகளும் இக்குழந்தைகளின் நிலைமையைச் சீர்திருத்த அவசியமான பந்தோபஸ்துகள் செய்வது கடமையாயிற்று. இந்தக் கடமையை ஒருவாறு நிறைவேற்றுமாறு பார்லிமென்டில் ஒரு சட்டம் செய்யப்பட்டு அந்தச் சட்டம் இப்போது அநுஷ்டானத்துக்கு வந்திருக்கிறது. இந்த சட்டத்தால் கூலிக்குக் குழந்தை வளர்ப்போர் பலவிதமான நிர்ப்பந்தங்களை ஏற்று, குழந்தைகளைத் தீயவழிகளில் செலுத்தாமலும், கொடுமைகளுக்கு உட்படுத்தாமலும் இருக்கப் பலவந்தம் செய்யப்படுவார்கள். இந்த நிர்ப்பந்தங்களை மீறிக் குழந்தைகளுக்கு எவ்விதமாயாவது கெடுதி செய்யும் பக்ஷத்தில் அவர்களுக்குப் பலமான சிக்ஷைகள் விதிக்கப்படும். இங்கிலாண்டில் இப்படி நேரிட்டிருப்பது மேற்றிசை நாகரிகத்துக்குப் பெருமை யென்று சொல்லக்கூடுமோ? இக்கொடும் தீமைகளைப் போல எத்தனையோ தீமைகள் நாகரிகத்தால் விளையுமானால் அத்தகைய நாகரிகம் மனிதர் விரும்பத் தக்கதா? அல்லது அதனால் விளையும் நன்மைகளைப் பெறாவிடினும் நம் இந்து நாகரிகத்தைப் போன்ற பூர்விக நாகரிகமே மனிதர் விரும்பத் தக்கதா? என்று பிரசினை செய்ய இடமுண்டாகிறது. நாகரிகத்தின் உத்தேசம் மனித ஜாதியின் சுகம் என்றாலும், நல்லொழுக்கமும், அதன் உத்தேசமென்பதை மறுக்கவொண்ணாது. நம்முன்னோர், சுகம் என்பது கேவலம் சரீரசுக மாத்திரமல்ல ஆத்ம சுகமும் சேர்ந்தது என வகுத்திருக்கிறார்கள். சரீர சுகத்திற்கு ஒரு வரையறை ஏற்படுத்தி, அது ஆத்ம சுகத்தை மீறக்கூடாதென்று தடுத்திருக்கிறார்கள். மேற்றிசை யாரோ, சரீர சுகமே

பிரதானமென்று கொண்டு பொருள் தேடுவதும், தேடின பொருளால் கிடைக்கக்கூடிய சுகங்களை அனுபவிப்பதும், சதாசர்வகாலம் ஒருவரைத் தகைத்து ஒருவர் போட்டி செய்வதுமாய் ஜீவிக்கிறார்கள். இதனாலேயே அநேக தீங்குகள் உண்டாகின்றன. சரீரசுக போகாதிகளுக்கு ஒரு வரையறை ஏற்படுமானால் நல்லொழுக்கம் பலப்பட இடமுண்டாகும். மேற்றிசை நாகரிகம் முற்செல்லும் தீவிரத்தைப் பார்த்தால் இப்போது, தானோடி வண்டிகள் (மோட்டார்கார்) என்றும், ஆகாயரதம் என்றும், புகையில்லாமலும் சப்தமில்லாமலும் வெடிக்கக்கூடிய பீரங்கிகளென்றும், யுத்தத்தில் ஒரே குண்டினால் லக்ஷக்கணக்கான உயிர்களை மாய்க்கக் கூடிய யந்திரங்களென்றும், ஓயாத போட்டியினால் ஏழைகளையும், பலமற்றவர்களையும் நசுக்கிப் பொருள் உள்ளவர்கள் பின்னும் பொருட் குவைகள் குவிப்பது இயல்பென்றும் ஏற்பட்டிருப்பது போதாமல், இன்னும் மேன்மேலும் புதுமைகள் உண்டாகி, இனிப் பிற்காலத்தில் இன்னின்ன அவஸ்தைகள் நேரிடுமென்று சொல்லுதல் சாத்தியமற்றிருக்கின்றது. தற்கால நாகரிகம், ஏழைகளுக்கும் பலவீனர்களுக்கும் நன்மையென்று நினைக்க நியாயமில்லை; பூர்வீக நாகரிகத்தால் மனிதஜாதி மிதமான சரீரசுகமும், நல்லொழுக்கமும், சமத்துவமும் பெற்று வாழ்ந்தார்கள்.

## மிஸ்டர் ரூஸ்வெல்டும் பிரான்ஸ் தேசமும்.

அமெரிக்கா கண்டத்தில் ஒரு பாகமாகிய ஐக்கிய நாடுகள் (யுனைடெட் ஸ்டேட்ஸ்) என்ற தேசத்தை சுமார் 8-வருஷகாலம் ஆண்டுவந்த மிஸ்டர் ரூஸ்



வெல்ட் அந்த ஸ்தானத்தை விட்ட பிறகு, ஐரோப்பாவிலுள்ள பற்பல தேசங்களைப் பார்த்து வந்தார். எட்வர்டு சக்கிரவர்த்தியின் பிரேத அடக்கமான சமயத்தில் மற்ற மன்னர்களுடன் இவரும் ஒருவராயிருந்தனர். ஐக்கிய நாடுகள் (யுனைடெட் ஸ்டேட்ஸ்) என்பது இந்தியாவைவிட விசாலமான தேசம். ஆனால் ஜனத்தொகை மட்டும் நம்மதில் மூன்றிலொன்றுக்கு அதிகமில்லை. அது பற்பல சில்லரைத் தேசங்கள் ஒருமைப்பட்டு அடங்கியதாகிக் குடியரசு முறையில் ஆளப்பட்டு வருகிறது. அதாவது அங்கே அரசர் ஒருவருமில்லை. பரம்பரையாய்ப் பட்டம்பெற்ற பிரிட்டிஷ் லார்டுகளை யொப்ப உயர்குலத்தினரும் இல்லை. எல்லா ஜனங்களும் சமமான அந்தஸ்தும் சுதந்திரமும் உள்ளவர்கள். ஜனங்கள் சேர்ந்து நாலுவருஷத்துக்கொருமுறை தேசகாரியங்களை நிர்வகிக்க ஒரு பிரசிடெண்டை அதாவது ஒரு தலைவரை நியமிப்பார்கள். இப்படி இரண்டுதடவை அடுத்தடுத்துப் பிரசிடெண்டாக நியமனம் பெற்ற மிஸ்டர் ரூஸ்வெல்ட் மூன்றாம் தடவை நியமனம் பெறாமல் அன்னிய சஞ்சாரம் செய்யத் தொடங்கினார்.

பிரான்ஸ் தேசமும் ஒரு குடியரசானதால், அதனிடம் மிஸ்டர் ரூஸ்வெல்ட் விசேஷ அபிமானம் பாராட்டி, அங்குவந்த சமயத்தில் அத்தேச ஜனங்களுக்குப் புத்திமதி சொல்லி, ஒரு அருமையான பிரசங்கம் செய்தார். பிரான்ஸ் தேசமானது நூறு வருஷத்துக்கு முன்னால் ஒப்புயர்வற்ற வல்லமையும் கீர்த்தியும் பெற்ற தேசமாயிருந்தது. இப்போது இந்த இரண்டும் குறைந்து அது உலகத்தில் இரண்டாந்தர தேச

மாகிவிட்டது. இதனாலும், ஒரு காலத்தில் யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசத்தார் சுவாதீனத்துக்காகப் போராடின போது பிரான்ஸியர் அவர்களுக்குச் செய்த பேருபகாரத்தாலும் மிஸ்டர் ரூஸ்வெல்ட் தம் தேசத்தாரது நன்றியையும் அபிமானத்தையும் காட்டிப் பேசினார். பிரான்ஸ் தேசமானது இப்போது இரண்டாந்தர தேசமாகி விட்டதற்குக் காரணங்களில் அத்தேச ஜனங்கள் வரவர அதிகப்பட்டு வாராமல் இருந்த தொகையிலேயே இருந்து வருகிறார்களென்பதொன்று. அதாவது, இருபது வருஷத்திற்கு முன்னால் 4 கோடி தொகையுள்ளவர்களா யிருந்தவர்கள் இப்போதும் அந்தத் தொகையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பரம்பரை விரோதிகளான ஜெர்மானியர் ஒரு காலத்தில் அதே தொகையுள்ளவர்களா யிருந்து இப்போது வரவர அதிகப்பட்டு வருகிறார்கள். இதனால் ஜெர்மானியருக்கு வல்லமையும் செல்வாக்கும் அதிகமாக, பிரான்ஸியருக்கு இவ்விரண்டும் குறைந்துவருகின்றன. பிரான்ஸ் ஜனங்கள் கிரமமாக விவாகம் செய்து, மக்களைப்பெற விருப்பமில்லாதவர்களா யிருக்கும்படியான ஒரு கோணலான நாகரிகத்தை அனுஷ்டித்து வருகிறார்கள். கிரமமான விவாகமில்லாமல் விபசாரத்தா லுண்டான பிள்ளைகள் அதிகப்பட்டு வருகின்றன. விவாகம் செய்துகொண்டாலும் ஸ்திரீ புருஷர்கள் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் பொறுப்பை ஏற்க இஷ்டமில்லாதவர்களாய் சந்ததி உண்டாகாமலே ஜீவிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அந்த ஜனங்கள் அதிகப்படாமலிருப்பதும் வரவர வல்லமையும் கீர்த்தியும் குறைந்து போவதும் ஆச்சரியமல்ல.



இந்தப் பெருந்தீங்கைப்பற்றி மிஸ்டர் ரூஸ்வெல்ட் வெகு வாய்க் கண்டித்துப் பேசினார்.

நாகரிகம் எவ்வளவு உயர்ந்த சிறப்பை அடைந்திருந்தாலும் சாஸ்திர ஞானம், கலா ஞானம், செல்வம் முதலியவைகள் எவ்வளவு பிரபலமா யிருந்தாலும், ஜனங்கள் பூர்வீக வழக்கத்தை யொட்டிக் கிரமமாய் விவாகம் செய்துகொண்டு, தேகத்திடனுள்ள பிள்ளைகளைப் பெற்று வளர்த்தாலன்றி, அத்தேசம் காலவளவில் அழிந்து போவது நிச்சயமென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் சொன்னார். மனிதருடைய சரித்திரத்தில் ஜனங்கள் ஒருவருடன் ஒருவர் போர் செய்து ஜீவித்த காலமுண்டு. அக்காலத்தில் எந்த ஜனம் தொகைப் பெருக்குள்ளதாகி, சரீர வன்மை யுள்ளதாயு மிருந்ததோ, அந்த ஜனமே வெற்றி பெற்று நீண்டகாலம் வாழ்ந்தது. இக்காலத்திலும் போட்டிகள் ஓய்ந்தபாடில்லை யாயினும், முற்காலத்தைப்போல நீண்டகாலம் குரூரமான யுத்தம் நடப்பதில்லை என்னலாம். உலகத்து ஜனங்களுக்குள் யுத்தப்போட்டி இல்லையாயினும், வியாபாரப் போட்டி வெகு தீவிரமாய் ஏற்பட்டிருக்கின்றது. யுத்தம் செய்து அன்னிய தேசங்களைக் கட்டிக்கொண்டு கீர்த்தியும் செல்வமும் பெற வேண்டிய ஆசைக்குப் பதிலாய் நாகரிக உபாயங்களால் வியாபாரத்தைப் பெருக்கிச் செல்வம் சேர்க்க வேண்டுமென்ற ஆசை யுண்டாயிருக்கின்றது. அந்த ஆசையை நிறைவேற்றவும் தேகத்திடனுள்ள திரண்ட ஜனத்தொகை யவசியம். பிரான்ஸ் தேசத்துக்கு இந்த ஜனத்தொகை இல்லாமல் அது பின்னடைந்து வருகின்றது.

தற்காலம் அதற்குண்டாயிருக்கும் பெருந் தீங்கை நம் முன்னோர்கள் ஞான திருஷ்டியா லறிந்தவர்கள் போல, புத்திர சந்தானத்தின் பிரயோசனத்தையும் பெருமையையும் அறிந்து கண்டிப்பான சாஸ்திரங்கள் செய்து வைத்தார்கள். வமிசத்தின் அபிவிருத்தியே விவாகத்தின் கருத்தேயன்றிக் கேவலம் சிற்றின்பத் திருப்தியல்ல; புத்திர னில்லாதவன் நரகத்தை யடைகிறான். நல்ல புத்தியும் திடகாத்திரமும் கொண்ட புத்திரனைக் கொடுக்க வேண்டுமென்று விவாக காலத்தில் தெய்வங்களைப் பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு நம் முன்னோர்கள் சாஸ்திரங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். நல்ல புத்தியும் திடகாத்திரமும் இல்லாத பல பிள்ளைகள் உண்டாவதைவிட இவைகளையுடைய ஒரே சற்புத்திரன் பிறப்பது மேலென்றும் விதித்திருக்கிறார்கள். தற்காலத்து பிரான்ஸ் ஜனங்களுக்கு இவ்வாறு விதித்து வைத்த முன்னோர்கள் இல்லை போலும்.

## நமது விவாக வழக்கம்.

### இங்கிலாந்தில் ஒரு வைதீக விவாகம்.

இங்கிலாந்தில் ஒரு சிறு ஊரில் நமது பேர்போன தேசாபிமானியாகிய லாலா லஜபதிராய் வைதிக அனுஷ்டானங்களின்படி ஒரு விவாகம் செய்து வைத்ததாகப் பத்திரிகைகளில் சமாசாரம் வந்ததைப் படித்தோம். பஞ்சாப் மாகாணத்தில் பிறந்த ஒரு ஹிந்து வாலிபனை தர்மவீர் என்பவன் இங்கிலாந்துக்குப் போய் நீண்டகாலம் வைத்தியப் படிப்புப் பெற்று அங்கேயே ஒரு சிறு ஊரில் வைத்தியஞ்செய்து ஜீவித்து வருகையில், ருஷியாவிற் பிறந்த ஒரு பெண்



தன் பெற்றோர்களோடு அவ்வூரில் வசித்துவர, அப்பெண்ணின் நேசத்தைத் தர்மவீர் பெற்றார். சில காலத்துக்குப் பிறகு, பெற்றோரின் சம்மதத்தின் பேரில் அந்தப் பெண்ணை விவாகமும் செய்யலானார். விவாகம் நிச்சயமானபோது, தர்மவீர் தம் தேசத்தாரான லாலா லஜபதிராய் லண்டனில் வந்திருக்கிறாரென்று அறிந்துகொண்டு தமது விவாகத்தை அவர் கூட இருந்து நடத்த வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, லஜபதிராய் தாம் ஆர்யசமாஜும் என்கிற வைதீக சமயத்தைத் தழுவினவ ராகையால், தர்மவீரும் அந்த சமயத்தையே தழுவி ஆர்ய வைதீக அனுஷ்டானங்களின்படி விவாகம் செய்து கொள்வதாயிருந்தால் தாம் வந்து அதை நடத்துவதில் தடையில்லை என்று சொன்னார். தர்மவீருக்கு அப்படியே செய்வது இஷ்டமாயிருந்தாலும், அந்தப் பெண்ணினுடைய இஷ்டம் எப்படியிருக்குமோவென்று அவளுடைய இஷ்டத்தைக் கேட்க, அவளும் ஆரிய மதத்தைத் தழுவினவளாய் வைதீக அனுஷ்டானங்களின்படி விவாகம் செய்துகொள்ளச் சம்மதித்தாள். ஆகவே, லாலா லஜபதிராய் லண்டனிலிருந்து அந்த ஊருக்குப் போய் விவாகத்தை நடத்திவைத்தார். ஊராரான ஆங்கிலேயர் பலர் பார்க்க வந்திருந்தார்கள்.

விவாகத்தை நடத்தின லாலா லஜபதிராய் அந்தச் சமயத்தில் நடந்த ஹவனக்கிரியாதி சம்ஸ்காரங்களின் கருத்துக்களை வந்திருந்த ஆங்கிலேயர்களுக்கு எடுத்துச் சொல்லவே, கேட்டவர்கள் நமது ஹிந்து விவாகச் சடங்குகளின் கருத்துகள் மேலானவையென்றும்; பாரமார்த்திக இயல்பு கொண்டவையென்றும், கிறிஸ்து

விவாகச் சடங்குகளை விட அவைகள் உயர்ந்த அர்த்தங்கள் கொண்டவை யென்றும் புகழ்ந்தனர். அப்படியே புகழ்ந்து அவ்வூர்ப் பத்திரிகை யொன்று நீண்ட வியாசமெழுதிப் பிரசுரித்திருக்கின்றது. கிறிஸ்து விவாகத்தின் உட்கருத்தையும் ஹிந்து வைதிக விவாகத்தின் உட்கருத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது, நம்முடையதே சிரேஷ்டமென்பது சாமானியருக்கும் விளங்கும். கிறிஸ்தவ விவாகம் ஸ்திரீ புருஷர் செய்துகொள்ளும் உலக வாழ்க்கைச் சம்பந்தமான உடன்படிக்கையேயன்றி வேறல்ல. நமது விவாகமோ, ஸ்திரீ புருஷர் இல்லறவாழ்க்கையில் ஒரு மனத்தினராய் அமர்ந்து அவ்வில்லற வாழ்க்கைக்குரிய கிரித்தியங்களை இருவரும் சேர்ந்து செய்து, ஜன்மாந்தரத்தில் உயர்ந்த பதவியை யடைய வழியாகும். இந்த வித்தியாசத்தினாலேயே மேல்நாட்டு ஸ்திரீகள், புருஷனை இழந்தால் புனர்விவாகம் செய்து கொள்வதும் விவாகமே இல்லாமலிருப்பதும் வழக்கமா யிருக்கின்றன. நமது விவாகத்தின் நோக்கம், புத்திர சந்தானம் உண்டாகி, புத்திரன் பிதாவுக்குச் செய்யும் கருமங்களால் பிதா நரகத்திலிருந்து மீளுவது. மேல்நாட்டு விவாகம் இந்த நோக்கங்கொண்டதல்ல வாகையால், ஸ்திரீகளும் புருஷர்களும் விவாகமே இல்லாமல் ஜீவிப்பதோடு கூட, விவாகம் செய்துகொண்டாலும் பிள்ளைகளுண்டாகாமலிருக்க விரும்புகிறார்கள். பிரான்சு தேசத்தில் இந்த விருப்பம் மேலிட்டு ஜனவிருத்தி குன்றிப் போய் விட்டதென்று, மிஸ்டர் ரூஸ்வெல்டு பாரிஸ் நகரத்தில் பேசினபோது, அத்தேசத்து ஜனங்களை எச்சரித்ததாகச் சொன்னோம். இங்கிலாந்து தேசத்தில் இந்த



நிங்கு தோன்ற வில்லையாயினும், நூற்றுக்கு ஐம்பதுக்கு அதிகமாக ஸ்திரீகள் விவாக மில்லாமலே ஜீவிப்பது பல கேடுகளுக்குக் காரணமாகிற தென்று சொல்லப்படுகிறது. சமீபத்தில் கர்னூல் பட்டினத்தில் மிஸ்டர் K. நடராஜன் செய்த பிரசங்கத்தில் இந்து ஸ்திரீகள் விவாக மில்லாமலே இருக்க இஷ்டப்பட்டால் அப்படியிருக்கச் சுதந்திரம் பெற வேண்டுமென்று சொன்னார். தற்காலத்தில் நம் ஸ்திரீகளுக்கு இந்தச் சுதந்திரம் இல்லையாயினும், எல்லா ஸ்திரீகளும் எந்த ஜாதியாரானாலும் எந்த அந்தஸ்தானாலும் விவாகம் செய்து கொள்ளுவது கட்டாயமாக ஏற்பட்டிருந்தாலும், பூர்வம் அவர்களுக்கு விவாக மில்லாமலே இருக்கச் சுதந்திர மிருந்தது. ஆனால் அப்படியிருந்த ஸ்திரீகள் இல்வாழ்க்கையை விட்டு நீங்கி யிருந்ததால் கேடுகளுக்கு இடமுண்டாக வில்லை. மேல் நாடுகளிலோ விவாக மில்லாத ஸ்திரீகள் சிற்றின்பங்களை விரும்பிப் பேரின்பத்தில் மனம் வைக்காதவர்களா யிருப்பதால் கேடுகள் உண்டாகின்றன. கிறிஸ்தவ விவாக முறைக்கும் ஹிந்து விவாக முறைக்கும் உள்ள இந்தப் பெரும் வித்தியாசத்தை அறிந்த ஆங்கிலேயர்கள் நமது விவாக முறையை எப்படிப் புகழா திருப்பார்கள்?

## பாரதமகில பாரிஷத்-அல்லது பாரத ஸ்திரீகளின் சபை.

பிரதி வருஷமும் டிசம்பர் மாசக்கடைசியில் காங்கிரஸ் கூடும்போது வேறு சில சபைகளும் வேறு நோக்கங்களோடு கூடுவது வழக்கமாகிவிட்டது. ஆதியில் காங்கிரஸோடுகூட ஆசாரத்திருத்த சபையொன்று கூட்டுவது வழக்கமாயிற்று. பிறகு தொழில் சம்பந்தமான விசாரங்கள் நடத்த வாரம்பிக்கப்பட்டது. அத்

துடன் மதசம்பந்தமாயும் குடிவிலக்கு சம்பந்தமாயும் சபைகள் கூட்டப்பட்டன. கல்கத்தாவில் சில வருஷங்களுக்கு முன்னால் காங்கிரஸ் கூடினபோது, ஹிந்து ஸ்திரீகள் ஒரு சபையாகக் கூடி தேசக்ஷேம சம்பந்தமான பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். அந்தச் சமயத்தில் பரோடா சமஸ்தானத்து மகாராணியார் அத்தியக்ஷராயிருந்து, நமது சகோதரிகள் இவ்வளவு காலம் தேச விஷயங்களில் சிறிதும் அக்கரை பாராட்டாமல் இருந்ததுபோல் இருத்தல் பொருந்தாதாகையால், இனி நம் தேசத்துப் புருஷர்கள் பொது நன்மையை நோக்கிச் செய்யும் பற்பல முயற்சிகளில் ஸ்திரீகளும் அநுதாபங் காட்டி உற்சாகத்தை விளைத்தல் அவசியமென்று பொருள்படும்படி, ஒரு அருமைப் பிரசங்கம் செய்தார். சூரத்திலும் சென்னையிலும் இதுமாதிரி ஒரு ஸ்திரீகளின் சபைக்கு ஏற்பாடு செய்திருந்தும், அங்கே நேரிட்ட குழப்பங்களால் அது நிறைவேறாமற் போயிற்று. இந்த முயற்சி தற்காலத்து நம் நிலைமைக்கு முற்றிலும் அவசியமும் நன்மை பயக்கத் தக்கதுமானதென்பதிற் சந்தேகமில்லை. தற்காலம் நம்மில் தோன்றியுள்ள புதுக் கிளர்ச்சியானது புருஷர்களுடைய நடவடிக்கைகளிலேயே தோன்றுவதாயிருந்தாலும்; அந்தக் கிளர்ச்சியின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டுச் செய்யப்படும் காரியங்களிற் புகுவோர் புருஷர்களாயிருந்தாலும், உண்மையில் அந்தக் கிளர்ச்சியானது ஸ்திரீகள் மனதையுந் தொட்டுள்ளதென்பது நாமெல்லோரும் அறிந்தது. ஹிந்துக்களது பூர்வாசாரப்படி ஸ்திரீகள் வீட்டுக்காரியங்களில் உழைப்பது தான் தக்கதென்றும், வெளிக் காரியங்கள்



பலவும் புருஷர்களாலேயே நடத்தப்பட வேண்டுமென்றும் வரையறுப்புள்ளதாயினும், எக்காலத்திலும் எவ்வகுப்பாரிலும் புருஷர்களுடைய மனோபீஷ்டங்களும் பிரவர்த்திகளும் ஸ்திரீகளுடைய ஒற்றுணர்ச்சியாலாவது விருப்பங்களாலாவது பாதிக்கப்படாதிருந்தனவல்ல. பர்தா மறைவில் வசித்து புருஷர் திருஷ்டியில் படுவது பெண்மையல்லவென்று ஒழுகும் மகமதிய ஸ்திரீகளும் புருஷர் செய்யுங் காரியங்களினின்று முற்றிலும் விலகியிருப்பவர்களல்ல. ராஜதந்திரங்களும், வியாபார வர்த்தகங்களும், சாமானிய ஜீவனோபாயங்களும்—ஆகிய ஆண்பிள்ளைகளுடைய தனி உரிமைகளாகப் பாவிக்கப்படும் இந்த சேஷ்டைகள் அநேக சமயங்களில் ஸ்திரீகளது உற்சாகத்தாலும் விரோதத்தாலும் பாதிக்கப்படுகின்றனவென்பதை அநுபவத்தில் அறிவோம். நமது சரித்திரத்தில் பிற்காலத்தில் ஸ்திரீகள் அறிவீனர்களாயும் திறமையற்றவர்களாயும் மாறிவிட்டபடியால், வீட்டுக் காரியங்களைத் தவிர மற்றக் காரியங்களில் அவர்கள் புத்தி சம்பந்தம் மிகவும் குறைந்துபோயிற்று. இப்போது, பலகாரணங்களால் நமது ஸ்திரீகள் தங்கள் இயற்கையென்று நினைத்திருந்த பேதமையை ஒழித்து, புது நாகரிக உணர்ச்சிகளை பெற்று வருவதால், அவர்களுடைய புத்தி சம்பந்தம் புருஷர்கள் செய்யும் முயற்சிகளுக்குக் கிடைக்குமாயின், நன்மையுண்டாக்காமற் போகாது. இப்படி அவர்களுடைய புத்தி சம்பந்தம் கிடைப்பதில், ஸ்திரீகள் தனித்தனியே வீட்டுக்குள்ளிருந்தவாறே இந்தச் சம்பந்தத்தைச் செலுத்துவதை விட்டுத் தங்களுக்குள்ளேயே கூடிப் பழகி, ஒருவருக்கொருவர் ஆதரவாகித் தேர்ந்த யோச

னைகளைப் புருஷருக்கு உதவும்படி செய்தல் ஸ்ரேஷ்டமேயாகும். எப்படி புருஷர்கள் ஒன்றுகூடி ஆலோசிப்பதால் தேறும் தீர்மானங்கள் விசேஷ பலம் பெறுகின்றனவோ அப்படியே, ஸ்திரீகள் தனிப்படாமல் கூட்டங்களிற் கலந்து ஒருவர் புத்திக்கு மற்றொருவர் புத்தியைத் துணையாக்கி, ஆலோசனைகள் நடத்தித் தேறும் தீர்மானங்கள் விசேஷ பலமுடையனவாகும். புருஷர்களைவிட ஸ்திரீகள் பகுத்தறிவிலாவது ஆலோசனையிலாவது குறைந்தவர்கள் என்பது சரியல்ல. சரித்திரத்தில் எத்தனையோ சங்கடமான பெரும் சமயங்களில் ஸ்திரீகளுடைய ஆலோசனையாலும் தீர்மானத்தாலும் ஜன சமூகங்களுடைய காலகதி மாறியிருக்கின்றது. அப்படியே இந்திய ஜனங்களுடைய பிற்கால கதியும் ஸ்திரீகளுடைய ஆலோசனையால் வேற்றுமையுறுதல் அசாத்தியமல்ல. தேசாபிமானம் முதலிய பெருங் குணங்கள் புருஷருக்குப் பொருந்தினதைப் போல் ஸ்திரீகளுக்கும் பொருந்தும். தேசாபிமானத்தாலும் ஜீவகாருண்யத்தாலும் பொதுவாய் நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமென்ற உத்தம உணர்ச்சியாலும் மனவெழுச்சி கொண்ட ஸ்திரீகள் நம்மில் பலிருக்கிறார்கள். ஆகையால் பாரதமகிள பாரிஷத் போன்ற சபைகள் நம்தேசம் தற்காலம் முற்படுவதற் கவசியமான முயற்சிகளில் சேர்ந்தனவென்றே கொள்ளவேண்டும். இவைகள் ஓரிடத்தில் ஒரு சமயமட்டுங் கூடாமல், பலவிடங்களில் பல சமயங்களில் கூடி புருஷர் செய்யும் முயற்சிகளுக்கு ஸ்திரீகள் செய்யும் முயற்சிகள் துணையாகவமைதல் நலமல்லவென்று யார் சொல்லுவார்கள் ? ஸ்திரீகளும் புருஷர்களும் மீட்டிங்குகளில் ஒன்றாய்த்



தோன்றவேண்டுமென்பது நமது கருத்தல்ல. நமது ஜனங்களது தொன்று தொட்டவழக்கம் போலவே இருபாலாரும் வரையறைக் குட்பட்டுத் தனித்து உழைப்பதால் தேச நன்மைக்கு விரோத மொன்றுமில்லை.

## பம்பாயில் ஒரு ஹிந்து மாதர் சங்கம்.

பம்பாய் பட்டணத்தில் ஒரு ஹிந்து மாதர் சங்கம் 16–வருஷமாய் நடந்து வருகிறது. சமீபத்தில் அதன் 16–வது வருஷக் கொண்டாட்டம் நடத்தப் பட்டது, அதன் பெயர் "ஹிந்து மாதர் சங்க" மாயினும், மற்ற வகுப்பாருடைய சேர்க்கையும் ஒத்துணர்ச்சியும் அதற்கிருப்பதாகத் தெரிகிறது. அதன் பிரசிடென்டும் செக்ரிடரியும் கமிட்டி மெம்பர்களும் ஸ்திரீகளாகவே இருக்கிறார்கள். சென்ற வருஷக் கடைசியில், 189 ஸ்திரீகள் மெம்பர்களாயிருந்தார்கள். பிரதி வாரமும் மீட்டிங்கு கூடுவதுமன்றி மெம்பர்களிற் சிலர் சொந்தமாய்ப் பற்பல சித்திர வேலைகள் செய்து அவைகளை விற்றுக்கிடைத்த பணம் ஸ்திரீகளின் நன்மைக்காக ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களின் உதவிக்காகச் செலவிடுகிறார்கள். சாதாரண மீட்டிங்குகளில் பற்பல விஷயங்களைப்பற்றி மராத்தி பாஷையிலும் குஜராத்தி பாஷையிலும் பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன. வருஷோற்சவக் கொண்டாட்டத்திற்கு பார்ஸி ஸ்திரீகளும் மகமதிய ஸ்திரீகளும் ஆங்கிலேய ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். மிஸ்ஸெஸ் ஆலி அக்பர் என்ற மகமதிய ஸ்திரீ அக்கிராசனம் வகித்து வெகு சாமர்த்தியமாய்ப் பிரசங்கம் செய்தார். இவர் பேசினது பத்திரிகைகளில் ஆங்கிலப் பாஷையில் வெளியாயிருப்பதால், இன்ன

பாஷையில் பேசினாரென்று தெரியவில்லை. எந்தப் பாஷையில் பேசியிருந்தாலும் அவர் வெளியிட்ட கருத்துகள் மகா மேன்மையான கருத்துகளாயிருந்ததை நோக்கும்போது அவர் முதிர்ந்த மனப்பயிற்சி கொண்டவராயிருக்க வேண்டுமென்றே நினைக்கிறோம். அவர் செய்த பிரசங்கத்தின் கருத்தென்னவென்றால், இந்திய ஸ்திரீகள் பொதுவாய் வீட்டுக்குள் குடும்பக் காரியங்கள் செய்வதிலும் புருஷருக்குச் சுகமான பணிவிடைகள் செய்வதிலுமே விருப்பங் கொண்டவர்களாயினும், குடும்பங்களைத் தாண்டின தேச விவகாரங்களில் கவனம் செலுத்துவதும் தேசத்திலும் தங்கள் சகோதரிகளின் அபிவிர்த்திக் குற்ற பணிவிடைகள் செய்வதும் ஸ்திரீகளின் இயல்புக்கு விரோதமல்ல. பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அந்தச் சங்கம் போல இந்தியாவில் பற்பல இடங்களில் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருவதைக்கண்டு தாம் சந்தோஷப்படுவதாகச் சொன்னார். இந்திய ஸ்திரீகள் பேரோபகாரமான விஷயங்களில் கவனம் செலுத்துவதையும் குறிப்பிட்டார். உலகத்துக்குப் பணிவிடை செய்வதில் ஆயுளைக் கழிக்கும் ஸ்திரீகளில் மிஸ்ஸெஸ் அன்னி பெஸன்டை முதன்மையாக எடுத்துச்சொன்னார். போபால் பீகமும், பரோடா மகாராணியும், காலஞ்சென்ற ரானடேயவர்களின் மனைவியாகிய ராமாபாயும், ஜானகிபாய் என்ற மகா புண்ணியவதியும், மிஸ் மானெக்ஜி கர்செட்ஜி யென்ற உத்தம சீலையும், இந்திய ஸ்திரீகளுக்கு விலையற்ற ஆபரணம் போல் விளங்குகின்றவர்கள். இவர்களைப் போல் அநேக இடங்களில் இந்தியஸ்திரீகள் சன்மார்க்கத்



தைப் பின்பற்றித் தம்மினத்தாருக்கு உபகாரம் செய்வதில் சிந்தை கொண்டவர்களாய்ப் பொருளையும் பெயரையும் விரும்பாமல் உழைத்து வருகிறார்கள் என்றார். ஸ்திரீகள் தங்களுடைய சாந்த குணத்தாலும் ஜீவகாருண்யத்தாலும் துவேஷமற்ற சமத்வ புத்தியாலும் புருஷருடைய காரியங்களில் இதகரமான சக்தி செலுத்திப் பேருபகாரம் செய்யக் கூடுமென்று வெகு சாதுரியமாய்ப் பேசினார்.

## புனேவில் சேவசாதன் என்ற ஸ்திரீ சங்கம்.

பெயர்போன திருத்தக்காரரான மிஸ்டர் மலபாரி, சில காலத்துக்கு முன்னால் பம்பாய் பட்டணத்தில் "சேவசாதன்" என்கிற ஒரு ஸ்திரீ சங்கத்தை ஸ்தாபித்தார். அதன் நோக்கம் என்னவென்றால், நமது ஸ்திரீகளை அதில் சேர்த்துக் கல்வி கற்பித்தும் வேறு விதமாய்ச் சகாயம் செய்தும் பொது நன்மைக்கு உழைக்கக் கூடியவர்களாக்குவது. இந்தச் சங்கம் பம்பாயில் நல்ல காரியம் செய்து வருவதைப் பார்த்து, புனேவிலுள்ள சில ஹிந்து ஸ்திரீகள் அங்கு ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்த கிளைச்சங்கம் ஒரு மீட்டிங் கூடினபோது, லேடி மூர் மெக்கன்ஸி என்ற ஒரு ஆங்கிலேய ஸ்திரீ ஒரு சிறு பிரசங்கம் செய்தார். இவர் பம்பாய் கவர்ன்மெண்டில் ஒரு மெம்பராயிருந்து பென்ஷன் பெற்று விலகப்போகிற ஸர் ஜான் மூர் மெக்கன்ஸியின் மனைவி. தாம் இந்தத் தேசத்தில் தமது புருஷரோடு அநேக வருஷம் வசித்து வந்து இந்திய ஸ்திரீகளிடத்தில் அநுதாபமும் அன்பும் பாராட்டி வருவதாகவும் அப்போது தாம் ஜன்மதேசத்துக்குப் போகும் சமயமாயிருந்தகால் தாம் அந்தக் கூட்டத்

தில் வந்து பேசத்தருணங் கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷப் பட்டதாகவும் சொன்னார். உலகம் தோன்றின நாள் முதல் ஸ்திரீகள் இரக்கமும் தரும சிந்தையும் கொண்டிருப்பவர்களென்றும், வறுமையாலும் பிணியாலும் வருந்துவோருக்கு உழைப்பது அவர்கள் சுபாவமென்றும், சொன்னார். ஆனால் இந்த உயர்ந்த குணங்களைக்காட்டி உழைப்பது வீட்டுக்குள்ளேயே சாத்தியமாயிருக்கின்றது. இந்திய ஸ்திரீகள் பெரும்பான்மையும் வீட்டுக்கு வெளியே காலங்கழிப்பவர்களல்ல. உலகத்தாரது துக்கங்களைக் கவனித்து அவர்களுக்காக உழைக்கும் வழக்கமுள்ளவர்களல்ல. ஐரோப்பாவிலும் வெகு காலம் அப்படியே இருந்து வந்தது. அங்குகூட ஸ்திரீகளுடைய இந்த உத்தமமான சுபாவமானது அவரவருடைய குடும்பத்தினருக் கன்றி வெளியார்க்கும் உபயோகப்படாம லிருந்தது.

சுமார் 60 வருஷத்துக்கு முன்னால் இங்கிலாந்து தேசம் ருஷியா தேசத்தோடு போர்புரிய நேரிட, அப்போது பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் (soldiers) ஆயிரக்கணக்காய் காயப்பட்டு வருந்தவே, அவர்களுக்குப் பணிவிடை செய்வோரில்லாமல் தவித்துப்போனார்கள். அந்தச் சமயத்தில் மிஸ் பிளாரன்ஸ் நைடிங்கேல் என்ற ஒரு ஆங்கில ஸ்திரீ தமது 34-வது வயதில் வேறு சில ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டு யுத்தம்நடந்த விடத்துக்குப் போய்க் காயம் பட்டவர்களுக்குப் பணிவிடை செய்தார். அப்படி ஸ்திரீகள் சேர்ந்து யுத்த களங்களில் புண்பட்ட போர்வீரர்களுக்குப் பணிவிடை செய்வது அப்போது தான் உண்டான



வழக்கம். அதுமுதல் மேல் நாடுகளில் ஸ்திரீகள் ஆஸ்பிடல்களிலும் யுத்தகளங்களிலும் தாதிவேலை செய்யப் பயிற்சி பெற்று வருகிறார்கள். ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் யுத்தம் நேரிட்டபோது ஜப்பான் சக்கிரவர்த்தினியினுடைய பிரயத்தனத்தின் பேரில் ஜப்பானிய ஸ்திரீகள் ஒரு சங்கமாகச் சேர்ந்து, யுத்தத்தில் வருந்தும் போர்வீரர்களுக்குப் பலவிதமாய் உதவிகள் செய்துவந்தார்கள். ரொட்டி, பிஸ்கோத்து முதலிய உணவுப்பொருள்கள் சேர்த்து அனுப்புவதும், மேல்ஜோடு பனியன் முதலிய உடைகள் அனுப்புவதும், வேறு உதவிகள் செய்வதுமாய் உழைத்து வந்தார்கள். அந்தச் சங்கத்து ஸ்திரீகளே அநேக தாதிகளைத் தயார் செய்துயுத்த களங்களுக்கு அனுப்பினார்கள். அக்காலத்தில் மிஸ் நைடிங்கேல் ஆரம்பித்த பிரயத்தனம் வரவர விசாலித்து ஸ்திரீகள் இப்போது அநேக வழிகளில் துன்பப் படுவோருக்குப் பணிவிடை செய்யும் உத்தமமான தொழிலைச் செய்து வருகிறார்கள்.

இம்மாதிரி இந்து ஸ்திரீகளும் செய்யவேண்டுமென்று லேடி மூர் மெக்கன்ஸி பேசினார். "சேவாசதன்" சங்கத்தில் தயாராகும் ஸ்திரீகள் அவர்களுடைய சகோதரிகளுக்குப் பலவிதமாய் நன்மை செய்து காலத்தைச் செலவிடலாமென்று சொன்னார். ஸ்திரீகளால் நமது ஜனங்களுக்குச் செய்யப்படக்கூடிய நன்மைகள் எத்தனையோ விருந்தபோதிலும், அவர்களுக்கு வீட்டைவிட்டு வெளியில் பழகும் வழக்கமில்லையாகையால், மேல்நாட்டு ஸ்திரீகளைப்போல் பரோபகாரம் செய்வதில் தடைப்பட்டிருக்கிறார்கள்." நமது ஸ்திரீகளுக்குத் தபவாவது சாமர்த்தியமாவது இல்லை

யென்பதல்ல. ஆனால் அவர்களுடைய தயவும் சாமர்த்தியமும் அனாதிகாலந்தொட்டு வீட்டுக்குள்ளேயே உபயோகப்படுத்தப்படுவது வழக்கமாயிருப்பதால், மிஸ் பிளாரன்ஸ் நைடிங்கேலைப்போல் இந்திய ஸ்திரீகள் பெயர் வாங்குவது சாத்தியமாயில்லை. ஆயினும் நமது தேசத்து நாகரீகம் மாறி வருவதைப் பார்த்தால் இது எப்போதுமே அசாத்தியமென்று சொல்லமுடியாது.

## ராஜபுதனத்தில் ஆசாரத் திருத்தம்.

ராஜபுத்திர ஜாதியார் வசிக்கும் ராஜஸ்தான் அல்லது ராஜபுதனத்தில் சென்ற 20-வருஷகாலமாக ஆசாரத்திருத்தங்கள் செய்வதற்காக ஒரு சபை ஏற்பட்டிருக்கின்றது. அதன்பெயர் "வால்டர் கிருத-ராஜபுத்திர - ஹிதகாரிணி" சபை. வால்டர் என்ற ஆங்கிலேய உத்தியோகஸ்தர், அவ்விடத்துத் தேச ராஜ்யங்களில் பிரிடிஷ் ரெசிடெண்டாயிருந்தார். அவருடைய நன்முயற்சியால் இந்தச் சபை ஸ்தாபிக்கப் பட்டதாகையால், வால்டர் கிருத, அல்லது வால்டர் செய்த-ராஜபுத்திர—ஹிதகாரிணி (நன்மை செய்யும்) சபையென்று பெயர் வைத்து இந்தச்சபை ஸ்தாபிக்கப் பட்டது. ராஜபுத்திரர்களுக்குள் சுபசோபனாதி சமயங்களில், முக்கியமாய் விவாக சமயங்களில், மிதமிஞ்சின செலவுகளைச் செய்து குடும்பங்கள் கடன்பட்டு அழிந்துபோவது சகஜமாயிருந்தது. தஞ்சாவூர் ஜில்லாக்காரர்களைவிட இந்த விஷயத்தில் இந்த ராஜபுத்திர ஜாதியார் வீண் செலவு செய்கிறவர்களாயிருந்தார்கள். பெண்களைத் திருநெல்வேலிப் பிராமணர்களைவிடச் சிறு வயதில் விவாகஞ்செய்கிற வழக்கமும்



இவர்களிருந்தது. குடி, கஞ்சா, உன்னல் முதலான துர்வழக்கங்களும் சாதாரணமாயிருந்தன. இப்படிப்பட்ட கெட்ட ஆசாரங்கள் சாதாரணமாயிருக்குமானால் எத்தனை குடும்பங்கள் அழிந்துபோகுமென்பதை நம் நேயர்கள் எளிதாயறியக்கூடும். ராஜபுத்திர ஜாதியார் ஹிந்தூக்களில் புராதன காலமாய் சிரேஷ்டமான ஜனங்கள் என்றும், சிறந்த போர்வீரர்களென்றும், பயம், கபடு, பொய் முதலான இழிகுணங்களில்லாதவர்களென்றும் மகமதியர் ஆட்சிபுரிந்த காலத்தில் மகமதிய ராஜாக்களுக்கு, முக்கியமாய் மொகலாய சக்கரவர்த்திகளுக்கு வலதுகண்ணாய் இருந்தவர்களென்றும், சரித்திரத்தில் கீர்த்தி பெற்று, ஆங்கிலேயராலும் நன்கு மதிக்கப் பெற்று வந்தனர். இப்படிப்பட்ட உத்தம சமூகமானது கேவலம் துராசாரங்களால் அழிந்து போவதைப் பார்த்துச் சகிக்காமல் புண்ணியவான் மிஸ்டர் வால்டர் இந்தச் சபையை ஸ்தாபித்தார். இந்தச் சபையின் விதிகளில் ஒன்று, பிள்ளையும் பெண்ணும், முறையே 18 வயதுக்கும் 14 வயதுக்கும் உட்பட்டு, விவாகத்துக்குத் தக்கவர்களல்ல என்பது. மற்றொரு விதி, பாரத பூமியாகிய இந்தியாவில் பிள்ளை பெண்களுக்கு விவாகம் செய்யும் பொறுப்பும் பெற்றோர்களுடையதாகையால் பெண்களை 20 வயதிற்குமேல் விவாகஞ் செய்யாமல் வைத்துக் கொள்ளக்கூடாது என்பது. இந்தச் சபையின் விதிகளை அத்தேசத்தார், உயர்ந்தோர் தாழ்ந்தோர் அனைவரும், மதித்து உட்பட்டு நடக்கிறார்களென்பது பின்வரும் திருஷ்டாந்தங்களால் காட்டப்படுகின்றது. ஆஜ்மீர் சமஸ்தானத்தில் காரோஜ் என்ற ஊரைச் சேர்ந்த தாகூர் மான்சிங் என்

பவர், முதல் ஸ்திரீ இருக்கையில் இரண்டாவது ஸ்திரீ ஒருத்தியை விவாகஞ்செய்து கொண்டாரென்பதற்காக இந்தச் சபை அந்தத் தாகூருக்கு 500-ரூபாய் அபராதம் விதித்தது. ஆஜ்மீரிலுள்ள இந்தச் சபையின் கமிட்டியானது, தகத்சிங் என்ற ஒருவர் இரண்டாவது ஸ்திரீயை விவாகஞ் செய்து கொண்டதற்காக, விவாகத்திற் கிசைந்த இரண்டு பக்கத்தாருக்கும் பலமான அபராதங்கள் விதித்தது. வருஷத்திற்கு வருஷம் இந்தச் சபையின் விதிகளைமீறி நடப்பது குறைந்து வருகின்றது. போன வருஷம் ராஜபுத்திரர்களுள் 6,971 விவாகங்களும், 1,402 உத்திரக்கிரியைகளும் நடந்தன. சாரணர் என்கிற வகுப்பாரும் 319 விவாகங்களும், 133 உத்தரக்கிரியைகளும் இந்த சபையின் விதிப்படி நடத்தப்பட்டன. விவாக காலங்களில் நம்மவர்களுள் எதிர் ஜாமீன் கொடுக்கிற வழக்கம்போல ராஜபுத்திரிலும் டீகா என்கிற இந்த வழக்கமுண்டு; அதாவது பெண் வீட்டுக்காரர் பிள்ளை வீட்டுக் காரருக்கு வெகுமதிகள் கொடுப்பது உண்டு. இந்த வெகுமதிகளைப் பற்றிச் சம்பந்திகளுள் பிரமாதமான விவாதங்கள் நடந்து மாற்சரியங்கள் தோன்றுவது முண்டு. இப்படித் தீங்கிழைக்கும் வழக்கத்தைச் சீர்திருத்த முடியாமல் அடியோடு நீக்குவதே உபாயமென்று இந்தச் சபையானது முயற்சி செய்து வருகின்றது. இந்த முயற்சி எவ்வளவு தூரம் பயன்பட்டதோ அறியக்கூடவில்லை யென்று, இப்போது பிரிடிஷ் ரெசிடெண்டாயிருக்கும் ஆனரெபில் மிஸ்டர் E. G. கால்வின் சொல்லுகிறார். இந்த "வால்டர் கிருதஹிதகாரணி" சபையைப்போல தென்னிந்தியாவிலும் ஒரு சபையை யேற்படுத்திக்



கொண்டு, அதைச் சேர்ந்த மெம்பர்களுள் இம்மாதிரியான விதிகளைச் செலுத்த ஏன் நம் தலைவர் முயலக் கூடாது? இத்தகைய முயற்சி நாமெல்லாரும் விரும்பும் சுராஜ்யப்பேற்றுக்கு உற்ற வழிகளிலொன்றாம்.

## சென்னையில் ஒரு லேடிஸ் கிளப்
### அதாவது ஸ்திரீகளின் சங்கம்.

சில தினங்களுக்கு முன்னால் J. S. ராவ் என்ற ஒருவர் சென்னையில் ஒரு லேடிஸ் கிளப் அல்லது ஸ்திரீகளின் சங்கம் அவசியமென்று பத்திரிகைகளில் எழுதினார். அவர் எழுதினதை ஆமோதித்து மெயில் பத்திரிகையில் சுந்தரிலாஸரஸ் என்ற ஒரு கிறிஸ்தவப் பெண் பல யோசனைகளடங்கிய கடிதமொன்று எழுதினார். கல்வி கற்று நல்ல அந்தஸ்திலுள்ள புருஷர் அங்கங்கு சங்கங்கள் ஸ்தாபித்து, ஒழிந்த நேரத்தை உல்லாசமாய்க் கழித்தும் சிநேகம் செய்துகொண்டும் ஒருவர் அறிந்ததை மற்றொருவருக்குச் சொல்லியும், நலம் பெற்று வருகிறார்கள். அப்படியே ஸ்திரீகளும் செய்வது அவசியமென்று நமது ஸ்திரீகளுக்கே தோன்றி வருகின்றது. தற்கால நாகரிகத்தை யுத்தேசித்து இப்படிப்பட்ட ஸ்திரீ சங்கங்கள் அவசியமென்றே சொல்லவேண்டும். கவலையில்லாமல் ஜீவனம் செய்யக்கூடிய குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகள் மாலைப்பொழுதுகளில் அல்லது விசேஷமான சமயங்களில் ஒன்று சேர்ந்து புருஷர்களைப்போல் நலம் பெறுவது பொது நன்மைக்குக் காரணமாகும். அவர்களுடைய மனது சிறிது நேரமாவது வீட்டுக் கவலை யின்றிச் சந்

தோஷ மடைவதோடு அறிவும் அனுபோகமும் விசாலம் பெறும். அநாகரிகமான வழக்கங்களை யொழிப்பார்கள். உலகவிவகாரங்களை அறிந்துகொள்வார்கள், ஜாதிவேற்றுமை அந்தஸ்துவேற்றுமை இவைகள் குறையும். மிஸ்டர் J. S ராவ் எழுதின நிருபத்தில் இந்த ஸ்திரீ சங்கத்தில் புருஷரும் சேரவேண்டுமென்று எழுதினார். அதைச் சுந்தரிலாலவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஸ்திரீ சங்கம் ஸ்திரீகள் அடங்கினதாகவே இருக்க வேண்டு மென்கிறார். ஒரு வகுப்பு ஸ்திரீகளில்லாமல் பற்பல வகுப்பு ஸ்திரீகளும் இந்தச் சங்கத்தில் சேரவேண்டு மென்கிறார். இதுதான் சரியான அபிப்பிராயம்.

ஆங்கிலேய ஸ்திரீகள் இப்படிப்பட்ட சங்கங்கள் வைத்து நடத்தி அனுபோகப் பட்டவர்களாகையால், அவர்களையும் நம் ஸ்திரீ சங்கத்தில் சேர்த்துக்கொள்ளலாம். புனா, பம்பாய், கல்கத்தா, இவை போன்ற பட்டினங்களில் ஏற்கெனவே இம்மாதிரிச் சங்கங்கள் நடந்து வருகின்றன. பம்பாயில் ராமாபாய் ரானடே என்ன, லேடி சந்தவர்க்கரென்ன, வேணுபாய் நாம் ஜோஷியென்ன, இவர்களுடைய நன் முயற்சிகள் பயன் விளைத்து வருகின்றன. வங்காளத்தில் ஸ்ரீமதி சுவர்ண குமாரிதேவி தம் சகோதரிகளின் நன்மைக்காக உழைத்து வருகிறார். வட இந்தியாவில், ஸ்ரீமதி சரலாதேவி சௌதரினியும், ஸ்ரீமதி யமுனாபாய் ஹரி கிருஷ்ணலாலும் இம்மாதிரி வேலை செய்து வருகிறார்கள். தென்னிந்தியாவில் பங்களூர் பட்டினத்தில் ஸ்ரீநிவாச மந்திரம் என்ற சங்கமொன்று இந்த வழியில் சிரமப்பட்டு வருகின்றது. சென்னையில் இவ்வாறு



நல்ல காரியம் செய்ய வேண்டுமென்கிற விருப்பமுள்ள பெண்மணிகள் இல்லாமற் போகவில்லை. மைலாப்பூரில் இம்மாதிரிச் சங்கமொன்று இருந்து, இரண்டொரு சமயங்களில் அதைச் சேர்ந்த பெண்கள் படித்த வியாசங்களை பத்திரிகையில் பிரசுரித்த ஞாபகமிருக்கின்றது. மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயரின் மனைவியார் இந்த விஷயத்தில் முயற்சி செய்ய விருப்பமுள்ளவரென்று நினைக்கிறோம். லார்டு வென்லாக் கவர்னராயிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பிப்போன சமயத்தில் லேடி வென்லாக்கின் பேரால் சமுத்திரக் கரையில் தோட்டமொன்று கற்பித்து சேர்த்தியான ஒரு கட்டிடமும் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தத் தோட்டமும் கட்டிடமும் உபயோகிப்பாரில்லாமல் வீணே கிடக்கின்றன. அவைகளை மேற்கண்டவாறு ஆலோசனை செய்யப்படும் சங்கம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

இப்படி ஸ்திரீ சங்கங்கள் ஸ்தாபிப்பதில் இரண்டு அம்சங்களைப் பற்றி எச்சரிக்க வேண்டுமென்று நாம் நினைக்கிறோம். இயற்கையாகவே ஸ்திரீகள் அலங்காரப்பிரியர். பொது ஸ்தலங்களுக்குப் போகும் போது, தங்களைச் சிறப்பாய் அலங்காரம் செய்து கொண்டு போகவேண்டுமென்ற விருப்பமுள்ளவர்கள். செல்வமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகள் உயர்ந்த புடவைகளாலும் விலையேறின ஆபரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டு போகிறார்கள். அவர்களைப் பார்த்துச் சாமானியக் குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகளும் தங்களுக்கு ஏற்காத செலவு செய்து அலங்காரம் செய்து கொள்ளவேண்டுமென்று விரும்பினால், அது

ஒரு பெருந் தீங்காய் முடியும். ஆகையால் வீண் அலங்காரங்களில் செலவு செய்யும் வழக்கத்தைக் குறைப்பது இப்படிப்பட்ட ஸ்திரீ சங்கங்களின் முக்கிய கருத்தாயிருக்கவேண்டும். இரண்டாவது, சங்கங்களுக்குப் போகும் ஸ்திரீகள் தங்கள் வீடுகளில் செய்யவேண்டிய கடமைகளை அசட்டை செய்யக்கூடாது. குடும்பத்தை நிர்வகிப்பதும் குழந்தைகளை வளர்ப்பதும் ஸ்திரீகளின் முதற்கடமை என்பதையும் வீட்டைத் தாண்டிப் பொது ஸ்தலங்களில் காலங்கழிப்பது ஸ்திரீகளுக்கு அவ்வளவு அவசியமில்லை என்பதையும் அறியவேண்டும்.

"பங்களூரில் பிரம்ம ஸ்ரீ கோபாலா சார்லு என்ற ஓர் உத்தம மதாபிமானி வெகுநாளாய் 'ஸ்ரீநிவாஸ மந்திரம்' என்று ஒரு தர்மஸ்தாபனம் வைத்து நடத்தி வருகிறார். அதில் ஒரு புஸ்தகசாலை வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளும் புருஷர்களுமாக அநேக ஜனங்கள் வந்து புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் இனாமாகப் படிக்கிறார்கள். அடிக்கடி ஸ்திரீகள் கூடிப் பிரசங்கங்கள் செய்கிறார்கள். அதில் ஒரு அனாதாலயம் இருக்கின்றது. அதனுடைய 26-வது வருஷோத்சவம் நடந்தபோது மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்டு ஒரு உபந்நியாசம் செய்தார். பிரம்ம ஸ்ரீ கோபாலா சார்லுவின் தர்மத்தைப் புகழ்ந்து, முக்கியமாய் அனாதாலயத்துக்கு ஜனங்கள் உதவி செய்வது அவசியமென்று சொல்லி, ஆரிய சனாதன தர்மத்தின் நியமங்களும் விதிகளும் இந்த ஆரிய பூமியில் வரவர அசட்டை செய்யப்பட்டு வருவது விசனகரமென்று பேசினார். ஆரிய வர்ணாசிரம தர்மங்களைத் தற்காலத்தவர்கள் சரியாய்ச் சோதனை செய்து



அறியாமல் குற்றம் சொல்லுகிறார்களென்றும், அவைகள் இப்போது பாழ்பட்டுச் சீர்கெட்டிருக்கிறபோதிலும், ஆதியில் சாஸ்திர யுக்தமான ஆதாரத்தின் பேரிலேயே ஏற்பட்டனவென்றும் சொன்னார். மோக்ஷம் கர்மத்தினாலேயே சித்திக்க வேண்டுமென்றும், க்ஷத்திரியன் மோக்ஷத்தை இச்சித்துத் தவம் செய்வானானால் அது பிரயோசனமற்றதாகுமென்றும், பிராமணன் ஆசார சீலனாயிருந்து சனாதனதர்மங்களை ஜனங்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்றும், பிள்ளைகளுக்கு வித்தை கற்பிப்போர் பிராமணராகவே இருக்க வேண்டுமென்றும், அவர்கள் அப்படிச் செய்வார்களானால் க்ஷத்திரியர் ராஜாங்கக் காரியங்களைக் கவனிப்பார்களென்றும், சொன்னார். பிராமணர்கள் ஆசாரியராயிருப்பதை விட்டு, வக்கீலாகவும் வைத்தியனாகவும் குமாஸ்தாவாகவும், ஆய்விட்டார்கள்; சில பிராமணர் உப்பு விற்போராயும் வண்ணான் தொழில் செய்வோனாயும் ஆய்விட்டார்கள். பாரமார்த்திக தர்மங்களில் இந்தியா என்ன செய்யுமோ வென்று உலகம் எதிர்பார்த்திருக்கிறதென்று கூறியிருந்தவர்களைப் பார்த்து எச்சரித்துவிட்டு, தேவாலயமாயும் தர்மாலயமாயும் இருக்கிற அந்த ஸ்ரீநிவாஸ மந்திரத்துக்கு மைசூர், பங்களூர் போன்ற பெரிய பட்டணங்களிலுள்ள தர்மவான்கள் உதவி செய்யப் பின் வாங்கக்கூடாதென்று மிஸ்ஸெஸ் பெஸண்ட் சொல்லி முடித்தார்.

### லாகூரில் ஸ்திரீகள் சங்கம்.

லாகூரில் ஸ்திரீகள் சங்கத்தில் 400-ஸ்திரீகளுக்கு மேல் வந்து கூடி இருந்தார்கள். பதி

தாமறைவில்லாமல் சங்கம் நடந்த போதிலும் மகம்மதிய ஸ்திரீகள் வரவில்லை. வட இந்தியாவில் ஹிந்து ஸ்திரீகள் மகம்மதிய ஸ்திரீகளைப் போல் புருஷர் திருஷ்டியில் படாமல் முகத்தை மூடிக் கொண்டும் அல்லது பர்தா மறைவிலிருந்தும் நடமாடுவார்கள். மகாராஷ்டிர ஸ்திரீகளும் திராவிட ஸ்திரீகளும் இப்படிச் செய்வதில்லை. ஸ்திரீகள் மறைந்துக் கொள்ளுகிற வழக்கம் நம் தேசத்தில் பூர்வகாலத்தில் இல்லையாயினும் மகமதியரைப் பார்த்து ஹிந்து ஸ்திரீகளும் அந்த வழக்கத்தை அனுசரித்தார்களென்று நினைக்கப்படுகிறது. இந்த வழக்கம் நாகரிகம் அதிகரித்து வரும் இக்காலத்தில் மகமதியரிலும் ஹிந்துக்களிலும் பலர் அனாவசியமென்று கருதி அதைக் கைவிட்டு வருகிறார்கள். லாகூரில் கூடின சங்கத்தில் ஸ்திரீகள் இந்த வழக்கத்தை அனுஷ்டிக்காததற்கு இது ஒரு காரணமாயிருக்கலாம். புருஷர் அந்தச் சங்கத்தில் வாராதிருந்ததும் ஒரு காரணமாயிருக்கக்கூடும். அப்படியிருக்க மகம்மதிய ஸ்திரீகள் முற்றிலும் ஒதுங்கி இருந்தது எதனாலோ? ஹிந்து ஸ்திரீகளுடன் தாங்கள் சேரக்கூடாதென்று ஒதுங்கி நின்றார்களானால் அது சரியான எண்ணமல்ல. காங்கிரஸ் கூட்டத்தில் மகமதியர் வராமல் ஒதுங்கியிருந்ததற்கு இராஜாங்க சம்பந்தமான விஷயங்களில் இருவகுப்பாருக்குமுள்ள அபிப்பிராய பேதம் காரணம். ஸ்திரீ சங்கம் இராஜாங்க சம்பந்தம் பெற்றதல்ல வாகையால் எந்த ஜாதி ஸ்திரீகளானாலும் ஒன்று சேர்ந்து தேசப் பொது நன்மையைப்பற்றி ஆலோசனை செய்யலாமே!

இந்தச் சங்கத்துக்கு பிரதாபகர் மகாராணி தலை



மை வகித்து ஹிந்தி பாஷையில் பிரசங்கம் செய்தார். ஸ்திரீகளின் கல்வியைப்பற்றியும் ஸ்திரீகள் குடும்பங்களில் வகிக்கும் பொறுப்பைப் பற்றியும் நம்மிலுள்ள சில துர்வழக்கங்களை நீக்குவதைப் பற்றியும் ஜன நிர்மாணம் செய்வதில் ஸ்திரீகள் செய்யக் கூடியதைப் பற்றியும் இவர் பேசினார். வேறு சில ஸ்திரீகளும் பேசினார்கள். சரளாதேவி செளதரிணி என்ற பெங்காள ஸ்திரீ ஒரு திறமையான நீண்ட பிரசங்கம் செய்ததில், இந்தியாவிலுள்ள ஸ்திரீகள் அனைவருக்கும் பொதுவாக காங்கிரசைப் போலவும் ஆசாரத்திருத்தச் சங்கம் போலவும், "பாரத ஸ்திரீ மகாமக்திரம்" என்ற பெயருடன் ஒருசங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, அதற்கு அங்கங்கு கிளைச்சங்கங்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார். இந்தச் சங்கமும் அதன் கிளைச்சங்கங்களும் ஸ்திரீகளின் கல்வி அபிவிருத்தியைப் பற்றி முயற்சி செய்ய வேண்டும்; ஸ்திரீகள் கையில் அறிவாகிய விளக்கு இருக்குமானால் அவர்கள் தங்கள் மக்களை நல்வழியில் நடத்திச் செல்வார்கள்; அப்படி விளக்கில்லாமல் அறிவின்மையாகிய இருட்டில் நடமாடுவார்களானால், பகுத்தறிவின்றிக் கெட்ட வழிகளில் தங்கள் மக்களைப் போகவிடக்கூடும்; என்றும் வெகு புத்திசாலித்தனமாய்ப் பேசினார். கல்கத்தாவில் பெயர்போன பாரிஸ்டர் மிஸ்டர் செளதரியின் மனைவியாகிய இவர் இவ்வாறு பேசின பிறகு, ஒரு சன்னியாசி ஸ்திரீ சதானந்த ஸரஸ்வதி என நாமம் பூண்டவர் பேசினார். பிறகு டிரான்ஸ்வாலில் துன்புற்று வருந்தும் நம் சகோதரிகளுக்கு உதவியை நோக்கிக். கூடியிருந்த ஸ்திரீகளுக்கு வேண்டுகோள் செய்யப்பட்

டது. சுமார் 120 ரூபாய் வருவானதாகவும் சில ஸ்திரீகள் தங்கள் மோதிரங்களை கழற்றிக்கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு நம் ஸ்திரீகள் ஒன்றுகூடித் தங்கள் வகுப்புக்குற்ற நன்மை தீமைகளைப் பற்றி ஆலோசிப்பதும் தேச க்ஷேமத்தைப்பற்றி ஆலோசிப்பதும் இப்போது நம் பாரத பூமியில் தோன்றிவரும் மங்களக் குறிகளிலொன்று. ஸ்திரீகள் தங்கள் கணவருக்குப் பணிவிடை செய்வது அவர்களுக்குரிய உத்தம தருமமாயினும், மற்றப்படி தங்கள் குழந்தைகளையும் சிறுவர்களையும் நல்ல வழிகளை பழித்து அவைகளில் பயில்விப்பதும் தேச க்ஷேமத்தில் அக்கறை பாராட்டிப் புருஷரோடு ஒத்துழைப்பதும் இந்த பதிவிரதா தருமத்திற்கு எவ்விதத்திலும் பொருந்தாதன வாகக் கருதுதல் பேதமையாகும். நாணம், அடக்கம், மென்மை, சாந்தம், முதலிய மகோன்னத குணங்களுக்கும் இவைகள் பொருந்தாதன வல்ல. புருஷருக்கு எப்படியோ அப்படியே ஸ்திரீகளுக்கும் பெரும் சிந்தனைகள் சிந்திப்பதும், பெரும் கடமைகள் ஏற்பதும், பெரும் காரியங்கள் செய்வதும், அவர்களுடைய பெண்மையை உயர்த்திச் சிறப்புடன் பிரகாசிக்கச் செய்யுமே யன்றி மழுக்கமுறச் செய்யா.

# CHAPTER VIII.

## சுத்தமான ஆகாரம்.

நமது தேசத்தில் இப்போது அங்கங்கே பெரிய பட்டிணங்கள் உண்டாகி வருகின்றபடியால், அவைகளில் நெருக்கமாய் வசிக்கும் ஜனங்கள் தங்கள் தேக சுகத்தைப்பற்றி அதிகமாய்க் கவலைப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள். பூர்வம் நம் தேசத்தில் பெரிய பட்டிணங்களில்லாமல் ஜனங்கள் கிராமாந்திரங்களில் வசித்தபடியால் தேக சுகத்துக்கு அதிகமாய்க் கேடுண்டானதில்லை. நல்ல காற்றும் நல்ல ஆகாரமும் சுத்தமான ஜலமும் கிடைத்துக்கொண்டிருந்தன. இப்போது பட்டிணங்களில் ஜனங்கள் திரளாய்க்குவிந்து நெருக்கமான விடங்களில் வசிக்கிறபடியால், மேற்சொன்ன மூன்று சுகாதாரங்களும் கிடைப்பதில்லை. சுத்தக் காற்று கிடைக்கவேண்டுமானால் நம்முடைய முயற்சியினாலேயே அது கிடைக்கக்கூடும். ஒழிந்த வேளையில் பட்டிணத்துக்கு வெளியே போய் உலாவி நல்ல காற்றை யுட்கொள்ளக்கூடும். அப்படியே சுத்த ஜலம் வேண்டுமானால் கிடைக்கும் ஜலத்தை நன்றாய்க் காய்ச்சி வடிகட்டி உபயோகப்படுத்தக்கூடும். நல்ல ஆகாரம் கிடைக்காவிட்டால் ஜனங்கள் என்ன செய்வார்கள்? அவனவனுக்கு வேண்டிய ஆகாரத்தை அவனவன் இஷ்டப்படிப் பெறுவது சாத்தியமல்ல. கடையிலேயே அதை வாங்கவேண்டி யிருப்பதால், கடைக்காரர்கள் சுத்தமான ஆகாரத்தைவிற்றாலொழிய

ஜனங்கள் தேகசுகத்துக்குக்கேடு செய்யக்கூடிய ஆகாரத்தை வாங்கி உபயோகிக்க வேண்டிவரும். நமது கடைக் காரர்கள் ஆகாரப் பொருள்களைப் பலவிதமாய்க் கலப்புக் கலந்து விற்பதில் சமர்த்தர்கள். அரிசி முதலிய தானியங்களிற் கலக்கப்படும் மண்ணும் கல்லும் புழுதியும் எல்லோருக்கும் தெரியும். இவைகளை ஜனங்கள் உபயோகிப் பதற்குமுன் அசுத்தமான கலப்பை நீக்கிச் சுத்தமான தானியத்தை உபயோகப் படுத்திக்கொள்ளுதல் சாத்தியம். ஆனால் அப்படி சுத்தப்படுத்திக் கொள்ள முடியாத சாமான்களும் விலைக்கு வாங்கப்படுகின்றன. நெய்பால் கறிகாய் இவைகள் அசுத்தமாயிருந்தாலும் ஜனங்கள் அவைகளைத் தான் வாங்கி உபயோகப்படுத்த வேண்டியதா யிருக்கிறது சில சமயங்களில் அறியாமையாலும் மூடத்தனத்தாலும் அஜாக்கிரதையாலும் கெட்டுப்போன பதார்த்தங்களை ஏழைகள் வாங்கி உபயோகிக்கிறார்கள். சில பதார்த்தங்கள் சுத்தமானவைக ளல்லவென்று தெரிந்துங்கூட அவைகளையே வாங்கி உபயோகிக்க வேண்டியதா யிருக்கின்றது.

உதாரணமாக, பெரிய பட்டினங்களில் இப்போது சுத்தமானநெய்யாவது சுத்தமானபாலாவது கிடைப்பது கஷ்டமாகி விட்டது. பால் சுத்தமானதாய்க் கிடைக்க வேண்டுமென்று பெரிய பட்டினங்களில் கறவைக் கூட்டு (டேரி)கள் வைத்துப் பால் தயிர் முதலியவைகள் விற்கும்படி செய்ய முயற்சி செய்யப்படுகின்றது. வடக்கே லக்னௌ என்ற லக்ஷ்மணபுரி பட்டினத்தில் முனிசிபாலிடியும் கவர்ன்மெண்டும் இம்மாதிரிசெய்ய முயன்று வருகிறார்கள் இப்போது கல்கத்தாவில் இந்தவிஷயமாய்



ஒரு பெரும் பிரயத்தனம் செய்யப்பட்டு வருகின்றது. பட்டினத்துக்கு வெளியில் விசாலமான ஸ்தலங்களில் புற் பயிர் செய்து வியாதி இல்லாத நல்ல மாடுகளை அங்கு சேர்த்து வைத்து நல்லபாலும் நல்ல தயிரும் கிடைக்கும்படி முனிசிபாலிடியார் முயற்சி செய்து வருகிறார்கள். மற்றபட்டினங்களிலும் இம்மாதிரியே செய்வது சில காலத்துக்குள் அவசியமாய் முடியு மென்பதில் சந்தேகமில்லை. பால் தொந்திரவை விட நெய் தொந்திரவு அதிகமாயிருக்கின்றது. சிறு பட்டினங்களிலுங்கூட நல்ல நெய் இப்போது கிடைப்பதே இல்லை. பிராணிகளின் கொழுப்பை நெய்யுடன் கலந்து விற்கிறபடியால், அது துர்நாற்ற முள்ளதாயிருப்பதுந் தவிர, உடம்புக்கு சுகக்கேட்டையும் உண்டுபண்ணுகிறது. கல்கத்தா பட்டினத்தில் கடைக் காரர்கள் நெய்யை இவ்வாறு கலந்து விற்கிறார்களென்று சிலரை முனிசிபல் அதிகாரிகள் பிடித்துக் கடுமையாய்த் தண்டித்து வருகிறார்கள். சில்லரை, வியாபாரிகள் இப்படிக்கலக்கிறார்களா அல்லது மொத்தமாய் வாங்கி விற்பவர்கள் கலக்கிறார்களா வென்று சந்தேகமுண்டாகி, மொத்தமாய் வாங்கி விற்பவர்கள் ஒரு கூட்டங்கூடி கலப்பவர்கள் தாங்களல்ல வென்றும் கலப்பவர்கள் சில்லரை வியாபாரிக ளென்றும், அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். யார் கலப்புச் செய்தாலும் அதிகாரிகள் அவர்களைப் பிடித்துத் தண்டிப்பது அவசியமென்று நினைக்கிறோம். அசுத்தமான சாமான்களை வாங்கி உண்பதைவிட அவைகளில்லாமலே இருப்பது நலமாகையால், சுத்தமான நெய்யும் பாலும் கிராக்கியாக விற்கவேண்டி

வந்து சில ஜனங்களுக்கு அவைகள் கிடைக்காவிட்டாலும் அதனால் அவ்வளவு கேடில்லை. இவ்விஷயத்தில் நம்மவர் சிறிது ஊக்கம் காட்டுவார்களானால், நல்ல சாமான்கள் கிடைப்பது கஷ்டமல்ல. பட்டினத்தில் வசிப்போர் அதிக விலை கொடுக்க இஷ்டப்பட்டவர்களாயிருப்பதால், கிராமவாசிகள் பாலும் நெய்யும் பட்டினங்களில் விற்று நல்ல லாபம் சம்பாதிக்கலாம். சாமான்கள் கிராக்கியாயிராமல் மலிவாயிருக்குமானால் அவைகளைக் கலப்புச் செய்து அசுத்தப்படுத்தி விற்க அவ்வளவு காரணமிராது. கறிகாய்கள் அழுகினவைகளையும் அசுத்தமானவைகளையும் விற்பவர்களைக் கூட அதிகாரிகள் பிடித்துத் தண்டிப்பது அவசியம். பட்டினங்களில் தேக சுகத்துக்குக் கேடான காரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளில் சில எளிதில் நீக்கக்கூடியவைகளல்ல. மற்றவைகளை ஜனங்களும் அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து நீக்கிவிடலாம். ஆகையால், அசுத்தமான உணவுப் பொருள்கள் விற்கப்படும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் யோசனை செய்து, இப்போதுள்ள சட்டத்தை மாற்றி எளிதாய் அனுஷ்டிக்கக்கூடிய சட்டத்தைச் செய்து, முனிசிபல் அதிகாரிகள் வியாபாரிகளுக்கு அனாவசியமான தொந்திரவில்லாமல் இந்த வழக்கத்தைத் தடுக்கும்படிச் செய்ய வேண்டும்.

# CHAPTER IX.

## ஜாதிய ஒருமை.

வடக்கே அலகாபாத்துப் பட்டினத்தில் மிஸ்டர் சச்சிதானந்த சின்ஹாவினால் பிரசுரம் செய்யப்படும் "ஹிந்துஸ்தான் ரிவியூ" என்ற மாதாந்தப் பத்திரிகையில் ஜாதிய ஒருமை என்கிற தலைப்பின் கீழ் மூன்று கல்விமான்கள் மூன்று வியாசங்கள் எழுதியிருக்கிறார்கள். இம்மூவரின் பெயர்கள் மிஸ்டர் E. A. வோட் ஹௌஸ், M. A.; மிஸ்டர் (சகோதரி) நிவேதிதா என்று பெயர்பூண்ட மிஸ் மார்கட் நோபில் என்கிற ஒரு ஆங்கிலேய ஸ்திரீ; டாக்டர் ஆனந்த குமாரசாமி; இம்மூவரும் இந்தியாவில் வசிக்கும் ஜனங்கள் ஜாதிமதாசார வேற்றுமைகளால் எவ்வளவு பிரிவுபட்டிருந்த போதிலும், காலவளவில் ஒரு தனி ஜனமாய்த் திரண்டு அமைவது சாத்தியமென்றும் அப்படி அமைந்துகொண்டு வருகிறார்களென்றும் எழுதுகிறார்கள். மிஸ்டர் வோட் ஹௌஸ் என்ன எழுதுகிறாரென்றால்:—

எப்படி ஒரு சரீரமானது வளர்ந்து முதிர்ச்சி பெறுகிறதற்கு ஒவ்வொரு அவயவமும் வளர்ந்து முதிர்ச்சி பெறுதல் அவசியமோ அப்படி இந்திய ஜனசமூகமாகிய சரீரத்தில் பற்பல அவயவங்களாகிய தனிச் சமூகங்கள் கட்டுப்பாடு பெற்று ஒருமைப்படுவது அவசியம். அவ்வாறே ஹிந்துக்களும் மகமதியரும் தனித்தனியே

தங்கள் தங்கள் சமூகத்தை அறிவுள்ளவர்களாக்கிக் கட்டுப்படுத்திக்கொள்ள முயன்று வருகிறார்கள். ஹிந்து சமூகத்தில் இன்னும் பற்பல வகுப்பார் தனித்தனியே கூட்டங்கள் கூட்டி அவரவர்களுக்கு உள்ள குறைகளைப் பரிசோதித்து அகற்றி பலப்பட எத்தனம் செய்து வருகிறார்கள். அங்கங்கே வகுப்பார் தனிப்பட்டு முயற்சி செய்வதைப் பார்த்து ஹிந்து ஜன சமூகம் ஒருமைப்படாமல் பிரிவினைப்பட்டு வருகிறதென்று சிலர் எண்ணக்கூடும். அப்படி எண்ணுதல் தப்பு. ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுடைய நன்மைகளைக் காக்கவேண்டி கட்டுப்பாடு செய்துகொண்டுவிட்டால், அத்துடன் நிற்கமாட்டார்கள். அவர்களுடைய விருப்பங்களும் லக்ஷியங்களும் தங்கள் தனியான நன்மைகளைத் தாண்டித் தேசத்தின் நன்மைகளும் அடங்கினவையாக விசாலம் பெறும். உதாரணமாக, மகமதியர் தற்போது ஹிந்துக்களினின்றும் தனித்து நின்று சுயநலம் பாராட்டுகிறவர்களாகத் தோன்றினபோதிலும், போகப்போக மற்ற வகுப்பாருடைய நன்மைகளையும் காக்க முன் வருவார்கள். ஏனெனில், அப்படிக் காத்தலே தங்களுடைய தனியான நன்மைகளுக்குப் பலத்தைக் கொடுப்பதாகும். ஹிந்துக்களுக்குள்ளும் காயஸ்தரென்றும் கத்ஜிவிகளென்றும் வைசியரென்றும் தனியான வகுப்பார் அப்போதைப்போது கான்பெரன்ஸ் அல்லது சங்கங்கள் கூட்டித் தங்களுடைய நன்மைகளையே கவனிப்பவர்களாகத் தோன்றினாலும், ஹிந்து சமூகத்தின் மொத்த நன்மையையாவது தேசத்தின் மொத்த நன்மையையாவது அசட்டை செய்தல் சாத்தியமல்ல. எப்படி ஒரு சரீரத்தில் ஒரு அவயவமானது பலப்பட்டு



அதன் சேஷ்டைகளால் மற்ற அவயவங்களுக்கும் சரீரம் மொத்தத்துக்கும் பலத்தைக் கொடுக்கின்றதோ, அப்படியே இந்திய ஜன சமூகத்திலும் நேரிட்டு வருகின்றது.

சகோதரி நிவேதிதா எழுதுவதாவது:—இந்தியா தேசமானது மூன்று பக்கம் சமுத்திரங்களாலும் ஒரு பக்கம் மகோன்னதமான பர்வதங்களாலும் சூழப்பட்டு, உலகத்து மற்றத் தேசங்களினின்றும் தனிப்பட்டிருப்பதால், அதில் வசிக்கும் ஜனங்கள் தனியான சமூகத்தினராகக் கருதப்படவேண்டும். இந்திய ஜனங்களுடைய பூர்வீக சரித்திரமும் வளர்ச்சியும் மற்றத்தேச ஜனங்களுடைய சரித்திரத்தினின்றும் வளர்ச்சியினின்றும் தனிப்பட்டு வந்திருப்பதால், அவர்களுடைய குணநிசயங்களும் மதாசாரங்களும் தனியாகவே அமைந்திருக்கின்றன. இந்திய ஜனங்களில் ஹிந்துக்களே பிரதானமானவர்களாயினும் மகமதியர்கள் கூட ஹிந்துக்களுடைய சுபாவத்தையும் சமய நுட்பங்களையும் தம்மில் ஊறப்பெற்றவர்களாய் ஹிந்துக்களுடன் ஒருமைப்பட்டிருக்கிறார்கள். ஹிந்துக்களுடைய வேதாந்த சாஸ்திரப் பான்மையையும் மிருது சுபாவத்தையும் ஜீவகாருண்யம் முதலிய குணங்களையும் இந்திய மகமதியர் பெற்றிருக்கிறார்கள். இவைகளோடு இவ்விரு பெரும் வகுப்பாரையும் சேர்த்துக் கட்டுப்படுத்தியிருக்கும் பொதுவான ராஜாங்கத்தையும் பொதுவான மனோரதங்களையும் சேர்த்தால் இந்திய ஜனங்கள் ஒரு ஜனமாய்த் திரள அவசியமான ஹேதுக்கள் இல்லையென்று மறுத்தல் முடியாது.

இலங்கைத் தீவு வாசியாயும் மகா கல்விமானும்

தமிழ் உலகத்துக்கு மகுடம்போல் விளங்குபவராயுமுள்ள டாக்டர் குமாரசாமி இந்தியாவின் பூர்விகப் பெருமையிலும் அதன் பிற்காலத்துக் கீர்த்தியிலும் எப்போதுமே வாஞ்சை வைத்தவர். இந்த வாஞ்சையினால் தூண்டப்பட்டு, அவர் சென்ற விடங்களில் இந்தியருக்குச் சற்புத்தி கூறிப் பிரசங்கங்கள் செய்து வருகிறார். ஹிந்துஸ்தான் ரிவ்யூவில் அவர் எழுதி இருக்கும் வியாசமும் அவருடைய இந்த வாஞ்சையைக் காட்டுகின்றது. பூர்வ காலத்து அரசர்களும் இந்தியா ஒரு தேசமென்பதை மறந்தவர்களல்ல. யுதிஷ்டிர மகாராஜா ராஜசூய யாகம் செய்தபோது அவருடைய ஏகாதிபத்தியத்தை அங்கீகரித்ததற்கு அடையாளமாக இந்தியாவில் நான்கு திக்குகளினின்றும் திராவிட தேசத்தினின்றும் கூட, மன்னர்கள் பிரசன்னமாயினர். பிறகு அசோகன் விக்கிரமாதித்தன், அக்பர் ஆகிய சக்கிரவர்த்திகள் இந்தியாவை ஒரு குடைக்குக் கீழ்ப்படுத்தி, ஏகாதிபத்தியம் ஸ்தாபித்து ஆட்சி புரிந்தனர். இந்திய ஜனங்களுடைய பூர்விக சரித்திரமும் ஆசார அனுஷ்டானங்களும் அனாதிகாலத்துச் சாம்பிரதாயங்களும் இந்தியா ஒரு தேசமாகவே கருதப்பட்டு வந்ததைக் காட்டுகின்றன. ஹிந்துக்களால் புண்ணிய ஸ்தலங்களாகக் கருதப்படுபவை சில, வேற்று மதத்தினருக்கு உள்ளனபோல, தூரமான அன்னிய தேசங்களிலிராமல் இந்தியாவின் எல்லைகளுக்குள்ளேயே இருப்பது இந்தக் கருத்தை விளக்கக்கூடியது. உலகத்தில் இந்தியாவே புண்ணிய பூமி என்றும், புண்ணிய ஸ்தலங்கள் அதனுள்ளேயே இருத்தல் தகுமென்றும், அப்புண்ணிய ஸ்தலங்களாலேயே ஹிந்துக்கள் மதாபிமானம் நிலைபெற்று ஒருமைப்பாடு



அடையவேண்டுமென்றும் முன்னோர்கள் கருதினார்கள். ஸ்ரீகாசி க்ஷேத்திரம் வடகோடியிலும், சேது தென்கோடியிலும் அமைக்கப்பட்டிருப்பதற்குப் பொருளில்லாமலில்லை. இந்தியாவின் புண்ணிய நதிகளாகிய ஏழு நதிகள் நாலா பக்கங்களிலும் பிரவாகிப்பவைகளாம். ஹிந்துக்கள் ஒவ்வொரு புண்ணிய தினத்திலும் அவைகளுடைய பெயரைச் சொல்லி ஸ்நானம் செய்வதும் ஹிந்துக்களின் ஒருமைத் தன்மையைக் காட்டுகின்றது. மகமதியர்களும் இந்திய ஜனசமூகத்தில் அடங்கினவர்களாகவே கொள்ளப்பட வேண்டும். தற்காலத்து இந்தியாவைப்பற்றிப் பேசும்போது மொகலாய சக்கிரவர்த்திகளையும், டாஜ் மகால் போன்ற அவர்கள் இயற்றிய சிற்பவேலைப் பெருமைகளையும் அராபி நூல்களும் பாரஸீக நூல்களும் இந்தியர் மனப்பயிற்சியில் செலுத்தின சக்தியையும் மறத்தல் சாத்தியமல்ல. இந்தியாவில் ஆண்ட மகமதிய அரசர்கள் தூரமான அன்னிய தேசங்களில் சிம்மாசனம் வீற்றிருந்து இந்தியாவைக் கப்பம் கட்டும் தேசம்போல் ஆண்டவர்களல்ல. இந்தியாவிலேயே வசித்துத் தாங்களும் இந்தியர்களாய் ஹிந்துக்களை வித்தியாசமின்றி நடத்தினார்கள். அக்பர் சக்கிரவர்த்தி செய்ததுபோல் தற்காலம் தக்ஷிணப் பிராந்தியங்களை ஆண்டு வரும் நிஜாம் அரசனும் செய்து வருகிறார். மகமதியரை ஹிந்துக்களினின்றும் பிரித்துக் கருதுவது சரியல்ல. ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒரு ஜனமாய்த் திரண்டு மனிதவர்க்கத்தின் சரித்திர நிர்ணயத்தில் தக்க பங்குபெற்று விளங்குவார்கள்.

இவ்வாறு இந்த தேசாபிமானி எழுதுகிறார். இம்

மூலரும் இம்மாதிரி பல காரணங்களைக் காட்டி இந்திய ஜனங்கள் ஒரு சமூகமாக அமைவது சமீபத்தில் பூர்த்தி பெறுமென்று எழுதி இருப்பது அப்படிப் பெறுவது ஒருக்காலும் சாத்தியமல்லவென்று சாதிக்கும் சில ஆங்கிலேயருக்கு விடையாகும்.

## புது நாகரீகமும் ஆசாரத் திருத்தமும்.

இப்படிப் பூர்த்திபெறுவது தற்காலம் நம் தேசத்தில் தோன்றிவரும் அநேக மாறுதல்களை நாமே நம்முடைய சொந்த முயற்சிகளால் சரியான வழிகளில் நடத்தி, நமது பழக்கவழக்கங்களிலும் வாழ்க்கையிலும் பதிந்து கிடக்கும் இடையூறுகளை நீக்கி, சமூக ஐக்கியமாகிய ஒரே நோக்கத்தைப் பின் பற்றிச் செல்லுவதால் சாத்தியமாகவேண்டும்.

சில காலத்துக்கு முன்னால் சென்னையில் நடந்த ஆசாரத்திருத்த சபைக்கு ஜஸ்டிஸ் ஸர் சங்கரன் நாயர் தலைவராயிருந்து, செய்த பிரசங்கத்தை ஆங்கிலேயப் பத்திரிகைகள் பொதுவாய்ப் புகழ்ந்து எழுதின. ஹிந்து சமூகத்தில் தற்காலத்துக்குப் பொருந்தாத சில ஆசாரங்கள் இருப்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அவைகளைத் திருத்தித் தற்காலத்துக்குப் பொருந்தியவைகளாக்குவதில் புத்திமான்கள் அக்கறையுள்ளவர்களாயிருக்கவேண்டும். நமது க்ஷேமத்தைக்கோரின ஆங்கிலேயர் சில காலத்துக்கு முன் ஆசாரத்திருத்த முயற்சிகளில் அநுதாபங்காட்டி வந்தார்கள். இப்போது அப்படிக் காட்டுவதில்லை. ஆசாரத் திருத்தங்கள் அந்தந்த ஜாதியார் அவர்களாகச் செய்து கொள்ள வேண்டியனவேயன்றி அன்னியர் பிரவேசித்தல் பல



னற்றதென்ற எண்ணத்தின் பேரில் ஆங்கிலேயர் இந்த விஷயத்தில் ஒதுங்கியிருக்கிறார்கள். ஆயினும், இப்போது முக்கியமான ராஜாங்கத் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்குந் தருணமாயிருப்பதால் அந்தத் திருத்தங்கள் பலன்கொடுப்பதற்கு ஜனங்களின் பழக்க வழக்கங்கள் ஒத்தனவாயிருக்க வேண்டுமென்றும், அப்படி தற்காலம் இல்லையென்றும், நமக்குக் காட்டுவதற்காக சில ஆங்கிலேயப் பத்திரிகைகள் சென்னையில் நடந்த கூட்டத்தைப்பற்றி அபிப்பிராயங்கள் தெரிவிக்கின்றன. உதாரணமாக, பம்பாயில் பிரசுரமாகிற "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை இந்தக் கூட்டத்தைப் பற்றி யெழுதி, இந்திய ஜனங்களுக்குப் பெரும் ராஜாங்க சுதந்தரங்கள் சித்திக்க வேண்டுமானால், அவர்களுடைய ஆசாரங்களும் சில அமிசங்களில் தீவிரமாய் மாறவேண்டுமென்று காட்டுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியாவில் நேரிட்டிருக்கும் பல மாறுதல்களில் புதிதாய் உண்டாயிருக்கும் மனோபாவங்களும் லட்சியங்களும் விசேஷமான மாறுதலென்று ஜஸ்டிஸ் ஸர் சங்கரன்நாயர் குறிப்பிட்டார். பிரிட்டிஷ் ஆட்சியால் தேசத்து ராஜாங்க முறை மாறியிருக்கின்றது; தொழில்களும் வியாபாரங்களும் மாறியிருக்கின்றன; முன்போல இந்தியா தனித்த தேசமாயிராமல் உலகத்து மற்றத்தேசங்களுடன் பிணைக்கப்பட்டுப் போயிருக்கின்றது.

இவைபோன்ற மாறுதல்கள் இந்திய ஜனங்களின் வாழ்க்கையை அடிபோடு மாற்றக்கூடிய முக்கியமான ஹேதுக்களாயினும், ஜனங்களுடைய மனோ பாவங்களும் விருப்பங்களும் லட்சியங்களும் பிரிட்டிஷ் ஆட்சி

யின் பழக்கம் மாறிவருவதும், இவ்வித வேறுதல்களில் ஒன்றாகும். விளக்கிச் சொல்லில், இந்து ஜனங்கள் ஒரே சமூகமாகத் திரண்டு ஒருமையுற்று வாழவேண்டுமென்பது இந்த மாறுதலுக்குத் திருஷ்டாந்தமாகும். அன்னிய தேசங்களுடன் வியாபாரங்கள் செய்து செல்வம் பெற வேண்டுமென்ற பெரும் விருப்பத்தையும் ஒரு திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். இத்தகைய மாறுதல்கள் நம் ஜனத்தலைவர்கள் மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தாலும், பெரும் பான்மையான பாமர ஜனங்கள் எப்போதும் போலவே இந்தப்புது உணர்ச்சிகளால் பாதிக்கப்படாமலிருக்கிறார்கள். இந்த உணர்ச்சி அவர்களுக்கும் எட்டி, அவர்கள் மனதிலும் உறுத்தி, அவர்கள் தலைவர்களைப் பின்பற்றிச் செல்லும்படி செய்தல் கற்றறிந்தவர்களின் நோக்கமாக வேண்டும். இப்படிப் பாமர ஜனங்களும் பண்டிதர்களும் ஒத்துச் செல்ல வேண்டுமானால் எந்த ஆசாரங்கள் தடைகளாயிருக்கின்றனவோ அவைகளை அநுபோகத்தில் பண்டிதர்கள் திருத்திக் காட்ட வேண்டுமென்று ஜஸ்டிஸ் ஸர் சங்கரன்நாயர் சொன்னார். "எவ்வளவு காலம் நாம் பாலவிவாக வழக்கத்தை நீக்கியும், விதவைகளுக்குப் புனர்விவாக பாத்தியம் கொடுத்தும், பிள்ளைகளுக்குப் படிப்புச்சொல்லி வைப்பதுபோலப் பெண்களுக்கும் சொல்லிவைத்தும், ஜாதி வித்தியாசத்தை யொழித்து அந்தஸ்து வித்தியாசத்தை ஏற்றும், ஜாதி உட்பிரிவுகள் உண்மையில் ஸ்தல பேதங்களால் நேரிட்டனவானதால் அவைகளை ஒன்றுசேர்த்தும், நமது லட்சிய நெறிகளை அநுபோகத்தில் பின்பற்றுமல் இருக்கிறோமோ அவ்வளவு காலம் நாம் ஜாதீய



வாழ்க்கையென்று புகழ்ச்சியாய்ச் சொல்லிக் கொள்ளுவது நிஜநிலைமைக்குஞ் சொற்பனமேயாகும்" என்று ஸர் மிஸ்டர் C. நாயர் சொன்னார்.

இவ்வாறு கற்றறிந்த பண்டிதர்கள் லட்சியங்களாகக் கொண்டிருக்கும் ஆசாரங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது கஷ்டசாத்தியமாயினும், ருத்தவழியில்விடாது தீவிர முயற்சிகள் செய்தல் அவசியமென அவர்கள் உணர்ந்திருக்கையில், சாமானிய ஜனங்கள் இப்பெரும் மாறுதல்கள் சாத்தியமென்றாவது அவசியமென்றாவது நன்மை செய்யக் கூடியனவென்றாவது ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆயினும், மெல்ல மெல்ல அந்த சாமானிய ஜனங்களும் அவ்வாறே உணரும்படி செய்து ஸர் C. நாயர் குறித்த பெரும் மாறுதல்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஸர் C. நாயரைப் போன்ற இந்திய தேசாபிமானிகள் இந்த வழியில் நமது முயற்சிகள் எவ்வளவு தீவிரமாயும் இடையறாமலும் செய்யப்பட்ட போதிலும் காலக்கிரமத்திலேயே சாத்தியமென்று ஊக்கத்துடன் அறிந்திருக்க, ஐரோப்பியர்கள் நமது ஜனங்களின் இயல்பை முற்றிலும் அறியாதவர்களாய் மேற்குறித்த மாறுதல்கள் உடனே நடந்துவிட வேண்டுமென வற்புறுத்துகிறார்கள். அப்படி உடனே நடக்காவிட்டால் இந்தியர்கள் ராஜாங்க சுதந்தரங்களுக்கு அருகர்களாகமாட்டார்களென்றும் பயப்படுத்துகிறார்கள். இதை நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம். ஏனெனில் சாமானிய ஜனங்களுக்கும் இப்புது உணர்ச்சியுண்டாய் ஆசாரங்கள் மாறுகிறவரையில், பொதுக்காரிய நிர்வாகத்தில்

இந்த ஆசாரங்களால் தடைப்படாது கற்றறிந்த தலைவர்கள் ராஜாங்கத் துறைகளுக்குச் சம்பந்தித்துச் சும்மாவிருத்தல் சாத்தியமல்ல. நமது ஆசாரங்கள் சிறிது சிறிதாய் காலத்துக்குத் தக்கபடி மாறுதல் பெறும்போது நமது ராஜாங்க சுதந்தரங்களும் பலப்படுமாயினும், தற்காலம் லார்டு மார்லியின் திருத்தங்கள் பலன் பெறுமாறு நமது பூர்வீக ஆசாரங்களின் உணர்ச்சி பொது ஜனங்கள் மனத்தில் போதுமான வன்மை மாறுமலிருக்கவில்லை.

## ஜனத்தொகுதியும் ஜாதி முன்னேற்றமும்.

எந்த ஜாதி சமூகமானாலும் அது மொத்தமாக முன்னுக்கு வர வேண்டுமானால், ஜனத் தொகுதிக்கும் அதாவது சாமானிய ஜனக்கூட்டத்துக்கும் தலைமை வகுப்பாருக்கும் அன்னியோன்னிய சம்பந்தமிருக்க வேண்டும். இந்திய ஜனங்களுக்கு எல்லாத் துறைகளிலும் தலைமை வகித்து நடத்துவோர் படித்தவகுப்பாராயிருக்கிறார்கள். ராஜாங்க உயர்வில்தான் ஆங்கிலங்கற்ற பெரியோர்கள் தலைவராயிருக்கிறார்கள். காங்கிரஸ் முதலான ஜாதிய சபைகளில் முன்னின்று நமது குறைகளை எடுத்துச் சொல்லி ஆங்கிலேயருடன் போராடுகிறவர்கள் மேல்நாட்டுக் கல்வியில் தேர்ச்சி பெற்று அந்நாட்டு ராஜாங்க முறைகளில் அனுபோகம் பெற்றவர்கள். மற்றப்படி ஆசாரத்திருத்தங்களில் முன்னிற்பவர்களும் இவர்களே. நமது பூர்வீக தர்மங்களையும் பழக்க வழக்கங்களையும் சோதனை செய்து, மத்திய காலங்களில் காலதேச வர்த்தமான வேற்றுமைகளை யனுசரித்துண்டான புதுமைகளை அகற்றி, இக்காலத்துக்குத் தக்கவாறு முற்காலத்துப் பெரியோரின் கொள்கைகளைத்



திருப்பி யனுஷ்டானத்துக்குக் கொண்டு வருகிறவர்களும் இந்த வகுப்பாரே. ஏற்கனவே நம் தேசத்தில் அநாதி காலமாய் ஏற்பட்ட மதாசாரியர்களும் சாதுக்களும் கற்றறிந்த பெரியோர்களும் இருந்து நம்புராதன நாகரிகம் முற்றிலும் மறைந்து போகாமல் அதைக் காத்துவந்த போதிலும், இவர்கள் மனதிலுங்கூட நவீன நாகரிக இயற்கையைப் புகட்டித் தற்கால வேற்றுமைகளை ஏற்கும்படி செய்கிறவர்களும் ஆங்கிலங்கற்ற வகுப்பாரென்றே சொல்லவேண்டியிருக்கிறது. தற்காலத்தில் சந்நியாசிகள் சாதுக்கள் இவர்களிலும் ஆங்கிலமறிந்தவர்கள் தோன்றி வருகிறார்கள். ஸ்வாமி விவேகாநந்தர் ஆங்கிலத்தில் மகா பண்டிதர். தியஸாபிகல் ஸொஸைடியைச் சேர்ந்தவர்களும் ஆங்கிலம் அறிந்தவர்கள்தான். இந்துக்களுக்குள் இப்போது பூர்வீக ஆசார அனுஷ்டானங்களிலும், மதக் கொள்கைகளிலும் புதிதாகப் பக்தியும் சிரத்தையுமுண்டாகிவருவது, ஆங்கிலப்பயிற்சியானது ஹிந்து நாகரிகத்துக்கு விரோதமல்ல வென்பதற்கு மாத்திரமல்ல, அதை யெழுப்பிப் பரவச்செய்யச் சாதகமாயிருக்கிறதென்பதற்கும் திருஷ்டாந்தமாகும்.

இன்னும், நமது கல்விச் சாலைகளில் பிள்ளைகளுக்கு ஜாதீய முறைகளின் படி நம்மவரே போதகர்களாய்ப் பயிற்சி செய்வித்தால் ஆங்கில ஞானமும் மேல்நாட்டு அனுபோகமும் நமது சனாதன தர்மங்களின் பெருமைக்காவது பிரகாசத்துக்காவது விரோதமாயிராமல், சாதகமாகவே யிருக்கும். ஜாதீய முறைகளின்றி அன்னிய முறைகளைக் கொண்டு அன்னியரால் பயிற்சி செய்விக்கப்படும்போதே மேல்

நாட்டுக் கல்வியின் உதவி புலப்படுகிறது. நம் தேசம் பல துறைகளில் முன்னேற்றத்தைத் தொடர்ந்து செல்லுவதில் எந்தத் துறையில் படித்த வகுப்பாரின் உதவியை எதிர் பார்த்தல் சகஜமல்லவா? எந்தத் துறையிலும் படித்த வகுப்பாரே தலைமை வகித்து நிற்கின்றார்கள். இவர்களது உழைப்புகளால் இது வரையில் தேசத்துக் குண்டாயிருக்கும் நன்மைகள் அனேகம். ஆயினும், இந்தப் படித்த வகுப்பார் ஒரு விஷயத்தில் மட்டும் எச்சரிக்கை கொண்டவர்களாயிருக்க வேண்டும். தாங்கள் படித்தவர்களாயிருப்பதாலும், ராஜாங்கத்தாரது சேர்க்கை பெற்றிருப்பதாலும், இவைகளால் தமக்கு உண்டாயிருக்கும் செல்வாக்காலும் கர்வமடைந்து, பொது ஜனங்களை அலட்சியஞ் செய்து, அவர்களின் சகவாசத்தை வெறுத்து, அவர்களது உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் மனோ பாவங்களையும் அறியாமல் ஒதுங்கியிருப்பார்களானால், இந்த வகுப்பார் செய்யக்கூடிய காரியங்களுக்குத் தடையுண்டாவதன்றி, அவர்களுடைய குணங்களும் சக்தியுமே மாறிக்கெட்டுப்போகும். பொது ஜனங்களுடைய சேர்க்கையாலும், அவர்களிடத்தில் அனுதாபம் அன்பு அருள் இவைகளாலும், அவர்களின் நிலைமையைப் பற்றின அறிவினாலும் அவர்களைக் காலத்துக்குத் தக்கபடி அரவணைத்து அவர்களின் பொருட்டுப் பொறுப்பேற்று அவர்களுக்குத் தக்க சமூகோபகாரங்கள் செய்து வர வேண்டும். அவர்களுக்குத் தலைவர்களாயிருப்போர்க்கு மேன்மேலும் உத்தம குணங்களும் பெரும் ஆசைகளும் உண்டாகவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு படித்த வகுப்பார் தங்கள் சுயநல உணர்ச்சிக்கு அடிமைப்



படாமல், பொது ஜனங்களை அரவணைத்து அவர்களது நன்மைகளை முற்படுத்த உழைக்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்கு மனவெழுச்சியும், ஊக்கமும், பெருங் கருமங்களில் பிரவர்த்தியும், தருமம், ஜீவகாருண்யம், தன்மறுப்பு, பரஸ்பர சமூகாபிமானம் தேசாபிமானம்—இப்படிப்பட்ட உத்தமகுணங்களும் படியும். பெயர்போன பிரிடிஷ் ராஜதந்திரியான மிஸ்டர் கிளாட்ஸ்டன் ஒரு சமயம் "ஒரு ஜனசமூகத்துக்கு அழியாத சக்தியுண்டானால், அந்தச் சக்தி சாமானிய ஜனத்தொகையிலேயே வசிக்கும். ஒருதனியான வகுப்பாரிடமாவது ஒரு பகுதி யாரிடமாவது தோன்றும் சக்திகள், அவ்வகுப்புப் பகுதிகளாகிய கிளைகளிலேயே வியாபித்து, சாமானிய ஜனத்தொகையாகிய அடிமரத்தில் வியாபிக்காமலிருக்குமாதலால், அந்தச் சக்திகள் தளர்ந்து அழியக்கூடும். அப்போது ஜனங்களைத் தொட்டுக்கொண்டிருந்தால் மட்டும் இந்தச் சக்திகள் அப்போதப்போது கிளர்ச்சியடையும். சமுத்திரத்திலிருந்து எடுத்த ஜலமானது கெட்டுப்போகிறது. சமுத்திர ஜலமோ என்றென்றைக்கும் கெடாமல் சுத்தமாகவே யிருக்கின்றது. இந்த உண்மை சரித்திரத்தில் விளங்குவதைப் பார்க்கலாம்" என்று சொன்னார். மகானுபாவராய், சுமார் 50 வருஷ காலம் பிரிடிஷ் ஏகாதிபத்திய பாரத்தை தம்தோளில் தாங்கி அழியாப் புகழ் படைத்த இந்தப் பெரியோர், இப்படிச் சொல்லியிருப்பதை நம்மில் ஆங்கிலங் கற்றோர் வெகு சிரத்தையுடன் மனதில் உணரவேண்டும். பொது ஜனங்களுடைய சகவாசத்தினாலேயே, வெகு ஜனங்களுடைய சங்காத்தத்தாலேயே ஒவ்வொரு தனி

வகுப்பாரும் மேன்மை யடையவேண்டும். கல்வி கற்றதன் பலனை இந்தப் பெரும் புத்தியுண்டாதல் கற்றவர்களுக்கு நியாயமான புகழுக்குக் காரணமே யன்றி, தன்னலம் பேணலும், தற்றுணர்ச்சி யின்மையும் ஜனங்க ளிடத்தில் அலட்சியமும் இவர்களுக்கும் கேடாகவே முடியும். மிஸ்டர் கிளாட்ஸ்டன் சொன்ன உபமானத்தைச் சிறிது மாற்றி, பானையில் தனியாய் வைத்த நதிஜலம் அழுகிப்போகிறது ஓடும் அந்த நதியின் ஜலமோ எக்காலத்திலும் சுத்தமாயிருக்கும் என்றறிக.

ஆசாரத்திருத்தமும் ராஜாங்க சுதந்தரங்களும்.

சென்ற 1908-ம் வருஷக் கடைசியில் சுமார் ஒரு வாரம் சென்னையில் அநேகக் கூட்டங்கள் கூடி ஜன நன்மைக்குற்ற பல விஷயங்கள் பேசப்பட்டன. காங்கிரஸ் சபையானது முற்றிலும் ராஜாங்க விஷயங்களைப் பற்றிக் கவலை கொண்டதாயினும், மற்றக் கூட்டங்கள், நேராகவே நமது நன்மைகளை முற்படுத்தச் செய்யக் கூடிய முயற்சிகளைப் பற்றினவாயிருந்தன. தொழிலாலோசனைச்சபை தொழில்களின் அபிவிர்த்தியைப் பற்றினதென்று சொல்லக்கூடுமாயினும், தொழில்களின் அபிவிர்த்தியும் அநேக அம்சங்களில் நமது ஆசாரங்களைப் பற்றினதா யிருக்கின்றது. பயிற்சியும் பணமும் தொழில் நடத்துவதற்கு அவசியமானதால், பயிற்சியை அன்னிய தேசங்களுக்குப் போய்ப் பெறுதலும் பணத்தை நமது சில வழக்கங்களைத் திருத்திச் சேர்ப்பதும் அவசியமா யிருக்கின்றன. அன்னிய தேசங்களுக்குக் கடலைத் தாண்டிச் செல்வதில் இப்போதுள்ள தடைகள் எப்போது மிருக்குமானால், ஜப்



பான், இங்கிலாண்டு, அமெரிக்கா முதலான தேசங்களுக்கு நம்மவர்கள் தாராளமாய்ப் போய்வருதல் தடைபட்டு, நமது தொழில்கள் மற்றத் தேசங்களுடைய தொழில்களைப் போல வளர்ந்து பெருகுதல் கஷ்டப்படும். அப்படியே பணம் மிகுந்துத் தக்க முதலைக்கொண்டு தொழில் செய்வதற்கும் விவாகாதி சமயங்களில் பெருஞ்செலவு செய்யும் வழக்கத்தையும் நகை கட்டுகளில் பணத்தைப் போட்டு நஷ்டப்படும் வழக்கத்தையும் கோயில்கள் கட்டுவதில் பணம் போடுவதையும் அகற்றவேண்டும். பின்னும், இக்காலத்து மாதிரியாய்ப் பெருந் தொழில்கள் நடத்துவதில் கூட்டுறவு இன்றியமையாததாகையால், நமது ஜாதி மத அந்தஸ்து வேற்றுமைகளைத் திருத்திக் கொள்வதும் அவசியம். ஆகவே, தொழிலபிவிர்த்திக்கும் சில முக்கியமான அம்சங்களில் ஆசாரத்திருத்தம் அவசியமென்று ஏற்படுகின்றது. தொழிலபிவிர்த்தியாகிச் செல்வம் சேர்ந்துப் பொதுக்காரியங்களை நிர்வகிக்கச் சக்தியின்றி இருப்போமானால், தேச நன்மையை முற்படுத்தலும் வறுமையால் இடையூறுகள் அடையும். தொழிலாலோசனைச் சபையோடு ஆசாரத்திருத்த ஆலோசனைச் சபையொன்றும், குடிவிலக்குச் சபையொன்றும், கீழ்ச்சாதிகளை உயர்த்தும் சபையொன்றும் நடந்தன. இவைகளும் நம் ஜனங்களின் சில ஆசாரங்களைத் திருத்தி, ஒற்றுமை, ஒழுக்கம், சுகம், சரீரத்திடம், ஆகிய நன்மைகளைப் பெறுவிக்கும் நோக்கங்களுடன் நடத்தப்பட்டன. ஜனங்களுக்குச் செல்வம் எப்படி அவசியமோ அப்படியே சரீரத்திடமும், நல்லொழுக்கமும், சத்தியம், தயை, நட்பு ஆகிய பெருங்

குணங்களும் மகா அவசியமென்று அனுபவத்தால் விளங்குகின்றது. சரீரத்திடமின்றிப் பிணிகளால் வருந்தி, அற்ப ஆயுளில் மாளும் ஜனங்கள் என்ன பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராவர்? இந்தியர்களாகிய நாம், நமது சில கெட்ட வழக்கங்களால் இப்படிப்பட்ட வல்லமையின்றி நமது நன்மைகளை நாம் தேடிக்கொள்ள அசக்தர்களாயிருக்கிறோம். நம் நாட்டில் தொழில்கள் அபிவிர்த்தியாகாமல் இருப்பதற்கு என்ன காரணமென்று சிந்திக்கும்போது, சில பெருங்குணங்கள் நம்மிடத்தில் இல்லாததே யென்று அறிந்து துக்கப்படாத தேசாபிமானி இல்லை. அரவணைத்தல், கூட்டுக்காரியங்களில் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்தல், தன்மறுப்பு பரஸ்பர நம்பிக்கை, ஊக்கம், விடாமுயற்சி, சமூகோபகாரம், தேசாபிமானம், காலத்துக்குத் தகுந்தகோலம் அல்லது நடை, இத்தகைய பெருங்குணங்கள் நமக்குண்டானால், ஜப்பானியரைப் போல் நாமும் உயர்ந்த நிலைமைக்கு வரவேது என்ன தடையிருக்கின்றது? லார்டுமார்லியின் ராஜாங்கத் திருத்தங்கள் அனுஷ்டானத்துக்கு வந்தாலும், அவைகள் முற்றும் பயன் பெற்று, மேன்மேலும் விசாலமான உயர்ந்த சுதந்தரங்கள் கிடைக்க வேண்டுமானால், மேலே குறித்த பெருங்குணங்கள் இன்றியமையாதன வென்று சொற்பகாலத்துக்குள் அறிவோம். தேசாபிமானமும சமூகோபகாரமும் மேலிட்டு, ஜாதி மத வேற்றுமையை மறப்பது முதல் அவசியமாகும். ஹிந்துக்கள் மகமதியர்களாகிய இருவகுப்பாரும் இந்த வேற்றுமையைப் பாராட்டி நேசப்பான்மையின்றி சட்டசபைகளில் எதிர்த்து நிற்பார்களானால், இந்தத் திருத்-



தங்களின் நோக்கம் எவ்வாறு நிறைவேறும்? ஹிந்துக்களும் பூர்வீக ஜாதி வேற்றுமைகளால் பிளவுபட்டு ஒருவகுப்பார் மற்ற வகுப்பாரிடம் நம்பிக்கை வைக்காமலும், அல்லது இந்த வேற்றுமை காரணமாகவே ஒரு வகுப்பாரது நன்மையை மற்ற வகுப்பார் நாடாமலும் பொது நன்மைக்குக் கேடு செய்வார்களானால் நம்மை ராஜாங்கத்தார் எப்படி மதிப்பார்கள்? அவரவர் குடும்பங்களில் ஆசாரங்கள் எவ்வாறு வேற்றுமைப் பட்டாலும், தேசகாரியங்களில் கலந்து உழைக்க நேரும்போது, சகோதர பாவத்துடன் ஒத்துழைக்க நாம் தெரிந்துகொள்ளா விட்டால், எந்தக் காரியத்தை நாம் சாதிக்க வல்லவராவோம்? ராஜாங்கத்தை நடத்தும் விஷயத்தில் ஜாதிவித்தியாசமாவது அந்தஸ்துவித்தியாசமாவது பாராட்டப்படுவது இயலாது. தாழ்ந்தோர் உயர்ந்தோர் அனைவரது உரிமைகளையும் ராஜாங்கத்தை வகிப்பவர்கள் ஒன்றுபோல் பாவித்துப்பேத உணர்ச்சியின்றிக் காக்கக் கடமைப் பட்டவர்கள். இனி சட்ட சபைகளுக்கு மெம்பர்களை ஜனங்கள் நியமிப்பதில், நியமன சுதந்தரம் பெற்ற எலக்டர்கள் ஜாதியபிமானம், பாராட்டாமலும் பிரதிநிதிகளின் ஜாதியந்தஸ்தும் எவையாயினும், அவைகளைக் கவனிக்காமலும், யோக்கியதையை மட்டும் கருதி, நியமனம் செய்யவேண்டும். அன்றேல், நமது சட்டசபைகளில் பேதங்களும் சச்சரவுகளும் தோன்றுமேயல்லாது, ஒற்றுமையால் விளையும் வன்மை தோன்றாது. பிரிட்டிஷ் ஜாதியார் நமது அபிவிர்த்தியில் அபிமானம் வைத்து நமக்குச் சுதந்தரங்களைக் கொடுக்க நிச்சயித்திருப்பதில், நாம் நமது பூர்வீக வழக்கங்களால் விளைந்திரு

குங் குறைகளைக் நீக்கி கொண்டு நமது சதாசாரங்களாலும் நற்குணங்களாலும் செல்வத்தையும் பெருமையையும் காலவளவில் பெறுவோமென்று நம்பி யிருக்கிறார்கள்.

# CHAPTER X.

## காஞ்சிபுரம் பெண் பாடசாலை.

இரண்டு வருஷத்துக்கு முன்னால் அமெரிக்கா தேசத்திலிருந்து வந்து, தென்னிந்தியாவில் நம்மவர்களோடு ஒருவராக நம்மவர்களுடைய உணவையுண்டு உடுப்பை யுடுத்து நெருங்கிப் பழகிவரும், மைரன் பெல்ப்ஸ் என்ற இந்திய அபிமானி பல விடங்களில் நம்மை உற்சாகப்படுத்திப் பிரசங்கங்கள் செய்துவருவதுமன்றி, காஞ்சிபுரத்தில் சில நாள் வசித்து அந்த வூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பெண் பாடசாலையைப்பற்றிப் புகழ்ந்து 'ஹிந்து'ப் பத்திரிகைக்கு ஆறு நிருபங்கள் எழுதியிருக்கிறார். இந்தப் பெண் பாடசாலை நடத்தப்படுகிற மாதிரியைப் பற்றியும், இதில் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பாடங்களைப் பற்றியும், ஹிந்துக்களின் பெண்மை, பாரமார்த்திக புத்தி, நல்லொழுக்கம் முதலியவைகளைப் பெண்கள் கற்றுக் கொள்வதைப் பற்றியும், நம்மவரில் இதுவரையில் எவரும் புகழ்ந்தெழுதாமல் அமெரிக்கர் ஒருவர் எழுதுவது ஆச்சரியத்தை யுண்டுபண்ணத் தக்கது. இந்தப் பள்ளிக்கூடத்தில் சுமார் 250 பெண்கள் படிக்கிறார்கள். அவர்களிடத்தில் சம்பளம் வாங்குவதில்லை. சர்க்கார் உதவியும் பெறுவதில்லை. பங்களூரில் வசித்த ஒரு தர்மப்



பிரபுவால் ஆதியில் ஸ்தாபிக்கப்பட்டு அவர் இறந்து போனாலும் அவர்வம்சத்தாருடைய தர்மத்தால் இந்தப் பள்ளிக்கூடம் நடந்து வருகிறதென்று நினைக்கிறோம். ஹிந்து வழக்கங்களை மீறாமல் நடத்தப்படுகிற ஸ்கூலானதால், அதில் பெண்கள் பெரிய மனுஷியான பிறகாவது முதிர்ந்தவயது வந்தபிறகாவது படிக்கமுடியாமல் அந்த வயதுக்குள்ளாகவே அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய சகலமும் சொல்லிக் கொடுக்கவேண்டியிருக்கின்றது.

சராசரி ஐந்து வருஷக்காலம் பெண்கள் இந்த ஸ்கூலில் வாசிக்கிறார்கள். இந்த ஐந்து வருஷத்துக்குள் எழுத வாசிக்கவும், கணக்குப் போடவும், பூகோளம் சரித்திரம் முதலியவை அறியவும், துரைத்தனம் நடக்கிற மாதிரியைக் கற்றுக் கொள்ளவும், பெண்கள் சாமர்த்தியசாலிகளாவதுமன்றி, அவர்கள் ஹிந்து ஸ்திரீகளின் உயர்ந்த மாதிரிப்படி வசிக்கவும், தெய்வ பக்தி, சதாசாரம், பெரியோரிடத்தில் மரியாதை முதலிய நற்குணங்களைக் கற்கவும் வல்லவர்களாகிறார்கள். ஹிந்து சரித்திரத்திலுள்ள பெரியோர்களுடைய வரலாறுகளையும், ராமாயணம் மகா பாரதம் முதலிய நூல்களிலுள்ள கதைகளையும், ஹிந்து ஸ்திரீகளில் பேர்பெற்ற உத்தமிகளின் சரித்திரத்தையும் கற்றுக்கொள்கிறார்கள். இவ்வளவு விஷயங்கள் இவ்வளவு சிறிய காலத்துக்குள் கற்றுக்கொள்வது எப்படிச் சாத்தியமாகிறதென்றால், உபாத்திமார்கள் அவர்கள் சொல்லிக்கொடுக்க வேண்டியவைகளை வீட்டிலேயே எழுதிக்கொண்டுவந்து பெண்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அடிக்கடி பெண்கள் வீடுகளுக்குப்

போய் இவர்கள் அங்கே எப்படிக் காலம் போக்குகிறார்களென்று பார்த்துவருகிறார்கள். பெற்றோர்களை ஸ்கூல்களுக்குத் தருவித்து, பெண்கள் படித்துவருவதைப் பார்த்துப் போகும்படிச் செய்கிறார்கள். பெண்களை அப்போதைக்கப்போது உபாத்திமார்கள் தோட்டங்களுக்கு அழைத்துக் கொண்டுபோய் உத்சாகப்படுத்துகிறார்கள். இம்மாதிரி யெல்லாம் செய்வதால் இந்த ஸ்கூலில் படிக்கும் பெண்கள் கவர்ன்மெண்டும் பாதிரிகளும் ஸ்தாபித்திருக்கும் ஸ்கூல்களில் படிக்கும் பெண்களைப் போல ஜாதி யாசாரத்துக்கும் ஹிந்துக்களின் மாதிரிக்கும் விரோதமான பயிற்சியைப் பெறாமல், ஸ்திரீகளுக்குள்ள அடக்கம், நாணம், மென்மை முதலிய நற்குணங்களில் தேர்ச்சி பெற்று, நல்ல பழக்க வழக்கங்கள் உடையவர்களாய் 'ஹிந்து' ஸ்திரீகள் வளர வேண்டியது போல் வளர்கிறார்கள்.

இந்த ஸ்கூலை நடத்துவோர்களுக்கு இன்னும் ஒரு பெரும் ஆசை இருக்கின்றது. இந்த ஸ்கூலில் நம் தேசத்துப் பெண் பாடசாலைகளில் உபாத்திமார்களாய் ஹிந்து ஸ்திரீகள் அமரும்படி அவர்களைத் தயார் செய்ய வேண்டுமென்று ஆசை யிருக்கின்றது. தற்காலம் பெண் பாடசாலைகளில் வாத்திமார்களாய் போகக் கூடியவர்கள் கிறிஸ்தவ ஸ்திரீகளும் ஹிந்து ஸ்திரீகளில் விஜாதிப்பட்டு நமது ஆசார அநுஷ்டானங்களைக் கவனிக்காதவர்களுமா யிருக்கிறார்கள். இவர்கள் வாத்திமார்களா யிருப்பதால் நமது பெண்கள் பலவிஷயங்களில் கெட்டுப்போகிறார்கள். அப்படி நேரிடாமல் ஹிந்து ஸ்திரீயின் நற்குணங்களைக் கொண்டு அடக்கம் நாணம் முதலிய சுபாவத்தை யுடையவர்கள் வாத்திமார்க



ளாக வேண்டுமென்பது இந்தக் காஞ்சீபுரம் ஸ்கூலை நடத்துவோரின் கோரிக்கை. பெண் பாடசாலைகளில் ஆண்கள் வாத்திமார்களா யிருப்பதும் கிறிஸ்தவ ஸ்திரீகளும் ஹிந்துக்களின் மரியாதைக்குத் தகாத ஹிந்து ஸ்திரீகளும் வாத்திமார்களா யிருப்பதும் பெண்களின் படிப்புக்குத் தடையா யிருக்கின்றன. கவர்ன்மெண்ட் ஸ்தாபித்திருக்கும் டிரெயினிங் ஸ்கூல்களில் பெண் வாத்திமார்கள் தயார்செய்யப்பட்ட போதிலும் அவர்கள் ஹிந்து மதாசாரங்களைக் கவலையுடன் பின்பற்றுகிறவர்களாய்த் தேர்ச்சி பெறுவதில்லை. அப்படிப் பின்பற்றுகிறவர்கள் வாத்திமார்களாக வேண்டியது அவசியமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. இம்மாதிரியான வாத்திமார்களைத் தயார் செய்வது ஒரு பெரிய நன்னோக்கமாயினும், காஞ்சீபுரம் பெண் பாடசாலையில் இது நிறைவேறுமோ வென்று நாம் சந்தேகப்படுகிறோம். அதை நடத்துவோர் அவர்களால் ஆகாத காரியங்களைப்பற்றி ஆசைப்படுவதில் பிரயோசனமில்லை. இப்போது நடக்கிற நல்ல மாதிரியாகவே அந்த ஸ்கூலை நடத்திக்கொண்டுபோய் அதைப் பலப்படுத்துவது அவர்கள் நோக்கமா யிருக்கவேண்டும். வாத்திமார்களுக்கு நல்ல சம்பளங்கள் கொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்தி அவர்கள் செய்யும் வேலையை இன்னும் உற்சாகத்துடன் செய்யும்படிச் செய்து ஸ்கூலில் இன்னும் அதிகமான பெண்கள் பயிற்சி பெறும்படி பார்க்க வேண்டும். ஸ்கூலுக்குத் தக்க நிதி சேர்த்து நிதி இல்லாத கவலையை நீக்கவேண்டும்.

மிஸ்டர் மைரன் பெல்ப்ஸ் தமது கடைசிக் கடிதத்தில் நமது தேசாபிமானிகளுக்கு ஒரு வேண்டுகோள்

செய்து கொள்கிறார். இந்த ஸ்கூல் பெண்களிடமிருந்து சம்பளம் வாங்காமலும் கவர்ன்மெண்ட் உதவி இல்லாமலும் நடத்தப்படுகிறபடியால் பொது ஜனங்களின் நன்கொடையைக்கொண்டு நடத்தப்படவேண்டியிருக்கின்றது. ஆகையால் பொது ஜனங்கள் இந்த ஸ்கூலுக்கு வேண்டிய ஒத்தாசை செய்யவேண்டும். நமது ஜனங்கள் எவ்வளவோ காரியங்களில் வீண் செலவு செய்கிறார்கள். கவர்ன்மெண்ட் பிரவேசித்து நடத்தும் காரியங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அவ்வளவு பணம் எளிதாய்க் கிடைக்கின்றது. பட்டங்கள் கிடைக்கக்கூடுமானால் அப்போதும் வேண்டுமான பணம் வருகின்றது. விவாகம் முதலிய சமயங்களிலும் வீண் செலவுகள் ஆகின்றன. கோவில்களைப் புதுப்பிப்பதிலும் உற்சவங்களை நடத்துவதிலும் ஹிந்துக்கள் எவ்வளவோ பணத்தைச் செலவு செய்கிறார்கள். இவர்கள் இந்தப்பெண் பாடசாலைக்கு வேண்டிய பணவுதவி செய்யாமல் அக்கறைக்குறைவாயிருப்பது ஆச்சரியமென்று மிஸ்டர் மைரன் பெல்ப்ஸ் எழுதுகிறார். படிப்பு, பெண்மை, யோக்கியதை, மூன்றையும் கற்றுக் கொடுக்கும் இந்த ஸ்கூலுக்குத் தகுந்த உதவி செய்து இத்தகைய ஸ்கூல்கள் தேசத்தில் பல விடங்களில் ஸ்தாபிக்கப்படும்படிச் செய்யாவிட்டால் மற்ற தர்மங்களால் தேசத்துக்கு நன்மை எப்படியுண்டாகும்? ஜனங்களின் க்ஷேமம் பெண்களின் சுபாவத்தைப் பற்றினதாயிருக்கின்றது. பெண்கள் படிப்பு, பெண்மை, யோக்கியதை இந்த மூன்று குணங்களையும் பெற்று, ஹிந்துக் குடும்பங்களின் மேலான சுபாவத்தைக் காப்பாற்றி, ஆண்மக்கள் தேச நன்மைக்காகச்



செய்யுங் காரியங்களில் உதவி செய்யாவிட்டால், இந்து ஜனங்கள் உலகத்தில் பெருமையை யடையமாட்டார்கள். பெண்கள் அறியாமையால் வருந்துவது தேசத்தின் நாசத்துக்குக் காரணமாகும். இந்தியா தேசம் இப்போது வருந்துவது வறுமையால் அல்ல; தேசாபிமான மின்மையால் வருந்துகின்றது. தேசாபிமானம் மேல் நாடுகளில் மேம்பாடு பெற்றுப் பொதுநன்மையை முற்படுத்துவதுபோல இந்தியாவிலும் மேம்பாடுபெற்று முற்படுத்தாவிட்டால், இந்த தேசம் வரவரக் கீழ்நோக்குற்று அழிந்து போவது நிச்சயமென்று மிஸ்டர் பெல்ப்ஸ் எழுதுகிறார்.

## மைசூரில் விதவைகளின் படிப்பு.

மைசூர் சமஸ்தானத்திலுள்ள பெண் பாடசாலைகளில் விதவைகளையும் சேர்த்துக்கொண்டு படிப்புச் சொல்லி வைக்கும் வழக்கமிருக்கின்றது. இப்படிப் படிக்கும் விதவைகள் அந்த சமஸ்தானத்தில் 140 என வறிகிறோம். இவர்களில் 47 பேர்கள் ஸ்கூல் வாத்தியார்களாகவும் ஆஸ்பிடல்களில் தாதிமார்களாகவும் இவர்களுக்குரிய மற்ற வேலைகளில் பயில்வதாகவும் சொல்லப்படுகின்றது. இந்த சமஸ்தானத்தைப் பார்த்து சென்னை ராஜதானியிலும் பெண் ஸ்கூல்களில் விதவைகள் சேர்ந்து படிக்கும்படியாக அவர்களுக்கு கவர்ன்மெண்ட் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகின்றது. மைசூர் சமஸ்தானத்து தர்பார் பக்ஷியாயிருந்த A. நரசிம்ம அய்யங்கார் நடத்திவரும் ஒரு விதவாசிரமத்தினுடைய ரிபோர்ட்டும் வெளியாயிருக்கின்றது. இந்த ரிபோர்டினால் 1907-ம் வருஷத்தில் ஒரு விதவையைக்

கொண்டு ஆரம்பித்த இந்த ஆசிரமமானது இப்போது 32 விதவைகள் அடங்கியதா யிருக்கிறதென்று அறிகிறோம். இவ்விதவைகள் அனைவரும் ஹிந்துக்களில் உயர் குலத்தைச் சேர்ந்தவர்கள். தூரமான இடங்களிலிருந்தும் வந்திருக்கிறார்கள். கள்ளிக்கோட்டையிலிருந்து ஒரு விதவையும், தார்வாரிலிருந்து ஒருத்தியும் பல்லாரியிலிருந்து ஒருத்தியும் ஹிந்துப்பூரிலிருந்து மூவரும் கொள்ளேகாலிலிருந்து இருவரும் மற்றப்பேர் சமஸ்தானத்துப் பற்பல டிஸ்டிரிக்டிலிருந்தும் வந்திருக்கிறார்கள். இவர்களிற் பெரும்பான்மையோர் 23 வயதுள்ளவர்கள். 25 வயதுக்கு மேற்பட்டவர்களைச் சேர்க்கிறதில்லை.

இந்த ஆசிரமத்திலுள்ள ஸ்திரீகளுக்கு உணவும் இருப்பிடமும் இலவசமாய்க் கிடைப்பதுமன்றி படிப்பும் மதப் பயிற்சியும் செய்விக்கப்படுகின்றன. ஹிந்து விதவைகள் தங்கள் புருஷர் மேலுலகத்தில் அநுபவிக்கும் நிலைமையைப் பற்றிச் சிந்தனை செய்துகொண்டு, இவ்வுலகத்தில் சன்மார்க்கத்திலும் விரதங்கள் முதலியவைகளிலும் தேவாலயங்கள் முதலான புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவதிலும் காலம் செலுத்தி வருகிறார்கள். இதை யுத்தேசித்து மிஸ்டர் நரசிம்ம அய்யங்கார் தமது ஆசிரமத்திலுள்ள விதவைகளுக்கு மதப் பயிற்சி விசேஷமெனக் கருதி, அதில் அவர்களுக்கு சிரத்தை யுண்டாகும்படிப் பயிற்றுவிக்கிறார். இவர்கள் காலையில் 5½ மணி முதல் 6½ மணி வரையில் ஈஸ்வரப் பிரார்த்தனை செய்துவிட்டு, 7½-மணி வரையில் வீட்டுவேலைகள் செய்கிறார்கள். பிறகு ஸ்நானஞ்செய்துவிட்டு பகவத் கீதை முதலிய புண்ணிய கிரந்தங்களை



வாசிக்கிறார்கள். பிறகு 10—மணி வரையில் ஸ்கூல் பாடங்களைப் படித்து 11—மணி முதல் 5 மணி வரையில் ஸ்கூலுக்குப் போய்ப் படிக்கிறார்கள். 5 முதல் 6 மணி வரையில் சும்மா இருந்துவிட்டு மறுபடியும் ஈஸ்வரப் பிரார்த்தனை செய்து மறுநாள் ஸ்கூல் பாடங்களைப் படித்து மறுபடியும் பிரார்த்தனை செய்து, இரவில் 10 மணிக்குப் படுக்கப்போகிறார்கள். பெண்கள் லோயர் செகண்டரி வரையில் படிக்கிறார்கள். சுந்தரம்மாள் என்ற ஒருவர் மைசூர் வித்வத் பரீட்சை தேறினதால் மைசூர்க் கவர்ன்மெண்டிலிருந்து புடவைகளும் சால்வைகளும் வெள்ளிச் சாமான்களும் இனாமாகப் பெற்றார். இந்த ஸ்திரீகள் சில தொழில்களும் கற்றுக் கொள்ளுகிறார்கள். தையல் (Knitting) வேலையிலும், கழுத்தில் தொங்கும் துணி செய்வதிலும், குல்லாய்கள் செய்வதிலும், படங்கள் வரைவதிலும் பயிற்சி பெறுகிறார்கள். இந்த வேலைகளை ஜனங்களும் கவர்ன்மெண்டும் ஆதரிக்கிறார்கள். மகாராஜா தம் சொந்தப் பணத்திலிருந்து மாசம் நூறுரூபாய் இந்த ஆசிரமத்தின் செலவுக்காகக் கொடுப்பதுமன்றி, இதற்குக் கட்டடமும் சர்க்கார் செலவில் வாங்கிக் கொடுக்கும்படி உத்தரவு செய்தார். நரசிம்ம அய்யங்காரே இந்த ஆசிரமத்தை முக்கியமாய ஆதரிப்பவராக இருந்த போதிலும், இவருக் குதவியாக ஸூப்பரின்டெண்டண்டாய் மிஸ் ரெங்கம்மா இதில் அதிக கவலைபாராட்டி வருகிறார். இவர் ஆதியில் மைசூர் பெண்பிள்ளை காலேஜில் வாசித்துப் பிறகு புனாவில் மிஸ்டர் கார்வே வைத்திருக்கும் விதவாசிரமத்திற் போய்ச்சேர்ந்து, பிறகு மைசூருக்குத் திரும்பிவந்ததும் அந்த ஆசிரமத்தைப்போல் மை

குரிலும் ஒரு ஆசிரமம் இருக்கவேண்டுமென்று விரும்பி, மிஸ்டர் நரசிம்ம அய்யங்காருடைய ஆசிரமத்தில் இப்படி வேலை செய்துவருகிறார். மிஸ் ரெங்கம்மாவும் அவளுடைய பெற்றோர்களும் ஆசிரமத்திலேயே வசிப்பதாகச் சொல்லப்படுகிறது.

### தாழ்ந்த ஜாதியாரின் நிலைமை—
### மிஸ்ஸஸ் லாஸரஸின் நன்முயற்சி.

இது வரையில் பஞ்சமர் நிலைமையில் கவலை வைத்து அவர்களை உயர்ந்த ஸ்திதிக்குக் கொண்டு வருவதில், ஐரோப்பியராகிய கிறிஸ்தவப்பாதிரிகள் முயற்சி செய்துவருகிறார்களே யன்றி, உயர்வகுப்பாரென்று சொல்லிக்கொள்ளும் ஹிந்துக்கள் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்யவில்லை. கிறிஸ்தவப்பாதிரிகள் ஹிந்து கோஷ்டியைச் சேர்ந்த பஞ்சமர்களைக் கிறிஸ்தவ மதமாகிய தங்கள் மதத்தில் சேர்த்து, அவர்களுக்குப் படிப்புச் சொல்லிவைத்து, ஏதேனும் ஒரு தொழிலைச் செய்யச் சக்தி யுண்டாக்குகிறார்கள். பல விடங்களில் அவர்களுக்குப் பயிர்செய்ய நிலம் சம்பாதித்துக் கொடுத்து, கேவலம் பண்ணைக் கூலிகளாயிராமல் சொந்தத்தில் பயிர் செய்து அதன் லாபத்தை அவர்களே அனுபவிக்கும்படிச் செய்துவருகிறார்கள். பல விடங்களில் தொழிற் கல்விச்சாலைகள் ஸ்தாபித்து, அவைகளில் இந்தப் பஞ்சமப் பிள்ளைகள் ஏதேனும் தொழில் கற்றுக் கொள்ளும்படிச் செய்து வருகிறார்கள். பாதிரிகளைப் போல ஸால்வேஷன் ஆர்மி என்ற கூட்டத்தாரும் இந்த வழியில் முயன்று வருகிறார்கள். சென்னை அடையாற்றில் காலஞ்சென்ற கர்னல் ஆல்காட் ஸ்தாபித்த பஞ்சம



ஸ்கூல் இப்போது நன்றாய் நடந்து வருகிறதென்று நம்புகிறோம். இவர்களைப்போல், பஞ்சமர் நிலைமையில் கவலை வைத்தவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இந்தியர்களாய் இருக்கிறார்கள். மிஸ்டர் பாண்டியன் என்ற இந்தியக் கிறிஸ்தவர் அமெரிக்கரின் பண வுதவியைக் கொண்டும் இங்குள்ள ஆங்கிலேயர் சிலரின் பண வுதவியைக் கொண்டும், திருநெல்வேலி ஜில்லாவில் பஞ்சமரின் உபயோகத்துக்காகக் கிணறுகள் வெட்டி வருவது எல்லோருக்கும் தெரியும். இப்போது மிஸ்ஸஸ் லாஸரஸ் என்ற கிறிஸ்தவ ஸ்திரீ 100 பிள்ளைகளுக்கதிகமான பஞ்சமப் பிள்ளைகளடங்கிய ஸ்கூலொன்றை 8 வருஷமாய் நடத்தி வந்து, அதற்கு ஒரு கட்டடம் வேண்ட, அந்தக் கட்டடத்துக்கு அஸ்திவாரக்கல் நட லேடி பென்ட்லண் 1911-ம் வருஷம் எப்பிரல் மாசம் போயிருந்தபோது, மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யர் முதலான ஹிந்து பெரிய மனுஷர்கள் போயிருந்தார்கள்.

மேலே கண்ட முயற்சிகளில் ஹிந்துக்கள் செய்வது ஒன்றையுங்காணோம். இங்குமங்கும் இரண்டொரு ஸ்கூல்களை ஹிந்துக்கள் வைத்து நடத்துவதைத் தவிர அவர்கள் பொதுவாய்ப் பஞ்சமர்களை உயர்த்த வேண்டுமென்று பேச்சுப் பேசுகிறார்களே யன்றிக் காரியத்தில் தீவிரத்தைக் காட்டவில்லை. பஞ்சமர்களுக்கு இப்போது முக்கியமாய் வேண்டியது படிப்பு. இந்தப் படிப்புக்கு வாத்தியார்கள் அகப்படுவது கஷ்டம். ஏனெனில், பஞ்சமப் பிள்ளைகளடங்கிய ஸ்கூலில் வாத்தியார்களாய்ப் போகத்தகுந்தவர்கள் பஞ்சமர்களும் கிறிஸ்தவர்களும் மகமதியர்களுமே யன்றி. ஹிந்துக்களில் உயர்

குலத்தரென்று சொல்லிக் கொள்கிறவர்கள் போக மாட்டார்கள்.

காலஞ்சென்ற ஜஸ்டிஸ் மிஸ்டர் P. R. சுந்தர அய்யர் பஞ்சமர்களுக்கு விவசாயமும் வேறு தொழில்களும் சொல்லிவைக்க வேண்டுமென்ருர். வாத்தியார்கள் அகப்பட்டால் அல்லவோ அந்தப் படிப்பானுலும் சொல்லி வைத்தல் சாத்தியமாகும்? கவர்ன்மெண்ட் ஸ்கூல்களிலும் கவர்ன்மெண்ட் உதவி பெறும் ஸ்கூல்களிலும் பஞ்சமப் பிள்ளைகள் சேர்ந்து வாசிப்பதில் ஹிந்துவாத்தியார்களுக்கு ஆட்சேபமில்லை. பிராமணர்கள் கூட வாத்தியார்களா யிருக்கிருர்கள். ரயில் வண்டிகளிலும் மற்றப் பொது ஸ்தலங்களிலும் பஞ்சமர்களுடன் மற்ற உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த ஹிந்துக்கள் காலங் கழிப்பதில் ஆட்சேபம் சொல்லுவதில்லை. வைதிகமாயிருக்கும் ஹிந்துக்கள் இப்படிப் பஞ்சமர்களுடன் கலக்க நேரிட்டால், வீட்டுக்கு வந்து ஸ்நானம் செய்து, அந்தத் தீட்டைக் கழித்துக்கொள்கிருர்கள். அப்படிச் செய்தாவது ஹிந்துக்கள் பஞ்சம ஸ்கூல்களில் வாத்தியார்களா யிருக்கலாமே. இவர்கள் விஷயமாய் இப்போது ஹிந்துக்கள் செய்ய வேண்டியது அனுபோகத்தில் காரிய மானுலும், பேச்சுக்கு இன்னும் காலம் போய்விடவில்லை யென்று நாம் நம்புகிருேம். ஆங்கிலம் படிக்காத ஜனங்களும் கிராமவாசிகளும் பஞ்சமர்களைப் பழைய மாதிரியாகவே நடத்துகிருர்கள். பொதுவாக, பஞ்சமர்களிடத்தில் கருணையாவது வஞ்சனையின்மையாவது இவர்களுக்கு இன்னும் உண்டாகவில்லை. பண்ணையாட்களாய் அவர்களை நடத்துவதில் ஹிந்து மிராசுதார்கள் அவர்களுக்கு



பொட்டை மரக்காலால் கூலி அளந்துபோட்டு ஏமாற்றுவது இன்னும் சகஜமாயிருக்கின்றது. அவர்களுக்கு நல்ல ஜலமும் நல்ல ஆகாரமும் வசிக்க நல்ல இடமும் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட இடங்களில் பஞ்சமரை உயர்த்துவது ஹிந்துக்களின் கடமை யென்று ஜனங்களுக்குப் போதிப்பதும் பிரசங்கங்கள் செய்வதும் உபயோகமா யிருக்கும்.

* அஸ்திவாரக்கல் நட்ட லேடி பென்ஸன் பிரான்ஸ் தேசத்துப் புலவர் சொன்னதை மேற்கோளாக எடுத்துச் சொன்னுர். "ஒரு ஸ்கூலை ஸ்தாபிக்கிறவன் ஒரு ஜயிலை மூடுகிருன்." என்று இந்த பிரான்ஸ் தேசத்துப் புலவர் சொன்னதை விட உண்மையான சொல் வேறில்லை ஒரு ஸ்கூலை ஸ்தாபிக்கிறவன் பிள்ளைகளுக்குப் படிப்பையும் நல்ல புத்தியையும் உண்டுபண்ணுவதால், அவர்கள் பிற்காலத்தில் குற்றச் செயல்களைச் செய்யாமல் முற்றிலும் தடுக்காவிட்டாலும் அச்செயல்களைக் குறைக்கவாவது செய்கிருன். இதனுல் குற்றஞ் செய்தவர்களைத் தண்டித்து ஜெயிலுக்கு அனுப்புவது குறைந்துபோகும். ஒரு ஸ்கூலை ஸ்தாபிக்கிறவன் ஒரு ஜெயிலை மூடுகிறது மல்லாமல் போலீஸாருக்கும் மாஜிஸ்டிரேட்டிக்கும் உள்ள வேலையையும் குறைக்கிருன். ஆகையால், ஏழைப் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிவைப்பதால் தேசத்தின் ராஜாங்கச் செலவு குறைகிறது. லேடி பென்ஸன் குடியையும் அறியாமையையும் விடப் பெரிய தீங்குகள் வேறு இல்லையென்ருர். இதைமுனிசிபாலிடிகள் அறிய வேண்டுமென்றும் சொன்னுர். முனிசிபாலிடிகளும் டிஸ்டிரிக்ட்போர்டுகளும் இந்த உண்மையை அறிவதோடு

கூட கவர்ன்மெண்டும் இதையறியவேண்டும். பட்டணத்து வடிகால் ஓரங்களிலும், ரஸ்தாக்களின் மூலைமுடுக்குகளிலும், பறைச்சேரிகளிலும் வளரும் பஞ்சமப் பிள்ளைகள் படிப்பில்லாமலும் தொழில் எதுவும் தெரியாமலும் வளர்ந்தால், அவர்கள் குற்றச்செயல்கள் செய்யாமல் என்னசெய்வார்கள்? லேடி பென்ஸன் சொன்னபடி இந்தப் பிள்ளைகள் ஸ்கூல்களிற் படிப்பார்களானால், அவர்களுக்குச் சுத்தமான பழக்கங்களும் செய்யுங் காரியங்களில் ஒழுங்கும் உண்டாவது மல்லாமல், மற்றக் குற்றச் செயல்கள் செய்யும் வகுப்பாரோடு சேராமலும் இருப்பார்கள். கடவுளுக்குப் பயந்து அரசனுக்கும் அரசன் உத்தியோகஸ்தர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும், அவர்கள் கை பிறர்சொத்தின்மேல் படக்கூடாதென்றும், அவர்கள் கர கெட்ட பேச்சுகள் பேசக்கூடாதென்றும், அவர்கள் சரீரத்தை குடி விபசாரம் முதலிய தீச்செயல்களினின்று காக்கவேண்டுமென்றும் கற்பிக்கப்படுகிறார்கள். சென்னையிலுள்ள எல்லாப் பிள்ளைகளும் பெண்களும் இவ்வாறே கற்பிக்கப்படுவார்களானால் இங்கு குற்றச்செயல்கள் செய்யப்படுவது என்ன நிலைமையில் இருக்குமென்று லேடி பென்ஸன் கேட்டார். குறைந்தே போகுமென்பதில் சந்தேகமென்ன? மேல் நாடுகளில் படிப்பு விருத்தி ஆகவாகக் குற்றச்செயல்கள் குறைந்து போவதே அனுபோகமாயிருந்து வருகிறது.

இப்படிப்பட்ட நல்ல வேலை மிஸ்ஸஸ் லாஸரஸ் போன்ற கிறிஸ்தவ ஸ்திரீ செய்து வருகிறாரேயன்றி ஹிந்து ஸ்திரீகள் செய்யாதது நமக்குத் துக்கமாயிருக்கின்றது. மிஸ்ஸஸ் லாஸரஸ் செல்வம் படைத்தவரல்ல.



அவர் சாமானிய மத்திய வகுப்புக் குடும்பத்தைச் சேர்ந்தவரானாலும், பரோபகாரச் சிந்தையால் தூண்டப்பட்டு நல்ல காரியம் செய்வதே ஜன்ம ஸார்த்தகமென்று இந்த ஏழைகளாகிய பஞ்சமர்களின் மீது கருணைகூர்ந்து, அவர்களுக்குத் தம்மால் இயன்ற உபகாரம் செய்துவருகிறார். இது கிறிஸ்தவமதக் கொள்கைகளின் பலனெனச் சொல்லக்கூடும். ஹிந்து மதம் ஏழைகளின்மீது கருணை பாராட்டக் கற்பிக்கவில்லையோ? ஹிந்து ஸ்திரீகளில் எத்தனை பேர் பணம் படைத்தவர்களாயிருந்து, வீட்டில் அவர்கள் செய்யக்கூடிய வேலை எதுவுமில்லாமல் ஆடையாபரணங்களைப்பூண்டு ஐரோப்பிய ஸ்திரீகளைக் கச்சேரிக்கழைப்பதிலும் வேறு டம்பமான பொழுதுபோக்குகளிலும் காலத்தை ஓட்டுகிறார்கள். இவர்கள் இப்படிச் செய்வதைவிட்டு, மிஸ்ஸஸ் லாஸரஸைப்போல ஏழைகளுக்கு உபகாரமாக ஏதேனும் ஒரு தர்ம காரியத்தை மேற்பூண்டு, அதை கவனமும் கவலையுமாய் நடத்தி வரக்கூடாதா?

பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்து காலஞ் சென்ற மிஸ்டர் ரானடேயின் சம்ஸாரம் லட்சுமிபாய் ரானடே புனாவுக்குச் சமீபத்தில் ஒரு கிராமத்தில் நேரிட்ட தீவிபத்தால் பரிதாபமான மரணங்கள் நேரிட, அந்த மரணங்களால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்குச் சகாயம் செய்யும் பொருட்டு, அந்தக் கிராமத்துக்குப் போய்ச் சுற்றி வந்தாரென்று அறிகிறோம். மிஸ்ஸஸ் லட்சுமிபாய் ரானடேயைப்போன்ற ஹிந்து ஸ்திரீகள் இந்த மாகாணத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். சம்ஸாரத்தில் இல்லமல் விதவைகளாயுள்ள ஹிந்து ஸ்திரீகள் ஒழிவும் பணமும் இருக்கும் பட்சத்தில், மிஸ்-

ஸஸ் லாஸாலைப் போல் இம்மாதிரி தர்ம காரியத்தில் பொழுது போக்கலாமே. ஹிந்து ஸ்திரீகளில் விதவைகளாயிருப்பவர்கள் தர்ம காரியங்கள் செய்து பொழுது போக்குவதில்லையென்று நாம் சொல்லவில்லை. நாட்டுப்புறங்களில் பலர் தங்கள் முன்னோர்களின் வழக்கப்படியும் தங்களுக்குற்றபடியும் தர்மங்கள் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட தர்மங்கள் தெய்வ பக்தியையும் ஜீவ காருண்யத்தையும் காட்டுகின்றனவாயிருந்தபோதிலும், தற்காலத் தேவைகளுக்குப் பொருந்தின மற்ற தர்மங்கள் பல இருக்கின்றனவென்பதை நாம் மறக்கக் கூடாது. முக்கியமாய்ப் பட்டினங்களில் வசிக்கும் ஹிந்து ஸ்திரீகளில் எத்தனையோ பேர் இம்மாதிரி தர்மங்கள் செய்யச் சௌகரியங்கள் இருக்கும்போது, அப்படித் தருமங்கள் செய்யாமல் தீங்கிழைக்கக் கூடிய வீண்பொழுது போக்குகளையனுஷ்டிக்கிறார்கள். அன்னவஸ்திராதிகளைப் பற்றிக் கவலைப்படவேண்டாமலும் சம்சாரத்தில் இருந்து உழைக்கவேண்டாமலும் ஒழிவுள்ள ஸ்திரீகள் பலர் இருக்கிறார்கள். அவர்களாவது தங்கள் சகோதரிகளைப் படிப்பிக்க ஸ்கூல்கள் வைத்தோ, அல்லது பஞ்சமர்கள் போன்ற ஏழைப்பிள்ளைகள் நல்ல நிலைமைக்கு வரும்பொருட்டு ஸ்கூல்கள் வைத்தோ, காலத்தைக் கழித்துத் தங்களுக்கு நல்லபெயர் எடுத்துக் கொள்வதல்லாமல் பிறருக்கும் பேருபகாரஞ் செய்தவர்களாகக்கூடாதா?

நமது சமூக வழக்கப்படி ஸ்திரீகள் வீட்டுக்கு வெளியில் வேலைசெய்வது தடுக்கப்பட்டிருக்கின்றது. எவ்வளவு ஏழைகளானாலும், கேவலம் கூலிக்காரர் வகுப்பைச் சேர்ந்தவர்களாயிராவிட்டால், ஹிந்து



ஸ்திரீகள் வீட்டுக்கு வெளியில் சம்பாதிப்பதற்காகவாவது, பொழுது போக்குக்காகவாவது போவது வழக்கமல்ல. இது முற்றிலும் நல்ல வழக்கமென்று நாம் சொல்லவரவில்லை. மிஸஸ் ரானடேயைப்போல ஹிந்து ஸ்திரீகள் வீட்டுக்கு வெளியிற்போய் ஏழைகளுக்குச் செய்யக்கூடிய பல தர்மங்கள் இருக்கின்றன. ஆனால் அப்படிச் செய்வதற்குச் சௌகரியப்படவில்லையென்று சொன்னாலும், மிஸஸ் லாஸாலைப்போல் ஒரு ஸ்கூல் வைத்து நடத்துவது வீட்டுக்கு வெளியே செய்யும் தருமமாகக் கருதப்படாமல், ஸ்திரீகள் செய்யக்கூடிய உத்தமமான தர்மமென்றே கருதப்படலாம். ஆகையால், ஸ்திரீகளுக்குச் சுபாவமாயுள்ள லச்சையும் ஒழுக்கமும் குறையாமலே சிறு பிள்ளைகளையும் பெண்களையும் சேர்த்து வைத்துப் படிப்புச்சொல்லி வைத்தலைவிடச் சிறந்த புண்ணியம் நமக்குத் தோன்றவில்லை.

## வீட்டுச் சாஸ்திரங்கள்.

வீட்டில் ஸ்திரீகள் செய்யவேண்டிய கடமைகளுக்கு ஒத்தாசை செய்யக்கூடிய சாஸ்திரங்கள் பல இருக்கின்றன. இவைகளை ஸ்கூல்பெண்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று ஒரு நிதி சேர்க்கப்பட்டு வருகிறதென்றும், அதைவிட மகாராஜாவின் முடிசூட்டுக்கு உற்ற ஞாபகச்சின்னம் எதுவுமில்லையென்றும் 'டைம்ஸ்' பத்திரிகை எழுதுகின்றது. வீட்டுச்செலவைச் சிக்கனமாய்ச்செய்வதும் வீட்டுச் சுகாதாரமுறைகளைக் காப்பதும் சமையல் முதலான காரியங்கள் செய்வதும் குழந்தைகளுக்குத் தக்க வேளைகளில் தக்க ஆகாரங்கொடுத்து வியாதியில்லாமல் திடகாத்திரர்க

ளாட அக்குழந்தைகளை வளர்ப்பதும் வீட்டுச் சாஸ்திரங்களாகும். இந்த சாஸ்திரங்களைத் தெரிந்துகொள்ளாமல் ஸ்திரீகள் தங்கள் அநுபோகத்தாலும் இயற்கை அறிவாலும் தோன்றுகிறபடி செய்து அநேக பிழைகள் செய்கிறார்கள். ஆனால் இந்த சாஸ்திரங்களை ஸ்கூலில் பெண்களுக்குக் கற்பித்தால் அவர்கள் வீட்டை நிர்வகிக்கக் காலம் வரும்போது புத்தியுடனும் பிழைகள் செய்யாமலும் நிர்வகிப்பார்கள் வீட்டு வாழ்க்கையே உயரும். தேசத்தில் குழந்தைகள் நன்றாய் வளர்வதின் பிரயோசனத்தைப்பற்றி நாம் சொல்லவேண்டுவதில்லை. வீட்டிற் செய்யப்படும் பற்பல காரியங்களால் குழந்தைகளின் நிலைமை பாதிக்கப்படுகின்றது. ஆகாரம் தகுந்தவிதமாய் கொடுப்பதுமன்றி வீட்டில் சுகாதாரம் எப்படிக் காக்கப்படுகின்றதோ அதையும் பற்றினதாயிருக்கின்றது. வீடுகள், சுத்தமாயிருப்பதாலும், நல்ல காற்று, நல்ல உணவு, நல்ல வெளிச்சம் முதலியவைகளோடு கூடியிருப்பதாலும் குழந்தைகளின் சரீரம் சுத்தமாயிருப்பதாலும், அவைகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. இக்கடமைகளை நமது பெண்களுக்குக் கற்றுக் கொடுப்பதால் தேசத்துக்கே க்ஷேமமுண்டாகும். இந்தியப் பெண்கள் வீட்டுச் சாஸ்திரங்களை எப்போது கற்கப்போகிறார்கள்?

## ஆசாரத் திருத்தத்தில் பேச்சும் செயலும்.

ஹிந்து சமூகத்தில் பழைய அநுஷ்டானங்களில் பல தற்காலத்துக்கு ஒவ்வாதனவென்றும் அவைகளைத் திருத்த வேண்டுமென்றும் நம்மவரில் அநேக புத்திமான்கள் முயற்சி செய்து வருகிறார்கள். இம்முயற்சி ஓரிடத்தில் மட்டுமல்ல எல்லாவிடங்களிலும் செய்யப்



பட்டு வருகிறது. அநேகர் மனதில் புதுத்திருத்தங்கள் அவசியமென்றும் அவைகள் செய்யப்படாமல் தேசத்தின் முன்னேற்றம் தடைப்பட்டு வருகிறதென்றும் உறுதியாய்ப் பட்டிருக்கின்றது. இப்படி இருந்தும் சில சமயங்களில் தக்க அந்தஸ்தும் செல்வாக்குமுள்ளவர்கள் கூட அவர்கள் பேசுகிறபடி செய்யாமல், பேசுவதொன்றும் செய்வதொன்றுமாய் ஏமாற்றத்தையும் விசனத்தையுமுண்டு பண்ணுகிறார்கள். உதாரணமாக பம்பாய்ப் பட்டணத்தில் பெயர்போன ஹிந்து கனவான் ஒருவர், நைட் (Knight) பட்டம் பெற்றவர்; ஆசாரத்திருத்தக் கட்சியில் தலைவராய் விளங்குவோரிலொருவர்; பாலவிவாக வழக்கத்தை அடிக்கடி கண்டித்துப் பேசுகிறவர்; இவர் சமீபத்தில் தமது பெண்ணை சிறுவயதிலேயே விவாகம் செய்து கொடுத்தாரென்ற பழிப்பை ஏற்றார். நல்ல அந்தஸ்திலுள்ள 50 வயதான ஒரு வக்கீல், அவரும் ஆசாரத்திருத்தக்காரர், தமக்கு மூன்றாவது ஸம்ஸாரமாக ஒரு சிறு பெண்ணை விவாகம் செய்துகொண்டாராம். இன்னும் பெரிய இடங்களிலும் இம்மாதிரி பேச்சுக்கும் செய்கைக்கும் விரோதத்தைப் பார்க்கலாம்.

மைசூர் சமஸ்தானத்தில் சில காலத்துக்கு முன்னால் தேவஸ்தானங்களில் தேவதாசிகளின் ஊழியம் வேண்டியதில்லையென்று கவர்ன்மெண்டால் ஒழுங்கு செய்து தடுக்கப்பட்டது. பூர்வம் தேவதாசிகளின் பேருடைய நடத்தையும் தொழிலும் எப்படியிருந்தாலும் தற்காலம் அவர்களுடைய நடத்தையும் தொழிலும் தேவாராதனைக்குப் பொருந்தியவைகளல்ல,

வென்று அப்படிச் செய்யப்பட்டது. அது மகா சிலாக்கியமான செய்கை யென்று உலகத்தார் மைசூர் கவர்ன்மெண்டைப் புகழ்ந்தார்கள். மைசூர் மகாராஜாவும் மந்திரியும் தைரியஸ்தர்களென்றும் உண்மையான தேசாபிமானிகளென்றும் அறிக்கப்பட்டார்கள். மேற்கண்டவாறு தேவஸ்தானங்களைப் பற்றி ஒழுங்கு பிறப்பித்த மகாராஜா, தமது சகோதரருக்குச் சமீபத்தில் விவாகம் நடந்தபோது, அந்த விவாகத்தைச் சிறப்பிக்க வந்திருந்த அனேகம் பெரிய மனிதர்களுக்குப் பொழுது போக்காய் ஸம்ஸ்தானத்திலுள்ள தேவதாசிகள் போதாமல் இந்தியாவின் பலபாகங்களினின்றும் தேவதாசிகளை வரவழைத்து விவாகமகோற்சவத்தின் சிறப்பு பூர்த்திபெறச் செய்தார். மகாராஜாவுக்கும் அவருக்கு ஆலோசனை சொல்வோருக்கும் விவாகச் சிறப்பின் பூர்த்திக்கு தேவதாசிகள் பிரசன்னமாவது இன்றியமையாததென்று ஏன் தோன்றிற்றோ? தேவதாசிகளில்லாமல் விவாகத்தை முடித்திருந்தால் மகாராஜாவுக்கும் அவருடைய மந்திரிகளுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் அதிககீர்த்தி கிடைத்திருக்குமென்பதே நமது அபிப்பிராயம். அதனால் லோகாபவாதம் உண்டாயிருக்காது. மகாராஜா செய்யும் காரியத்திற்கு யார் குற்றம் சொல்லுவார்கள்? சாமானிய நல்ல விஷயங்களில் புது அனுஷ்டானம் செய்தால் ஜனங்கள் பலவிதமாய்ப் பேசிக் கொள்ளக்கூடும். தாசிகளில் ஆட்டமும் பாட்டும் இப்படிப்பட்ட விஷயமல்லவாகையால், ஜனங்கள் வித்தியாசமாய்ப் பேசிக்கொள்ள மாட்டார்கள்.

தேச நன்மைக்கு அவசியமான புது வனுஷ்டானங்களை உயர்ந்த அந்தஸ்தும் செல்வாக்குமுள்ளவர்



கள் ஏற்காமல் பயந்து, பேசுவதொன்றும் செய்வதொன்றுமா யிருப்பதினாலேயே அப்புது வனுஷ்டானங்கள் ஸ்திரப்படுவதில்லை. ஜப்பான் தேசத்தில் ஒரே வீச்சாய்ப் புரட்சிசெய்து பழைய ஜப்பானை புது ஜப்பானாக்கினவர்கள் 55 சிறுவர்களெனச் சொல்லப்படுகிறது. இவர்களில் இரண்டொருவரைத் தவிர, மற்றவர் 30 வயதுக்கு அதிகப்பட்டவர்களல்ல. இவர்கள் நடத்த லக்ஷக்கணக்கான ஜனங்கள் பின்சென்றார்கள். ஆயிரவருஷகாலமாயிருந்த பழைய கொள்கைகளும் ஜாலவித்தைபோல் மாறிப்போயின. உலகத்தார் நினைக்காததையெல்லாம் ஜாப்பானியர் செய்து முடித்தார்கள். அபவாதத்துக்குப் பயந்து வெளியிலொன்று பேசுவதும் வீட்டிலொன்று செய்வதுமாயிருந்தால் மேற்கண்ட 55 ஜப்பானியர் என்ன செய்திருப்பார்கள்? ஜப்பானைப்போல் இந்தியா பழைய காலத்துக் கட்டுகளை மீறிப் புரண்டுசெல்வது சாத்தியமல்லவாயினும், நமது தலைவர்கள் தைரியசாலிகளாயிருந்து சொல்வதுபோல் செய்தல் அவசியமல்லவென்று யார் சொல்வார்கள்? அப்படிச் சொல்வதுபோல் செய்கிறவர்கள் இல்லவே யில்லையென்று நாம் சொல்லவில்லை. ஆனால் இரண்டொருவர் எவ்வளவு தைரியசாலிகளாயிருந்தாலும் மகா விசால முள்ளதாய் அசைவற்றுக் கிடக்கும் ஹிந்து சமூகத்தை, திருத்த நெறிகளிற் செலுத்துவது அவர்களால் சாத்தியமாகாது. தலைவர்மீது, முழுக்குற்றமும் சுமத்துவது, சரியல்ல. ஜனங்களும் தற்கால நிலைமைகளையறிந்து நவீன ஆசாரங்களை ஏற்கும் பெரியோரை நிந்திப்பதும் ஹிம்சிப்பதுமான மகா கெட்ட வழக்

கத்தை விட்டுவிட வேண்டும். ஆண்கள் காலத்துக் குத் தக்கபடி நடையும் கோலமும் தம்மைச் சுற்றி உலகத்தில் நடப்பதற்கு ஒத்தபடிக் காரியங்களும் செய்யவேண்டும்.

பேசுவதொன்றும் சொல்லுவதொன்றுமாய் நம் தலைவர்கள் இருப்பது விசனகரமானாலும், காரியத் தில் பூர்த்தி பெறாத பேச்சினால் மட்டுமாவது எழுத்தி னால் மட்டுமாவது பிரயோசனமில்லை யென்று சொல் லக்கூடாது.

சிலகாலம் கொச்சி திவானாயிருந்த N. பட்டாபி ராமராவ் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கடப்பையி லுள்ள பல கல்விமான்களும் சிறுவர்களும் சேர்ந்து, நமது ஆசாரங்களிலும் சிறுவருடைய நடத்தையிலும் உள்ள சில குறைகளை நீக்கவேண்டிக் கூட்டங் கூடி னார்கள். விவாககாலத்தில் பிள்ளைகளும் பெண்களும் தக்க வயதுள்ளவர்களாயிருக்கவேண்டும்; கன்னியர் சுல்கம், வரசுல்கம் இவைகள் வாங்குவதும், நகை களிலும் வேடிக்கைகளிலும் பெருஞ் செலவு செய்வ தும், கெட்ட வழக்கங்கள்; நம்மில் ஆதியில் ஏற்பட்ட ஜாதி வகுப்புகள் நாலாயிருக்க, இப்போது ஆயிரக் கணக்காய் அதிகப்பட்டிருப்பது சாஸ்திர விதியல்லா மையால், அவைகளை யொன்றாய்ச் சேர்த்துவிட வேண்டும். பிள்ளைகள் வித்தியா சாலைகளில் மதப் பயிற்சியும் ஒழுக்கப் பயிற்சியும் பெறவேண்டும்; சுருட்டுக் குடிப்பதும் பெரியோரை மதிக்காமையும் ராஜபக்திக் குறைவும் பிள்ளைகளுக்கு இப்போது மேலிட்டு வருவதை அடக்க வேண்டும்; விவசாயக் கல்வி



யும் தொழிற் கல்வியும் பெறவேண்டும்; ஹிந்துப் பெண் களுக்குப் பழைய வழிகளின்படி கல்வி கற்றுக்கொடு த்து அவர்கள் பழைய ஹிந்து ஸ்திரிகள் மாதிரி இருக்கவேண்டும்; விவசாயக் கல்வியும் தொழிற் கல்வி யும் நம்மவர் பெறுமாறு வசதிகள் ஏற்படவேண்டும்.

இம்மாதிரித் தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் செய்யப்பட்டன. இவைகளெல்லாம் நல்ல தீர்மானங் களேயொழிய ஆட்சேபம் சொல்லக் கூடியனவல்ல. ஆனால் பேச்சுக்களால் மாத்திரம் என்ன பிரயோச னம்? பேசுகிறவர்கள் பேசுவதுபோல நடந்து காட்டுவ தில்லை யென்று சிலர் சொல்லுகிறார்கள். இது உண்மை யானாலும், இம்மாதிரிக் கூட்டங்களும் பேச்சுக்களும் அநாவசிய மென்று சொல்லக் கூடாது. நூறுபேர் வெறும் பேச்சுக்காரர்களாயிருந்தால், பத்துப்பேரா வது திருந்தக் கூடும். இவைகள் இல்லாவிட்டால், இந்த சொற்பப் பலன் கூட உண்டாகாது. பேச்சுக் களாலும் பத்திரிகைகளாலுமே புது அபிப்பிராயங் களும் வழக்கங்களும் பிரபலமாக வேண்டும்.

## CHAPTER XI.

### மடாதிபதிகளும் புரோகிதர்களும்.

அனந்தப்பூரில் 1909-ல் கல்விமான்களான சில [illegible]ங்கள் சேர்ந்து நம் தேசாபிவிருத்திக்கு அவசிய மான ஆசாரத் திருத்தங்கள் பலவற்றைப் பற்றிப் பேசினதில் நமது மடாதிபதிகளும் புரோகிதர்களும் பொது விஷயங்களில் அக்கறை காட்டி காலோசிதமான

புதுமைகளை ஏற்று ஜனங்களுக்குப் போதனை செய்ய வேண்டியது அவசியமென்று சொல்லப் பட்டதைச் சந்தோஷத்துடன் கவனித்தோம். மடாதிபதிகளும் புரோகிதர்களும் மூடத்தனமாய் நாட்பட்ட பழக்க வழக்கங்களையும் அபிப்பிராயங்களையும் தழுவி, நவீன நாகரிகத்துக் கவசியமான புதுமைகளை ஹிந்துக்களாகிய நமக்குத் தக்கனவல்ல வென்று எதிர்ப்பது தேச நன்மைக்கு இடையூறா யிருக்கின்றது. பூர்விக மதானுஷ்டானங்களைக் காத்து ஜனங்கள் அவைகளின் வழியில் நிற்கச் செய்வது அவர்களின் கடமையே யானாலும், நமது மதாசாரங்களுக்கு விரோதமல்லாதனவாயும், தற்காலத்துக்கு உசிதமானவையாயும் உள்ள பல மாறுதல்களை இவர்கள் அங்கீகரித்து ஜனங்களுக்குப் போதிப்பார்களானால், நம்தேசத்தின் அபிவிருத்தி இன்னும் துரிதமாய் நிறைவேறும். உதாரணமாகப் பெண்களுக்கு உயர்ந்த கல்வி கற்பிப்பதும், சாஸ்திரப் படி ஏற்பட்ட நாலு ஜாதிகளுள் ஒவ்வொரு ஜாதியிலுமுள்ள உட்பிரிவுகளின் பேதங்களை நீக்குவதும், அன்னிய தேசங்களுக்குக் கடல் கடந்து செல்வதும், கீழ் ஜாதியாரை இம்சைப்படுத்தாமல் அன்புகாட்டி நடத்துவதும், நமது பூர்விக சாஸ்திர விதிகளுக்கு விரோதமானவை யல்ல. இவைகளை நம்மடாதிபதிகளும் புரோகிதர்களும் தங்கள் மனதில் பூர்ணமாய்ச் சிந்தனை செய்து அவைகளின் அவசியத்தை உணர்ந்து ஜனங்கள் அவைகளை ஏற்கவும் அவைகளுக்குச் சம்மதிக்கவும், செய்வார்களானால், நம்மில் ஒற்றுமையும் அறிவும் ஊக்கமும் அதிகப்பட்டு எவ்வளவோ பெரிய காரியங்களைச் செய்ய வல்லவராவோம்.



ஹிந்துக்களாகிய நாம் உயர்ந்த நாகரிகத்தைப் பெற்றவர்களாயினும், எவ்வளவோ அருமையான காரியங்களைச் செய்த முன்னோர் மரபில் பிறந்தவர்களாயினும், தற்காலத்திலுங் கூட நமது தீவிர புத்தியால் பெருங்காரியங்களைச் செய்யச் சக்தியுள்ளவர்களென்று விளங்குகின்றதாயினும், நமது பூர்விக நிலைமையின் உன்னதத்தைப்பற்றி உலகத்தார் மனமறிய சிலாகிக்கின்றனராயினும், தற்காலம் நமது சமூகத்தைத் தழுவி நிற்கும் சில விசேஷ ஆசாரங்களால் நாம் மற்றத் தேசத்தாரைவிடப் பிற்பட்டு நிற்கின்றோம். இதைத் தேசாபிமானிகள் அறிந்து, வருந்தி இயன்ற மட்டும் திருத்தங்கள் செய்ய முயன்றாலும் பாமர ஜனங்களுடைய மனதையும் மதிப்பையும் கவர்ந்து செல்வாக்குப் பெற்றிருக்கும் நம்மடாதிபதிகளும் புரோகிதர்களும் ஒதுங்கி நின்று விரோதம் பாராட்டுவதால், நம்தேசத்துக்கு நேரிட்டிருக்கும் பல விதக் குறைகளை நீக்கவும் புது நன்மைகளைப் பெறவும் அசக்தர்களா யிருக்கின்றோம்.

## பெரியோரின் பொறுப்பு.

சிலகாலத்துக்குமுன் மிஸ்ஸெஸ் அன்னிபெஸண்ட் செய்த ஒரு பிரசங்கத்தில் நம் தேசப் பெரியோர்களிடத்துக் குறைகளை யெடுத்துச் சொன்னார். சிறியோர்கள் முன்காலத்திற் போலப் பெரியோரிடம் அடக்கமும் பயபக்தியும் கொண்டவர்களா யிருக்க வில்லையென்று சாதாரணமாய்ப் புகார் சொல்லப்படுவதைக் கேட்கிறோம். ஆனால் தங்களிடத்துச் சிறியோர்களுக்குப் பயபக்தி இருக்கும்படியான நடத்தையையும்

குண விசேஷங்களையும் உடையவர்களாய் இக்காலத்தில் பெரியோர்க ளென்பவர்கள் இருக்கிறார்களா? என்று மிஸ்ஸெஸ் பெஸண்ட் கேட்டார். சமூகத்துக்குச் செலுத்தவேண்டிய கடமையை யுணர்ந்தவர்களாயும் தம் தேச க்ஷேமத்தில் அக்கரையும்தம் ஜனத்தின் அபிமானமும் கொண்டவர்களாயும் இருப்பவர்களே பெரியவர்களென்னும் பெயருக் குரியவர்கள். இந்த லட்சண மமைந்தவர்கள் நம்முள் குறை வென்பதை நாம் வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். இப்போது நம்முள் பெரிய மனிதர்களென்று கருதப்படுபவர்கள் நம் புராதனப் பெரியோர்கள் போல ஞானமும், தன்னடக்கமும், தன்னலம் கருதாமையும், உலக வாழ்விற் பற்றின்மையும் ஆகிய குணங்கள் மிகுந்து விளங்குபவர்களுமல்ல, நவீன நாகரீகத்தையும் லட்சியங்களையும் ஏற்று, மேனாட்டார் போலப் பொதுப் பான்மை, பொதுவிற்கு உழைப்பதிற் பிரியம், ஒத்துழைப்பு, பரஸ்பர நம்பிக்கை, ஜனாபிமானம், தேச பக்தி, இவற்றில் முற்பட்டவர்களாய்க் காணப்படுபவர்களும் நம்பெரிய மனிதருள் மிகக் குறைவு. ஆயினும், மேனாட்டுச் சம்பந்தத்தால் இவர்கள் ஒன்றுமே கற்றுக் கொள்ளாதவர்களா யிருக்கவில்லை, இருக்கவும் முடியாது. தன்னல விருப்பினும் திரவியாபேட்சையினும் மேனாட்டு வழிகளைப் பற்றினவர்களாயும், பொதுக் கடமை, தேசகைங்கரியம், ஜனோபகாரம், இவற்றின் உணர்ச்சியோ நம்பிக்கையோ, போதுமானபடி பெறாதவர்களாயும் நம்மில் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள்.

"ஒவ்வொருவரும் தாம் ஒரு ராஜா சர். பி. மாதவ



ராவோ ஸர் ஸலார்ஜங்கோ ஆய்விட வேண்டுமென்னும் அவா மேலிட்டவராய் அவர்களையும் மிஞ்சச் சாதனங்களைச் சேர்ப்பதிலேயே ஆழ்ந்துவிடுகிறார்" என்று சொல்வது நம் சிறுவரைவிடப் பெரியவர்களுக்கே இந்நாளில் ஒக்குமென்று கருதுகிறோம். ஸர் பி. மாதவராவையும் ஸர் ஸலார் ஜங்கையும் போல ஆக விரும்புகிறார்களென்று இந்நாளில் நம் சிறுவர்களைக் குறித்துச் சொல்வது அவ்வளவு பொருந்தியதாகத் தோற்றவில்லை. தம் சமூகக்ஷேமத்தில் அக்கறை கொண்டு, சிறுவர்களுக்குச் செலுத்தவேண்டிய கடமையைப் பெரியவர்கள்செலுத்துவார்களானால், நம்தேசம் எவ்வளவோ உயர்வடைந்துவிடும். பதினாயிரக் கணக்காக வருஷாவருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தவறிப்போய் மேலும் படிக்கச் சக்தியற்று "இனி என்ன செய்வோம்" என்று ஏங்கி, நெறி தவறியும் வீண்காலங் கழித்தும் பொது க்ஷேமத்துக் குதவாது போகும் நம் சிறுவர்களைப் பற்றி நடத்தையிற் கவலை காட்டுபவரைக் காணோம். இவர்களைப் பற்றிக் கவர்ன்மெண்டு கவனிக்காத பெருங்குறை யொருபுறமிருக்க, அதனால் நம்முள் பெரியவர்களாயுள்ளோர் இவ்விஷயத்தில் வகிக்க வேண்டிய பொறுப்பு அதிகரிக்கிறதே யன்றிக் குறைகிறதில்லை யென்ற உணர்ச்சி பொதுவிற்காணோம். அவ்வுணர்ச்சியுடன் பெரியவர்கள் முயற்சிகள் செய்வார்களானால், சிறியவர்கள் அவற்றில் அசிரத்தைகாட்டி பயனடையாது போவார்கள் என்று சொல்வதற்கில்லை.

க. வங்காள ராஜதானி மற்றப் பல அம்சங்களில் முற்பட்டிருப்பதுபோல, தேசச்சிறுவர்களை யாதரிக்கும்

விஷயத்திலும் தலைமைபெற்றிருக்கிறதென்று சந்தோஷிக்கிறோம். ஜாதியக்கல்வியும் தொழில் முயற்சியும் பெருகி, அங்குள்ள நம் சகோதரர்களின் பொறுப்பான்மைக்கு அவைகள் அறிகுறியாயிருக்கின்றன. நாஷனல் யூனிவர்சிடி, இன்டஸ்டிரியல் அஸோஸியேஷன், நாவிகேஷன் கம்பெனிகள், ஆயுர்வேத காலேஜ், பாரத மகாமண்டலம் போன்ற பலஸ்தாபனங்கள் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் தேசச்சிறுவர்களை உருப்படுத்தி முன்னுக்குக்கொண்டுவந்து வேறுவழிகளிலும் நன்மை செய்கின்றன. இம் முயற்சிகளில் பிரபல தேசாபிமானியாகிய தர்பங்கா மகாராஜா போன்றவர்கள் கலந்துழைக்கிறார்கள். பாரத தர்ம மகாமண்டலத்தில் இவர் பிரசிடெண்ட். தொழில் முயற்சிக்கு 10 லட்ச ரூபாய் கொடுக்கப் போகிறாரென்று பத்திரிகைகளிலேயே வெளியாயிற்று.

இவர் பேச்சால் மட்டுமன்றி, நடத்தையிலும் "தம் ஜன சேவகமே ஒப்புயர்வற்ற சுதந்தரம்" என்று உணர்ந்தவராய்க் காட்டி வருகிறாரென்று சொல்லத் தேவையில்லை. இவர்போலப் பலர் வெங்காளத்தில் இருக்கிறார்கள். பஞ்சாபில் ஸ்ரீ லஜபதிராய் பஞ்ச நிவாரண வழியில் சிறுவர்களை உபயோகப்படுத்திச் செய்துவந்த அரிய காருண்ய வேலையையும் இங்கு குறிப்பிடவேண்டும். மைசூரில் பஞ்ச நிவாரணத்திற்காகப் பணம் திரட்டி உபகரிக்கச் சில நல்லோர் முயன்றார்கள் இதுபோன்ற பலவழிகளில் சிறுவர்களை உபயோகித்து நல்வழி காட்டலாம்.



## தேசாபிமானம்.

இலங்கைத் தீவில் ஓரிடத்தில் மிஸ்டர் P. ராமநாதன் K. C., C.M. G., தேசாபிமானத்தைப்பற்றி ஒரு அருமையான பிரசங்கம்செய்தார். தேசாபிமானம்என்ற வார்த்தை தற்காலம் புதிதாய் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதேயன்றி, அதற்குச் சரியான வார்த்தை தமிழிலாவது, சம்ஸ்கிருதத்திலாவது இல்லை. ராஜாவுக்குப் பிரஜைகள் செலுத்த வேண்டிய கடமைகளையும் பிரஜைகளுடைய சுதந்திரங்களையும் குறிக்க 'பிரகஸ்த தருமம்' என்ற வார்த்தையும் 'தேசாபிமானம்' என்பதைக் குறிக்க 'ஜீவகாருண்யம்' என்ற வார்த்தையும் உபயோகத்தில் இருந்திருப்பதாக மிஸ்டர் ராமநாதன் சொன்னார். ஆயினும், இந்த இரண்டு கருத்துகளும் அவைகளுக்குரிய ஆங்கில வார்த்தைகளில் விளங்குவனபோல் மேற்சொன்ன இரண்டு சம்ஸ்கிருத பதங்களிலும் விளங்குவனவல்ல. "பிரஜா தர்மம்" "தேசாபிமானம்" ஆகிய இரண்டு வார்த்தைகளையும் மேற்குறித்த வார்த்தைகளுக்குப் பதிலாக உபயோகித்தல் பொருத்தமுள்ளதாகுமென்று நினைக்கிறோம். பூர்வம் ஹிந்துக்கள் தேசாபிமானமென்ற மேன்மையான உணர்ச்சியை உணர்ந்தவர்களல்லாவது அதனால் தூண்டப்படும் அருமையான காரியங்களைச் செய்தவர்களாயாவது இருக்கவில்லை. இதற்குக் காரணம், மிஸ்டர் ராமநாதன் சொல்லுவதுபோல், ஹிந்து ராஜாக்கள் தங்கள் கடமைகளைச் செலுத்துவதில், பிரஜைகளுடைய உதவியையாவது சேர்க்கையையாவது கோரினவர்களல்ல, க்ஷத்திரியரை தேசக்காப்பின் பொருட்டுச்சேனைகளாக அமர்த்திக் கொண்டனர். தங்களுக்கு ஆலோ

சனை சொல்லுமாறு மந்திரிகளை நியமித்துக் கொண்டனர். பார்லிமெண்டென்றாவது அல்லது ஆலோசனைச் சபையென்றாவது ஜனப் பிரதிநிதிகளடங்கின சபைகள் இருந்ததில்லை. விசேஷ சமயங்களில் ராஜா தமது மந்திரிகளையும் பிரபுக்களையும் வியாபாரிகள் முதலியோரையும் சேர்த்து ஆலோசனை கேட்பதுண்டாயினும், தற்காலத்தைப்போல் அக்காலத்தில் ராஜ்ய சபைகள் இருந்ததில்லை. ஜனங்கள் கிராமங்களில் வசித்து, கிராமப் பெரியோருக்கடங்கிப் பூர்வீக ஆசாரங்களையும் அந்தந்தத் தொழிலுக்குரிய பரம்பரை வழக்கங்களையும் தழுவி வாழ்ந்தனர். ராஜாவின் உதவியைத் தேடினவர்களல்ல. ராஜாவும் தமது பகுதிகளை வாங்கிப் பொது அமரிக்கையைக் காப்பதைத் தவிர, வேறு விதமாய் ஜனங்களுடைய வாழ்க்கையில் தலையிட்டவரல்ல. ராஜா எவராயினும், பெரும்புரட்சி நேர்ந்து புதிய ராஜவம்சம் ஆட்சியை வகித்தாலும், கிராம சமூகவாழ்க்கையில் புரட்சியாவது அமைதிக் குறைவாவது நேரிட்டதில்லை.

இதனால் ஜனங்களுடைய அபிமானமும் கருத்தையும் அந்தந்த கிராம எல்லைக்குள் அடங்கி இருந்ததேயன்றி கிராமத்தைத் தாண்டி தேசமுழுமையும் தழுவினவல்ல. தேசத்தின் நாலு பக்கங்களிலிருந்தும் அரசன் தன் பிரஜைகளைக் கூட்டி, அவர்களுடைய ஆலோசனையின் பேரில் தேசத்தை நிர்வகிப்பானாயின் ஜனங்களுக்குள் ஒற்றுமையும் தேசாபிமானமும் உண்டாகக்கூடும். அல்லது அன்னிய அரசனோடு யுத்தம் செய்ய நேரிடுங்கால் ஜனங்களின் உதவியால் தேசத்தைக் காப்பானானால், அப்போதும் ஜனங்களுக்குள் ஒற்றுமையும் தேசாபிமானமும் உண்டாகக்கூடும். த



காலம் ஐரோப்பிய தேசங்களில், ஜப்பானிலுங்கூட, தேசத்தான் ஒவ்வொருவனும் அவன் ஆண்மைப்பருவத்தில் சில வருஷங்கள் சைனியத்திற் சேர்ந்து போர்த்தொழில் கற்க வேண்டுமென்று சட்டம் செய்யப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட சட்டம் பூர்வம் நமது ராஜாக்கள் செய்ததில்லை. க்ஷத்திரியர்களோ அல்லது சம்பளத்துக்கமர்ந்த போர்வீரர்களோ தேச சம்ரக்ஷணை செய்து வந்தார்கள். மிஸ்டர் ராமநாதன் யுத்தத்தால் உண்டாகும் பெருங் குணங்களைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினார். சௌரியம், அஞ்சாமை, தன்மறுப்பு, ராஜ நிஷ்டை, உயிர் துறத்தல், அடக்கம், ஒற்றுமை ஆகிய பெருங்குணங்கள் யுத்தத்தால் உண்டாகின்றன. இவைகளுக்கும் மேலாக தேசாபிமானமும் உண்டாகின்றது. இப்படி உண்டாகக்கூடிய சமயங்கள் நம்தேசத்தில் அடிக்கடி நேரிட்டபோதிலும் அவைகள் கிராமவாசிகளைத் தொட்டனவேயல்ல. மேல் நாடுகளிலுங்கூட, தேசாபிமான மென்பது தற்காலத்தில் தோன்றியுள்ளதேயன்றி பழைய காலங்களில் இல்லை. இங்கிலாந்தின் 18-ம் நூற்றாண்டில் தேசபக்தி என்பது இருந்ததில்லை. அதிகாரமும் செல்வாக்குமுள்ள பிரபுக்கள் தன்னலம் பாராட்டுவோராய் பொது நலத்திலாவது ஜனப்பெரும் விருப்பங்களிலாவது அபிமானம் இல்லாதவர்களா யிருந்தார்கள். பார்லிமெண்டிலும் பார்லிமெண்டுக்கு வெளியிலும் தேச நிர்வாகிகள் அரசனுக்குத் திருப்தி செய்யவும் சுயநலத்தைப் பேணவும் [illegible]ன்று பலவிதமாய்ச் சூதுவாதுகளும் விஸ்வாசகாதகங்களும் செய்து வந்தார்கள்.

ஹிந்துக்களாகிய நாம் பந்துப்பிரியர்களென்றும், குடும்பத்திற் சேர்ந்தவர்களை அன்புடன் ஆதரிப்பவர்களென்றும் பேர்பெற்றிருக்கிறோம். நமது மதத்தில் நமக்குள்ள அபிமானமோ குறைவற்றதாயும் தீவிரமுள்ளதாயும் இருக்கின்றது. குடும்பத்தைப்போல் கிராமத்தையும், கிராமத்தைப் போல் தேசத்தையும் கருதிக் காத்தல் நமக்கு இயற்கையாயுள்ள குணங்களுக்குப் பொருந்தியதாகும். நமது மக்களும் ஸ்திரீகளும் நம்மைச் சேர்ந்தவர்களென்று அன்பு பாராட்டுகிறோம். அப்படியே கிராமத்தாரும் நமது சுவஜாதியாயிருந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகையால், அவர்களிடத்திலும் அன்பு பாராட்டுகிறோம். அவ்வாறே கிராமத்தைத் தாண்டி விசாலித்துள்ள தேசத்தில் வசிப்பவர்களும் நமது பூர்வீகப் பெருமையையும் தற்கால நிலைமையையும் குறிப்பவர்களானதாலும், பொதுப்பட்ட ஆட்சி நிர்வாகத்தால் விளையும் நன்மை தீமைகளுக்குச் சமமான பாத்தியம் பெற்றிருப்பவர்களானதாலும், ஒரே மதம் ஒரே ஆசாரங்களைத் தழுவினவர்களானதாலும், நமது தேசம் [illegible] தேசங்களைவிடப் புண்ணிய பூமியென நாம் கருது[illegible]தாலும், நம் உடன் வாசிகளிடத்தில் அன்பு பா[illegible]வதும் மேன்மையாகும். ஹிந்துக்களாகிய ந[illegible] பெருமையை யுண்டாக்கின பெரியோர் நம் தேச[illegible] நாலாப் பக்கங்களிலும் வசித்தவர்கள். ஸிந்து, கங்கை, நர்மதை, கோதாவரி, காவேரி இந்தப் புண்ணிய [illegible]களின் தீரங்களில் வசித்தவர்களே இந்த ஆரிய[illegible]தத்துக்குப் பெருமையை யுண்டாக்கினவர்கள். [illegible]தன தர்மமாகிய ஆரிய மதம் இந்தியாவின் நான்கு[illegible]



லைக்குள் ளடங்கியது. தென்னிந்திய வாசிகளுக்கு ஸ்ரீகாசிக்ஷேத்திரமும் கங்காநதியும் எப்படி அளப்பொணாப் பொக்கிஷங்களோ, அப்படி வட இந்தியக்காரர்களுக்கு கோதாவரி காவேரியாகிய புண்ணிய நதிகளும் திருப்பதி, ராமேஸ்வரம், ஆகிய க்ஷேத்திரங்களும் அளப்பரும் பொக்கிஷங்கள். ஆகையால் தென்னிந்தியாவுக்கு வட இந்தியா எப்படியோ அப்படியே வட இந்தியாவுக்குத் தென்னிந்தியாவும். இரண்டும் பரஸ்பர அபிமானத்துக்கும் ஊழியத்துக்கும் உரியனவாகும். நம் மக்களுக்கு நாம் கொண்ட அபிமானத்தைவிட நம் தேசவாசிகளுக்கு நாம் கொள்ளும் அபிமானம் மேலானது. ராஜபக்தியும் தேச பக்தியும் நம்மை ஒரு ஜனமாகத் திரட்டிப் பெருமைப்படுத்தும். பூர்வகாலத்தைப்போல் ஆளுவோர் ஜனங்களை பொதுக்கி, தேசநிர்வாகத்தை நடத்தாமல் ஜனங்களின் மனோரதங்களை யறிந்தும் பிரதிநிதிகளை ஆலோசனை கேட்டும் நடத்துகிறார்கள். உலகமெல்லாம் தேசாபிமானம் தோன்றி ஜனங்கள் மனதில் துடித்துக்கொண்டிருக்கின்றது. இந்திய ஜனங்கள் மனதிலும் இது புதிதா[illegible]ன்றி, அது வளர்ப்பதற்கு அநேக வசதிகளும் [illegible]ால் அது காலக்கிரமத்தில் உயர்ந்து, உறுதிப்[illegible] இந்திய ஜனங்களின் நல்வாழ்க்கைக்கு உற்றகரு[illegible]வண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

## ஜாதீய ஊழியம்.

பிரிட்டிஷ் தேசத்தில் கன்ஸர்வெடிவ் அல்லது யூனியனிஸ்ட் கட்சியின் தலைவரான லார்டு மிடில்டன் 1910 ம் வருஷத்தில் எடின்பர்க் பட்டினத்தில், “ ஜா

நிய ஊழியம்" என்கிற விஷயத்தைப்பற்றி ஒரு சிறந்த பிரசங்கஞ் செய்தார். எந்த ஜனமானாலும் அது கட்டுப்பாடுள்ளதாயும் தலைவர்களுக்கு அடங்கினதாயும் தேசத்துக்கு ஊழியம் செய்வதில் ஆத்மத்தியாகம் செய்யக் கூடியதாயும் இருக்கவேண்டும். எந்தத் தேசம் அப்படியில்லையோ, அது தாழ்ந்த நிலைமையை நோக்கிச்செல்லும். இங்கிலாந்து தேசமானது தற்காலம் மேற்கண்ட குணங்களை இழந்து வருவதாய்த் தோற்றுகிறது. கட்டுப்பாடும் அடக்கமுமில்லாமல் ஒவ்வொருவனும் சொந்த நன்மையைப் பெரிதாகக் கருதி, தேசத்துக்கு ஊழியம் செய்வதைத் தனக்கு ஒரு பிழைப்பாகக் கருதி வருகிறான். தேசத்தை நிர்வகிக்கும் கவர்ன்மெண்டானது, தனக்குத்தானே செய்துகொள்ளவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டுமென்று நினைத்து, தான் கல்விபெறுவதும் ஜீவிப்பதும் முதுமைப் பருவத்தில் சுகமாய் வசிப்பதும், கவர்ன்மெண்டால் ஆகவேண்டுமென்று கேட்கிறான். தனக்குப் பல வழிகளில் நன்மை செய்யும் சமூகக் காவலன் போல் இருக்கும் கவர்ன்மெண்டுக்கு ஊழியம் செய்வது தனது கடமையென்று உணர்வதில்லை. சமூகம் ஒரு சரீரம் போன்றதென்றும், அதில் ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு அவயவமென்றும், சமூகத்தின் க்ஷேமத்தைக் காக்க தான் கடமைப்பட்டிருக்கிறனென்றும், அது நல்ல நிலைமையிலிருத்தல் தனது நன்மைக்கு அவசியமென்றும், ஒவ்வொருவனும் அறிந்து அதன்படி நடக்கவேண்டும். இப்படி நடக்கும் ஜனங்கள் ஜர்மனியரும் ஜப்பானியருமென்று லார்டு மிடில்டன் உதாரணமாகச் சொன்னார். ஜர்மனி கடந்த



50 வருஷத்துக்குள்ளாக எவ்வளவோ உயர்ந்த நிலைமையை அடைந்து விட்டது. ராணுவ பலத்தில் அதற்குச் சமமான தேசம் உலகத்தில் இல்லை. கல்வி, தொழில், வியாபாரம் முதலியவைகளிலும் அது மற்றத் தேசங்களை மீறிக்கொண்டு வருகிறது. ஜப்பான் சென்ற 50 வருஷத்துக்குள் செய்திருக்கும் அற்புதமான காரியங்கள் உலகமறியும். இந்த இரண்டு தேசங்களும் மேற் குறித்த கட்டுப்பாடு, அடக்கம், தன்மறுப்பு, தேச பக்தியாகிய பெருங் குணங்களினாலேயே இந்த உயர்ந்த நிலைமைக்கு வந்திருக்கின்றன.

சில காலத்துக்கு முன்பு இடலி தேசமானது ஆஸ்டிரியா தேசத்துக் கடங்கி சிறுமைப்பட்டபோது, அதற்கு சுவாதீனத்தையும் பெருமையையும் சம்பாதித்துக் கொடுத்த தேசாபிமானிகளில் ஜோஸப் மாஜினி என்பவர் ஒருவர். அவர் என்ன சொல்வது வழக்கமென்றால், ஒவ்வொருவனும் தன் ஆயுளில் சில காலத்தைத் தன் தேசத்தின் நன்மைக்காக அர்ப்பணம் செய்யவேண்டுமென்று சொல்வது வழக்கம். இந்த மகா வாக்கியம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வாயிற்படிக்கு மேல் பொன்னெழுத்துக்களில் எழுதி வைக்கப்படவேண்டுமென்று லார்டு மிடில்டன் சொன்னார். தேசத்தினால் நாம் எவ்வளவோ நன்மைகளை யனுபவிக்கிறோம். நமது அன்னவஸ்திரங்களும் வசிப்பிடமும் நம் தேசத்தினாலேயே கிடைக்கின்றன. நம் முன்னோர்கள் பெருங் காரியங்கள் செய்து கீர்த்தி பெற்று மாண்டுபோக, அவர்களுடைய அஸ்திசேஷம் நம் தேசத்து மண்ணோடு மண்ணாய்க் கலந்திருக்கின்றது. தேசத்துக் கவர்ன்மெண்டாலேயே நாம் சாவதானமும்

அமைதியும் பெற்று வாழ்கிறோம். அன்னியர் புகுந்து நம்மை இம்சிக்காமல் நமது தேசத்தின் காரியஸ்தனாயிருந்து கவர்ன்மெண்டு காக்கின்றது. இப்படியிருக்க, அந்தத் தேசத்துக்கு நமது நன்றியைக் காட்டும்பொருட்டு, நமது ஆயுளில் சில காலத்தை அதன் க்ஷேமத்துக்கும் பெருமைக்கும் அர்ப்பணம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப் பொருள்பட பேசிவிட்டு இங்கிலாந்தானது உலகத்து முதல் அந்தஸ்து தேசங்களில் ஒன்றாய் விளங்கவேண்டுமானால், ஜாதிய வைழியமே ஆதாரமாகக்கொண்டு ஜனங்கள் தங்கள் யோக்கியதையை நிலைநிறுத்தவேண்டுமென்று லார்டு மிடில்டன் பேசினார். இத்தகைய கருத்துக்கள் கொண்ட பிரசங்கங்கள் ஜனத்தலைவர்கள் அடிக்கடி செய்து ஜனங்களை உற்சாகப்படுத்துவதால், ஜனங்கள் கேவலம் சுயநலத்தைப் பாராட்டாமல் தேசத்தில் அபிமானத்தை வளர்த்து, அதற்கு வழியும் செய்வது, சொந்த நன்மையைத் தேடுவதுபோல் தங்கள் கடமையென்று நினைக்கிறார்கள். இங்கிலாந்திலேயே லார்டு மிடில்டன் போன்றவர்கள் இவ்விதம் ஜனங்களை எச்சரித்தல் அவசியமென்று நினைப்பார்களானால், இந்தியாவில் இத்தகைய எச்சரிப்பு மிகவும் அவசியமன்றோ?

## இந்தியர்க்குத் தற்காலம் வேண்டியது சன்னியாசம்.

இந்த வியாசத்தில் சன்னியாசம் என்கிற பதத்தைப் பலனை அபேக்ஷியாமல் பரோபகாரம் செய்தல் என்கிற பொருளில் உபயோகப் படுத்துகிறோம். ஒருவன் தன் சொந்த சுகத்தைப் பாராட்டுதல் பிசகல்ல. அப்படிப் பாராட்டுவதில் அன்னியருடைய சுகத்தைக்



கருதாமல் ஜீவகாருண்யமின்றி, தனக்கும் எவருடைய சுகா சுகங்கள் தன்னுடைய சுகா சுகங்களாக மதிக்கப் படுகின்றனவோ, அவர்களுக்கும் சுகத்தையே பெரிதாக மதித்து ஜீவனைக் கழிக்கும்போது, சுயநலம் பாராட்டும் இயல்பானது இழிகுணமாகின்றது. "பரோபகாரார்த்தம் இதம்சரீரம்" என்கிற வாக்கியமானது மனித வாழ்க்கைக்குரிய அத்தியாவசியமான கடமையைக் குறிக்கின்றது. பிரதி மனுஷனும் தன் தன் சுகத்தையே நாடுவானானால், ஜனங்கள் சமூகமாய்ச்சேர்ந்து வாழ்தலே அசாத்தியமாகிவிடும். குழந்தைகளையும், கிழங்களையும், கூன், குருடு முதலிய ஊனமுள்ளவர்களையும், ஏழைகளையும், கதியற்ற ஸ்திரீகளையும், அவர்களுடன் சேர்ந்து வசிப்பவர்கள் சம்ரக்ஷிக்காவிட்டால், ஒரு தினமேனும் சமூக வாழ்க்கை இயலாமற் போய்விடும். ஆகையால் உலகம் சன்னியாசம் என்ற பெருங் குணத்தையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஒரு சமூகம் எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் ஆழ்ந்து விட்டாலும், அப்போதும் தன் சுகத்தை மறுக்கக்கூடியவர்களிருப்பார்கள். ஆயினும், இப்படிப்பட்டவர்களது சங்கியையும் எண்ணிக்கையும் ஒருகாலத்தில் அதிகமாகவும் ஒருகாலத்தில் குறைந்துமிருக்கும். அதிகமாயிருக்குங் காலத்தில் சமூகம் உயர்ந்த நிலைமையிலும் குறைந்திருக்குங்காலத்தில் சமூகம் தாழ்ந்த நிலைமையிலுமிருக்கும். நம் முன்னோராகிய ஆரியர்கள் தன்னலம் பேணாதவர்களாய் வறுமையை வெறுக்காது ஜீவகாருண்யமும் பரோபகாரச் சிந்தையும் உள்ளவர்களாயிருந்தபடியால், நமதுதேசம் மகோன்னத நிலைமையிலிருந்து உலகத்தார்க்கு ஆசாரிய ஸ்தானத்தில் விளங்கிற்று. இப்போது, இந்த சபா

வம் நம்மிடத்தில் அதிகமாயில்லாமலே நமது முன்
னேற்றம் தடைப்பட்டுவருகிறது. ஆயினும், சமீபகாலத்
தில் தேசத்தின் குறைகளை நோக்கிச் சில உத்தம புரு
ஷர்கள், காஷாயவேஷம் தரிக்காவிட்டாலும், சுபாவத்
தில் சந்நியாசிகள் போலத் தேசத்துக்கு உழைத்து
வருகிறார்கள். இவர்களில் பலரைத் திருஷ்டாந்தமாகச்
சொல்லக்கூடுமானாலும் புனாவில் ஹிந்து விதவாசிரமசம்
பந்தமாய்க் கூடின கூட்டத்தில் டாக்டர் சர். ஆர். பந்தா
ர்க்கர் புகழ்ந்து பேசின ஒருவரை இங்கே நாம் குறிப்
பாய்ச் சொல்லலாம். புனாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்
கும் ஹிந்து விதவாசிரமத்தை நடத்திவரும் இவர்
மிஸ்டர் கோண்டுகேஷால் கார்வே என்பவர். இவர்
சென்ற 10 வருஷமாய் இதை நடத்திவருவதில் அந்த
ஆசிரமத்தில் படிப்புப்பெறும் ஸ்திரீகள் 4 ஆகவிருந்து
இப்போது 100 ஸ்திரீகளாய்விட்டார்கள். இதை நடத்
துவதில் நேரிடும் சிரமம் கொஞ்சமல்ல. முதலாவது
ஹிந்து விதவைகள் தம்மிடத்தைவிட்டு அந்திய ஸ்தலத்
துக்குப் போய்ப் பிறருடைய ஆதரவில் வசிக்கச் சம்மதி
க்கமாட்டார்கள். அவர்களுடைய மனதிலும், அவர்
கள் போஷகர்களுடைய மனதிலும் நம்பிக்கை உண்டு
பண்ணி, கைம்பெண்களை ஆசிரமத்தில் சேர்த்து எவ்
வித அபவாதத்திற்கும் இடமில்லாமல் நிர்வகிக்கை
எளிதான காரியமல்ல. இரண்டாவது, இதைப்போன்ற
ஸ்தாபனங்களுக்கு மேன்மேலும் குறைவில்லாமல்
பொருள் உதவி கிடைத்துக்கொண்டிருக்க வேண்டும்.
நமது விதவைகளுக்குச் சகாயமாக ஸ்தாபிக்கப்பட்
டிருக்கும் இம்மாதிரி ஆசிரமத்துக்கு நமது பிரபுக்கள்
களுவாய்ப் பண உதவி செய்யமாட்டார்கள். இந்த



ஆசிரமம் தற்போது போதுமான ஐவேஜி இல்லா
மல், அதன் அபிவிர்த்தி நின்று போயிருக்கிறதென்று
மிஸ்ஸெஸ் ரானடே சொன்னார். இப்படிப்பட்ட சந்தர்ப்
பங்களில் மிஸ்டர் கார்வேயின் சங்கடங்கள் எப்படியிரு
க்குமென்று நாம் ஊகிக்கலாம். சங்கடங்கள் நேரிட்டா
லென்ன? பரோபகாரத்தின் பொருட்டுத் தம் சரீரத்
தைத் தத்தம் செய்திருக்கும் பெரியோருக்குச் சங்க
டங்கள் ஒரு பொருட்டா?

மிஸ்டர் கார்வேயைப்போல இந்தியாவின் மற்றப்
பாகங்களிலும் பரோபகார விரதம்பூண்டு உழைக்கும்
தேசாபிமானிகள் உண்டென்று நாம் சொல்லவேண்டிய
தில்லை. மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி, பாபு சுரேந்
திரநாத் பானர்ஜி, லாலாலஜபதிராய், ஸ்ரீமான் கோக
லே, நமது ராஜதானியில் வீரேசலிங்கம் பந்துலு, இவர்
களை உண்மையில் சந்நியாசிகளென்றே சொல்லவேண்
டும். இவர்களாலும் இவர்களைப்போன்ற வேறு சில
ராலும் நமது தேசத்திற்கு விளையும் நன்மையை அள
விடல் சாத்தியமல்ல. ஆயினும் நம் தேசத்து விஸ்
தீர்ணத்தையும் ஜனத்தொகையையும் நம் ஜனங்களது
குறைகளையும் துக்கங்களையும் நம் தேசம் அடைந்திருக்
கும் தாழ்ந்த நிலைமையையும் சிந்திக்கும்போது, இவர்
களைப்போல் 100, 200 அல்ல, 1000 கணக்கான தேச
சேவகர் அங்கங்கு தோன்றி உழைத்தல் அவசியம். நம்
தேசத்தாரது குறைகளும் துக்கங்களும் ஒருவழியில்
அல்ல, அநேக வழிகளில் கிடக்கின்றன. இவைகளை
நிவர்த்திப்பது சிலரது சிரமத்தால் மட்டும் சாத்திய
மல்ல. பூர்வம் நம் தேசத்தில் பௌத்தமதம் பிரபலமா
யிருந்தபோதும், அதற்குப் பிறகும், பட்டணங்களையும்

த்த ஸ்தலங்களில் ஆயிரக்கணக்கான துறவிகள் மடங்களில் வசித்து ஆரியதர்மத்தைப் பரிபாலனம் செய்து வந்தார்களென்றார். இப்போது தேச ஜனங்களது நன்மைக்காக உழைக்கும் ஊழியர்களான துறவிகள் ஏன் தோன்றக்கூடாது? நமது தேசத்தில் வறுமை இளப்பமாகக் கருதப்படுவதில்லை. ஆத்மசுகத்தின் பொருட்டுப் பொருள் குவித்தலே பிறப்பின் நோக்கமென்பது ஜனங்களின் உணர்ச்சியல்ல. நமது சாஸ்திரங்களும் முன்னோர்களும் அப்படி நமக்குக் கற்பிக்கவில்லை. நம்மிடத்திலிருந்து பௌத்த மதத்தைக் கடன்வாங்கின ஜப்பானியர், தங்கள் தேசத்தின் நிலைமையை மனதில் வைத்து அரசன் முதல் அடிமைவரையில் அனைவருமே தன்னலத்தை வெறுத்துப் பொது நலத்தைத் தழுவி தேசத்தை மகோன்னத நிலைமைக்குக் கொண்டு வந்தார்களானால், அந்த மதத்திற்கு ஜன்ம தேசமும், பரோபகாரத்தை ஏற்ற சன்னியாசமே மோக்ஷ [illegible]மென்று கருதப்படும் தேசமுமாயுள்ள நம் இந்தியாவில் இப்போதும் நம் முன்னோர்களைப் போலவும் ஜப்பானியரைப் போலவும் தேசத்திற்குப் பணிவிடை செய்யும் துறவிகள் தோன்றுவது அசாத்தியமல்ல.

## ஆத்மத்தியாகம்.

இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு புருஷனும் ஸ்திரீயும் அவரவர் சொந்த சம்ரக்ஷணைக்காகவும் குடும்ப சம்ரக்ஷணைக்காகவும் ஜீவித்து உழைப்பதல்லாமல் தேச நன்மைக்காகவும் உழைக்கக்கடவர் என்கிற முக்கியமானது அவர்கள் மனதில் நன்றாய் ஊன்றி, அவர்கள் செய்யும் காரியங்களிலும் நினைக்கும் நினைவுகளிலும் பதிந்து அவர்களைத் தூண்டவேண்டும். தேச



மென்பது தாம் பிறந்த கிராமமல்ல, தமது ஜாதிஜனமல்ல; தமது மதத்தாருமல்ல; எந்த தேசத்தில் நம் முன்னோர் வாசம்செய்து அவர்களுடைய ஞானத்தாலும் அறிவாலும் புண்ணிய கருமங்களாலும் மானிட கோடிகள் உய்யுமாறு செய்த பெரும் காரியங்களாலும் ஆரிய ஜனமாகிய நமக்கு உலகத்தில் பெயரும் கீர்த்தியும் மேன்மையும் சம்பாதித்தார்களோ அந்த தேசமாகிய இந்த பாரதவருஷமே நமது உழைப்புக்கும் சிந்தைக்கும் பாத்தியப்பட்டதென்ற உணர்ச்சி ஒவ்வொரு புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உண்டாகவேண்டும். நமது மாதாவாகவும் புண்ணிய பூமியாகவும் உலகத்திற்கெல்லாம் ஞானமூட்டும் பர்வத தீபம் போலவும் விளங்கும் இந்த பாரதிதேவியே நமது தேசம். நமது உயிர், உடல், உடைமை இவைகளுக்குப் பாத்தியம்பெற்றவளென்ற அறிவை நம் சிறுவர் சிறுமியர் யாவர்க்கும் குழந்தைப் பருவமுதலே ஊட்டவேண்டும். இக்காலத்தில் எல்லாத் தேசத்திலும் இவ்வுணர்ச்சி உண்டாகும்படியாக ஸ்கூல்களிலும் குடும்பங்களிலும் போதனை செய்யப்பட்டு வருகின்றது. ஜப்பான் தேசம் முன்னுக்கு வந்தது இந்த உணர்ச்சியாலேயன்றி, வேறு மனுஷ பலத்தாலாவது தெய்வபலத்தாலாவது அல்ல. எத்தேசத்தில் இந்த உணர்ச்சியில்லையோ எந்த ஜனத்தார் இதைக் கற்று அவர்கள் காரியங்களிலும் சிந்தைகளிலும் இதனால் தூண்டப்படவில்லையோ அந்தத்தேசம் அடிமைத்தேசம் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த உணர்ச்சி இல்லாமலன்றோ பூமியின் கிழக்குப்பாகமாகிய ஆசியாக் கண்டத்திலுள்ள எல்லாப் பெரும் தேசங்களும், சீனா, இந்தியா, பர்ஸியா, மத்திய ஆசியா ஆகிய பெரும் தே

சங்கள், மேல்நாட்டாருக்கு அடிமையாகி, அத்தேசங்களின் ஜனங்கள் அனுபவிக்கவேண்டிய செல்வம் வாணிபம் முதலியவைகள் அன்னியர் வாழ்ந்துசெழிக்கக் காரணமாயிருக்கின்றன. கோடிக்கணக்காக ஜனங்கள் வசிக்கப்பெற்று, பூர்வீக ஞானத்திலும் நாகரீகத்திலும் இயற்கை பொருள்களிலும் ஒப்பில்லாமலிருக்கும் இந்தத் தேசங்கள் தேசாபிமானமும் தன் மறுப்புமாகிய பொது நல ஏதுக்கள் எதுவுமில்லாமலே பல்லாயிரத் தாண்டுகளாக அன்னியர் வசமாகி இகழ்ச்சி அடைந்திருக்கின்றன. இந்தியாவில் ஜனசமூகத்தின் வாழ்க்கைக்கும் செல்வத்திற்கும் பெருமைக்கும் அவசியமான சகல ஆதாரங்களும் அபரிமிதமாகவே அமைந்திருக்கின்றன. கிடைத்தாலென்ன? இந்தியருக்கு மேலே சொன்ன குணங்களில்லாமல் தாங்களும் தங்கள் பிள்ளை பெண்களும் பட்டினியாலும் பிணியாலும் வருந்திமாய, அன்னியர் பெருமையடித்து நம்மை இளப்பம் காணுகிறார்கள்.

கேவலும் ஈன நிலைமைக்கு வந்துவிட்ட மாதுர் பூமியைத் தூக்கிவிட்டு முன்னத்துவது களாகவேண்டியபெரும் கருமமேயன்றி வேறு அன்னிய ஜனத்தாரின் உதவியாலாவது தயவாலாவது ஆகுமென்று நம்புவதிலும் பேதமையுண்டோ? ஆகையால் இக்கருமமே ஒவ்வொரு இந்தியனும் ஸ்திரீயானாலும் புருஷனானாலும் தமது ஜன்மசார்த்தகமாகக் கருதி உழைத்தாலொழிய நமது தாய்க்குச் சிறுமையும் துக்கமும் ஒழியா. இத்தனை காலம் நாம் கண்மூடினாயிருந்தோம். இப்போது காலச்சக்கிர சுழற்சியில் நமது தேசம் மறுபடியும் உன்னத நிலைமைக்கு வரும்படியான சம



யம் வந்துவிட்டபடியால், சமயத்துக்குத் தக்க குணங்கள் நம்மவர்க்கு உண்டாய் பெருகிப் பயன்படும்படி செய்வது ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். இக்குணங்களில் தன்மறுப்பு மகாமுக்கியமானது. நம் முன்னோர்கள் தங்கள் சரீரசுகத்தையாவது லௌகிகப் பெருமையையாவது பொருட்டாகக் கருதினவர்கள் அல்ல. அப்படிப் பட்டவர்களுடைய பரம்பரையினராகிய நாம் கேவலம் மிருகங்களைப்போல தம்தம் சுகமும் பெருமையுமே நோக்கமாய், தாய்க்குச் செய்யவேண்டிய கடமைகளைக் கருதாமலிருக்கிறோம். இதுவரையில் இப்படி இருந்தே கெட்டுப்போனோம். இப்போது இங்குமங்கும் புதுக்குறிகள் தோன்றுகின்றன.

சில காலத்துக்கு முன்னால் லாகூர் பட்டணத்தில், அதாவது, அனேக ஆயிரவருஷங்களுக்கு முன்னால் எந்தப் புண்ணிய பூமியில் நமது ரிஷிகளும் முனிகளும் வேதங்களைச் சிக்கறுத்து ஆரிய தர்மத்தை ஸ்தாபித்தார்களோ அந்தப் பூமியாகிய பாஞ்சாலத்தில் இப்போது முக்கிய ஸ்தானமாயுள்ள இப்பட்டணத்தில், நமது தேசாபிமானச் சிங்கமாகிய [illegible]க் ஸ்ரீ லஜிபதிராயும் அவரது ஸகாக்களும் தேசத்தின் க்ஷேமார்த்தமாய் தங்களிடமிருந்த சகல சொத்துக்களையும் அர்ப்பணம் செய்து கிருதார்த்தர்களாய் திருப்தியும் பெருமையும் அடைந்தார்களல்லவோ? அப்படியே வங்காளத்தில் ஸர் தாரகநாத் பாலிட், டாக்டர் ராஷ்பிஹாரி கோஷ் இவர்கள் போன்ற வேறு செல்வவான்களும் தங்கள் ஏராளமான சொத்துக்களைத் தேசம் பாத்தியக்கொண்ட தென்று அருமையான பெருந் தர்மங்கள் செய்து வருகிறார்கள்

பம்பாயில் காலஞ்சென்ற ஜெ. என். டாடாவும் அவர் குடும்பத்தாரும் கொடை வள்ளல்களாய்ச் செய்துவரும் பெருந் தருமங்களைக் கண்டு பிரமிக்காதவர்கள் யார்? இந்த உணர்ச்சியே தேசமெங்கும் பரவவேண்டும். இந்தியாவாகிய இந்த பாதநாட்டில் வசிக்கும் கோடிக்கணக்கான ஜனங்கள் ஒரே மனதாய் அபிமானம் பாராட்டி உழைப்பார்களானல் நிறைவேற்ற லலாத காரியமில்லை. தொட்டிலில் உறங்கும் குழந்தைக்கும் இந்த உணர்ச்சியை ஊட்டக்கூடுமானல் அதைப்பெற்ற தாய் தன் பாலுடன் ஊட்டக்கடவள்.



THE SWADESAMITRAN STEAM, PRESS MADRAS.


## சுதேசமித்திரன் ஆபீசில் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| திருபுத்திரம் ... ... ... ... | 3 | 8 | 0 |
| அத்யாத்ம ராமாயணம் (காலிகோ) ... | 2 | 8 | 0 |
| விஜயசுந்திரம் (காலிகோ பைண்டு) ... | 2 | 0 | 0 |
| விஜயசுந்தரம் (ராப்பர் பைண்டு) ... | 1 | 8 | 0 |
| ஞானம்பிகை (காலிகோ) ... ... | 1 | 8 | 0 |
| சுப்பிரமணியர் சர்வரோக நிவாரண மாத்திரிகம் ... ... ... ... | 1 | 8 | 0 |
| வேதாந்த சூடாமணி ... ... ... | 1 | 4 | 0 |
| ஞானம்பிகை (ராப்பர்)... ... ... | 1 | 4 | 0 |
| ஞானசம்பந்தம் (காலிகோ) ... ... | 1 | 4 | 0 |
| விவசாயபோதினி ... ... ... | 1 | 0 | 0 |
| ஞானசம்பந்தம் (ராப்பர்) ... ... | 1 | 0 | 0 |
| வாதசுந்திரம் ... ... ... ... | 1 | 0 | 0 |
| ஞானகாந்தி ... ... ... ... | 0 | 12 | 0 |
| குசாவதி ... ... ... ... | 0 | 12 | 0 |
| விஜயகாருண்யம் ... ... ... | 0 | 12 | 0 |
| [illegible]ம்ருதம் ... ... ... ... | 0 | 10 | 0 |
| [illegible]சந்திரபிரபா ... ... ... | 0 | 10 | 0 |
| [illegible] ... ... ... ... | 0 | 10 | 0 |
| [illegible] ஜீ சுப்பிரமணிய அய்யரவர்களின் | | | |
| [illegible]திரம் ... ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible]ஸ்வி ... ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible]ரிணயம் ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible]யல் வெண்பா அந்தாதி ... | 0 | 8 | 0 |
| [illegible] சபதம் ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible] ... ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible] ... ... ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible] ... ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible]ந்தி ... ... ... ... ... | 0 | 8 | 0 |
| ஜெகஜ்ஜோதி ... ... ... ... | 0 | 8 | 0 |
| [illegible] ... ... ... | 0 | 8 | 0 |

| | | | |
|---|---|---|---|
| வனஜாக்ஷி ... ... ... ... | 0 | 8 | 0 |
| சந்திரஹாசன் ... ... ... ... | 0 | 8 | 0 |
| மாளவிகாக்கினிமித்திரம் ... ... | 0 | 8 | 0 |
| ஞானசுந்திரம் ... ... ... ... | 0 | 8 | 0 |
| மனம்போல வாழ்வு ... ... ... | 0 | 8 | 0 |
| ஜனநிர்மாணம் ... ... ... | 0 | 6 | 0 |
| இந்தியா கவர்ன்மெண்டின் திருத்தங்கள் | 0 | 6 | 0 |
| கனம் கோபால் கிஷ்ண கோகலே உபந்நியாசம் ... ... ... ... | 0 | 6 | 0 |
| போயர் பராக்கிரமம் ... ... ... | 0 | 6 | 0 |
| வேலையின் கடமை ... ... ... | 0 | 6 | 0 |
| [illegible]மிருகசாகரம் ... ... ... | 0 | 6 | 0 |
| [illegible]க்கொடி ... ... ... ... | 0 | 6 | 0 |
| ஜ[illegible]ரு ... ... ... ... | 0 | 5 | 0 |
| [illegible]க்துவம் ... ... ... | 0 | 4 | 0 |
| [illegible]மைகள் ... ... ... | 0 | 4 | 0 |
| பார்வதி கல்யாணம் ... ... ... | 0 | 4 | 0 |
| கமலாம்பிகை ... ... ... ... | 0 | 4 | 0 |
| கருணாகரன் ... ... ... ... | 0 | 4 | 0 |
| ருக்மணி பரிணயம் ... ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீமத் தாதாபாய் நௌரோஜியின் பிர[illegible] ... ... ... ... | 0 | [illegible] | [illegible] |
| [illegible] ... ... ... ... | [illegible] | [illegible] | [illegible] |
| ஆனரபில் கி[illegible]சாமி அய்யர் அவர்களின் பிரசங்கம் ... ... ... | 0 | [illegible] | [illegible] |
| இந்தியாவில் [illegible]கமும் வைத்தியசாலையும் | 0 | 1 | 0 |
| இலக்க ஆரம்ப விளக்கம் ... ... | 0 | 1 | 0 |
| மோஹன்[illegible] சந்திரகாந்தி சிறியது விளக்கம். | 0 | [illegible] | [illegible] |

பா[illegible]ஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ்,
[illegible]சென்னை.